மனோன்மணியம்சுந்தரனார்பல்கலைக்கழகம்
திருநெல்வேலி

# MANONMANIAM SUNDARANAR UNIVERSITY
# TIRUNELVELI

## தொலைநெறித்தொடர்கல்விஇயக்ககம்

## DIRECTORATE OF DISTANCE AND CONTINUING EDUCATION

# உரைநடை இலக்கியம் JETA62

## இளங்கலைத்தமிழ் – ஆறாம்பருவம்

முனைவர். கோ.ராஜேஸ்வரி,
உதவிப் பேராசிரியர்,
தமிழியல் துறை,
மனோன்மணியம் சுந்தரனார் பல்கலைக்கழகம்,
முதுகலை விரிவாக்க மையம்,நாகர்கோவில்.

| LearningObjectives–கற்றல்மநாக்கங்கள் |
| --- |
| • சமூகச்சிந்தமனஆற்றமலவளர்த்தல். |
| • எழுத்தாற்றல்திறமனஉருவாக்குதல். |
| • உமரநமடஇலக்கியத்தின்வரலாற்மறஅறிந்துபகாள்ளுதல். |
| • இலக்கியத்தின்வழிஅறிவியல்சிந்தமனகமளஉணர்த்துதல். |
| • உமரநமடஇலக்கியம்பாிணமித்துள்ளபாிமாணங்கமளஅறிந்துபகாள்ளுதல். |

# உரைநடைஇலக்கியம் JETA62

## இளங்கலைத்தமிழ் – ஆறாம்பருவம்

## பாடத்திட்டம்

**நோக்கம்:**

1. உரைநடையைவெளிப்பாட்டுவடிவமாகக்கொண்டுதமிழில்இலக்கியம்வளர்ந்த வரலாற்றையும்பின்னணிகளையும்கற்பிப்பது.
2. உரைநடையில்உருவானஇலக்கியவடிவங்களில் கட்டுரை,புனைகதை,நாடகம் ஆகிய வடிவங்களின் வழி சமுதாயம் பற்றியப் பார்வைகளையும் மனம்கொள்ளத்தக்க சமுதாய மதிப்புகளையும்கற்பித்தல்.
3. சமுதாய உணர்வுகளையும் மனித மாண்புகளையும் எதிர்காலச் சமுதாயம் குறித்த விழிப்புணர்வையும் உணர்த்துதல்.
4. சுற்றுச் சூழலுக்குப் பாதிப்பு ஏற்படாத வகையிலான வாழ்கையை அமைத்துக் கொள்ளும் வழிமுறைகளை அறிவுறுத்தல்.
5. எல்லோரும் சமம், எல்லோருக்கும் சம உரிமை, ஏற்றத்தாழ்வுகள் இல்லாத மனம் ஆகிய சமுதாய உணர்வுகளைக் கற்பித்தல்.

**கற்றல்பயன்:**

1. தமிழ்உரைநடைஇலக்கியத்தின்பண்புகளைஅறிந்திருத்தல்.
2. படைப்பாளிகளின்அறிவியல்பார்வைகளைஅறிந்திருத்தல்.
3. அறிவியல்வளர்ச்சியின்தேவைகளையும்அதனால்ஏற்படும்ஆபத்துக்களையும்அறிந்திருத்தல்.
4. சூழல்அறம்குறித்தவிழிப்புணர்வுபெற்றிருத்தல்.
5. மனிதஉரிமைகள், சமுதாயமதிப்புகள், எதிர்காலச்சமுதாயம்ஆகியவைகுறித்தஅறிவைப்பெற்றிருத்தல்.
6. சுயநலத்தைஒடுக்கிச்சமுதாயநலன்மீதுகவலைகொள்ளும்பண்பைப்பெற்றிருத்தல்.
7. பெண்களின்உரிமைகள், பெண்களைமதித்தல், பெண்மையைப்பாதுகாத்தல்ஆகியபண்புகளைப்பெற்றிருத்தல்.

8. சுற்றுச்சூழலைப்பாதிக்கும்திடக்கழிவுகளைமறுசுழற்சிக்குப்பயன்படும்வகையில் பாதுகாப்பாகஅகற்றஅறிந்திருத்தல்.
9. இயற்கைவளங்களைமனம்போனபோக்கில்அழிக்கக்கூடாதுஎன்றஅறிவைப்பெற்றிருத்தல்.
10. இந்தஉலகம்நமக்குமட்டுமல்ல, எதிர்காலத்தலைமுறையினருக்கும்உரிமையுடையதுஎன்றஉணர்வைப்பெற்றிருத்தல்.

**அலகுஎண் 1**

பெண்ணியம்.

டாக்டர்மு. வரதராசனார் - பெண்மைவாழ்க, பாரிநிலையம், சென்னை.

**அலகுஎண் 2**

அறிவியல்தமிழ்.

டாக்டர்வா.செ. குழந்தைசாமி-பாரதியின்அறிவியல்பார்வை, பாரதிபதிப்பகம்.

**அலகுஎண் 3**

சுற்றுச்சூழல்பாதுகாப்பு

சுப்ரபாரதிமணியன்- சூழல்அறம். நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ்வெளியீடு.

**அலகுஎண் 4**

சமூகம்

நாவல்-கீதாரி-சு. தமிழ்ச்செல்வி, நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ்வெளியீடு

**அலகுஎண் 5**

சமூகம்

நாடகம்- சாபம்! விமோசனம்? -மு. இராமசுவாமி, செண்பகம்இராமசுவாமிபுக் ஹவுஸ்வெளியீடு, சென்னை.

**பாடநூல்கள்**


1. டாக்டர்மு. வரதராசனார்பெண்மைவாழ்க, பாரிநிலையம், சென்னை.
2. டாக்டர்வா.செ. குழந்தைசாமி- பாரதியின்அறிவியல்பார்வை, பாரதிபதிப்பகம்.
3. சுப்ரபாரதிமணியன்- சூழல்அறம், நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ்வெளியீடு.
4. நாவல்- கீதாரி- சு. தமிழ்ச்செல்வி, நியூசெஞ்சுரிபுக்ஹவுஸ்வெளியீடு
5. நாடகம்-சாபம்! விமோசனம்? -மு. இராமசுவாமி, செண்பகம்

# அலகு - 1

## பெண்ணியம்

## பெண்மை வாழ்க- மு.வரதராசனார்

மு.வ எனச் சுருக்கமாக அழைக்கப்படும் மு.வரதராசனார்இருபதாம் நூற்றாண்டின் புகழ் பெற்ற தமிழ் அறிஞர்களுள் ஒருவர். இலக்கியக் கட்டுரைகள், ஆராய்ச்சி நூல்கள் போன்றவைமட்டுமன்றிப் பல சிறுகதைகள், புதினங்கள் போன்றவற்றையும் எழுதியுள்ளார்.இவர் சென்னை பச்சையப்பன் கல்லூரி, சென்னைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் தமிழ்த்துறைத் தலைமைப் பொறுப்பில் இருந்ததுடன், மதுரை காமராசர் பல்கலைக்கழகத்தின் துணைவேந்தராகவும் பணியாற்றினார். பன்முக ஆற்றல்கள் கொண்ட இவர் நல்லாசிரியராகவும், பண்பாளராகவும் விளங்கினார்.

### வாழ்க்கைச் சுருக்கம்

மு.வரதராசனார், தமிழ்நாடு, வட ஆற்காடு மாவட்டம், திருப்பத்தூரில் முனுசாமி முதலியார் - அம்மாக்கண்ணு தம்பதிக்கு 1912 ஏப்பிரல் 25ஆம்நாள் பிறந்தார். திருவேங்கடம் என்று பெயரிடப்பட்டு அழைக்கப்பட்டாலும் தாத்தாவின் பெயரான வரதராசன் என்ற பெயரே அவருக்கு நிலைத்துவிட்டது. மு.வ வின் கல்வி,வேலூர் மாவட்டம், வாலாஜாப்பேட்டை அருகிலுள்ள வேலம் என்னும் சிறிய கிராமத்தில் தொடங்கியது. உயர்நிலைக் கல்வியைத் திருப்பத்தூரில் கற்றுத் தேர்ந்தார். பதினாறு வயதில் பள்ளி இறுதித் தேர்வில் வெற்றி பெற்றார். 1928ஆம் ஆண்டில் திருப்பத்தூர் வட்டாட்சியர் அலுவலகத்தில் சில காலம் எழுத்தராகப் பணியாற்றினார்.

எழுத்தராகப் பணியாற்றிய போது உடல் நலம் குன்றியதால் அந்தப் பணியிலிருந்து விடுபட்டு ஓய்வுக்காகக் கிராமத்துக்குச் சென்று, அங்குத் திருப்பத்தூர் முருகைய முதலியார் என்பவரிடம் தமிழ் கற்கத் தொடங்கினார். 1931இல் வித்வான் முதல் நிலைத் தேர்வில் தேர்ச்சி பெற்றார். பின்னர்த் தாமே பயின்று 1935இல் வித்வான் தேர்வு எழுதி, அதில் மாநிலத்திலேயே முதல் மாணாக்கராகத் தேர்ச்சி பெற்றார். 1935ஆம் ஆண்டு தம் மாமன் மகளான ராதா அம்மையாரை மணந்தார். இவர்களுக்குத் திருநாவுக்கரசு நம்பி, பாரி ஆகிய ஆண் மக்கள் பிறந்தனர். 1935 முதல் 1938 வரை திருப்பத்தூர் பள்ளியில் தமிழ் ஆசிரியராகப் பணியாற்றினார். 1939 இல் பி.ஓ.எல் தேர்ச்சி பெற்றார்.

## பேராசிரியராகப் பணி

1939ஆம் ஆண்டில் பச்சையப்பன் கல்லூரி விரிவுரையாளர் பணிக்காகச் சென்னை சென்ற மு.வ. அக் கல்லூரியின் "கீழ்த்திசை மொழிகளில் விரிவுரையாளர்" என்ற பொறுப்பை ஏற்றார். 1944இல் "தமிழ் வினைச் சொற்களின் தோற்றமும் வளர்ச்சியும்" என்ற தலைப்பில் ஆராய்ந்து எம்.ஓ.எல் பட்டம் பெற்றார்.1948இல் சென்னைப் பல்கலைக்கழகத்தின் மூலம் "சங்க இலக்கியத்தில் இயற்கை" என்ற தலைப்பில் ஆராய்ச்சி செய்து முனைவர் பட்டம் பெற்றார். சென்னைப் பல்கலைக்கழகத்தின் மூலம் முதல் முதலாகத் தமிழில் முனைவர் பட்டம் பெற்ற பெருமைக்குரியவர் மு.வ என்பது குறிப்பிடத்தக்கது.

1939இல் பச்சையப்பன் கல்லூரியில் சேர்ந்த மு.வ. 1961 வரை அங்குப் பணியாற்றினார்.1945இல் அக்கல்லூரியின் தமிழ்த் துறைத் தலைவர் ஆனார். இடையே 1948ஆம் ஆண்டில் மட்டும், தனது முனைவர் பட்டப்படிப்பின் ஒரு பகுதியாகச் சென்னைப் பல்கலைக்கழகத்தில் துணைப் பேராசிரியராகப் பணியாற்றினார். 1961 முதல் 1971 வரை சென்னைப் பல்கலைக்கழகத்தின் தமிழ்த் துறைத் தலைவராகப் பணியாற்றினார்.

பின்னர் 1971இல் மதுரைப் பல்கலைக்கழகத் துணைவேந்தராகப் பொறுப்பேற்று 1974 வரை சிறப்புறப் பணியாற்றினார்.மு.வ. சென்னை, திருப்பதி, அண்ணாமலைப் பல்கலைக்கழகங்களின் செனட் உறுப்பினர் பதவி வகித்துள்ளார். கேரளா, மைசூர்,

உஸ்மானியா, பெங்களூர், ஆந்திரா, தில்லி, மதுரை, கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகங்களின் கல்வி வாரிய உறுப்பினர் பதவிகளையும் வகித்துள்ளார். 1972 ஆம் ஆண்டில் அமெரிக்காவின் ஊஸ்டர் கல்லூரி இவருக்கு இலக்கியப் பேரறிஞர் (டி.லிட்) என்ற சிறப்புப் பட்டத்தை நல்கிப் பெருமைப்படுத்தியது. அமெரிக்கப் பல்கலைக்கழகம் ஒன்றில் டி.லிட் என்னும் சிறப்புப் பட்டம் பெற்ற முதல் தமிழறிஞர் மு.வ.அ வர்களே.

சாகித்ய அகாதெமி,பாரதிய ஞானபீடம், தேசியப் புத்தகக் குழு, இந்திய மொழிக் குழு, சென்னைப் பல்கலைக்கழகத்தின் ஆங்கிலம் தமிழ் அகராதிக் குழு, நாட்டுப்புறப்பாடல்களும் நடனங்களும் பற்றிய குழு, தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வு ஆணைக்குழு, ஆந்திரப்பிரதேச அரசுப்பணியாளர் தேர்வாணைக்குழு, மத்திய அரசுப் பணியாளர் தேர்வாணைக்குழு, தமிழ்நாடு புத்தக வெளியீட்டுக் கழகம், ஆட்சிமொழிக்குழு, ஆட்சி மொழி சட்டக்குழு, தமிழ் வளர்ச்சிக் கழகம், தமிழ்க்கலை மன்றம், தமிழிசைச் சங்கம், மாநில வரலாற்றுக் கழகம், தமிழ் கலைக் களஞ்சியம், உலகத் தமிழ் ஆராய்ச்சி நிறுவனம் ஆகியவற்றில் அங்கம் வகித்ததோடு அனைத்திலும் தன்னுடைய பணி முத்திரைகளைப் பதித்த தனிச் சிறப்புகளுக்குச் சொந்தக்காரர் மு.வ அவர்கள்.தமிழ், ஆங்கிலம், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் தேர்ச்சிபெற்றிருந்தார்.நாவல்கள், சிறுகதைகள், சிறுவர் இலக்கியம், நாடகங்கள், இலக்கணம், கட்டுரைகள், தமிழ் இலக்கிய நூல்கள், பயணக் கட்டுரை, முன்னுரைகள், மொழிபெயர்ப்பு, மேற்கோள்கள் என 91 நூல்களைத் தமிழுக்குத் தந்துள்ளார்.

இவரது திருக்குறள் தெளிவுரையைச் சைவ சித்தாந்த நூற்பதிப்புக் கழகம் நூற்றுக்கும் மேற்பட்ட பதிப்புகள் வெளியிட்டுள்ளது. மு.வ. தான் எழுதிய நூல்களுள் பெரும்பாலானவற்றைத் தனது சொந்த நிறுவனமான தாயக வெளியீட்டின் வழியாக வெளியிட்டார்.அவற்றின் விற்பனை உரிமையைப் பாரி நிலையத்திற்கு வழங்கினார்.

தனது முதல் நாவலான ‘செந்தாமரை’யை யாரும் வெளியிட முன் வராததால் தாமே அதனை வெளியிட்டார். தொடர்ந்து வெளியான ‘கள்ளோ, காவியமோ?’ அவருக்கு இலக்கிய அந்தஸ்தை அளித்தது. பேராசிரியராகமட்டுமல்லாமல் ஓர் இலக்கியவாதியாகவும் அவர் ஏற்றுக் கொள்ளப்பட அந்நாவலே முதற் காரணமாக அமைந்தது. அதற்குத் தமிழக அரசின் சிறப்பு விருதும் கிடைத்தது.

மொழியியல் ஆய்வுகளிலும் இலக்கிய வரலாற்று ஆய்வுகளிலும் ஈடுபட்டு வந்த மு.வ., தொடர்ந்து படைப்புலகில் தனது தீவிர கவனத்தைச் செலுத்தினார். சங்க இலக்கியத்தின்தாக்கத்தால் விளைந்த ”பாவை”,இலக்கியம் கூறும் களவு மற்றும் காதலை அடிப்படையாகக் கொண்டது. இது தவிர அவர் எழுதிய குறிப்பிடத்தக்க புதினங்களாக 'கயமை', 'டாக்டர் அல்லி', 'அந்தநாள்', 'நெஞ்சில் ஒரு முள்', 'மண்குடிசை', 'வாடாமலர்' போன்றவற்றைக் குறிப்பிடலாம். சமூக அவலங்களைப் பிரதிபலிக்கும் அவரது சிறுகதைகளான 'எதையோ பேசினார்', 'தேங்காய்த் துண்டுகள்', 'விடுதலையா?', 'குறட்டை ஒலி" போன்றவை பெரும் வரவேற்பைப் பெற்றன. குறிப்பிடத்தக்க நாடகங்களையும் அவர் எழுதியிருக்கிறார். மு.வ. எழுதிய, 'பெண்மை வாழ்க', 'அறமும் அரசியலும்', 'குருவிப் போர்', 'அரசியல் அலைகள்' போன்ற கட்டுரைகள் சிந்தனைத் தாக்கத்தை ஏற்படுத்துபவை. அவரது 'அரசியல் அலைகள்', 'மொழியியற் கட்டுரை நூல்களுக்குத் தமிழக அரசின் சிறப்புப் பரிசு கிடைத்தது. 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்', 'மொழிநூல்', 'விடுதலையா?', 'ஓவச் செய்தி" போன்ற நூல்கள் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டுப் பத்திரங்களைப் பெற்றன. 'அகல்விளக்கு' நாவல் "சாகித்ய அகாதமி" விருது பெற்றது. ஓர் ஓவியனின் வாழ்க்கையைச் சித்தரிக்கும் 'கரித்துண்டு', வாசகர்களின் பெருத்த வரவேற்பைப் பெற்றது. இவரது 'பெற்றமனம்' நாவல் திரைப்படமானது.

மு.வ.வின் எழுத்துக்கள் ஆர்ப்பாட்டமில்லாதவை. அமைதியான ஆற்றொழுக்கான நடையில் புதைந்திருப்பவை. காந்தியக் கருத்துக்களை வலியுறுத்துபவை. அஹிம்சையைப் போதிப்பவை.அன்பை அடிப்படையாகக் கொண்டவை. அதே சமயம் தாம் சொல்ல வந்த கருத்தை மனதிற்தைக்கும்படிச் சொல்லுபவை. அவருடைய கதை கூறும் பாணி, தன்மை ஒருமையில், கதை நாயகனே கதை கூறும் பாணியில் அமைந்திருக்கும். கதைகளில் ஆங்காங்கே தனது கருத்துகளை அறிவுரைகள் போல், பொன்மொழிகள் போல் வலியுறுத்திக் கூறியிருப்பார். வாழ்க்கையின் பிணக்குகளைத் தீர்க்கும் வல்லமை அறிவை விட அன்பிற்கே உண்டு என்பதைத் தனது பல

படைப்புகளில் மு.வ. வலியுறுத்தியுள்ளார். மு.வ.வின் எழுத்துக்கள்படிப்பவர்களை மேலும் சிந்திக்கத் தூண்டுபவை என்பதைவிட படிப்போரின் உள்ளத்தை மென்மேலும் பண்படுத்துபவை என்று கூறுவது மிகையல்ல. அதே சமயம் மாணவர்களுக்குப் போதிக்கும் பேராசிரியர் பணியின் தாக்கம் அவரது எழுத்தில் தென்பட்டன என்றாலும் அக்காலத்துச் சிறந்த எழுத்தாளர்களில் ஒருவராக மு.வ. மதிக்கப்பட்டார். "மு.வ. பைத்தியம் பிடித்துத் தமிழக வாசகர்கள் அலைந்த காலத்தை நான் நேரில் பார்த்தவன். அந்த மனநிலை மக்களுக்கு வந்ததன் காரணமே மு.வ.வின் படைப்புகளின் நேர்த்திதான்" என்று மறைந்த திரைப்பட இயக்குநர் முக்தா சீனிவாசன் தனது 'இணையற்ற சாதனையாளர்கள்' நூலில் குறிப்பிட்டுள்ளார்.

எழுத்தாளராக மு.வ. ஆற்றியிருக்கும் பணிகளை விடக் கல்வியாளராக அவர் ஆற்றியிருப்பவை மிக அதிகம். அவர் எழுதிய 'தமிழ் இலக்கிய வரலாறு", கல்லூரி, பல்கலைக்கழகங்களில் பாடமாக வைக்கப்பட்ட பெருமைக்குரியது. அந்நூலுக்குச் சாகித்ய அகாதமியின் விருது கிடைத்தது. 'தமிழ் நெஞ்சம்', 'மணல் வீடு', 'திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம்', 'முல்லைத் திணை', 'நெடுந்தொகை விருந்து, குறுந்தொகை விருந்து', 'நற்றிணை விருந்து', 'இலக்கிய ஆராய்ச்சி', 'நற்றிணைச் செல்வம்', 'குறுந்தொகைச் செல்வம்', 'கண்ணகி', 'மாதவி', 'இலக்கியத் திறன்', 'இலக்கிய மரபு', 'கொங்குதேர் வாழ்க்கை', 'இலக்கியக் காட்சிகள்', 'மொழி நூல்', 'மொழி வரலாறு', 'மொழியின் கதை', 'எழுத்தின் கதை' போன்ற நூல்கள் பல ஆய்வுகளுக்குஅடிப்படையாய் அமைந்தன.அன்னைக்கு...', 'தம்பிக்கு.. 'தங்கைக்கு...', 'நண்பர்க்கு...'போன்றத் தலைப்புகளில் அவர் எழுதியவைக் கடித இலக்கியத்தில் புகழ் பெற்றவை. உள்ளத்தைப் பண்படுத்தும் அறிவுரைகளைக் கொண்டவை. அது தவிர காந்தியடிகள், ரவிந்திரநாத் தாகூர், திரு.வி.க., பெர்னாட்ஷா போன்றோரது வாழ்க்கை வரலாற்றையும் எழுதியிருக்கிறார். சங்க இலக்கியம் பற்றியும், இளங்கோ அடிகள் பற்றியும் ஆங்கிலத்தில் நூல்கள் எழுதியிருக்கிறார். அவருக்கு ஆசானாக விளங்கிய திரு.வி.க. மு.வ.வை தனது மகன் போலவே கருதினார். தனது இறுதிச் சடங்குகளை மு.வ.வும், அ.ச.ஞாவுமே நடத்த

வேண்டுமென அவர் ஆணையிட, அதன்படியே அக்கடமையை டாக்டர் மு.வ. நிறைவேற்றினார்.

தமிழ் இலக்கிய வரலாறு என்பது தமிழ்ப் பேராசிரியர் மு. வரதராசன் எழுதிய தமிழ் ஆய்வுநூல் ஆகும்.இந்திய மொழிகள் பலவற்றின் வரலாறுகளை எழுதி நூலாக்கம் செய்துள்ள 22 மொழிகளில் நூல்கள் வெளியிடும் சாகித்திய அகாதெமியின் வேண்டுகோளின் பேரிலேயே மு. வரதராசன் இந்நூலை எழுதியிருக்கிறார் என்பதை தெ. பொ. மீனாட்சிசுந்தரனாரின் முன்னுரையிலிருந்து தெரிந்துகொள்ளலாம். இவரின் நூல் 18 தலைப்புக்களில் விரிந்து செல்கிறது. இந்நூலில் சிறப்புப் பெயர் அகராதியும் சேர்க்கப்பட்டுள்ளது.

தமிழ் இலக்கிய வரலாறு தெளிவாகவும். செம்மையாகவும், சுருக்கமாகவும் அமைந்துள்ளது. பல்வேறு காலங்களாகப் பகுத்துக்கொண்ட பாகுபாடும். அவ்வக்காலங்களின் நூல்களைப்பற்றி விளக்கும் அமைப்பும், அறிஞருலகம் ஏற்றுக் கொண்ட முறைகளாகும். நூலாசிரியர் சிலர் தம் காலத்தைப் பொறுத்த வரையில் கருத்து வேறுபாடுகள் உண்டு. வேறுபடும் கருத்துக்களையும் ஆங்காங்கே இவர்குறிப்பிட்டுச் செல்வது பொருந்திய முறையே ஆகும். இலக்கியங்களின் சிறப்பியல்புகளையும் அவற்றிற்குத் தேவையான விளக்கங்களையும் மட்டுமே ஆங்காங்கே தந்துள்ளார். அவ்வாறு தேர்ந்தெடுக்கப்பட்ட சிறப்பியல்புகளும் விளக்கங்களும் கற்பவர் நெஞ்சில் எளிதில் பதிந்து இன்புறுத்துவனவாக இருத்தல் பாராட்டத்தக்கதாகும். தொடக்கம் முதல் முடிவு வரையில் நடுவு நிலையில் நின்று, தக்க வரையறை மேற்கொண்டு, அவ்வப் புலவர்க்கும் அவர்தம் படைப்புகளுக்கும் உரிய இடம் தந்து எழுதியுள்ளார் என்று சிற்பி பாலசுந்தரம் இந்நூலின் பெருமையைக் குறிப்பிடுகின்றார்.

மு.வ.எழுதிய நூல்களில் கி.பி.2000(சிந்தனைக் கதை) ஒரு தனிச் சிறப்புடையது.இதில் மு.வ.வின் இன்றைய நினைவும், நாளைய கனவும் உள்ளன. சிந்தனையும் கற்பனையும் இயைந்து இந்நூலை நடத்திச் செல்வதால் இதனைச் சிந்தனைக்கதை என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.பெற்ற மனம் (1960 அக்டோபர் 19) என்னும் இவரது படைப்பு திரைப்படமாக்கப்பட்டது.

## விருதுகள்

மு.வ.வின் ‘அகல் விளக்கு’ எனும் புதினத்திற்குச் சாகித்ய அகாதெமியின் விருது கிடைத்தது.கள்ளோ காவியமோ?, அரசியல் அலைகள், மொழியியல் கட்டுரைகள் ஆகிய மூன்று நூல்களுக்குத் தமிழக அரசின் விருது கிடைத்தது.திருவள்ளுவர் அல்லது வாழ்க்கை விளக்கம், மொழிநூல், கள்ளோ காவியமோ?, அரசியல் அலைகள், விடுதலையா, ஓவச் செய்தி ஆகிய ஆறு நூல்கள் தமிழ் வளர்ச்சிக் கழகத்தின் பாராட்டுப் பத்திரங்களைப் பெற்றன.உலகப் புகழ்பெற்ற மு.வ. அவர்கள் அக்டோபர் 10, 1974 இல் இயற்கை எய்தினார்.

## பெண்ணியம்

பெண்ணியம் என்பது பாலினத்தின் அடிப்படையில் சமூக, அரசியல் மற்றும் பொருளாதாரச் சமத்துவத்தை வலியுறுத்தும் ஒரு தத்துவமாகும். இது பெண்களுக்குச் சம வாய்ப்புகளையும். உரிமைகளையும் வழங்க போராடும் ஒரு கருத்தியல் மற்றும் சமூக இயக்கமாகும் பெண்களின் சம உரிமைகளுக்காக வாதிடும் அல்லது ஆதரிக்கும் ஒரு நபராகவோ அல்லது கொள்கையாகவோ இது குறிப்பிடப்படுகிறது.

பெண்ணியம் என்பது பாலினங்களின் அரசியல், பொருளாதார. தனிப்பட்ட மற்றும் சமூகச் சமத்துவத்தை வரையறுத்து நிறுவுவதை நோக்கமாகக் கொண்ட இயக்கங்கள் மற்றும் சித்தாந்தங்களின் வரம்பாகும் அவை பார்வைக்கு முன்னுரிமை அளிக்கின்றன. மேலும் இந்தச்சமூகங்களில் பெண்கள் அநீதியாக நடத்தப்படுகிறார்கள் என்ற நிலைப்பாட்டைப் பெண்ணியம் கொண்டுள்ளது. இதைமாற்றுவதற்கான முயற்சிகளில் பாலின வகைமாதிரிகளுக்கு எதிராகப்போராடுவது மற்றும் பெண்களுக்கான கல்வி, தொழில்முறை மற்றும் தனிப்பட்ட வாய்ப்புகள் மற்றும் விளைவுகளை மேம்படுத்துவது ஆகியவை அடங்கும்

பெண்ணியத்தில் பல வகைகள் உள்ளன. அவற்றில் தாராளவாத பெண்ணியம், மார்க்சிய பெண்ணியம், தீவிர பெண்ணியம், கலாச்சார பெண்ணியம் மற்றும் சுற்றுச்சூழல் பெண்ணியம் ஆகியவை அடங்கும். இவை தவிர, சமூக-பொருளாதார அமைப்பை மையமாகக் கொண்ட சமதர்மப் பெண்ணியம் (சோசலிச பெண்ணியம்) போன்ற பிற

வகைகளும் உள்ளன. இந்த வகைகள் ஒவ்வொன்றும் பாலின சமத்துவத்திற்கான அணுகுமுறைகளில் வேறுபடுகின்றன.

## முக்கிய பெண்ணிய வகைகள்

### தாராளவாத பெண்ணியம்

சட்ட மற்றும் அரசியல் அமைப்புகளில் சம உரிமைகளுக்காகப் போராடுகிறது.

### மார்க்சிய பெண்ணியம்

பெண்களின் அடக்குமுறை முதலாளித்துவ மற்றும் வர்க்க ஏற்றத்தாழ்வுகளால் ஏற்படுகிறது என்று கருதுகிறது.

### தீவிர பெண்ணியம்

பாலின ஒடுக்குமுறைக்கு முக்கிய காரணம் சமூகத்தில் நிலவும் ஆணாதிக்கம் என்று நம்புகிறது.

### கலாச்சார பெண்ணியம்

பெண்களின் தனித்துவமான அனுபவங்கள் மற்றும் பண்புகளை வலியுறுத்துகிறது, மேலும் அதை முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதுகிறது

### சமதர்மப் பெண்ணியம் (சோசலிச பெண்ணியம்)

தனிப்பட்ட சொத்துரிமைகள் மற்றும் வர்க்க ஏற்றத்தாழ்வுகளுக்கு எதிராகப் போராடுவதன் மூலம் பெண் விடுதலை சாத்தியமாகும் என்று கூறுகிறது.

### சுற்றுச்சூழல் பெண்ணியம்

சுற்றுச்சூழல் பிரச்சனைகள் மற்றும் பாலின சமத்துவமின்மை ஆகியவற்றுக்கு இடையேயான தொடர்பை ஆராய்கிறது.

### நியூலிபரல் பெண்ணியம்

பாலின அடையாளங்களின் மனோவியல் மற்றும் சமூக விமர்சனங்களில் கவனம் செலுத்துகிறது.

## மு.வ.வின் பெண்ணியப் பார்வை

மு. வரதராசனார், தனது படைப்புகளில் பெண்களைப் பற்றிக் கொண்டிருந்த கருத்துக்கள், அன்றைய காலச் சமூகச் சூழலைக் கடந்து ஆழமான பெண்ணியப் பார்வையாக அமைந்தன. அவர் பெண்களை உடலின்பத்திற்காக மட்டும் பார்க்காமல், உள்ளத்தின் உணர்வுகளையும், அறிவுத் திறனையும் கொண்டவர்களாகச்சித்திரித்தார்.

## உடல் சார்ந்த கவர்ச்சியை எதிர்த்தல்

மு.வ.வின் பார்வையில், பெண்கள் தங்கள் உடல் கவர்ச்சியை வைத்து ஆண்களைக் கவர்வது அவர்களுக்கு அடிமைத்தனத்தையே உருவாக்கும். ஆனால், அறிவாற்றல் மற்றும் மனதின் வலிமையைக் கொண்டு ஆண்களைக் கவரும்போது சமத்துவமான உறவு மலரும் என்று குறிப்பிட்டார். இதை அவர் தனது 'பெண்மை வாழ்க' என்ற நூலில் தெளிவாக விளக்கியுள்ளார்.

## கல்விக்கு முக்கியத்துவம்

பெண்கள் முழு சுதந்திரமும், கண்ணியமும் பெற கல்வி மிக அவசியம் என்பதை அவர் வலியுறுத்தினார். கல்வி மறுக்கப்படுவதாலேயே பெண்கள் தாழ்வு மனப்பான்மையுடனும், அடக்கப்பட்டு அடிமை நிலையிலும் வாழ நேர்வதாகக் கருதினார்.

## உறவுகளில் உள்ள சிக்கல்கள்

ஆண்-பெண் உறவுகளில் ஏற்படும் சிக்கல்களை அவர் தனது புதினங்களில் ஆராய்ந்துள்ளார். ‘நெஞ்சில் ஒரு முள்' புதினத்தில், குடும்பப் பின்னணியில் பெண்களின் அக வாழ்க்கையில் ஏற்படும் சிக்கல்களைப் பற்றிப் பேசினார்.'அகல்விளக்கு' புதினத்தில், பெண் கதாபாத்திரங்களின் மாண்புகளையும், ஆண்-பெண் உறவில் உள்ள நுட்பமான சிக்கல்களையும் சித்தரித்தார்.

## பெண்களின் உணர்வுகளுக்கு மரியாதை

மு.வ. தனது படைப்புகளில் பெண் பாத்திரங்களை வெறும் அடிமைகளாகவோஅல்லது ஆண்களின் சொத்தாகவோ காட்டாமல், நுண்ணிய உணர்வுகளும், ஆழமான எண்ணங்களும் கொண்டவர்களாகப் படைத்தார்.

உதாரணமாக, ‘விலங்குகள்’ நாவலில் ரேகா என்ற பெண் பாத்திரத்தைச் சிறந்த உதாரணமாகக் கூறலாம்.

## தனிமனித சுயமரியாதை

பெண்கள் சுயமரியாதையுடனும்,தன்னம்பிக்கையுடனும் வாழ வேண்டும் என்று அவர் விரும்பினார். சமூகத்தின் கட்டுப்பாடுகளுக்குள் முடங்காமல், சுயமாகச் சிந்தித்து முடிவெடுக்கும் வல்லமை கொண்டவர்களாகப் பெண்கள் உருவாக வேண்டும் என்பதை அவர் தனது எழுத்துக்களில் வலியுறுத்தினார்.

மு.வ.வின் இந்தக் கருத்துக்கள், அக்காலகட்டத்தில் இருந்த பழமைவாதப் பெண்மை குறித்த பார்வைகளிலிருந்து மாறுபட்டவையாகவும், முற்போக்கானதாகவும் அமைந்தன. அவரது படைப்புகள் பெண்கள் குறித்து ஆழமான சிந்தனைகளை விதைத்தன.

## பெண்மை வாழ்க – நூல் அறிமுகம்

மு. வரதராசனின் “பெண்மை வாழ்க” என்பது பெண்கள் உயர்வு பெறுவது குறித்த அவரது எண்ணங்களை வெளிப்படுத்தும் ஒரு நூலாகும். இது பெண்களை அடிமைகளாகக் கருதாமல், அவர்களை உயர்வு பெறச் செய்வதன் முக்கியத்துவத்தை வலியுறுத்துகிறது. இந்த நூல் ‘காதல்’ மற்றும் பிற இதழ்களில் வெளியான கட்டுரைகளின் தொகுப்பாகும்.

## நூலின் நோக்கம்

பெண்கள் உடம்பை மட்டுமல்ல, உள்ளத்தையும்கருவியாகக் கொண்டு உயர்வு பெற வேண்டும் என்பதை இந்த நூல் வலியுறுத்துகிறது. ஆண்களைக் கவரும் வரையிலும் பெண்கள் அடிமைகளாக வாழ நேரிடும், ஆனால் உள்ளத்தைக் கொண்டு கவர முடிந்தால் ஒத்த உரிமையுடன் உயர முடியும் என்று குறிப்பிடுகிறது.

## பெண்மைவாழ்க

பாரதியார் “பெண்மை வாழ்க” என்று கூறியது பெண்களின் உயர்வே சமூகத்தின் முன்னேற்றம் என்பதை உணர்ந்ததால்தான். பெண்மை வாழ்ந்தால்தான் அன்பு, அறம்,

ஆண்மை ஆகியவை வளரும் என்று அவர் நம்பினார். முன்னேற்றம் பெற்ற நாடுகளில் பெண்கள் சுதந்திரமாக வாழ்கின்றனர்; பிற்போக்கு நாடுகளில் பெண்கள் அடிமையாக உள்ளனர். வீட்டில் பெண்கள் அடிமையாக இருப்பதே நாட்டின் அடிமைத்தனத்திற்குக் காரணமாகிறது; அதேபோல் வீட்டிலேயே பெண்விடுதலை ஆரம்பித்தால் நாட்டின் விடுதலைக்கும் வழிவகுக்கும். தமிழ்நாட்டில் முக்காடு, முகமூடி போன்ற பழக்கங்கள் இல்லையென்றாலும் பெண்களுக்குப் போதிய உரிமை கிடைக்கவில்லை. வரலாற்றில் தமிழர் பெண்மைக்குப் பெருமை அளித்தும், இன்றைய வாழ்க்கையில் அந்த உயர்வு பிரதிபலிக்கவில்லை. சில நகரப் பெண்கள் கல்வி, பதவி பெற்றுள்ளனராயினும், பெரும்பாலான பெண்கள் எழுத்தறிவில்லாத, வறுமையுடன் கூடிய வாழ்க்கை வாழ்கின்றனர். உரிமையின்மை காரணமாக புதுமை, முன்னேற்றம், சிந்தனை ஆகியவை குறைந்துள்ளன. பண்டிகை, நோன்பு போன்ற நல்ல நோக்கத்துடன் அமைந்த பழக்கங்கள் இப்போது பயனற்ற சடங்குகளாக மாறி, பெண்களின் முன்னேற்றத்தைத் தடுக்கின்றன. வாழ்க்கைக்காக சடங்குகள் இருக்க வேண்டும், ஆனால் சடங்குகளுக்காக வாழ்க்கையை இழக்கக் கூடாது. பெண்கள் கண்மூடி பழக்கங்களைப் பின்பற்றாமல், தகுந்தவை, தகாதவை என்று ஆராய்ந்து, உடல் நலம், அறிவு, அன்பு, அமைதி ஆகியவற்றை வளர்த்துக்கொள்ள வேண்டும். உலகம் மாறிவருகிறது. பெண்களும் அஞ்சாமையும் அறிவும் கொண்டு முன்னேற வேண்டும். அப்போதுதான் பாரதியார் வாழ்த்திய “பெண்மை வாழ்க” என்ற சொல் உண்மையிலே அர்த்தம் பெறும்.

## பெண்மைக்குமதிப்பு

எந்த நாட்டில் பெண்மைக்கு மதிப்பும் பெருமையும் இருக்கின்றனவோ, அந்த நாடு முன்னேற்றம் பெற்றதாகும். பெண்மைக்கு இழிவு செய்யும் நாடு பிற்போக்கு நாடாகும். இதை உலக வரலாறு உறுதிப்படுத்துகிறது. தமிழ்நாட்டின் சங்ககால வரலாறும் இதற்குச் சிறந்த சான்று. கி.பி. இரண்டாம் நூற்றாண்டுக்கு முற்பட்ட காலத்தில் தமிழ்நாடு அரசியல், சமூகம், வாணிகம் போன்ற துறைகளில் முன்னேற்றம் பெற்றிருந்தது. அந்தக் காலத்தில் பெண்கள் நன்கு மதிக்கப்பட்டு, புலவர், கலைஞர், அரச குடும்பத்தினர் எனப் பல துறைகளிலும் சிறந்து விளங்கினர். அவ்வையார், கோப்பெருந்தேவி போன்றோர் இதற்கு சாட்சி. ஆனால் சில புகழ்பெற்ற பெண்களைப் பார்த்து மட்டும் அந்தச் சமுதாயம் பெண்களுக்கு உரிமை தந்தது என்று கூற முடியாது. பொதுவாக மக்களின் வாழ்க்கையை ஆராய வேண்டும். பழங்காலப் பாடல்களில் ஆண்கள் பெண்களை மதித்து

நடந்துகொண்ட பண்பைக் காணலாம். குறிஞ்சிப்பாட்டில் கபிலர் வர்ணித்த காட்சியில், வேட்டைக்காரன் இரண்டு இளம் பெண்களை அஞ்சி நிற்கக் காணும்போது வருந்தி இனிய சொற்களால் ஆறுதல் கூறுகின்றான். பெண்களைப் புண்படுத்தியதாக நினைத்து வருந்தும் அந்த வீரனின் நடத்தை அக்காலத்துத் தமிழரின் பண்பாட்டை வெளிப்படுத்துகிறது. பெண்மையின் பயத்தைக் கண்டு ஆண்கள் வருந்தி, அவர்களுக்கு மரியாதை அளிப்பது பழந்தமிழ் சமுதாயத்தில் பெண்மைக்கு இருந்த மதிப்பையும் நாகரிகத்தையும் காட்டுகிறது.

## அடிமைவிலங்கு

பெண்ணுடம்பும் பெண்ணுள்ளமும் ஆண்களுக்குக் கவர்ச்சியானவை. தொடக்கத்தில் உடம்பின் அழகே கவர்ச்சிக்குக் காரணமாக இருப்பினும், அறிவும் உணர்வும் வளர்ந்தபின் உள்ளத்தின் அன்பே காதலை நிலைநிறுத்துகிறது. இதுபோல் ஒரு நாட்டிலும்பெண்கள் தம் உடம்பின் அழகால் மட்டுமே ஆண்களைக் கவர்கிறார்களானால், அந்த நாடு பிற்போக்கான நாடு; ஆனால் பெண்களின் உள்ளம், அறிவு, அன்பு மதிக்கப்படும் இடங்களில் தான் முன்னேற்றம் காணப்படும்.

பெண்ணுடம்பைக் குறை கூறுவது அறியாமையின் விளைவு; மனித உடலில் உள்ள மூளை தான் படைப்பின் அற்புதம். எனவே உடம்பை இழிவாகக் காணாமல், அதைவிட மேலான பெண்ணுள்ளத்தை மதிப்பதே நோக்கம். எந்த நாட்டில் ஆண்கள் பெண்களை அழகுப் பொம்மைகளாக அல்லாமல், வாழ்க்கைத் துணையாகவும் அன்பு உள்ளங்களாகவும் கருதுகிறார்களோ, அந்த நாடே முற்போக்கான நாடு.

பெண்கள் தம் உடம்பைக் கருவியாகக் கொண்டு ஆண்களைக் கவரும் வரை அடிமைகளாகவே வாழ நேரும். ஆனால் தம் உள்ளத்தால் ஆண்களைக் கவரும்போது தான் ஒத்த உரிமையுடன் உயர்வைப் பெற முடியும். மேற்கத்திய நாடுகளில் பெண்கள் உடம்பின் அழகை பேணுவதோடு உள்ளத்தின் கவர்ச்சியாலும் ஆண்களோடு சமமாக நிற்கிறார்கள். அதனால் அங்குப் பெண்ணடிமை குறைவாக உள்ளது.

இந்தியா போன்ற கிழக்கு நாடுகளில் உயர்ந்த ஒழுக்க நெறிகள் இருந்தாலும், பொதுவாகப் பெண்கள் இன்னும் உரிமையற்ற நிலையில்தான் உள்ளனர். சில உயர்ந்த பெண்கள் மட்டும் உள்ளத்தின் மேன்மையை அடைந்துள்ளனர். பெரும்பாலோர் இன்னும் உடம்பின் அடிமைகளாக வாழ்கின்றனர். பெண்ணுடம்பை மட்டும் நாடும் ஆண்கள்

பெண்களை மூலைவீட்டில் சிறைபோல் வைத்துக் காக்க முயல்கிறார்கள். இதுவே பெண்ணடிமையின் ஆரம்பம்.

ஆனால் பெண்ணுள்ளத்தையும் நாடும் ஆண்கள், பெண்களை வாழ்க்கைத் துணையாகக் கருதி, அவர்களின் அறிவையும் ஆற்றலையும் வளர்த்துக்கொள்கிறார்கள். இதனால் பெண்கள் உரிமையுடன் தலைநிமிர்ந்து வாழ முடிகிறது. உடம்பின் கவர்ச்சி பெண்களை "அடிமை விலங்காக" மாற்றினாலும், உள்ளத்தின் கவர்ச்சி பெண்களுக்கு உரிமை, சுதந்திரம், மரியாதை ஆகியவற்றை வழங்குகிறது. இதையே திருவள்ளுவர் அழகாகக் கூறுகிறார்

**"சிறைகாக்கும்காப்புஎவன் செய்யும் மகளிர்,**

**நிறைகாக்கும் காப்பே தலை."**

அதாவது, வெளிப்புறக் காவல் பெண்களைப் பாதுகாக்காது; அவர்களின் உள்ளத்தின் நெறி, நிறைதான் உண்மையான பாதுகாப்பு.

## உரிமையின்அடையாளம்

பெண்களுக்கு உரிமை குறைவு என்று பலர் கூறினாலும், அது முழுமையான உண்மை அல்ல. நம் நாட்டில் கல்வியறிவும் செல்வமும் உள்ள குடும்பங்களில் பெண்கள் உரிமையோடு வாழ்கின்றனர். பழங்காலத்திலும் இப்படிப்பட்ட பெண்கள் இருந்ததாக வரலாறுகளும் இலக்கியங்களும் காட்டுகின்றன. ஆகவே, பெண் உரிமை குறைவு என்பது எல்லோருக்கும் பொருந்தும் குற்றச்சாட்டு அல்ல. ஏழை, கல்வியற்ற குடும்பங்களில் பெண்களுக்கு உரிமை குறைவாக இருப்பதற்குக் காரணம் நாகரிக நிலையை அடையாததுதான். அதனைச் சீர்செய்வதற்காக கல்வியும் பொருளாதார வளமும் அளிக்கப்பட வேண்டும்.

சிலர் "கன்னிகா தானம்" அல்லது "தாலி" போன்ற பழக்கவழக்கங்களைப் பெண் அடிமைத்தனத்தின் சின்னங்களாகக் காட்டுகிறார்கள். ஆனால் அவை இன்றைய நிலையைப் பிரதிபலிப்பவை அல்ல. தாலி பற்றி நண்பர்கள் இடையே நடந்த உரையாடலில் ஒருவர், "பெண்கள் கழுத்தில் தாலி அணிவது அடிமைச் சின்னம்" என்றார். மற்றவர் அதற்கு மறுத்து, "உரிமையுள்ள பெண்கள் அதை பொன்னால் செய்து

அணிகிறார்கள்; அது அடிமைச் சின்னம் அல்ல” என்றார். இதற்குப் பதிலாக மற்றொருவர், “அது வறுமைச் சின்னமாக இல்லாமல் செல்வச் சின்னமாக மாறியுள்ளது” என்றார். இதிலிருந்து புரிவது , பழக்கவழக்கங்கள் அடிமைச் சின்னங்கள் அல்ல; அவை காலத்தால் மாற்றமடைந்த பண்பாட்டு அடையாளங்கள்.

மேற்கு நாடுகளில் திருமணமான பெண்கள் தங்கள் பெயரை மாற்றி, கணவனின் பெயருடன் சேர்த்து “மிஸஸ் ஜான்” போன்ற பெயர்கள் எடுப்பது உண்மையான அடிமைச் சின்னம் என்று ஒருவர் கூறினார். ஆனால் நம் நாட்டில் திருமணமான பெண் தனது பெயரை மாற்றாமல் தன் அடையாளத்தைக் காப்பாற்றுகிறாள். இதுவே நம் சமூகத்தின் முன்னேற்றமான பக்கம்.

உண்மையான உரிமை என்பது பழக்க வழக்கங்களால் அறியப்படுவதில்லை. “அவரவர்களின் வாழ்க்கையில் விளங்கும் அன்பின் சிறப்பே உரிமையின் அடையாளம்” என்பதே உண்மை. பழந்தமிழ் இலக்கியங்களிலும் இதே கருத்து காணப்படுகிறது. சங்ககால பாடல்கள் காதலர்களின் அன்பைச் சிறப்பித்து, ஆணும் பெண்ணும் “தலைவன்”, “தலைவி” என்று சமமான தலைமைக்குரியவர்களாகக் குறிப்பிட்டுள்ளன. மேலும், “கிழவன் – கிழத்தி” என்ற சொற்களும் இருவரும் உரிமையுடையவர்கள் என்பதைக் காட்டுகின்றன. எனவே, பெண்களின் உரிமையின் அடிப்படை அன்பிலும் பரஸ்பர மரியாதையிலும் தான் உள்ளது என்பதை தமிழ்நாட்டு முன்னோர்கள் நன்கு உணர்ந்திருந்தனர்.

## அழகும்ஆற்றலும்

`திருமணம் என்பது ஆண் பெண் இருவரும் ஒருவரிடமிருந்து அன்பை எதிர்பார்க்கும் உறவு. காலம் மாறினாலும் இந்த அடிப்படை உண்மை மாறவில்லை. அன்பிற்கு அடுத்தபடியாக, ஆண் பெண்ணிடமிருந்து அழகை, பெண் ஆணிடமிருந்து ஆற்றலை எதிர்பார்க்கிறார்கள்.

பெண்கள் இயற்கையழகைப் பேணிக் காத்து, தேவையான இடங்களில் செயற்கை அழகால் அதனை மேம்படுத்துகின்றனர். இயற்கையழகு குறையும் காலத்திற்கு முன் அவர்கள் திருமணம் செய்து கொள்ள முயலுவது இதன் விளைவு. அதனால்

பெரும்பாலான நாடுகளில், பெண்கள் கணவனை விட வயதில் இளையவர்களாக இருப்பது வழக்கம். சில விதிவிலக்குகள் இருந்தாலும், பெரும்பாலும் ஆண்கள் இளமையும் அழகும் கொண்ட பெண்களையே விரும்புகிறார்கள்.

பெண்கள் ஆண்களிடம் "அழகு"க்கு மாறாக "ஆற்றல்" விரும்புகின்றனர். பழங்காலத்தில் அந்த ஆற்றல் உடல் வலிமையாக இருந்தது — "வில் முறித்துத் திருமணம்" அல்லது "ஏறு தழுவித் திருமணம்" ஆகிய வழக்குகள் இதற்குச் சான்று. பின்னர், காலம் மாறி, அறிவு ஆற்றலாகக் கருதப்பட்டது. கலைஞர்கள், புலவர்கள், கல்வியறிவுடையோர் பெண்களால் விரும்பப்பட்டனர்.

இன்று "ஆற்றல்" என்றால் பணம் சம்பாதிக்கும் திறன் எனப் பொருள் மாறியுள்ளது. "உடல் வலிமை → அறிவு → பட்டம் → பணம்" என்ற மாறுதல் இயற்கை வளர்ச்சியாகவே பார்க்கப்படுகிறது. ஆனால் பணத்தின் செல்வாக்கு நிலையானதல்ல; எதிர்காலத்தில் "அறிவும் பண்பும்" மீண்டும் மதிக்கப்படும் என்று ஆசிரியர் கூறுகிறார்.

இன்றைய சமூகத்தில் கிராமங்களில் உடல் வலிமை, நடுத்தரத்தில் அறிவு, நகரங்களில் பணம் ஆகியவற்றை ஆற்றலாகக் கருதுகிறார்கள். ஆனால் சில பண்பட்ட குடும்பங்களில் "அன்பும் பண்பும்" இன்னும் முக்கிய இடம் பெற்றுள்ளன. இதனால் "அன்பு – அன்பு, அழகு – ஆற்றல்" என்ற பொதுவிதி இன்னும் நிலைத்திருக்கிறது.

படித்த இளைஞர்-இளம்பெண்களில் திருமணம் தாமதமாகும் காரணம், நிலையான அன்பின் குறை மற்றும் பட்டத்தின் அடிப்படையில் உயர்வு தாழ்வு காணும் மனப்பான்மை. பெண்கள் தமக்குச் சமமான அல்லது மேல் கல்வியுடையவரையே விரும்புகிறார்கள்; ஆண்கள் தமக்குக் குறைவாகப் படித்தவரையே விரும்புகிறார்கள். இதனால் சமநிலை சீர்குலைகிறது.அதோடு, கல்வியின் அழுத்தம் உடல் அழகைத் தளரச் செய்கிறது. "அறிவு அன்புக்கு அரண் செய்யாது; பண்பு தான் அன்பை நிலைநிறுத்தும்" என்று ஆசிரியர் வலியுறுத்துகிறார். அறிவு வாழ்க்கையை வளர்க்கலாம்; ஆனால் பண்பே வாழ்க்கையை இணைக்கிறது.இவ்வாறு ஆராய்ந்தால், எந்தக் காலத்திலும் திருமணத்தின் மூல காரணம் அன்பு, அழகு, ஆற்றல் என்பவையே. காலம் மாறினாலும், மனித மனத்தின் இத்தகைய இயல்புகள் மாறாது என்பதே உண்மை.

**களவும்கற்றுமற**

ஒரு நண்பர் தம் மனைவியை இழந்து நீண்டகாலம் தனியாக வாழ்ந்தார். அவரின் தனிமை, சோர்வு, மனஅழுத்தம் ஆகியவற்றைக் கண்டு, எழுத்தாளர் அவரை மறுமணம் செய்யச் சொல்ல எண்ணுகிறார். ஆனால் நண்பர் மறுத்தார்.

அவர் கூறியது, “மறுமணம் என்றால், இளம் பெண்ணுடன் வாழ்க்கையை மீண்டும் முதல் படியிலிருந்து தொடங்க வேண்டும். ஆனால் நான் அனுபவத்தின் மேற்படியில் இருக்கிறேன்; அவள் அடிப்படியில் இருப்பாள். அதனால் இயல்பான அன்பும் இணக்கமும் இருக்காது” என்பதாகும். இந்த எண்ணம் அவரின் அறிவும் மனவளர்ச்சியும் காட்டுகிறது.

எழுத்தாளர் பின்னர் உணர்கிறார். “அறிவு வளர வளர, வாழ்க்கையில் விழிப்பும் தயக்கமும் கூடுகிறது”. அறிவில்லாதவர்கள் சிந்திக்காமல் செய்கிறார்கள்; ஆனால் அறிவாளிகள் யோசித்து தயங்குகிறார்கள். அதனால் நண்பர் மறுமணத்தைக் கடைசியில் தவிர்க்கிறார்.மேலும், அவர் “காதலன்” ஆனால் “காமுகன்” அல்ல என்று குறிப்பிடப்படுகிறது. காமம் உடல் பசியை மட்டும் தீர்க்கும்; ஆனால் காதல் மனத்தைப் பூர்த்தி செய்யும். அதனால் காதலனாக வாழ்ந்தவர் மறுமணத்தை எளிதாக ஏற்க முடியாது.

பின்னர் ஆசிரியர் கூறுகிறார், பழங்காலத்தில் திருமணத்துக்கு முன் காதல் வாழ்க்கை இருந்தது. அது ரகசியமாக நடந்ததால் “களவு வாழ்க்கை” என்று அழைக்கப்பட்டது. ஆனால் அது தீமையானது அல்ல; மாறாக, “**களவு என்பது இல்லற வாழ்க்கைக்கான முதல் படி**” என்று விளக்குகிறார். பெற்றோர் அறிந்தபின் அந்தக் காதல் திருமணமாக மாறும்; இவ்வாறு களவு → கற்பு ஆகிறது.

ஆனால் வாழ்க்கையில் மேலேற, கடந்த படிகளை மறக்கவேண்டும். அதுபோல் “களவையும் மற” என்று அவ்வையார் கூறியதன் பொருள் — களவு உயர்ந்த வாழ்க்கைப் படி ஆனாலும், அதை ஒருமுறை அனுபவித்து விட்டால் மறந்துவிட வேண்டும் என்பதே.

திருவள்ளுவரும் இதையே வலியுறுத்துகிறார்:

**“உள்ளத்தால் உள்ளலும் தீதே பிறன்பொருளைக்**

**கள்ளத்தால் கள்வேம் எனல்.”**

அதாவது, கெட்டதை எண்ணுவதும் கூட தீமையே. ஆனால் களவோ உயர்ந்த உணர்வின் விளைவு; அதனால் அதனை "களவும் மற" என்று வற்புறுத்திப் பழமொழி கூறினர் — ஒருவன் ஒருத்தியிடம் மட்டுமே காதலைக் கற்றுக் கொள்ள வேண்டும்; அதைக் கடந்தால் அது மதிப்பிழக்கும் என்பதே உண்மையான பொருள்.

## பலர்காணத் தோன்றல்

பழமைக்கும் புதுமைக்கும் இடைவிடாது போராட்டம் நடைபெற்று வருகிறது. பழமையை மறந்தால் வழி இழக்க நேரிடும்; அதேவேளை புதுமையை ஏற்றுக்கொள்ளாததால் முன்னேற்றம் தடைப்படும். எனவே, பழமையில் ஒரு காலை ஊன்றியபடியே புதுமைக்கு அடி எடுக்க வேண்டியது அவசியம்.

பெண்களின் பண்புகளில் முக்கியமானது "நாணம்". இதைச் சுற்றியே பழமைவாதிகளும் புதுமைவாதிகளும் விவாதிக்கிறார்கள். பழமைவாதிகள் "நாணம் பெண்களுக்கு இயற்கையானது, பெண் தன்மைக்கே "உயிர்" எனக் கூறுகின்றனர். திருவள்ளுவரும் "திருநுதல் நல்லவர் நாண்" என்று குறிப்பிடுகிறார். புதுமைவாதிகள் அதற்கு எதிராக "நாணம் கற்றுக் கொள்ளப்பட்ட பண்பு, மாற்றக்கூடியது" என வாதிடுகின்றனர். பாரதியார் இதை ஆதரித்து "நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்" என்றார்.

நாணம் பெண்களின் முன்னேற்றத்திற்கு ஒரு அளவிற்கு இடையூறாக இருக்கலாம். ஆயினும், எந்த நாட்டுப் பெண்ணாக இருந்தாலும் ஒரு சிறிது நாணம் அவர்களிடம் காணப்படும். மேற்கத்தியப் பெண்களிடம் நாணம் குறைவாக இருப்பினும், அவர்கள் கதைகளிலும் நாடகங்களிலும் அதற்கான சுவடுகள் இருக்கின்றன. எனவே நாணம் முற்றிலும் இல்லாமல் போகாது, ஆனால் அதன் வெளிப்பாடு காலத்தோடு மாறுகிறது.

பொது வாழ்க்கையில் ஆண்களும் பெண்களும் ஒன்றாகப் பழகும் சூழல்கள் — கல்வி, அலுவலகம், சமூக நிகழ்ச்சிகள் நாணத்தை மெதுவாகக் குறைத்துள்ளன. போர்காலப் போக்குவரத்து நெரிசலும் இதற்குக் காரணம் எனலாம். ஆனால் பெரும்பாலான தமிழ்ப் பெண்கள் இன்னும் நாணத்தைப் போற்றுகின்றனர்; அதற்கே சமூக மதிப்பும் உள்ளது.

மனிதப் பெண்ணில் நாணம், உடலின் வளர்ச்சியோடு உள்ளத்தில் தோன்றும் உணர்ச்சிகளின் வெளிப்பாடு. அவள் அழகாக இருக்க விரும்புகிறாள், ஆனால் அந்த அழகைப் பிறர் அறியாமலே மறைக்க முயல்கிறாள் — இதுவே உண்மையான நாணத்தின் வடிவம்.

திருவள்ளுவர் கூறிய காதலனின் வார்த்தைகள் இதைக் காட்டுகின்றன: “அவள் முகத்தின் அழகோடு நாணமும் கலந்து விளங்குகிறது; அதனால் அவள் பலர் காணத் தோன்ற மாட்டாள்.” இது பழங்காலத்தில் நாணத்திற்கு இருந்த உயர்ந்த மதிப்பை வெளிப்படுத்துகிறது.பிற்காலத்தில் உண்மையான நாணம் “பெண்களை அடக்கி வீட்டுக்குள் வைப்பதற்கான” கட்டுப்பாடாக மாறியது. இதைச் சிறப்பாக விளக்குகிறது திருவள்ளுவரின் வரி

**“சிறைகாக்கும் காப்பு எவன் செய்யும் மகளிர்**

**நிறைகாக்கும் காப்பே தலை.”**

இன்றைய சமுதாயத்தில் கட்டுப்பாடு தளர்ந்தாலும், “பலர் காணத் தோன்றாத நாணம்” வேறு வடிவத்தில் வாழ்கிறது. பெண்கள் இப்போது பலர் காணத் தோன்றும் வகையில் அழகுபடுத்திக் கொள்ளத் தொடங்கியுள்ளனர். “மிஸ் இந்தியா”, “மிஸ் உலகம்” போன்ற போட்டிகள் இதை உறுதிப்படுத்துகின்றன.

இன்றைய உலகம் பாராட்டுவது பலர் காணத் தோன்றும், புகழப் பெறும் அழகியையே. ஆனால் “யாருடைய பாராட்டு?” என்ற கேள்வி எழுகிறது. திருவள்ளுவரின் உண்மைக் காதலனின் பாராட்டா? அன்று - இன்று உண்மையான காதலன் அவளின் வெளிப்புற அழகைக் காணாமல், உள்ளத்தின் நாணத்தையே மதிக்கிறான். இவ்வாறு, நாணம் என்பது பழமைக்கும் புதுமைக்கும் இடையில் மாறும் பண்பாக இருந்தாலும், அதன் அடிப்படை மதிப்பு — பெண்ணின் உளஅழகை வெளிப்படுத்துவதே ஆகும்.

## உறுதிப்பாடா? உடன்பாடா?

திருமணம் என்றால் என்ன? அது இருவர் “இணைந்து வாழ உலகம் உடன்படும் அறிக்கை”தானா, அல்லது “ஒருவரை ஒருவர் பிரியோம்” என்ற உறுதிப்பாடா? மேற்போக்காகப் பார்க்கும் போது இரண்டாவது போலத் தோன்றினாலும், ஆழ்ந்து

உணர்வோர் கருத்தில் அது முதலாவது உலகம் ஒப்புக் கொள்ளும் உடன்பாடு என்பதே உண்மை.

திருமணம் காதலின் உறுதிப்பாடாக இருந்தால், அதுவே காதலின் இயல்புக்கு எதிராகும். “உண்மையான காதலர்க்கு உறுதி இயற்கை”காதல் தானாகவே உறுதியானது; அதற்கு தனி சடங்கு தேவையில்லை. உண்மையான காதலரைப் பிரிக்க முடியாது; “நெருப்பினும் கொடிய வறுமையும்” கூட அவர்களின் உறவைச் சிதைக்காது.ஆனால் காதல் உறுதியற்றவர்கள் திருமணச் சடங்கின் மூலம் ஒரு அளவிற்கு உறுதி பெறுகின்றனர்; அது நீண்ட காலம் நீடிப்பதில்லை. அவர்கள் உலகத்தாரின் கட்டுப்பாட்டில் உள்ளன்பு குறைந்தவர்களாய் வாழ்கிறார்கள். அதனால் பலர் தங்கள் திருமணத்தை வெறுக்கின்றனர்; சிலர் “திருமணக் கட்டை உடைத்தெறிந்து” வெளியேறுகின்றனர். இதனை மேற்கத்திய நாடுகளில் சட்டமும் சமுதாயமும் அனுமதிக்கின்றன.

உள்ளன்பு இல்லாத திருமணங்களில், கணவனும் மனைவியும் “குடங்குருள் பாம்போடு உடனுறைதல்” போல வாழ்கின்றனர் — வெளிப்படையாக ஒன்றாய் இருந்தாலும் உள்ளுக்குள் பகை நிலவுகிறது. எனவே, “இல்லறம்” என்பது “அறம் இல்வாழ்வு” ஆகிவிடுகிறது.நாகரிகம் குறைந்த சமூகங்களில் இது இன்னும் மோசம் — அங்குக் கணவன் மனைவிக்குள் தூற்றலும் துன்புறுத்தலுமே நிலவுகின்றன. ஆகவே, “திருமணம் உறுதியைக் கொடுக்கும்” என்ற கருத்து ஒரு ஏமாற்றமே.இதனால், திருமணம் என்பது காதலின் உறுதிப்பாடு அல்ல; அது உலகம் ஒப்புக் கொள்ளும் உடன்பாட்டு முறை. எல்லோரும் உண்மைக் காதலர்கள் அல்ல; சிலர் போலிக் காதலர்களும். அதனால், “**பொய்யும் வழுவும் புகாமல் காக்கச் சான்றோர் கண்ட வழி**”தான் திருமணம் எனலாம். இதைத் தொல்காப்பியர் உறுதிப்படுத்துகிறார்:

**“பொய்யும் வழுவும் தோன்றிய பின்னர், ஐயர் யாத்தனர் கரணம் என்ப”**

**(தொல்காப்பியம் – பொருள் 145)**

ஆயினும், திருமணத்தின் போர்வையில் காதலற்றவர்கள் கூட புகுந்தனர். கணவன் வலியனாயின் மனைவியை அடக்கி வாழ்கிறான்; மனைவி துணிவாளாயின் கணவனை அடக்கி வாழ்கிறாள்; இருவரும் வன்மையுடன் இருந்தால் வீடு போர்க்களமாகிறது.

எனினும், இதனால் சமுதாய அமைதி ஏற்பட்டது; உலகம் "இவன் அவளின் கணவன், இவள் அவனின் மனைவி" என்று ஒப்புக் கொண்டது. ஆகவே, திருமணம் என்பது இருவரின் உறுதியை நிலைநாட்டும் சடங்கு அல்ல — இருவரின் வாழ்க்கைக்கு உலகம் உடன்படும் முறை என்பதே உண்மையான பொருள்.

## எல்லாம் மனத்தால் ?

"மனத்தினால் எண்ணித் தானே வந்தது இவ்வுலகம்" என்ற கைவல்லிய மொழி உண்மை. பிறப்பு, இறப்பு, காதல், அழகு என அனைத்துக்கும் பொருந்தும். காதலில் உடம்பும் உள்ளமும் முக்கிய பங்கு வகிக்கின்றன; தொடக்கத்தில் உடலின் செல்வாக்கு அதிகம் இருந்தாலும், பின்னர் உள்ளத்தின் செல்வாக்கு மேலோங்குகிறது. மனம் மாறினால் காதலும் மாறும்; உடல் பொருத்தம் இல்லாவிட்டாலும் மனப்பொருத்தம் இருந்தால் காதல் நிலைக்கும் என்பதையும் சில குடும்பங்கள் நிரூபிக்கின்றன.

அழகு என்பது மனத்தின் உணர்ச்சியைப் பொறுத்தது. ஒரே பெண்ணை ஒருவர் கண்களின் அழகுக்காகப் பாராட்டுவார், மற்றொருவர் நடையின் மென்மைக்காக. இதனால் அழகு என்பது பொருளில் இல்லாமல் மனதில் இருக்கிறது என்பதும் விளங்குகிறது.

பெண்கள் தம் உடலின் சில பாகங்களை மறைப்பது நாகரிகம் என்று பல நாடுகளில் நம்பப்படுகிறது. இந்தியப் பெண்கள் மார்பை மறைப்பதைப் போன்று, சீனப் பெண்கள் பாதத்தை மறைத்தனர். சீனர்களின் எண்ணப்படி பெண்ணழகு பாதத்தில் உள்ளது; அதனால் அவர்கள் **"காலைக் குறுக்கி மறைத்து அழகு படுத்தாத பெண் நாட்டிற்கே அவமானம்"** என்று கூட பாடினர்.

தமிழ்க் கவிஞர்கள் பெண்களின் பாதத்தை "நாயின் நாக்கைப் போன்ற மென்மையானது" என்று உவமைப்படுத்தி பாடினர்

**"வருந்துநாய் நாவின் பெருந்தகு சீறடி" (பெரும்பாண்: 42)**

இதனால் உலகத்தின் பல பகுதிகளில் நாணம், கவர்ச்சி, அழகு ஆகியவை மனத்தின் எண்ணத்தின்படி மாறுபடும் என்பது தெளிவாகிறது. எனவே, எல்லாவற்றிற்கும் காரணம் மனமே என்பது மெய்யுண்மை.

## முன்னேற்றம்

தமிழர்களின் விருந்தோம்பல் பழக்கம் அன்பும் நாகரிகமும் கலந்தது. விருந்தினர் “போதும் போதும்” எனத் தடுக்க, வீட்டார் “இன்னும் இன்னும்” என வற்புறுத்துவது வழக்கம். இது இருவரும் ஒருவரையொருவர் பற்றிய ஐயத்தினாலேயே உருவான மரபு – விருந்தினர் அதிகம் உண்பதால் அவமதிக்கப்படுவார் எனக் கவலைப்படுகிறார்; வீட்டார், விருந்தினர் நாணத்தால் குறைவாக உண்பார் என நினைத்து வற்புறுத்துகிறார். ஆனால் மேற்கு நாடுகளில் விருந்தினர் தாமே தமக்குத் தேவையான அளவிற்கு எடுத்துக் கொள்ளும் முறை நாகரிகமாகக் கருதப்படுகிறது; வற்புறுத்துதல் அங்கே அநாகரிகம்.இதுபோலவே காதல் மற்றும் திருமண வாழ்க்கையிலும் ஒரு மாறுதல் ஏற்பட்டுள்ளது. பழங்காலத்தில் மகன் மகள் இருவரும் தங்கள் காதல் உணர்வுகளைப் பெற்றோரிடம் சொல்லாமல் மறைத்தனர்; அது அந்நாளில் பண்பாடு எனக் கருதப்பட்டது.

**“தோழி! யாக்கை**

**இன்னுயிர் கழிவ தாயினும்…**

**காம நோயெனச் செப்பாதீமே” (அகநானூறு 52)** என்ற பாடல் இதை வெளிப்படுத்துகிறது.

இன்று காதல் பொதுவான ஒன்றாகி விட்டது; படிப்பு, தொழில், செல்வநிலை போன்றவை துணைத் தேர்வில் முக்கிய பங்காகிவிட்டன. பெற்றோரும் மக்களும் திறந்த மனதுடன் கலந்துரையாடும் நிலை உருவாகி வருகிறது. பழைய “போதும் போதும் – இன்னும் இன்னும்” போலிய நாகரிகம் போல், “திருமணம் வேண்டாம்” என்கிற தயக்கமும் போலியாகிவிட்டது.

மேற்கு நாடுகள் விருந்தினருக்குச் சுய உரிமை அளிப்பதைப் போலவே, திருமணத் துறையிலும் மக்களுக்கு உரிமை வழங்கும் போக்கு தற்போது சில குடும்பங்களில் தோன்றியுள்ளது. இது மனித முன்னேற்றத்தின் இயல்பான அடையாளம் எனலாம்.

## குறிக்கோள்

‘அறுபதாம் திருமணம்’ என்பது இளமையில் திருமணம் செய்து கொண்டு, நீண்ட காலம் அன்போடு வாழ்ந்த தம்பதியர் அறுபதாவது வயதில் மீண்டும் மணப்பந்தலில்

அமரும் சடங்காகும். இது இல்வாழ்க்கையின் நிறைவு விழாவாகவும், அவர்களின் நீண்டநாள் அன்பின் கொண்டாட்டமாகவும் திகழ்கிறது. இளமையில் அவர்கள் மணப்பந்தலில் அமர்ந்தபோது பெற்றோர்கள் மகிழ்ந்தனர்; முதுமையில் அவர்களைப் பார்க்கும் மகிழ்ச்சி அவர்களின் மக்கள் மற்றும் பேரன் பேத்திகளுக்கே.இவ்விழா தமிழரின் அன்பு வாழ்க்கையின் தொடர்ச்சியை நினைவூட்டுகிறது.

**"ஒத்த கிழவனும் கிழத்தியும் காண்ப" (தொல். 1038)**

என்று தொல்காப்பியனார் காதலின் தொடக்கத்தைச் சொன்னார்; மேலும் "கிழவனும் கிழத்தியும் சிறந்தது பயிற்றல் இறந்ததன் பயனே" (1138) என அவர் அதன் நிறைவைச் சுட்டினார்.

முதிய தம்பதியரைப் பார்க்கும் போது, உடல் அழகு இல்லை என்றாலும், அவர்களின் உள்ளத்து அன்பு மனதைக் கவர்கிறது. இளங்காதலர் உடல் கவர்ச்சியால் ஈர்க்கப்பட்டாலும், முதிய காதலர்கள் பற்றற்ற அன்பால் மனதை நெகிழ்விக்கிறார்கள்.

இத்தகைய தம்பதியர் அரிதாகக் காணப்படுகிறார்கள்; ஏனெனில் வாழ்க்கையில் பல இடையூறுகள், அன்பின் குறைவு, நோய், மரணம்பலரை பிரிக்கின்றன. ஆகவே அறுபது ஆண்டுகள் தளராத அன்புடன் வாழ்பவர்கள் பொன்னுக்கு இணையாக அரிதானவர்கள்.

அவர்களின் வெற்றி என்னவெனில், இளமையில் உடல் கவர்ச்சியை அடிப்படையாகக் கொண்டு தொடங்கிய வாழ்க்கை, பின்னர் உள்ளத்தின் அன்பால் நிலைத்து நிற்கிறது. திருவள்ளுவர் சொன்னது போல,

**"அற்கா இயல்பிற்றுச் செல்வம் அதுபெற்றால்**

**அற்குப ஆங்கே செயல்."**

இளமையின் அழகு அழிந்து போனபோதிலும், அந்த அழகின் வழியாக பிறந்த அன்பு மட்டுமே நிலைத்திருக்கிறது. கருங்கூந்தல் நரைத்தாலும், காமம் குறையவில்லை; மாறாக அன்பு ஆழமாகி உள்ளது.

இதையே நற்றிணை கவிஞரும் உணர்த்துகிறார்:

**"அண்ணாந்து ஏந்திய வனமுலை தளரினும்...**

**நீத்தல் ஓம்புமதி..........நின்**

**பிழையா நன்மொழி தேறிய இவட்கே." (நற்றிணை 10)**

அறுபதாம் திருமணம் எனும் சடங்கு, இளமைக்காதலின் தற்காலிக அழகை நினைவூட்டுவதல்ல; மாறாக உள்ளத்தின் அன்பே நிலையானது என்பதை வாழ்க்கைச் சான்றாகக் காட்டுகிறது.

## மலர்களுக்கு நன்றி

ஒரு சிறிய நிகழ்வு , மதுரையில் வீசிய தென்றல் காற்று, பாண்டியன், சங்கப் புலவர்கள், சிவபெருமான் ஆகியோரையும் சிந்திக்க வைத்ததாக தமிழில் ஒரு பழம்பெரும் கதை சொல்லப்படுகிறது. அரசன், அரசியின் கூந்தலில் வீசிய தென்றல் மணத்தை உணர்ந்து, அது இயற்கை மணமா அல்லது செயற்கை மணமா என ஆராய்ந்து, புலவர்களை அழைத்து தீர்வு கேட்டான். தருமி

**"கொங்குதேர் வாழ்க்கை அஞ்சிறைத் தும்பி...**

**அரிவை கூந்தலின்**

**நறியவும் உளவோ நீ அறியும் பூவே" (குறுந்தொகை 2)** என்ற பாடலைக் கொண்டு வந்தபோது, நக்கீரர் அதில் குறை கூறினார்; அதன் மூலம் சிவபெருமானோடும் வாதம் நடந்தது.

சங்க இலக்கியங்கள் பெண்களின் கூந்தலுக்கும் மேனிக்கும் இயற்கை மணம் உண்டு என்று கூறுகின்றன.

**"நாண்மலர் நாறும் நறுமென் கூந்தல்" (குறு. 270),**

**"தேங்கமழ் புதுமலர் நாறுமிவள் நுதலே" (அகம். 78)**

போன்ற பாடல்கள் இதை உறுதிப்படுத்துகின்றன. ஆனால், அந்த மணம் கணவனோடு மகிழ்ந்து வாழும் மனைவிக்கு மட்டுமே இருக்கும்; பிரிந்து வருந்தும் மனைவிக்கு இல்லை என்று நற்றிணை (277) குறிப்பிடுகிறது.

**"கொடியை வாழி தும்பி! ........**

**நாற்றம் இன்மையின் பசலை ஊதாய்"**

இதனால், அந்த மணம் இயற்கையிலே இருந்தாலும், அன்பும் மனநிலையும் அதற்குக் காரணம் என்பதை அறியலாம். மனத்தின் செல்வாக்கு அதிகம் இருப்பதால், காதல் வாழ்வில் அந்த மணம் மனம் சார்ந்ததாகிறது.

மனிதரல்லாத உயிரினங்களில் (மான், யானை, பாம்பு, புனுகுப்பூனை) இயற்கை மணம் பருவம் அடைந்தவுடன் வெளிப்படும்; ஆனால் மனிதரில் மனதின் ஆழ்ந்த அன்புடன் இணைந்தபோதுதான் அது வெளிப்படும்.

மக்களின் மணம், அவர்களின் உணவு, தொழில், சூழ்நிலை ஆகியவற்றால் மாறுபடுகிறது. இதற்குச் சான்றாக மருத்துவர் Van de Velde கூறிய நிகழ்வு ஒன்று உண்டு. ஒரே பெண்ணின் மணம் ஒருவருக்கு அருவருப்பாகவும், இன்னொருவருக்குக் கவர்ச்சியாகவும் தோன்றியது. இது முகர்வுப் புலனின் வலிமையை வெளிப்படுத்துகிறது.

தமிழர்கள் இதை அறிந்து, காதல் வாழ்வில் இயற்கை மண வேறுபாடுகள் பிரச்சனை அளிக்காமல் இருக்க, மலர் மணத்தை இணைத்தனர். அதனால் தான் திருமணமும் காதலும் "மணம்" என அழைக்கப்பட்டது. முல்லை மலர் கற்பின் அடையாளமாகவும், காதலின் சின்னமாகவும் அமைந்தது.

**"தாரும் மாலையும் மயங்கிய வாழ்வு" — சிலப்பதிகாரம்**

இவ்வாறு தமிழர் முன்னோர், இயற்கை மணத்தைக் காக்கவும், அன்பு வாழ்வை உறுதிப்படுத்தவும் மலர் மணத்தைக் கலந்த மரபை உருவாக்கினர். இதனால், மலர் மணம் தமிழரின் நாகரிகத்தின் நறுமணமாக ஆனது.

**வினாக்கள்**

| வ.எண | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | "பெண்மை வாழ்க " நூலில் பெண்மையின் சமூகப் பங்கு எவ்வாறு விளக்கப்படுகிறது? | K4 | CO5 | PO4 |
| 2 | தாய்மை மற்றும் பெண்மை குறித்த வரதராசனார்சிந்தனைகளை விளக்குக. | K3 | CO2 | PO2 |
| 3 | பெண்களின் சுயமரியாதை குறித்து நூலில் வலியுறுத்தப்பட்ட கருத்துகள் யாவை? | K1 | CO2 | PO1 |
| 4 | சமூகச் சீர்திருத்தத்தில்பெண்களின் பங்கு குறித்து நூலில் கூறப்பட்டுள்ள கருத்து என்ன? | K4 | CO3 | PO2 |
| 5 | மு. வரதராசனார் பெண்களுக்குக் கல்விஏன் இன்றியமையாதது என்கிறார்? | K1 | CO3 | PO3 |

| வ.எண | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping |
|---|---|---|

| | | | | |
|---|---|---|---|---|
| 1 | பெண்மை வாழ்க” நூலில் பேசப்பட்டுள்ளபெண்களின் சமூக, கல்வி மற்றும் பண்பாட்டு நிலைகளை மதிப்பீடு செய்க. | K4 | CO1 | PO4 |
| 2 | பெண்களின் விடுதலைச் சிந்தனையைமு. வரதராசனார்எவ்வாறுஎடுத்துரைக்கிறார்?ஆய்வுசெய்க. | K3 | CO4 | PO5 |
| 3 | பெண்களின் முன்னேற்றம்சமூக முன்னேற்றத்துடன் தொடர்புடையது என்பதை ஆசிரியர் எவ்வாறு வலியுறுத்துகிறார்? | k5 | CO5 | PO2 |
| 4 | பெண்களின் நற்பண்புகள்மற்றும் சமூகச்சிக்கல்கள்குறித்து நூலில் கூறப்பட்டகருத்துகளை விரிவாக ஆராய்க | K3 | CO4 | PO1 |
| 5 | குடும்ப வாழ்வில் பெண்மையின் பொறுப்புகள் மற்றும் உரிமைகளைக்குறித்து நூலில் கூறப்பட்டகருத்துகளை விளக்குக | K4 | CO3 | PO3 |

## அலகு 2

## பாரதியின் அறிவியல் பார்வை

## வா.செ.குழைந்தைசாமி

அறிவியல் தமிழுக்குப் பெரும் பங்களிப்புகள் செய்தவர் அறிஞர் வா.செ.குழந்தைசாமி ஆவார். பாரதியின் அறிவியல் பார்வை என்பது மகாகவி பாரதியாரை அறிவியல் பார்வையில் பார்க்கும் இவரது நூல் ஆகும். அறிஞர் வா. செ. குழந்தைசாமி அவர்கள் 14-7-1929 இல் கரூர் மாவட்டம் தென்னிலை மேற்கு ஊராட்சியிலுள்ள வாங்கலாம்பாளையம் என்னும் ஊரில் பிறந்தார். இவரது தம்பி புகழ்பெற்ற வழக்கறிஞர் வா.செ.பழநிசாமி ஆவார். இந்தியத் தொழில்நுட்பக் கழகம், கரக்பூரில் தொழில்நுட்பத்தில் முதுநிலைப் பட்டம் பெற்றார். தொடர்ந்து ஜெர்மனியிலும் அமெரிக்காவிலும் உயர்படிப்புகளை முடித்தார்.நீரியலில்ஆய்வுசெய்துஇல்லினாயிசுபல்கலைக்கழகத்தில்முனைவர்பட்டம்பெற்றார்.

அறிவியல் வளர்ச்சியில் மிகுந்த ஆர்வம் கொண்டவர். பல்வேறு அறிவியல் தமிழ் நூல்களை எழுதியவர். உலக அளவில் நீர்வளத்துறையில் பல குறிப்பிடத்தக்க பதவிகள்

வகித்துள்ளார். மதுரை காமராசர் பல்கலைக்கழகம், அண்ணா பல்கலைக்கழம், இந்திராகாந்தி தேசிய திறந்தநிலைப் பல்கலைக்கழகம் ஆகியவற்றில் துணைவேந்தராகவும் தமிழ் இணையப் பல்கலைக்கழகத்தின் நிறுவனத் தலைவராகவும் பணியாற்றியவர். குலோத்துங்கன் என்ற புனைபெயரில் கவிதைகள் எழுதியுள்ளார். இவரது கவிதைகள் குலோத்துங்கன் கவிதைகள் என்ற பெயரில் ஆறு தொகுப்புகளாக வெளிவந்துள்ளன. இவரது ஆறு கவிதை தொகுப்புகள், ஏழு கட்டுரைகளுக்காக 1999இல் தமிழக அரசு திருவள்ளுவர் விருது வழங்கிப் பெருமைப்படுத்தியது. தமிழ் இலக்கியத்திற்கு இவர் செய்த பங்களிப்புகளுக்காக சாகித்ய அகாதமி விருது வழங்கப்பெற்றது.. இவரது தமிழ்ப் படைப்புகளுக்காக 1980 இல் யாழ்ப்பாணம் பல்கலைக்கழகம் கௌரவ முனைவர் பட்டம் வழங்கியது. கல்வி மற்றும் அறிவியல் துறைகளில் இவர் செய்துள்ள பங்களிப்புகளுக்காக இந்திய அரசு 1992 இல் பத்மஸ்ரீ விருதும் 2002 இல் பத்மபூசன்விருதும் வழங்கிச் சிறப்பித்துள்ளது.உலகளவில்புகழ்பெற்றஅறிஞர் வா. செ. குழந்தைசாமி அவர்கள் 10-12-2016 இல் இயற்கை எய்தினார்.

பாரதியின்மீதுமிகுந்தஈடுபாடுகொண்டவர்.

ஆய்வறிஞர்கள்பேசுவதுபோன்றுபாரதிஅறிவியலைப்பேசுபவன்.

கவிதைகளில்அறிவியலைப்பேசியஞானிபாரதிஎன்றஎண்ணம்வா.செ.குழந்தைசாமிக்குஉ

ண்டு. பாரதிவெறும்கவிஞன்இல்லை,

அவனுக்குள்அறிவியல்பார்வைஉண்டுஎன்பதைஉலகம்அறியவில்லைஎன்பதைஉணர்ந்து பாரதியின்அறிவியல்பார்வைஎன்னும்நூலைஎழுதினார்.

பாரதியின்அறிவியல்பார்வையைவா.செ.குழந்தைசாமிஎவ்வாறுவிளக்கியுள்ளார்என்பதை க்காண்பதற்குமுன்முதலில்பாரதியாரின்வரலாற்றைப்பற்றிச்சுருக்கமாகக்காண்போம்.

## மகாகவிபாரதி

சின்னசுவாமி சுப்பிரமணிய பாரதி (SubramaniaBharati, திசம்பர் 11. 1882 - செப்டம்பர் 11, 1921) கவிஞர், எழுத்தாளர், இதழாசிரியர், விடுதலைப்போராட்ட வீரர் மற்றும் சமூக சீர்திருத்தவாதி ஆவார். இவரைப் பாரதியார் என்றும் மகாகவி என்றும் அழைக்கின்றனர்.

பாரதி, தமிழ்க் கவிதையிலும் உரைநடையிலும் சிறப்பான புலமை கொண்டு, நவீனத் தமிழ்க் கவிதைக்கு முன்னோடியாகத் திகழ்ந்தார். தமிழ், தமிழர் நலன், இந்திய விடுதலை, பெண் விடுதலை, சாதி மறுப்பு, பல்வேறு சமயங்கள் குறித்து கவிதைகளும் கட்டுரைகளும் எழுதியுள்ளார். தம் எழுத்துகள் மூலமாக மக்கள் மனதில் விடுதலை உணர்வை ஊட்டியவர். எட்டப்ப நாயக்கர் மன்னர் இவருடைய கவித்திறனை மெச்சி, கலைமகள் எனப் பொருள்படும் பாரதி என்ற பட்டம் வழங்கினார். பாரதியாரின் நூல்கள் தமிழ்நாடு மாநில அரசினால் 1949ஆம் ஆண்டில் நாட்டுடைமை ஆக்கப்பட்டன. இந்தியாவிலேயே முதன்முதலாக நாட்டுடைமை ஆக்கப்பட்டஇலக்கியம் பாரதியாருடையதாகும். இவரை சிந்துக்குத் தந்தை, செந்தமிழ்த் தேனீ, புதிய அறம் பாட வந்த அறிஞர், மறம் பாட வந்த மறவன் என்றெல்லாம் பாரதிதாசன் இவரைப் புகழ்ந்துள்ளார். இவர் இந்தியா, விஜயா முதலான இதழ்களை நடத்தி, விடுதலைப் போருக்கு வித்திட்டவர்.பாரதி இந்திய வரலாற்றின் திருப்பங்கள் நிறைந்த காலகட்டத்தில் வாழ்ந்தவர் பாலகங்காதர திலகர், உ. வே. சாமிநாதையர், வ. உ சிதம்பரம் பிள்ளை, மகான் அரவிந்தர் முதலியோர் இவரின் சமகாலத்தைய மனிதர்கள் ஆவர். இவர் விவேகானந்தரின் சீடரான, சகோதரி நிவேதிதையைத் தமது குருவாகக் கருதினார்.

### வாழ்க்கைக் குறிப்பு

சின்னசாமி ஐயர் இலக்குமி அம்மாள் தம்பதியினருக்கு திசம்பர் 11, 1882-இல் தமிழ்நாட்டின் தூத்துக்குடி மாவட்டத்தில் உள்ள (அன்றைய திருநெல்வேலி மாவட்டம்) எட்டயபுரத்தில் பாரதியார் பிறந்தார். இவரின் இயற் பெயர் சுப்பிரமணியன் என்றாலும், சுப்பையா என்று அழைக்கப்பட்டார். 1887ஆம் ஆண்டு இலக்குமி அம்மாள் மறைந்தார். அதனால், பாரதியார் அவரின் பாட்டியான பாகீரதி அம்மாளிடம் வளர்ந்தார்.

தனது பதினொன்றாம் வயதில் பள்ளியில் படித்து வரும்பொழுதே கவிபுனையும் ஆற்றலை வெளிப்படுத்தினார். 1897ஆம் ஆண்டு செல்லம்மாளை மணந்தார். 1898ஆம் ஆண்டு தொழிலில் ஏற்பட்ட நட்டத்தினால் வறுமை நிலையினை அடைந்தார். இதனை எட்டயபுரம் மன்னருக்குத் தெரிவித்து பொருளுதவி வழங்குமாறு கடிதத்தில் கேட்டுக்கொண்டார். பின்னர் எட்டையபுரம் அரண்மனையில் பணி கிடைத்தது. சில காலத்திலேயே, அப்பணியை விடுத்து காசிக்குச் சென்றார். 1898 முதல் 1902 வரை அங்குத் தங்கி இருந்தார். பின்னர் எட்டயபுரத்தின் மன்னரால் அழைத்து வரப்பட்டு அரண்மனை ஒன்றில் பாரதி வாழ்ந்தார் ஏழு ஆண்டுகள் பாட்டெழுதாமல் இருந்த பின்னர்,

1904ஆம் ஆண்டு மதுரையில் பாரதி எழுதிய பாடல் 'விவேகபானு' இதழில் வெளியானது. வாழ்நாள் முழுதும் பல்வேறு காலகட்டங்களில் இதழாசிரியராகவும் மதுரையில் சேதுபதி மேல்நிலைப் பள்ளியில் தமிழாசிரியராகவும் பணியாற்றினார். பாரதி தமிழ், ஆங்கிலம். இந்தி, சமஸ்கிருதம், வங்காள மொழி ஆகியவற்றில் புலமை பெற்றவர். பிற மொழி இலக்கியங்களை மொழி பெயர்க்கவும் செய்தார்.

## இலக்கியப் பணி

தம் தாய்மொழி தமிழின்மீது அளவுகடந்த அன்புகொண்டவர். பன்மொழிப் புலமைபெற்ற பாவலரான இவர் “யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழிபோல் இனிதாவ தெங்கும் காணோம்” எனக் கவிபுனைந்தார். சமஸ்கிருதம், வங்காளம், இந்தி, பிரான்சியம், ஆங்கிலத்தில் தனிப்புலமை பெற்றவர். அம்மொழிகளின் தனிச்சிறப்புமிக்க படைப்புகளைத் தமிழ் மொழியாக்கம் செய்தவர். பழந்தமிழ்க் காவியங்களின் மீது தனி ஈடுபாடு கொண்டவர். அழகியல் உணர்வும் தத்துவ சிந்தனைகளும் ஒருங்கே கொண்டவர் என்று அறியப்படுகின்றார். தேசியக்கவி என்ற முறையிலும் உலகு தழுவிய சிந்தனைகளை அழகியலுடனும் உண்மையுடனும் கவி இயற்றியதினாலும், இவர் உலகின் சிறந்த கவிஞர்களுடன் ஒப்பிடப்படும் சிறப்பு பெற்றவர் என்றும், அண்மைக்காலத் தமிழின் தன்னிகரற்ற கவியேறு என்றும் பலர் கருதுகின்றனர்.

## பாஞ்சாலி சபதம்

இந்திய விடுதலைப் போராட்டத்தையே பாரதப் போராகவும், பாஞ்சாலியைப் பாரத மாதாவாகவும் உருவகப்படுத்தி மகாகவி படைத்த படைப்பு தான் பாஞ்சாலி சபதம். அழகிய இலக்கிய நயத்தையும் மிக அழகான கவிநயத்தையும் கொண்ட தமிழின் அழியாக் காவியமாகப் பாரதியின் பாஞ்சாலி சபதம் விளங்குகிறது. பாஞ்சாலி சபதம் வியாசரின் பாரதத்தைத் தழுவி எழுதப் பெற்றது. பாஞ்சாலி சபதம் இரு பாகங்கள் உடையது. இது சூழ்ச்சிச்சருக்கம், சூதாட்டச் சருக்கம், அடிமைச் சருக்கம், துகிலுரிதல் சருக்கம், சபதச் சருக்கம் என ஐந்து சருக்கங்களையும், 412 பாடல்களையும் கொண்டது.

## இதழியல் பணியும் விடுதலைப் போராட்டமும்

பாரதியார் முதலில் நவம்பர் 1904 முதல் ஆகஸ்ட் 1906 வரை சுதேசமித்திரனில் உதவி ஆசிரியராகப் பணியாற்றியதோடு தம் வாழ்நாளின் இறுதியிலும் ஆகத்து 1920 முதல் செப்டம்பர் 1920 வரை அவ்விதழின் உதவி ஆசிரியராகப் பணியாற்றி மறைந்தார். சக்கரவர்த்தினி என்ற மகளிர் மாத இதழிலும் (ஆக 1905 ஆக. 1906), இந்தியா என்ற வார இதழில் (மே 1905 மார் 1906 செப் 1906, புதுச்சேரி 10, 19.1908-17. மே 1910), சூரியோதயம் (1910), கர்மயோகி (திசம்பர் 1909-1910), தர்மம் (பிப்.1910) என்ற இதழ்களிலும் பாலபாரத யங் இண்டியா என்ற ஆங்கில இதழிலும் ஆசிரியராகப் பணியாற்றினார். ஆங்கில அரசால் தடை செய்யப்பட்ட பாரதியின் “இந்தியா” பத்திரிகை புதுவையில் வெளியானது.

## தேசியக் கவி

எட்டயபுரத்தில் பாரதி பிறந்த வீடு தற்போது தமிழக அரசால் சீர்செய்யப்பட்டு பொதுமக்கள் பார்வைக்கு விடப்பட்டுள்ளது. விடுதலைப் போராட்டக் காலத்தில் தேசிய உணர்வுள்ள பல்வேறு கவிதைகளைப் படைத்து மக்களை ஒருங்கிணைத்த காரணத்தால் பாரதி தேசியக் கவியாகப் போற்றப்படுகிறார். மண்ணும் இமயமலை எங்கள் மலையே மாநிலமீதிதுபோல் பிறிதிலையே. இன்னறு நீர்க்கங்கை ஆறெங்கள் ஆறே.. இங்கிதன் மாண்பிற்கெதிர் எது வேறே என்று எழுதியவர் தன்னுடைய தாய்நாட்டைநினைத்துப் பெருமைகொண்டதோடு மட்டுமன்றி அதன் எதிர்காலம் எவ்வாறிருக்க வேண்டும் என்ற பார்வையும் பெற்றவர். ‘வந்தேமாதரம் என்போம் எங்கள் மாநிலத் தாயை வணங்குதும் என்போம்” என்றவர், பள்ளித்தலமனைத்தும் கோயில் செய்குவோம் என்றார். வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால் மையத்து நாடுகளில் பயிர்செய்யும் நதிநீர் இணைப்புத் திட்டத்தை விடுதலைக்கு முன்பே கனவுகண்டவர்.

## பாரதியின் அறிவியல் பார்வை – நூல்அறிமுகம்

வா.செ.குழந்தைசாமிஎழுதியுள்ள 'பாரதியின் அறிவியல் பார்வை' என்ற நூல் மார்ச் 1983இல் வெளியிடப்பட்டது. 124 பக்கங்கள் கொண்ட இந்த நூல் 1) அறிவியல் பார்வை 2) பாரதியின் அறிவியல் பார்வை 3) புதுமைப் பெண்கள் 4) ஆயிரம் தொழில் செய்குவீர் 5) பல கல்வி தந்து பாரை உயர்த்துவோம் 6) மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை 7)

ஒப்பிலாத சமுதாயம் 8) மனிதர் தம்மை அமரர்களாக்குவோம் ஆகிய எட்டு பகுதிககளைக் கொண்டுள்ளது.

அறிவியல் பார்வை என்னும் முதல் பகுதியில் நமது சமுதாயத்தில் அறிவியல் மனப்பான்மை இன்னும் பரவலாக உருவாகவில்லை. அறிவியல் அணுகுமுறை இயற்கையான ஒரு கூறுபாடாக இன்னும் இடம் பெறவில்லை என்று குறிப்பிடும் இந்த நூலாசிரியர், முதிர்ந்த தெளிவோடும், முறையான வழியோடும் ஒரு மறுமலர்ச்சியை மாற்றத்தை உருவாக்கும் வழிகாட்டிகளின் வரிசையில் முன் நிற்பவர் பாரதி என்பதைச் சுட்டிக் காட்டுகிறார்.

பாரதியின் அறிவியல் பார்வை என்னும் இரண்டாம் பகுதி பாரதியார்,

"காலத்துக் கேற்ற வகைகள் – அவ்வக்

காலத்துக் கேற்ற ஒழுக்கமும் நூலும்

ஞாலம் முழுமைக்கும் ஒன்றாய் - எந்தி

நாளும் நிலைத்திடும் நூலொன்றும் இல்லை"

என்று அறுதியிட்டு உறுதியாய்க் கூறியதைச் சுட்டிக் காட்டி, பாரதியாரின் பழம் பெரும் நூல்கள் பயன்படக் கூடிய அளவிலே இடம் பெற வேண்டும்' என்ற கருத்தை முன் வைக்கிறார். அவரது பயணத்திலே அறிவியல் பார்வை அணையா விளக்காகப் பயன்பட்டது என்கிறார்.

‘புதுமைப் பெண்கள்’ என்ற மூன்றாவது பகுதி மிளகாய்ப் பழச் சாமியார் என்ற கதையில் சாமியார் வாயிலாகப் பாரதியார் கூறும் பின்வரும் வரிகளைச் சுட்டிக் காட்டுகிறார்திரு வா.செ.குழந்தைசாமி.

”உலக முழுமைக்கும் நான் சொல்லுகிறேன். ஆண் பெண்ணுக்கு நடத்தும் அநியாயம் சொல்லுக்கடங்காது. அதை ஏட்டில் எழுதியவர் இல்லை. அதை மன்றிலே பேசியவர் யாருமில்லை"

"மாதர்கள் தாமே முற்பட்டுத் தமக்கு வேண்டிய சீர்திருத்தங்களைத் தேடிக் கொள்வதே நன்றாகும்" என்பதை பாரதியார் வலியுறுத்துகிறார். பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்' என்று அவர்களாகவே அறிவித்துக் கொண்டதையும் பாரதியார் மகிழ்ச்சியோடு பதிவிடுகிறார். 'கற்பு“ நிலை என்று சொல்ல வந்தார் . இருகட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம் என்பது அவர்கள் சட்டம்.

"புதுமை எனில் இது புதுமை; புரட்சி எனில் இது புரட்சி:"

நிமிர்ந்த நன்னடை, நேர் கொண்ட பார்வையும் நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும் கொண்ட பெண்களுக்கு அப்படிப்பட்ட புதிய நிலையை உருவாக்குவது கல்வியே என்பது பாரதியாரின் முடிவு சரிநிகர் சமானமாக வாழ்வம் இந்த நாட்டிலே' என்ற புதுமைப் பெண்ணின் முழக்கத்தையும் அதற்கான அடிப்படை - 'அறிவு நிலை என்ற உண்மையையும் நூலாசிரியர் இங்கு விளக்குகிறார்.

நான்காம் பகுதியான "ஆயிரம் தொழில் செய்குவீர்" என்பதில்

சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம் வெறும்
சோற்றுக்கோ வந்ததிந்தப் பஞ்சம்

என்று பாரதியின் நெஞ்சம் புழுங்குவதையும் அந்தப் பஞ்சத்தை நீக்க செல்வநிலை உயர வேண்டும் என்று அவர் சுட்டிக் காட்டுவதையும் நூலாசிரியர் நிலை நிறுத்துகிறார். பாரதியாரது அறிவியல் அணுகுமுறை தொழில் வளர்ச்சி ஏற்படுவது இயல்பானதே என்பதைக் கொள்வதால்,

"இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே
இயந்திரங்கள் வகுத்திடுவீ ரே

என்று அவரை வேண்டுகோள் விடுக்கச் செய்கிறது என்றும், 'அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல் ஆயிரம் தொழில் செய்திடுவீரே என்றும் அவரைப் பாட வைக்கிறது என்பதையும் சுட்டிக் காட்டுகிறார்.

"பல கல்வி தந்து பாரை உயர்த்துவோம் " என்ற ஐந்தாம் பகுதி'மாற்றி வையம் புதுமையுறச் செய்து மனிதர் தம்மை அமரர்களாக்க விழைந்தவர் பாரதி என்று கூறும் நூலாசிரியர் அதற்கு அடிப்படைத் தேவையாக, 'வயிற்றுக்குச் சோறிட வேண்டும்' 'பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திடல் வேண்டும்" என்று கூறுவதைச் சுட்டிக் காட்டுகிறார். கல்வி பெற்ற மக்களே தான் இனிச் செல்வம் பெற முடியும் என்பது இன்றைய காலகட்டத்தின் நிலை. ஆகவே தான் அவர் "அறிவே வலிமை கல்வியே செல்வத்தின் தாய்" என்று முழங்கினார்.

"மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை" என்பது ஆறாம் பகுதி. சொல்லில் உயர்வு தமிழ்ச் சொல்லே என்று முழங்கியவர் பாரதியார்.

"தேமதுரத் தமிழோசை உலகமெலாம்"

பரவும் வகை செய்தல் வேண்டும்' என்று அவர் ஆசைப்பட்டார். ஆனால் அதே சமயம் தமிழின் இன்றைய குறைபாடுகளைப் பற்றியும் அவர் எண்ணுகிறார். ஆகவே 'புதிய செய்தி, புதிய புதிய யோசனை.புதிய புதிய உண்மை. புதிய புதிய இன்பம் தமிழில் ஏறிக் கொண்டே போக வேண்டும் என்று அவர் வலியுறுத்துகிறார்.

"புதிய நுட்பங்கள் கூறும் கலைகள் தமிழினில் இல்லை; அவற்றைச் சொல்லும் திறமை தமிழ் மொழிக்கு இல்லை; மெல்லத் தமிழ் இனிச் சாகும்" என்று கூறிய ஒருவனை "என்று அந்தப் பேதை உரைத்தான் என்று கூறிச் சாடுகிறார்.

"இறவாத புகழுடைய புது நூல்கள் தமிழ் மொழியில் இயற்றல் வேண்டும் என்று வானம் அளந்தது அனைத்தும் அளந்த வண் மொழி வாழ வழி கூறுகிறார் அவர்.

இன்றைய உலகில் 100,000 பத்திரிகைகள் 2 மொழிகளில் வருகின்றன. இன்று ஆண்டு தோறும் 12,00,000 ஆய்வுக் கட்டுரைகள் உலகில் வெளியாகின்றன. எல்லா வகையான துறைகளையும் சேர்த்துப் பார்த்தால் அமெரிக்காவில் 80,000 தலைப்புகள் உள்ளன. சோவியத் ஒன்றியம் 85000 தலைப்புகளை வெளியிடுகிறது. ஆகவே தமிழ் மொழியை வளர்க்க வேண்டும் என்ற பாரதியின் கனவு இன்னும் நனவாகவில்லை என்பதை நூலாசிரியர் மிகச் சரியாக ஆதாரங்களுடன் விளக்குகிறார்.

“ஒப்பிலாத சமுதாயம்” என்ற ஏழாம் பகுதியில் எப்போதுமே புதுமை. புதிய உலகு, புதிய சமுதாயம் ஆகியவை பற்றிய எண்ணங்களைப் பாரதியார் வெளியிடுகிறார். அவர் சொற்களில் இந்தக் கனவுகளே ஒளி விடுகின்றன என்பதை நூலாசிரியர் ஆதாரங்களுடன் கூறுகிறார். 'எல்லோரும் இந்நாட்டு மன்னர்' என்பது தான் பாரதியின் நிலைப்பாடு.

மனிதர் தம்மை அமரர்களாக்குவோம் என்ற இறுதி பகுதியில் பாரதியின் பாடல்களில்

1) பாரதிக்கு மனிதனின் ஆற்றலில் அளவு கடந்த நம்பிக்கை

2) மனிதன் உயர்ந்து தானே அமர நிலை அடையக்கூடியவன்என்ற எண்ணம் ஆகிய இரண்டையும் காணலாம் என்பதை திரு குழந்தைசாமி சுட்டிக் காட்டுகிறார்.

“மாற்றி வையம் புதுமையுறச் செய்து”

மனிதர் தம்மை அமரர்களாக்க" என்று இப்படி மகத்தான கனவைக் கண்டவன் பாரதி அவர் பார்வையின் உயரத்தை அவரது சொற்களிலேயே காணலாம் என பல சான்றுகளைக் காட்டி நிறுவி நூலை முடிக்கிறார் நூலாசிரியர்.பாரதியாரின் அறிவியல் பார்வையைத் தெள்ளத் தெளிவாக அலசி ஆராயும் இந்த நூல் அறிவியல் நோக்கில்

அமைந்துள்ள நல்ல ஒரு நூல். இந்த நூலுக்கு பாரதி பக்தர் ம.ப.பெரியசாமித்தூரன் அழகிய முன்னுரை ஒன்றைத் தந்துள்ளார் (கிருஷ்ணபிரகாஷ், வலைத்தள பதிவு.) இந்த நூலில் பேசப்பெற்றுள்ள செய்திகளை விரிவாக இனிக் காண்போம்.

## அறிவியல் பார்வை

அறிவியல் பார்வை (Scientific Outlook), மனப்பான்மை (Scientific Temper) போன்ற சொற்றொடர்களை நாம் அடிக்கடி இல்லாவிட்டாலும் ஆங்காங்கு பயன்படுத்துகிறோம். அதன் மூலம் ஒரு அணுகு முறையையும் நாம் குறிப்பிடுகிறோம். அவ்வணுகு முறையின் அடிப்படை என்ன என்பது பற்றிய சிந்தனை தேவையானதும் பயன் தரும் ஒன்றும் ஆகும்.

அறிவியல் அறிவு வேறு : அறிவியல் பார்வை வேறு.அறிவியல் துறையினர் அனைவருமே அறிவியல் பார்வை கொண்டவர்களல்லர். அத்துறையில் ஈடுபாடு கொள்ளாதவர்கள், அல்லது அதில் ஆழ்ந்த புலமை இல்லாதவர்கள் அனைவருமே அறிவியல் அணுகுமுறை இல்லாதவர்களுமல்லர்.

பொதுவாக அறிவியல் உலகம் நம்பிக்கையின் அடிப்படையில் எதையும் ஏற்றுக் கொள்ளாத மரபை உடையது. எப்பொருள் யார் யார்வாய்க் கேட்பினும், எப்பொருள் எத்தன்மைத் தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்டது. அறிவியல் உலகின் அடிப்படை; கொள்கையாயினும் கோட்பாடாயினும் அவை முறையான வாதங்கட்கும் சோதனைகட்கும் உட்பட வேண்டும்; அவற்றின் அடிப்படையில் ஒப்புக் கொள்ளப்பட வேண்டும். இது அறிவியல் உலகின் மரபு. இதனாலேயே, பலர், அறிவியல் அணுகுமுறை என்பது சமய நம்பிக்கை, கடவுள் நம்பிக்கை போன்ற அறிவியல் பார்வை, அறிவியல் அணுகுமுறை என்பது ஒன்றை நம்புவதையோ. நம்பாததையோ பொறுத்து மட்டும் அமைவதல்ல. மேலும், நம்புவது அனைத்தும் மடமையன்று நம்பாமை மட்டுமே பகுத்தறிவு ஆகிவிடாது. எதை எதை, எந்த அடிப்படையில் நம்புகிறோம். எந்த அளவிற்கு நம்புகிறோம் என்பதுதான் முக்கியம்.

‘கற்றது கைம்மண்ணளவு கல்லாதது உலகளவு’என்பது அன்றும் உண்மை; இன்றும் உண்மை. அறிந்தவற்றை ஏற்கிறோம்: அறியாதன அனைத்தையும் நாம் புறக்கணித்து விடுவதில்லை; புறக்கணிக்கவும் கூடாது.

நாம் கூறவந்த கருத்தை விளக்க, வள்ளுவர் குறளிலிருந்து ஒரு சான்று கூறுவது பொருந்தும், தர்மம் நிலைக்கும்; அதர்மம் அழியும் என்பது நம் சமுதாயத்தின் அசையா நம்பிக்கை. நல்லவர்கட்கு நலமும், அல்லவர்கட்குப் புலவும் உலக நியதி என்பது சகல மதத்திற்கும் சம்மதமான ஒன்று. ஆனால். நாம் நாள் தோறும், ஆங்காங்கு நல்லவர்கள் நலிவதையும் பார்க்கிறோம். அல்லவர்கள் வளம் பல பெற்று வாழ்வதையும் பார்க்கிறோம். இந்த நிலை இன்று மட்டுமல்ல; என்றும் இருந்திருக்கிறது. இன்றும் தொடர்கிறது. இதைப்பற்றி எண்ணிய வள்ளுவர், "அவ்விய நெஞ் சத்தான் ஆக்கமும், செவ்வியான் கேடும் "ஏன் என்ற கேள்வியை எழுப்புகிறார்.

வள்ளுவர் ஒப்புக்கொண்ட காரணகாரிய அமைப்பிற்குள் இந்தக் கேள்விக்குப் பதில் காண்பது கடினமானது அல்ல. அவர் விதியை நம்புகிறார்; 'வகுத்தான் வகுத்த வகையல்லால் கோடி தொகுத்தார்க்கும் துய்த்தல் அரிது' என்பது வள்ளுவம். அவர் முற்பிறப்பை நம்பினார்; மறு பிறப்பை நம்பினார்; சென்ற பிறவியில் செய்த வினையின் விளைவுகள் இந்தப் பிறவியில் தொடரும் என்பதையும் ஒப்புக்கொள்கிறார். இந்த அமைப்பிற்குள் மேலே கண்ட கேள்விக்குப் பதில் கிடைக்கிறது. நல்லவர் ஒருவர் இப்பொழுது நலிவரானால், அவர் சென்ற பிறவியில் தீயவராக இருந்திருக்கலாம்; அதன் பயனை இப்பொழுது அனுபவிக்கிறார் என்று எளிதாகப் பதில் கூறிவிடலாம். மேலே பேச வழியில்லை.அங்கு சென்று அவரது முற்பிறவிச் செயல்களை யாரும் பட்டியல் போட்டுக் கொண்டுவர முடியாது. அது போலவே, இப்பிறவியில் இன்பமாக வாழும் தீயவர்களையும், அவர்கள் முன்வினைப் புண்ணியத்தை இன்று பெற்று மகிழ்கிறார்கள் போலும் என்று கூறிவிடலாம். வள்ளுவர் இப்படிப்பட்ட விளக்கம் எதையும் எண்ணவில்லை; எண்ணியிருந்தாலும் ஏற்கவில்லை. ஆராயப்பட வேண்டிய ஒன்று என முடிவு செய்து, "நினைக்கப்படும்" என்கிறார்.

**"அவ்விய நெஞ்சத்தான் ஆக்கமும், செவ்வியான்**

**கேடும் நினைக்கப் படும்."**

என்பது குறள்.இதுவரை நமது சமுதாயத்தில் காணும் பல்வகையான பிரச்சினைகட்குக் கடவுள், விதி, வினைப்பயன் போன்ற தத்துவக் கருத்துகளின் மூலம் வழி காண நாம் முயன்றிருக்கிறோம். அந்த அடிப்படையில் எல்லாக் கேள்விகட்கும் பதில் கூற இயலும். இருந்தாலும் அவையனைத்தும் கடந்த சில புதிர்கள் இருக்கின்றன; அவற்றிற்கு இன்று பதில் தெரியவில்லை; பின்னர் பார்ப்போம்; ஆராய்வோம் என்கிறார் வள்ளுவர். இது அறிவியல் பார்வைக்கு அழகான எடுத்துக்காட்டு.

மனிதன் பல உணர்வுகட்கு ஆளாகுபவன். பல நம்பிக்கைகட்கு ஆட்படுபவன். பற்றுகள் பலவற்றிற்கும் அடிமைப்படுபவன். அளவும், தரமும், மாறுபடும் என்பதைத் தவிர, அடிப்படையில் இவை பெரும்பாலும் அனைவருக்கும் பொதுவானவை. சமயப்பற்று, தேசப்பற்று, மொழிப்பற்று ஆகியன உயர்ந்த பண்புகள்; அதை மறுப்பதற்கில்லை. என்றாலும் இவை, உண்மையைக் காணும் பணியில், சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ, தடைகளேயாகும். அவை மெல்லிய திரை போன்று உண்மையை மறைக்கலாம். ஆய்வு என்று வரும்பொழுது, உண்மை தேடும் பணியில் ஈடுபடும்பொழுது, திரையென நிற்கும் உணர்வுகளை ஒதுக்கி வைத்து, ஊடுருவி நோக்கும் திறன் வாய்ந்த உள்ளத்தின் பார்வையே அறிவியல் பார்வை. இந்த விளக்கம் ஆழமான தத்துவவிசாரணைக்கு மட்டும் அன்று; நமது அன்றாட வாழ்க்கையின் நடைமுறைக்கும் பொருந்தும்.

மனிதன் தனது அன்றாட வாழ்வில் எடுக்கும் முடிவுகளில், தனது பகுத்தறிவிற்கு, ஆய்விற்கு, அதன் வழிகண்ட முடிவுகட்கு, நடைமுறையில் என்ன இடம் கொடுக்கிறான்; எவ்வளவு முக்கியத்துவம் கொடுக்கிறான். என்பதைப் பொறுத்ததே அறிவியல் பார்வை ஆகும்.

அறிவியல் பார்வையின் முக்கியமான ஒரு கூறுபாடு குறிப்பிடப்பட வேண்டும். அறிவியல் பார்வை மனித முயற்சியை வளர்ப்பது; நம்மைச் செயலுக்குத் தூண்டுவது; துணை நிற்பது. செயலற்ற நிலைக்கு வழிகாட்டுவது, அறிவியல் பார்வை ஆகாது. இங்கு ஒரு சான்று கூறுவது பொருந்தும்.

'புயல் ஏன் ஏற்படுகிறது' என்று யாரோ ஒருவர் கேட்கிறார்; அதற்கு இரண்டு பதில்கள் வருவதாக வைத்துக் கொள்வோம்.

முதற் பதில்: "அது கடவுள் செயல்'

இரண்டாவது பதில்:'கடலின்மேல்தளத்தில் காற்றின் அழுத்தம் குறைகிறது. அந்த இடத்தை நோக்கிக் காற்றின் அழுத்தம் அதிக முள்ள இடத்திலிருந்து காற்று வருகிறது. அதுவே புயலின் தொடக்கம்.'

இதிலே எது சரி, எது தவறு என்று ஆய்வதை மட்டும் பொறுத்ததல்ல நமது அணுகுமுறை முதலாவது பதிலை எடுத்துக் கொள்வோம். அது சரி என்று நிரூபிக்கவும் முடியாது. தவறு என்று அறுதியிட்டு விடவும் இயலாது. கடவுள் செயல்கள் எவை எவை என்று அங்கீகரிக்கப்பட்ட பட்டியல் எதுவும் நம்மிடமில்லை. எனவே, பட்டியலின் வரிசையோடு ஒப்பிட்டு, இதைப் பட்டியலில் உள்ளது என்று ஏற்கவோ, இல்லாதது என்று தள்ளவோ இயலாது. முதற் பதிலை முடிவானதாக நாம் ஏற்போமானால், அதற்கு மேல் நாம் செய்வதற்கு ஏதும் இல்லை; கடவுளுடைய செயலை மாற்றுவதற்கென்று ஒப்புக் கொள்ளப்பட்ட வழிமுறைகள் தெளிவாக இல்லை. எனவே, மேலே செய்வதற்குக் குறிப்பாக எதுவும் இல்லை. செயல் தேக்கம் பெறுகிறது. மனித முயற்சிக்கானவழி மூடப்படுகிறது. புயல் ஏற்படுவது கடவுள் செயல் என்ற பதில் சரியா தவறா, உண்மையா பொய்யா என்பதல்ல நாம் கருதவேண்டியது. அதற்கு முடிவான பதில் காண்பது இயலாது. அந்தப் பதிலினால் ஏற்படும் பயன் என்ன என்பதுதான் இங்கு எண்ணப்பட வேண்டிய ஒன்று.

இரண்டாவது விளக்கத்தை ஏற்போமானால், அழுத்தத்தை அளக்கலாம் . அழுத்தம் குறையும்போது புயல் உருவாகலாம் என எதிர்பார்க்கலாம். அதன் திசை, வேகம் போன்றவற்றையும் நிர்ணயிக்கலாம். புயலைத் தடுக்கா விட்டாலும், அதனால் ஏற்படும் விளைவுகளினின்றும், மக்களைக் காப்பாற்றுவதற்கான முயற்சிகளை மேற்கொள்ளலாம். எனவே, இரண்டாவது பதில் செயலுக்கு வழிவகுக்கிறது. மனிதமுயற்சியை ஊக்குவிக்கிறது.மனித நலனுக்கு உதவுகிறது; வளர்ச்சிப் பாதைக்கு வழி காட்டுகிறது. மானிட சமுதாயத்தின் நலன், முன்னேற்றம் ஆகியவற்றின் அடிப்படையில் இரண்டாவது பதில் நமக்கு ஏற்புடைத்தாகிறது. இந்த அணுகுமுறையையே நாம் அறிவியல் பார்வையின் அடிப்படையில் அமைந்த ஒன்று என்கிறோம்.

ஒரு சமுதாயத்தின் வளர்ச்சிக்கு அதன் ‘அணுகுமுறை’ எவ்வளவு முக்கியமானது என்பதை நாம் முழுமையாக உணர்வதில்லை. மேலை நாட்டினர் கடந்த மூன்று நூற்றாண்டுகளில் அடைந்த, உயர்வுக்கும், வளர்ச்சிக்கும் அவர்களது அணுகுமுறையும் ஒரு முக்கியமான அம்சமாகும். வளர்ச்சிப் பாதையில் கதவுகள் அடைபடுவதும், திறப்பதும் பல சூழ்நிலைகளில் அணுகுமுறையைப் பொறுத்தது.

காலத்திற்கேற்ற வளர்ச்சி; வளர்ச்சிக்கு உதவும் மாற்றங்கள். மாற்றங்களை வரவேற்கும் மனப்பான்மை; அது மலர்வதற்கேற்ற பார்வை; அந்தப் பார்வையின் அடிப்படையில் அமைந்த அணுகுமுறை ஒரு சமுதாயத்தின் முக்கியமான தேவையாகும். வரலாறு தெரிந்த நாள் முதலாக, மனித சமுதாயத்தின் வளர்ச்சியை ஆராய்வோமானால், முன்னேற்றப்பாதையில் எடுத்து வைக்கப்பட்ட ஒவ்வோர் அடியும் அறிவியல் அணுகுமுறை, அறிவியல் பார்வையின் துணையால் அமைந்ததாகும்.

நமது சமுதாயத்தில் அறிவியல் கல்வி இடம் பெற்றிருக்கிறது. வளர்ந்திருக்கிறது. அறிவியல் சோதனைச் சாலைகள், ஆய்வு நிறுவனங்கள் உருவாகியிருக்கின்றன. உலகு ஒப்புக்கொள்ளும் உயர்வு பெற்ற விஞ்ஞானிகள் நம் நாட்டில் இருக்கிறார்கள். வெளிநாட்டார் வணக்கம் செய்யும் அளவிற்குத் “திறமையான புலமை”இன்று நம்மவர்கட்கு உண்டு. எனினும், நமது சமுதாயத்தில் அறிவியல் மனப்பான்மை பரவலாக உருவாகவில்லை.அவ்வகையான வழிகாட்டிகளின் வரிசையில் முன்நிற்பவர் பாரதி.

## பாரதியின்அறிவியல் பார்வை

மேலை நாடுகளின் தொழிற்புரட்சி அறிவியல் தொழில் நுட்பங்கள் கண்டுபிடிக்கக் காரணமானது. இதனால் மின்சாரம் தந்தி, 1830-1900 கால தொலைபேசி, வானொலி போன்ற கருவிகள் இடைவெளியில் கண்டுபிடிக்கப்பட்டன. மேலை கீழை நாடுகளில் நடந்து வரும் போராட்டங்களையும், அறிவியல் தொழில் நுட்ப வளர்ச்சியையும் உலகியல் கண்ணோட்டம் கொண்ட பாரதி கவனித்து வந்தார். எனவே, தமது இலக்கியங்களில் ஆங்காங்கே அறிவியல் செய்திகளைப் பதிவு செய்து வைத்துள்ளார். இச்செய்திகளை வளர்ந்து வரும் தொழில் நுட்பம், வானியல் என்ற இரண்டு தலைப்புகளில் இக்கட்டுரை எடுத்துரைக்கிறது. பாரதியின் கவிதைகளிலும் கட்டுரைகளிலும் இடம்பெற்றுள்ள அறிவியல் செய்திகள் இவண் பேசப்படுகின்றன.

வளர்ந்து வரும் தொழில்நுட்பம்.மேலை நாடுகளில் தொழிற்புரட்சி தகவல்களை விரைவாக பரிமாறிக் கொள்ளக்கூடிய கட்டாய நிலையை உருவாக்கியது. எனவே,

தகவல் பரிமாற்றத்திற்குரிய புதிய கருவிகளைக் கண்டுபிடித்தனர். தகவல் பரிமாற்றத்திற்காகக் கண்டுபிடிக்கப்பட்ட தந்தியும், தொலைபேசியும் ஐரோப்பாவில் பயன்படுத்தப்பட்ட ஐந்தாவது ஆண்டில் ஆங்கிலேயர்களால் இந்தியாவில் அறிமுகப்படுத்தப்பட்டன. 1901-இல் மார்க்கோனி என்ற அறிஞர் வானொலியைக் கண்டுபிடித்தார். இதன் பயன்பாடு தந்தி,தொலைபேசியைவிடச் சிறப்பாக இருப்பதை பாரதி தமது உலகியல் கண்ணோட்டத்தின் வழி அறிந்தார். இத்தொழில்நுட்பம் பற்றிய கருத்துக்கள் தமிழகத்திலும் பேசப்பட்டன தேசவிடுதலையை அடிநாதமாகக் கொண்ட பாரதிக்கு மக்களிடையே விழிப்புணர்வை, விடுதலை உணர்வைப் பரப்ப வானொலி பயன்படும் எனக் கருதினார் எனவே, தன் எண்ணத்தை ‘பாரத தேசம்’ என்ற பாடலில் ‘காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான் காஞ்சியில் கேட்பதற்கோர் கருவி செய்வோம்’ என வெளிப்படுத்தினார். தீவிர விடுதலைப் போராட்ட வீரராகிய பாரதி ஆங்கிலேயரை வெல்ல ஆயுதங்கள் செய்வோம் என்றார். இதழியலாளர் என்ற முறையில் பத்திரிகை வழி உணர்வைப் பரப்பிய பாரதி பத்திரிகைக்குரிய காகித ஆலையை உருவாக்க வேண்டும் என்ற மக்களிடையே விடுதலை தனது எண்ணங்களை வெளிப்படுத்தினார். ஆயுதங்கள் செய்வதற்கும், காகிதத்தை உற்பத்தி செய்வதற்கும் தொழிற்சாலை தேவை. இதனை நிர்வகித்து நடத்த கல்வி வேண்டும். எனவேதான் பாரதி, ஆயுதம் செய்வோம், காகிதச்சாலை அமைப்போம், கல்விச் சாலைகளை வைப்போம் என வரிசைப் படுத்திக் கூறியுள்ளார் எனலாம்.

வெளிநாட்டுத் தொழில்நுட்பக் கருத்துகளைக் கவிதை வழி வெளியிட்ட பாரதி, உள்நாட்டு அறிவியல் வளர்ச்சியைக் கட்டுரை வழி எடுத்துரைத்துள்ளார். பாரதியின் காலத்தில் இந்திய நாட்டின் விஞ்ஞானிகளுள் ஒருவராகத் திகழந்தவர் ஜகதீச சந்திர போஸ். இவர் மரங்களுக்கும், செடி கொடிகளுக்கும் உயிர் உண்டு என்பதைச் செய்முறைப் பயிற்சி வாயிலாக நிரூபித்தார். இந்நிகழ்வைப் பாரதி ‘உயிரின் ஒலி’ என்ற கட்டுரையில் பதிவு செய்துள்ளார். ‘செடியின் நாடியுணர்ச்சிக்கும் இதர மனுஷ்ய மிருக ஜாதி ஜந்துக்களின் நாடியுணர்ச்சிகளுக்கும் பேதமில்லை என்பதைத் தமது அற்புதமான பரீட்சைகளினால் உலகத்தின் உயிரொலியை நமக்குத் தெரியும்படிச் செய்தவர் (பாரதி நூல்கள், ப.66) என ஜகதீச சந்திர போஸைப் பாராட்டுகிறார் பாரதி இதன் வழி தனது

காலத்தில் இந்திய நாட்டில்அறிவியல் கண்டுபிடிப்பில் அறிஞர்கள் முனைந்து செயல்பட்டு புதிய அறிவியல் கருத்துகளை உலகிற்கு எடுத்துரைத்த பாரதி போற்றுகிறார்.

பாரதி பல பரிமாணங்களைத் தன்னுள் கொண்டவர். அவரது ஈடுபாடும், திறனும், தெளிவும், வாழ்வின் பல துறைகளில் பரவியிருந்தன. தமது கருத்தில் நிறைந்த கனவுகளை, உள்ளம் எண்ணித் தெளிந்த உண்மைகளை, தமது இதயத்தினின்று வழிந்த குமுறல்களை, ஏமாற்றங்களை, ஏக்கங்களை, வெளியிடுவதற்கு அவர் கவிதையை ஒரு கருவியாகப் பயன்படுத்திக் கொண்டார். இலக்கியம் அவரைப் பொறுத்தவரை, அன்றாட வாழ்வின் புயலிலும், புழுதியிலுமிருந்து விலகி நின்று கற்பனை உலகின் காட்சி வருணனை பாடுவதற்கோ, காதல்,வீரம்,கடமை பற்றிய காவியம் படைப்பதற்கோ மட்டும் அமைந்த ஒன்றல்ல.

தான் வாழ்ந்த சமுதாயத்தினோடு ஒன்றிணைந்து நின்றவர் பாரதி. அதன் இன்ப துன்பங்களோடு கலந்து ஒருமைப்பட்டவர். தன்னை எதிர் நோக்கிய அரசியல், சமுதாய, பொருளாதார, சமய. தத்துவக் கேள்விகளைப் பற்றிச் சிந்தித்தவர். தனது சிந்தனைகளை, முடிவுகளைக் கவிதை வாயிலாக வெளியிட்டவர். இந்த ஈடுபாடுகள் அனைத்திலும், அவருக்குத் தசையிடை நார்போல ஒன்றி, பாசியின் இழைபோல ஊடுருவி நின்றது அவரது அறிவியல் பார்வை. அவரது அறிவியல் அணுகுமுறை.

பாரதியின் தேசியப்பார்வை, சமயப் பார்வை, சமுதாயப் பார்வை. இலக்கியப் பார்வை பற்றிய இலக்கியம் பலராலும் படைக்கப்பட்டிருக்கிறது. இவையனைத்திலும் பரவி நிற்பதும். இவையனைத்திற்கும் பொதுவானதுமான ஒன்று அவரது அறிவியல் பார்வை, அறிவியல் அணுகுமுறை, பெண்கள் பிரச்சினையானாலும், பொருளாதாரச் சிந்தனையானாலும், மொழி வளர்ச்சி எனினும், கல்வி பற்றிய கருத்தாயினும், சமுதாய நீதி பற்றிய தத்துவம் ஆயினும், அவரது ஆய்வும், அணுகுமுறையும், அறிவியல் இயல்பைக் கொண்டது.

தமது அணுகுமுறையின் அடிப்படையை, பாரதி தமது சுயசரிதையின் தொடக்கப் பகுதியிலேயே தெளிவாகக் கூறுகிறார்.

**“மாயை பொய்யெனல் முற்றிலும் கண்டனன்;**

**மற்றும் இந்தப் பிரமத் தியல்பினை**

**ஆய நல்லருள் பெற்றிலன்;**

என்கிறார். தேசபக்தி, மொழிபக்தி, கடவுள் பக்தி ஆகிய பல பாசங்கட்கும், பற்றுகட்கும் ஆட்பட்டவரான பாரதி, தம்மிடத்தில் ஒரு பக்தி மட்டும் இல்லையென்கிறார். அது 'தீயபக்தி' என்றும் கூறுகிறார். அதுதான், "தன்னுடைய அறிவினுக்குப் புலப்படலின்றியே. தேயமீதெவரோ சொலும் சொல்லினைச் செம்மையென்று மனத்திடைக் கொள்வது'.

தனக்குப் பிடிக்காத ஒன்று என்று அவர் கூறவில்லை; தனக்கு அந்த இயல்பே இல்லை என்கிறார். பாரதி பார்வையின் அடிப்படை இதுவாகும்.

பாரதநாடு பழம்பெரும் நாடு; பூரண ஞானம் பொலிந்த நன்னாடு. புத்தர் பிரானருள் பொங்கிய நாடு. இதன் பாரம்பரியத்தை, பண்டை உயர்வை எண்ணிப் பெருமைப்படுகிறார். பரவசமடைந்து பாடுகிறார்.

வறுமை மிஞ்சிப் பாழ்பட்டு நின்ற பாரதத்தை உய்விக்க வந்த காந்தியடிகள் வரை மகான்கள்; வால்மீகி, வியாசர், வள்ளுவர், இளங்கோ,கம்பன், காளிதாசன் போன்ற மகாகவி மற்றும் பல்துறைத் தலைவர்கள் என வந்த அனைவரையும் போற்றுகிறார்.

பண்டைய மரபு, மூதாதையர் சொல்வது என்ற அடிப்படையில், எதையும் ஏற்க வேண்டும் என்று வாதிடும், வற்புறுத்தும் நமது சமுதாயத்தில் சற்றுத் தேவைக்கு மனப்பான்மை மேலாகவே இடம் பெற்றிருக்கிறது. மேலெழுந்த வாரியாகப் பார்க்கும்பொழுது புதுமையை காணப்படுபவர்களும், ஆழத்தில், வரவேற்பவர்கள் போலக் மரபுகளை மாற்றவோ, மீறவோ மனமில்லாதவர்களாகவே இருக்கிறார்கள். இன்றைய சூழ்நிலைக்கு ஏற்காத பல நடைமுறைகளை முந்தைய வழக்கம் முட்டுக் கொடுத்து நிற்க வைக்கிறார்கள். இவற்றை எண்ணிய பாரதி, பாஞ்சாலி சபதத்தில் கவிஞன் கூற்றாக ஒரு சொற்பொழிவே நிகழ்த்துகிறார்:

**முன்பி ருந்ததோர் காரணத் தாலே**

**மூடரே, பொய்யை மெய்யெனலாமோ**

**முன்பெனச் சொலுங்கால மதற்கு**

**மூடரே ஓர் வரையறை உண்டோ;**

என்று மனம் வருந்துகிறார். முந்தையர் அனைவரும் முனிவர்களல்லர்; அவர்களுள் முனிவர்களாக இருந்தவர்களும் கடவுளரல்லர். எனவே,கண்மூடி நின்று நாம் கடைப்பிடிக்கத் தகுந்தன எவையும் இல்லை. அனைத்தும், காலத்துக்கேற்பத் தேவைக்கேற்ப நினைக்கப்பட வேண்டியவைஎன்கிறார்பாரதி. அவர் பேசும் பொருள்

எதுவாயினும் இந்த அணுகுமுறைதான் அவரைஅறிவியல் உலகுடன் ஐக்கியப்படுத்துகிறது.

**'பழையன கழிதலும், புதியன புகுதலும் வழுவல கால வகையி னானே',**

என்பது தமிழ் இனம் ஏற்றுக் கொண்ட உண்மை. அனைத்தும் மெதுவாக அசைந்து. ஆடி நத்தை போல நகர்ந்து வந்த பண்டைச் சமுதாயத்தில், பழையன தானாகக் கழிவதும், புதியன தானாகப் புகுவதும் போதுமானது. ஆனால், இன்றைய உலகொடு நமது சமுதாயம் இணைந்து முன்னேற வேண்டுமானால், பழையன கழிக்கப்படவேண்டும்: புதியன புகுத்தப்பட வேண்டும்.மாறும்வரை காத்திருக்காது. தேவைக்கேற்ப நாம் மாற்றவும் வேண்டும். பொருந்திய வகையில்புதியன வரவேற்கப்படவேண்டும். இந்தத் தேவை இன்றைய சமுதாயத்திற்குப் பல சிக்கல்களை உருவாக்குகிறது.

பாரதி காலத் தமிழகம் வேளாண்மை யுகத்தில் இருந்தது. இன்றும் அதிலிருந்து இந்தியாவோ, தமிழ்நாடோ வெளியேறி விடவில்லை. ஆனால், மேலை நாடுகள் தொழில் யுகத்தில் இருந்தன. வளர்ச்சிப் பயணத்தில் மேலை நாடுகள் ஒரு யுகம் முன்னின்றன. போதாதற்கு அவை ஆளும் நாடுகளாகவும் இருந்தன. எனவே, நமது மொழி, கலை, பண்பாடுகள், அனைத்தும் மேற்கு நாடுகளின் ஆதிக்கத்திற்கு ஆளாயின. பழையன பாராட்டுவோர் ஒருபுறம்; புதியன போற்றுவோர் மறுபுறம்; இவர்கட்கு இடையில் தமிழ் மக்கள், இவர்கள் யார் வழியிற் செல்வது? பயணத்தையும், பாதையையும் எந்த அடிப்படையில் தேர்ந்தெடுப்பது? இந்த இருதலைக் கொள்ளி நிலையை எண்ணிய பாரதி, அறிவியல் ஆய்வாளனின் அணுகுமுறையோடு தமது கேள்விகளைத் தொடுக்கிறார். மூதாதையர், மூதாதையர் என்று பேசுகிறார்களே, அவர்கள் யார்? ஆயிரம், ஆயிரம் ஆண்டுகளாக, வாழ்ந்து, வளர்ந்து வரும் இந்தத் தமிழ் நிலத்தில் அவர்கள் எந்தக் கால கட்டத்தினர்;

**"நமது மூதாதையர் (நாற்பதிற்றாண்டின்)**

**முன்னிருந்தவரோ, முந்நூற்றாண்டிற்கு**

**அப்பால் வாழ்ந்தவர்கொல்லோ!**

என்று கேட்டுவிட்டுத் தமிழ் மக்கட்கு, மயக்கமற்ற ஒரு வழியைக் காட்டுகிறார் .

வளர்ச்சி என்பதுமாற்றம். எனவே, வளரும்சமுதாயம்மாறுகிறது. மாறாத சமுதாயம் வளர்வதில்லை. இந்த வளர்ச்சியின் எல்லை என்ன? இந்த மாற்றங்களின் தன்மை என்ன?

இவை எந்த அளவிற்கு ஆழமானவை; அடிப்படைகளைத் தொடக்கூடியவை; என்பதில் பாரதி கருத்து, காலம் கடந்த தொலை நோக்குடையது.

**மாற்றி, வையம் புதுமை யுறச் செய்து**

**மனிதர் தம்மை அமரர்களாக்க**

விழைகிறார் பாரதி. எத்தனையோ மாற்றங்கள் தேவை. எத்தனையோ புதுமைகள் தேவை. அமரர் நிலை நாளை, மறுநாள் அடைவதல்ல. அது முடிவில்லாப் பயணம், மனித வளர்ச்சியின் எல்லை. இந்த வளர்ச்சியில் மனிதனது ஆசைகள், கனவுகள், நம்பிக்கைகள், அனைத்தும் வளர்கின்றனஎன்கிறார்.

புராணங்கள் பெரும்பாலும் புனைந்துரைகள், கற்பனைகள், அல்லது சிறு நிகழ்ச்சிகளின் அடிப்படையில் எழுந்த கதைகள். அப்படியானால் அவற்றை நாம் ஏன் போற்ற வேண்டும் என்ற கேள்வி எழுவது இயல்பு. அதற்குப் பாரதி பதில் கூறுகிறார்.

**"ஒன்று மற்றொன்றைப் பழிக்கும்: ஒன்றில்**

**உண்மையென்றோதிமற் றொன்று பொய்யென்னும்**

**நன்று புராணங்கள் செய்தார். அதில்**

**நல்ல கவிதை பலப்பல தந்தார்:**

**……………………………….**

என்கிறார். ஒரு சமுதாயத்தில் கற்பனைக்கும் இடம் உண்டு. கதைக்கும் இடம் உண்டு. புராணம் போன்றவை நீண்டபாரம்பரியம் கொண்ட ஒரு சமுதாயத்தின் உயரிய சொத்துகள். ஏதோ நேற்றுத் தலையெடுத்த பண்பாட்டிற்கு இந்த வளம் இல்லை. எனவே. முறையோடு நோக்கினால் அவை நம் பெருமைக்குரியன. நாம் போற்றிப் பாதுகாக்கத் தகுந்தன. ஆனால், அவை பயன்படக்கூடிய அளவிலே இடம் பெற வேண்டும்.

பாரதி அமைந்து, ஆழ்ந்து, பிரச்சினைகள் அனைத்தையுமே அறிவுவழி நோக்கும் தத்துவவாதி அல்லர்; அவர் நடக்கப் பொறுமையில்லாது, ஓடும் அவசரக்காரர். புயலினும் வலியதான போக்கும் வேகமும் கொண்ட உணர்ச்சிகட்கு வசப்படுபவர்,உணர்வு வெள்ளம் புரளும் உள்ளத்திற்குச் சொந்தக்காரர். ஆழ்ந்த பற்று, பாசங்கட்கு ஆட்படுபவர். எனினும் தெளிவுமங்காத, திசை மயங்காத சிந்தனை பெற்றவர். உணர்வுப் பெருக்கும், ஊடுருவி நிற்கும் ஆய்வும் ஒன்றி நின்று பாரதிக்குக் கை கொடுத்தன. அவருடைய கவிதைகளிலே கற்பனை வளம் இருக்கும் அளவிற்கு, அல்லது அதற்கு மேலும் கருத்து வளம் காணப்படுவது எண்ண வேண்டிய ஒன்று. தாண்டவமாடும் தமிழையும்

காண்கிறோம். சாசுவதமான தத்துவத்தையும் காண்கிறோம். பாரதியின் இந்தத் தெளிவிற்கும், சிந்தனைக்கும் துணை நின்றது அவரது அறிவியல் பார்வை. அவர் பெண்ணின் பெருமை பேசினாலும், கல்வியின் புகழ் பேசிக் கலைமகளைப் பாடினாலும், பராசக்தியின் பாதம் பணிந்து சில வரங்கள் கேட்டாலும், அவர் தொட்ட பொருள் அனைத்திலும் அவருக்கு அறிவியல் அணுகுமுறை தோன்றாத் துணையாக இருந்தது. நீங்கா நிழல் போல, அது அவரிடம் நெருங்கி நின்றது. அவரது பயணத்தில், காட்டுவழியானாலும், கைப்பாதையானாலும், சாலையில் நடந்தாலும், தனிவழியே சென்றாலும் அறிவியல் பார்வை அவருக்கு அணையா விளக்காகப் பயன்பட்டது. அதன் வெளிச்சத்தை அவரது எண்ணப் பயணத்தில் எங்கும் காணலாம்.

## புதுமைப் பெண்கள்

உயர்வும் தாழ்வும் மனித சமுதாயத்தில், வரலாறு கண்ட காலந்தொட்டு, நீடித்து வருவது, இன்று வரை நிலைத்தும் நிற்பது. அது பல துறைகளிலும் பரவியிருக்கிறது. பல வடிவங்களில் வாழ்கிறது. ஏற்றத் தாழ்வின் தரமும், தன்மையும், அது ஆட்சி செய்யும் வகையும், வழியும் நாட்டுக்கு நாடு, இனத்துக்கு இனம், சிறிய அளவிலோ, பெரிய அளவிலோ மாறுபடுகின்றன. ஆனால், எல்லா நாட்டிற்கும். எல்லா இனத்திற்கும் பொதுவானதும், நினைவு தெரிந்த நாள் முதல் இன்று வரை நிலைத்து நிற்பதுமான தாழ்வும், அடிமைத்தனமும், பெண்குலம் அனுபவித்து வரும் தாழ்நிலைதான் அடிமைத்தனந்தான் பாரதி, “மிளகாய்ப் பழச் சாமியார்” என்ற கதையில் சாமியார் வாயிலாகப் பின்வருமாறு கூறுகிறார்:

**“உலக முழுமைக்கும் நான் சொல்லுகிறேன், ஆண் பெண்ணுக்கு நடத்தும் அநியாயம் சொல்லுக்கடங்காது. அதை ஏட்டில் எழுதியவர் இல்லை. அதை மன்றிலே பேசியவர் யாருமில்லை.”**

பெண் இனத்தின் இந்த நிலை, பெரும்பாலும் இனம் கடந்து, மொழி கடந்து, நிறம் கடந்து, நிலை பெற்ற ஒன்றாகும்.

**மானுடத்திற் பாதியினர்; முழுமை பெற்று**
**வளர்கின்ற, மலர்கின்ற, வாய்ப்பே இன்றி,**
**ஊனுடலின் தேவைகளின் அளவில், ஆணின்**
**உணர்வுகளின் அடிப்படையில், உயிர்வளர்க்கும்**

**கொடுமையினும் கொடியதிலை:**

என்பது இருபதாம் நூற்றாண்டின் இந்த இறுதிப் பகுதியிலும் உண்மை பெண்கள் ஓரளவு, அல்லது பெருமளவில் சுதந்திரம் பெற்றதாகக் கருதப்படுகிறது.

**தங்கள் இயல்போடு தாரணியை ஆளுவதும்**
**எங்கள் உரிமையெனும் ஏற்றம் விழையாமல்,**
**அறிவுத் துறையனைத்தும் ஆதிக்கம் செய்கின்ற**
**நெறியில் மனத்தை நிறுத்தாமல், ...**

ஏதோ தோற்றத்திலும், நடையுடைகளிலும், தொழிலிலும், ஆண்களோடு போட்டியிடும் ஆசை நிலைதான் பெண்ணுரிமை என்ற பெயரில் மேலோங்கி நிற்கிறது.

பெற்ற தாயும்,பிறந்த தங்கையும், தமக்கையும், உற்ற துணைவியுமான பெண்ணைஅடிமைப்படுத்திய மக்கட்கு வாழ்வில்லை. வளர்ச்சியில்லை; அந்தச் சமுதாயத்தில் இற்றையும் இருள், எதிர் காலமும் இருள் என்று நம்பினார் பாரதி பெண்கள் நிலைமை பற்றிப் பேசவந்தவர். 'தமிழ் நாட்டின் விழிப்பு' என்ற கட்டுரையில் கீழ்க்காணுமாறு கூறுகிறார்.

**"....இன்று தமிழ்நாட்டில் மாத்திரமே யல்லாது பூமண்டல முழுவதிலும், பெண்ணைத் தாழ்வாகவும், ஆணை மேலாகவும் கருதி நடத்தும் முறைமை ஏற்பட்டிருப்பது முற்றிலும் தவறு. அது துன்பங் களுக்கெல்லாம் அஸ்திவாரம். அநீதிகளுக்கெல்லாம் கோட்டை : கலியுகத்திற்குப் பிறப்பிடம்"**

பாரதி, நமது நாட்டின் பெண்கள் நிலைகண்டு பொங்கினார்; பொருமினார்; இது சரியா, தருமமா என்ற கேள்வியும், பதிலும் இங்குத் தேவையில்லை என்பதைத் தெளிவாகக் கொண்டவரானதால் இந்த வாதங்களில் இறங்காமல், தளையனைத்தும் தகர்த்து விடுதலை பெற்ற புதுமைப் பெண்களைப் படைத்தார்; படைத்து அவர்களைப் பேசவிட்டார் பாரதி. பாரதி படைத்த பெண்ணுலகிலும், அவரது பார்வையின் தெளிவும், திறனும், ஒளிவிடுகின்றன.

பாரதியின் புதுமைப் பெண்கள் கிளர்ந்தெழுந்தார்கள். நம்மைப் பிடித்த பிசாசுகள் போயின: நன்மை கண்டோம்' என்று பிரகடனம் செய்தார்கள். எங்களுக்குக் கல்வி வேண்டும். கற்க அனுமதி வேண்டும் என்று விண்ணப்பிக்க வில்லை. ‘ஏட்டையும்

பெண்கள் தொடுவது தீமையென்றெண்ணியிருந்தவர் மாய்ந்து விட்டார்' என்று தாங்களாகவே அறிவித்துவிட்டார்கள்.

விடுதலை பெற்ற பாரதியின் பெண்கள் பல அரசியல், சமுதாயப் பணிகளைத் தாங்களாகவே மேற்கொள்கிறார்கள். முதலில் "பட்டங்கள் ஆள்வதும் சட்டங்கள் செய்வதும் பாரினில் பெண்கள் நடத்த வந்தோம்," என்று அறிவித்து விடுகிறார்கள். சட்டங்கள் செய்யும் அதிகாரம் யார் கையில் இருக்கிறதோ, அவர்கள் கையில்தான் உண்மையில் சகல அதிகாரமும் இருக்கிறது.சட்டம் செய்யும் உரிமையைத் தம்கைக் கொண்ட அவர்கள் செய்த முதல் சட்டம் என்ன என்பதும் வியப்புக்குரிய ஒன்று.

**"கற்பு நிலை யென்று சொல்லவந்தார்; இரு**

**கட்சிக்கும் அஃது பொதுவில் வைப்போம்"**

என்பது அவர்கள் சட்டம், உண்மையில் புதுமை என்பதும், புரட்சி என்பதும் இதுதான்.

பாரதி தாம் கண்ட புதுமைப் பெண்களின் இயல்புகள் சிலவற்றை எடுத்துரைக்கிறார். அச்சம், மடம், நாணம், பயிர்ப்பு என்ற நாற்குணங்கள் பொருத்திக் குனிந்த தலை நிமிராத குணக்குன்றுகளாய்ப் பெண்ணுலகை உருவாக்கிய சமுதாயத்தில் நின்ற பாரதி

**''நாணும் அச்சமும் நாய்கட்கு வேண்டுமாம்"**

என்று தமது கலப்பற்ற முழு வெறுப்பை வெளிப்படுத்துகிறார். அவரது புதுமைப் பெண்கள்

**"நிமிர்ந்த நன்னடை, நேர்கொண்ட பார்வையும்**

**நிலத்தில் யார்க்கும் அஞ்சாத நெறிகளும்"**

கொண்டவர்கள், நாணமும், அச்சமும், குனிந்த பார்வையும் குலமகள்கட்கு வேண்டுமென்னும் பெரியவர்கள்,இவை மறைந்தால் ஒழுக்கம் குன்றிவிடும் என்று வாதிடுவார்கள். பாரதி அதை மறந்தாரில்லை. ஆனால் பாரதியின் புதுமைப் பெண்களது ஒழுக்கம் அச்சத்தாலும், நாணத்தாலும், மடத்தாலும் அமைந்ததல்ல. அவர்கள் குனிந்து பார்த்து. கூனி நடந்து குணமென்னும் குன்றேறுபவர்களல்லர். அவர்களுடைய செம்மைக்கும் ஒரு பெரிய அடிப்படை உண்டு.

**"திமிர்ந்த ஞானச் செருக்கும் இருப்பதால்**

**செம்மை மாதர்திறம்புவதில்லையால்”**

என்கிறார். அவர்களது வளர்ந்த ஞானமும், தங்கள் மாண்பிள் அடிப்படையில் அமைந்த செருக்கும் அவர்களை ஒழுக்கத்தில் நிலை நிறுத்துகிறது.

‘பதிவிரதை’ என்ற கட்டுரையில் பாரதி பின்வருமாறு கூறுகிறார்.

**“நம்மைப் போன்றதொரு ஆத்மா நமக்கு அச்சத்தினாலே அடிமைப்பட்டிருக்கும் என்று நினைப்பவன் அரசனாயினும், குருவாயினும், புருடனாயினும்,மூடனைத் தவிர வேறில்லை. அவனுடைய நோக்கம் நிறைவேறாது. அச்சத்தினால் மனித ஆத்மா வெளிக்கு அடிமைபோல நடித்தாலும், உள்ளே துரோகத்தை வைத்துக் கொண்டுதான் இருக்கும். அச்சத்தினால் அன்பை விளைவிக்க முடியாது.’’**

மனித ஒழுக்கம், சுவர்க்கத்தின் இன்பத்தை நம்பியோ, நரகத்தின் துன்பத்திற்கு அஞ்சியோ, மதக் கோட்பாடுகளின், நம்பிக்கையின் அடிப்படையிலோ அமையாமல், தெளிவின் அடிப்படையில், இது சமுதாயத்தின் தேவை என்ற கொள்கையின் அடிப்படையில், தனது பெருமையைக் காக்கும் மான உணர்வின் அடிப்படையில் அமையுமாயின், தாழ்வுகள், அனைத்தும் தாண்டி வளர்ந்த ஒரு மானிட நிலை அமையும்என்கிறார்.

பாரதி கண்ட சமத்துவம் ஒரு தனித் தன்மை கொண்டது. சற்று ஆழ்ந்து எண்ண வேண்டிய அடிப்படையை உடையது.”

**“தாதர் என்ற நிலைமை மாறி, ஆண்களோடு பெண்களும்**

**சரிநிகர் சமானமாக வாழ்வ மிந்த நாட்டிலே”**

என்று பாடிய பாரதி, ‘சரி நிகர்’, ‘சமானமாக’ என்ற இரண்டு சொற்றொடர்களால் சமத்துவத்தை விளக்கினார். உறுதிப்படுத்தினார். என்றாலும், பெண்கள் பெண்களாக, பெண்மையோடு தங்கள் இயல்புக்கும், இயற்கைக்கும் ஏற்ற பொறுப்பேற்று உயரவேண்டும் என்றுதான் விரும்பினார்.

பெண்கள், ஆண்கட்குச் சரிநிகர் ஆனவர்கள், மானவர்கள். அந்தச் சமத்துவம் அவர்கட்கு எந்தத் தகுதியால் வருகிறது. எந்தத் தகுதியால் வரவேண்டும் என்பதற்கு அளவு கோலும் கொடுக்கிறார்.

**“எட்டும் அறிவினில் ஆணுக்கிங்கே பெண் இளைப்பில்லை”**

என்று புதுமைப் பெண்கள் பிரகடனம் செய்கிறார்கள் அவர்கள், தசைவலியில் ஆண்களோடு போட்டி போட வரவில்லை.' உயரத்திலும், உடல் கனத்திலும், ஒப்புமை தேடவில்லை. மனிதன் மாண்பு, மதி வளத்தால் அமைவது அந்த வளத்தில் தாங்கள் 'சமம்' என்று அறிவிக்கிறார்கள்.

மலரனையர் என்பது மாறித்தான், பெண்கள் சமத்துவம் பெற வேண்டும் என்பது இல்லை. கொடியனையள் என்னும் குணநலன் மாறாமலேயே, ஒரு குலமகள் சமஉரிமை வாய்ந்த குடிமகளாகவும் வாழ்வது இயலும்.

**"காதல் ஒருவனைக் கைப்பிடித்தே, அவன்**

**காரியம் யாவினும் கைகொடுத்து,**

**மாதர் அறங்கள் பழமையைக் காட்டிலும்**

**மாட்சி பெறச் செய்து………..".**

வாழ்வது, புதுமைப் பெண்ணின் உரிமை வாழ்விற்கும். சுதந்திரத்திற்கும் புறம்பானதன்று. 'வேதம் படைக்கவும், நீதிகள் செய்யவும் வேண்டி வந்தோம்' என்று அறிவிக்கும் புதுமைப் பெண்கள், சாதம் படைக்கவும் செய்திடுவோம் என்கிறார்கள். சமையலும், சாதம் படைத்தலும் தங்கள் சமத்துவத்துக்கு இழிவு என்றோ இடையூறு என்றோ அவர்கள் கருதவில்லை. ஏற்றத்தாழ்வு தொழிலில் இல்லாதபோது, அதனடிப்படையில் உயர்வு, தாழ்வு ஏற்பட முடியாது. பெண்கள் செய்வதாலேயே ஒரு தொழிலைத் தாழ்ந்ததாகக் கருதுவதே தாழ்வு மனப்பான்மைதான், ஆண். பெண் சமத்துவம் ஒருவர் செய்த வேலையை, மற்றொருவரும் செய்வதால் வருவதன்று. உடற்கூறு, உடை ஆகியவற்றின் ஒப்புமை சமத்துவத்திற்கு அடிப்படை அன்று, சுதந்திரம், சமத்துவம் ஆகியவற்றிற்கு, சமுதாய நீதி பொருளாதார வலிமை ஆகியன துணை நிற்பது இன்றியமையாதது என்றாலும், அவை மட்டுமே சுதந்திரத்தையோ, சமத்துவத்தையோ உருவாக்கிவிடுவதில்லை. சுதந்திரம், சமத்துவம் என்பன ஒரு மனநிலை; அறிவுநிலை. அவை உள்ளத்தில் வளர்ந்து, உயர்ந்து நிற்க வேண்டும். ஆண்களும் பெண்களும் அவரவர் இயற்கை இயல்புடன் ஒன்றி நின்றே சரிநிகர் சமானமாக வாழ வேண்டும்; வாழ இயலும். பாரதியின் புதுமைப் பெண்களின் பிரகடனமும் அதுவே.

## ஆயிரம் தொழில் செய்குவீர்

பாரதி ஒரு விடுதலைக் கவிஞர் மட்டுமல்லர்; விடுதலைப் போராட்ட வீரர். விடுதலைக்காகக் கவிதை பாடியதோடு நின்றவரல்லர்; களத்தில் இறங்கிப் போராடியவர். தீவிரவாதியாகச் செயல்பட்டவர். அதன் கஷ்ட, நஷ்டங்களை அனுபவித்தவர். ஆனால் அவர் பார்வை இந்த நாட்டின் சுதந்திர உதயத்தைக் காண்பதோடு நின்றுவிடவில்லை அதை அவர் ஒரு நீண்ட பயணத்தின் முதல் பகுதியாக, வேண்டுமானால் ஒரு முக்கியப் பகுதியாக மட்டுமே கருதினார். கருதினார். அதைத் தொடக்கமாக வைத்து இந்த நாடு வளம் பெற வேண்டிய தேவை பற்றியும், அதற்கு நாம் செய்ய வேண்டிய பணிகள் பற்றியும் அவர் அன்றே சிந்தித்திருக்கிறார்.

ஏழ்மை ஒரு தீமை. இந்த நாட்டின் குறைபாடுகளும் அது முக்கியமான ஒன்று. அதை எந்த அடிப்படையிலும் பாரதி சகித்துக் கொள்பவரல்லர்.

**"பொருளிலார்க்கிலை இவ்வுல கென்ற நம்**

**புலவர் தம்மொழி பொய்ம்மொழியன்று காண்;**

என்று அறுதியிட்டு அறிவுரை கூறுபவர் பாரதி அவரது நம்பிக்கையின்படி, அமரர்களாகவே ஆகும் ஆற்றல் வாய்ந்தவன் மனிதன். அவன் கேவலம் வயிற்றுச் சோற்றுக்கு வாடுவதா என்பதை நினைத்து வருந்தியவர்.

**"சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்; வெறுஞ்**

**சோற்றுக்கோ வந்ததிந்தப் பஞ்சம்"**

என்று புழுங்கியவர். இவை அனைத்திற்கும் அடிப்படையானது நமது வறுமை நிலைமை. இதை எப்படியாவது மாற்ற வேண்டும்; இன்றே மாற்றவேண்டும் என்ற எண்ணம், ஆசை அவரது கவிதைகளில் பரவி நிற்கின்றன. 'புதிய உயிர்' என்ற கட்டுரையில் வரும் கீழ்க்காணும் வரிகள் அவரது உள்ளக் குமுறல்களை அறிய உதவுவன :

**"சகல ஜனங்களுக்கும் வயிறு நிறைய உணவு கிடைக்காத ஊரில் வாழும் செல்வர்களெல்லாம் திருடர், அங்கே குருக்களெல்லாம் பொய்யர், பண்டிதரெல்லாம் மூடர். மேன்மை நிலை பெற வேண்டுமானால் கைத்தொழில்கள் பெருகும்படி வேண்டும். சாத்தியமில்லை என்று சொல்லி ஏங்குவதிலே பயனில்லை. எப்படியேனும், எப்படியேனும், எப்படியேனும் செல்வத்தை வளர்க்க வேண்டும்."**

பாரதி பொறுமையாளரல்லர். அவசரக்காரர்; ஆத்திரக்காரர் என்று குறிப்பிட்டிருக்கிறோம். எப்படியாவது இந்த நாட்டை நமது வாழ்நாளில் வளமுடையதாக்க வேண்டும். வறுமையைப் போக்கவேண்டும். அது இறைவன் அருளால், மந்திரத்தினால் ஆகுமாயின், அதுவும் சரி, அது நடப்பதன்று; மற்ற வழிகளில் தான் ஆகும் எனின் அதுவும் செய்வோம் என்பது அவரது நிலை. எனவே இறைவனிடம் வரம் கேட்கும்போது,

**“கல்லை வயிரமணியாக்கல் – செம்பைக்**

**கட்டித் தங்கமெனச் செய்தல் – வெறும்**

**புல்லை நெல்லெனப் புரிதல் – பன்றிப் …….**

இந்த நாட்டின் புகழும் பொருளும் ஓங்கச் செய்ய வேண்டும். அதற்கேற்ற வலிமையைத் தனக்குத் தர வேண்டுமென வேண்டுகிறார். தமது பாட்டுத் திறத்தால், பாரதம் மட்டுமின்றி,இப் பார் முழுவதையுமே பாலித்திட ஆசைப்படுகிறார். நாம் பாடிப் பரவும் தெய்வங்கள் பலவற்றிடமும் அவர் வேண்டுவதற்குப் பொதுவான ஒன்று உண்டு என்றால் அது பிணியகன்ற, இன்னல் தீர்ந்த, வறுமை ஒழிந்த இன்ப வாழ்வை மக்கள் பெற வேண்டும் என்பது தான்.

**‘‘ஞானாகாசத்து நடுவே நின்று நான்**

**பூமண்டலத்தில் அன்பும் பொறையும் விளங்குக:**

**துன்பமும் பழமையும் நோவும் ……..**

என வேண்டுகிறார். ஆனால் பாரதி அந்த வேண்டுதலோடு நின்றிடவில்லை. அப்படி நின்றிருந்தால் அவரது அணுகுமுறை நமது பாரம்பரியத்தின் அடிப்படையில் அமைந்ததாகவே நின்றிருக்கும். பக்தியும், பராவலும், வேண்டுதலும், வேள்வியும் ஒருபுறமிருக்க, இன்றைய நடைமுறைக்கு ஏற்ப நாம் செய்ய வேண்டுவது என்ன என்பதையும் எண்ணிய பாரதி, மேலை நாட்டுச் சமுதாயங்களின் வளர்ச்சியை எண்ணுகிறார். அந்த வளர்ச்சிக்கான சூழ்நிலைகளை, துணைகளை எண்ணுகிறார். அறிவியல் கண்டுபிடிப்புகள், அவற்றின் அடிப்படையில் உருவான தொழில் வளர்ச்சிகள் ஆகியன பற்றி நினைவு கூர்கிறார்.

பாரதியின் பொருளாதார வளர்ச்சிப் பற்றிய அணுகுமுறையை எவ்கெனி பெத்ரோவிச் செலிஷேவ் கீழ்க்கண்டவாறு மதிப்பிடுகிறார்..

**“அதேசமயத்தில் நாட்டின் பொருளாதார எழுச்சிக்கு அறைகூவல் விடுக்கும் குரலும் இந்தியக் கவிதையில் எழுந்தது... என்றாலும், அந்நாட்களில் பாரதி தனது ‘பாரத தேசம் (1910) என்ற பாடலில், இந்தியாவின் அபிவிருத்திக்கு வகுத்துக் கொடுத்த அத்தகைய கம்பீரமான பொருண்மையுள்ள திட்டத்தை வழங்கும் துணிவும் கவிதாவேசமும் வேறு இந்தியக் கவிஞர்கள் எவரிடமும் இருக்கவில்லை.**

‘ஜப்பான் தொழிற் கல்வி’ என்ற கட்டுரையில், 1916-ல் பாரதி பின்வருமாறு எழுதுகிறார்.

**“கூடியவரை பிள்ளைகளை ஜப்பானுக்கு அனுப்பி, பலவிதமான தொழில்களும் சாத்திரங்களும் கற்றுக் கொண்டு வரும்படி செய்வதே பிரதான உபாயமாகும். தொழிற் கல்வியிலும், லௌகிக சாத்திரப் பயிற்சியிலும் நாம் மற்ற சாதியாருக்குச் சமானமாக முயலுவது அவசரத்திலும் அவசரம். ஆகாரத்திற்கு வழிதேட வேண்டும். அதிகாரம் வேண்டுமென்று கேட்கிறார்கள்; (காங்கிரஸ் சபை). நியாயந்தான். அது கிடைக்கும் வரை பிழைத்திருக்க வேண்டுமே.... கைத்தொழில் வளர்ச்சிக்காக உழைப்போரும் உண்மையான தேச பக்தரே யாவர்.”**

பாரதி கைத்தொழில் என்ற சொல்லை பொதுவான தொழில் வளர்ச்சி என்ற அடிப்படையிலேயே பயன்படுத்தியிருக்கிறார். உருவிலும், வலியிலும் மனிதனை மிஞ்சி, வளர்ந்து நிற்கும் இயந்திரம், மனிதனது தனித்துவம், மென்மை, அழகுணர்ச்சி ஆகிய உன்னதமான பண்புகட்கு ஊறு விளைவித்துவிடும் என்ற அச்சம் காந்தியடிகள், தாகூர் போன்றோர் அணுகுமுறையைப் பாதித்தது. பாரதிக்கு அப்படிப்பட்ட தயக்கம் எதுவும் ஏற்படவில்லை. அவரது பார்வை வேறு. ‘உல்லாச சபை’ (1916) என்ற கட்டுரையில் :

**“வலிமை ஓர்அழகு அழகு ஒரு வலிமை, இயந்திரக் கலை. நீராவி வண்டி, நீராவிக் கப்பல், வானத்தேர். பெரிய பீரங்கி,எல்லாம் அழகுதான். உயர்ந்த சுவிகள், வலிமையுடைய பொருள்களை அவ்வக்காலத்தில் வழங்கிய வரையிலே வர்ணனை செய்துதான் இருக்கிறார்கள். இதிலே புதுமை யொன்றுமில்லை.**என்கிறார் பாரதி. மேலை நாட்டில் உருப்பெற்று வளர்ந்து வந்த தொழில் யுகத்தை, அதன் பொருளாதார வளர்ச்சியை, பாரதி முழுமையும் விஞ்ஞான ரீதியாக அலசி, ஆய்ந்து, அதன் நன்மை, தீமைகளை அளந்து அறிந்து, அதை ஏற்றார் என்றோ, எதிர்த்தார் என்றோ கூற இயலாது.

வளர்ச்சிப் பாதையில் எதையும் முழுமையாகப் புறக்கணிப்பது பொருத்தமற்றது என்ற பார்வையினர் பாரதி தொழில் வளர்ச்சியைப் பொறுத்தவரை இந்த அடிப்படையில் நின்றுதான்.

**“இரும்பைக் காய்ச்சி உருக்கிடுவீரே,**

**இயந்திரங்கள்வருத்திடுவீரே”**

என்று வேண்டுகோள் விடுக்கிறார். ஆயிரம், ஆயிரம் தொழில்கள் செய்து, இந்த நாட்டின் செல்வத்தை வளர்க்க விரும்பினார். வளர்க்குமாறு அனைவரையும் வேண்டினார்.

**“அரும்பும் வேர்வை உதிர்த்துப் புவிமேல்**

**ஆயிரம் தொழில் செய்திடுவீரே”**

என்று அன்போடு கூறி,

**“பெரும்புகழ் நமக்கே யிசைக்கின்றேன்**

**பிரமதேவன் கலையிங்கு நீரே”**

என மனம் விட்டுப் போற்றுகிறார். மேலை நாட்டுத் தொழில் வளர்ச்சியின் அடிப்படையில் அமைந்தவை பெரும்பாலாகக் கனரகத் தொழில்களும், பெரிய தொழில் அமைப்புகளுமாகும். அவை, அப்படியே வளரும் நாடுகட்குப் பொருந்துமா; அந்தந்த நாடுகளின் பொருளாதார வளர்ச்சி, பண்பாடு, பாரம்பரியம், கல்வி, இவற்றிற்கேற்ப அவற்றின் தொழில் வளர்ச்சியும் மாறுபட்டிருக்க வேண்டுமல்லவா என்பன போன்ற கேள்விகள் எழலாம். வளரும் நாடுகளில் தொழில் வளர்ச்சியே புதிதாக இருந்த காலத்திலும் இந்தக் கேள்வி எழுப்பப்பட்டது. கடந்த 30 ஆண்டுகட்கு மேலாகத் தொழில் வளர்ச்சியில் அனுபவம் பெற்ற பிறகும் இந்தக் கேள்வி எழுப்பப்படுகிறது. இந்தக் கேள்விக்கான பதிலின் அடிப்படையைப் புரிந்து கொள்வதாயின், மனித நாகரிகத்தின் வளர்ச்சியை எண்ண வேண்டும்.

பாரதி தொழில் பற்றிப் பேசும்பொழுது, ‘மண்ணெடுத்துக் குடங்கள் செய்யவும்’ சொல்கிறார். ‘இரும்பைக் காய்ச்சி உருக்கி இயந்திரங்கள் செய்யவும் சொல்கிறார். ஊர்ந்து செல்லும் வண்டிகளும் செய்யச் சொல்கிறார்; உயரப் பறக்கும் ஊர்திகளும் வேண்டும் என்கிறார். எனவேதான்.

**குடைகள் செய்வோம், உழுபடைகள் செய்வோம்**

**கோணிகள் செய்வோம் : இரும்பாணிகள் செய்வோம்**

என்றவர்.

**நடையும் பறப்பு முணர் வண்டிகள் செய்வோம்**

**ஞாலம் நடுங்கவரும் கப்பல்கள் செய்வோம்**

என்கிறார். தொழில் யுகத்தினைத் தோற்றுவித்தவை புதிய வளங்களும் அவற்றைப் பயன் படுத்தும் திறனும். அதற்கு அடிப்படையாக அமைந்தது அறிவியல், தொழிலியல் வளர்ச்சி. அவற்றைப் படைத்துப் பயன்படுத்தும் கலைகளைப் பாரதி மேன்மைக் கலைகள் என்கிறார். அவற்றை அந்நிய மொழியில் கற்றால் அவை நமது மண்ணோடும், வாழ்வோடும் ஒன்றியவையாக முடியாது; நம் சொத்தாக மாற இயலாது. எனவேதான் அவையனைத்தும் தமிழில் வேண்டுமென்றார். நம் மொழியில் கற்று, நமது திறனின் அடிப்படையில்,

**காசி நகர்ப்புலவர் பேசும் உரைதான் காஞ்சியில்**

**கேட்பதற்கோர் கருவி செய்வோம்**

என்கிறார்.

பாரதி நமது அடிமை வாழ்வை மான உணர்வின், உரிமைக் கொள்கையின் அடிப்படையில் மற்றும் தர்ம. அதர்மக் கோட்பாடுகளின் வழியில் மட்டும் பார்க்கவில்லை. அதைப் பொருளாதாரக் கோணத்திலும் பார்க்கிறார். அந்நியஆதிக்கக்காரர்களைப் பார்த்து,

**“பொழுதெலாம் எங்கள் செல்வம் கொள்ளை கொண்டு**

**போகவோ—நாங்கள் சாகவோ,”**

என்ற கேள்வியை எழுப்புகிறார். யாம்

**“வெட்டுக்கனிகள் செய்து தங்கம் முதலாம்,**

**வேறுபல பொருளும் குடைந்தெடுப்போம்:**

**எட்டுத் திசைகளிலும் கொண்டிவை விற்றே,**

**எண்ணும் பொருள் அனைத்தும் கொண்டு வருவோம்”**

என்று பிரகடனம் செய்கிறார்.

“தண்ணீர் பட்டபாடு” என்பது தமிழ் வழக்காயினும் இன்று நமது பெரும்பாடு “தண்ணீர் இல்லாத பாடு” தான். இன்றைய சூழ்நிலையில், உலகின் பல நாடுகளில், பரவலாக இல்லாவிடினும், குறிப்பிட்ட பகுதிகளில், தண்ணீர்ப் பஞ்சம் தலை தூக்கியிருக்கிறது. நீர் ஏதோ வேளாண்மைக்கும். குடிப்பதற்கும். தொழில் வளர்ச்சிக்கு நீர் தேவை. ஒரு நாட்டின் சமுதாய, மற்ற அன்றாட வாழ்க்கைக்கு மட்டும் தேவையானது என்பதல்ல. வியாபித்திருப்பது நீர் பொருளாதார வாழ்வு முழுவதிலும் எனவேதான், சங்ககாலப் புலவர்கள்

**“குளம் தொட்டு வளம் பெருக்கிய”**

மன்னர்களை வாயார வாழ்த்தினர்.

**‘நிலன்நெளி மருங்கில் நீர் நிலை பெருகத் தட்டோரம்ம இவண் தட்டோரே’**

என்றும் அன்றைய அரசர்களைப் போற்றினர்.

நீர் ஒரு பொருளாதாரத் தகுதியுடைய பொருளாக அது ஏற்றுமதி உருவாகிவிட்ட தென்றாலும், இன்னும் இறக்குமதிப் பொருளாகவில்லை. ஒரே நாட்டில் கூட ஒரு நதியின் படுகையிலிருந்து, உபரி நீர் இன்னொரு நதிப்படுகையின் தேவையைத் தீர்க்கத் திருப்பி விடப்படுவதில்லை. அந்த உபரி நீர் கடலில் சென்று கலப்பது ஒப்புக் கொள்ளப்பட்ட ஒன்று. இந்த நடைமுறையை மாற்றுவதில் எத்தனையோ சிக்கல்கள் இருக்கின்றன. நாட்டின் சில பகுதிகளில், முழுமையாகப் பயன்படுத்த இயலாத மிகுதி நீரை மற்ற பகுதிக்குத் திருப்புவது,எளிதாக இல்லை. அது வெறும் பொறியியல் பிரச்சிணை மட்டுமல்ல. அரசியல், சமுதாயப் பிரச்சனையும் ஆகும். படுகைவிட்டுப் படுகை நீர்ப் பரிமாற்றம் (Interbasin Transfer of Water) இன்னும் ஒரு பரவலான நடைமுறைக் கொள்கையாகவில்லை. ஆங்காங்கு சில திட்டங்கள் நிறைவேற்றப்பட்டு இருப்பதையும் மனதிற் கொண்டே அவ்வாறு கூறுகிறோம். படுகை தாண்டி 'நீர்ப் பரிமாற்றம்' செயல்படுத்தப்படாது. இந்தியா போன்ற ஒருநாட்டின் நீர்ப் பிரச்சினையைத் தீர்க்க முடியாது. நமது பிரச்சினை வறட்சி மட்டுமல்ல; வெள்ளமுமாகும். நீர்ப் பரிமாற்றம் நடைமுறைப்படுத்தப்பட வேண்டுமானால், நீர்வளம் ஒரு தேசியச் சொத்தாக வேண்டும். இது முதல் கட்டம். நாம் இந்தப் படியில் கூட இன்னும் அடியெடுத்து வைக்கவில்லை. ஆனால் பாரதி, கிட்டத்தட்ட முக்கால் நூற்றாண்டிற்கு முன்பாகவே, 'வங்கத்தில் ஓடிவரும் நீரின் மிகையால், மையத்து நாடுகளில் பயிர் செய்குவோம்' என்று அறிவித்து விட்டார்.

அவரது பார்வை, அவர் வாழ்ந்த காலகட்டம் மட்டுமல்ல; அடுத்த பல தலைமுறைகளையும், இன்றைய நமது தலைமுறையையும் தாண்டிச் செல்கிறது.

பாரதி தான் வாழ்ந்த காலத்தின் முக்கியமான போராட்டங்கள். நிகழ்ச்சிகள், அன்றாடப் பிரச்சினைகள் ஆகியவற்றில் ஆழ்ந்த ஈடுபாடு கொண்டிருந்தார். அதே சமயத்தில் அவற்றையெல்லாம் கடந்து, பொதுவான மானிட வாழ்வின் ஒழுங்கையும், ஓட்டத்தையும் எண்ணினார். அது செல்லும் திசை, அதைச் செலுத்தும் சக்தி, அதில் ஏற்படும் மாற்றம், அதனால் உருவாகும் விளைவு பற்றிய அவரது உள்ளத் தெளிவுக்கு அவரது அணுகுமுறை துணை நின்றது. புதுமையில் பொருந்தாத அம்சங்கள் இருந்தமையையும் அவர் கண்டார். அதற்காக அவர் புதுமையையே புறக்கணிக்கவில்லை. அவரது கடவுள் நம்பிக்கை, சமய ஈடுபாடு பாரம்பரியப் பற்று. தேச பக்தி, எதுவும். அவரது ஆய்வுத் திறனை, மெய்ப்பொருள் காணும் அறிவின் ஆட்சியை அடிமைப்படுத்தியது இல்லை. அறிவியல் வளர்ச்சி, அதன் விளைவாக வளர்ந்த தொழில் யுக மலர்ச்சி ஆகியவற்றைப் பாரதி மானிட வளர்ச்சியின் உயர்வில் ஒரு படியாகவே எண்ணினார்; எனவே வரவேற்றார்.

## பல கல்வி தந்து பாரை உயர்த்துவோம்

"மாற்றி வையம் புதுமையுறச் செய்து மனிதர் தம்மை அமரர்களாக்க" விழைந்தவர் பாரதி. அந்த வளர்ச்சிக்குப் பாதை வேண்டும்; அந்தப் பயணத்திற்குத் துணை வேண்டும். அந்தப் பயணத்தைத் தொடங்குமுன் சமுதாயத்தின் சில அடிப்படைத் தேவைகளும் கவனிக்கப்படவேண்டும். இவற்றை அறிந்திருந்தார் பாரதி.

நாளை அமரனாகும் வாய்ப்புள்ளவனான மனிதனின் இன்றைய நிலை, சொல்லக் கொதிக்கும் ஒன்று. சோற்றுக்கும் பஞ்சம் என்ற அவலம்; சிலருக்கோ,பலருக்கோ அது எங்கும் இருக்கிறது. எனவே முக்கியத் தேவைகள் முதலில் பூர்த்தி செய்யப்படவேண்டும். ஆசைகள் பலவும் அவை எவ்வளவு உயர்ந்தவையாயினும், அவை அடிப்படைத் தேவைகட்குப் பின்னர்தான். இதை உணர்ந்த பாரதி முதலில்,

**"வயிற்றுக்குச் சோறிடல் வேண்டும் -இங்கு**

**வாழும் மனிதருக் கெல்லாம்"**

என்று விரும்பினார். வேண்டினார்; அதற்கு வழியையும் அடுத்த வரிகளில் சொல்கிறார். அது சுருக்கமான, ஆனால் மிகுந்த தொலை நோக்குள்ள வழிமுறை

**“பயிற்றிப் பலகல்வி தந்து, இந்தப்**

**பாரை உயர்த்திடல் வேண்டும்”**

மனிதனின் முன்னேற்றப் பாதையில் ஊன்றுகோலும், உறுதுணையும் கல்விதான் என்பது பாரதியின் தெளிவு. பாரதி பேசும் ‘பல கல்வியின் முக்கியத்துவத்தை உணர்வதற்குத் துணையாக அறிவியல், தொழில் நுட்ப வளர்ச்சி கண்ட இன்றைய உலகில், கல்வியின் இடம் பற்றிப் பொதுவாக ஒரு சில கூற வேண்டுவது முக்கியமானது. பண்டைய வேளாண்மை நாகரிகத்தில், ‘கல்வி’ ஒரு பொருளாதாரத் தேவையாக இருக்கவில்லை; அது சமுதாயத் தேவையுமல்ல. மக்களது அன்றாடத் தேவைகளான உணவு, உடை, வீடு ஆகியவற்றிற்கு, யாரும் எழுதப் படிக்கத்தெரிந்தவர்களை நம்பி இருக்கவில்லை. கல்வி அலங்காரப் பொருள்; அணிகலன்; யாரோ ஒருசிலர் மட்டும் பெற்று மகிழ்ந்த வாய்ப்பு. அவ்வளவுதான். நாட்டின் தேவைகளை நிறைவேற்றத் தேவைப்பட்டது உடல் உழைப்பு, பரம்பரையாகப் பெற்றுவந்த பயிற்சி, கொல்லரும், தச்சரும், குயவரும், பிறரும், வேளாண்மை செய்வோரும், பள்ளி சென்று தங்கள் தொழிலைப் பயின்றவர்கள் அல்லர். அவர்கள் திறன் பாரம்பரியச் சூழ்நிலையில் பெற்ற பயிற்சியில் வந்தது.

இன்றைய நிலைமையைச் சுருக்கமாகக் கூறுவதானால், செல்வம் பெற்ற நாடுகள் தான் தங்கள் மக்கட்குக் கல்வி வாய்ப்பைக் கொடுக்கலாம் என்றிருந்த நிலை மாறிக் கல்வி பெற்ற மக்கள் தான் இனிச் செல்வம் பெற முடியும் என்ற சூழ்நிலை உருவாகி வருகிறது.

**‘அறிவுடையார் எல்லாமுடையார்’** என்று வள்ளுவர் சொன்னது அவர் காலத்தில் ஓர் உயர்வு நவிற்சி; முழுமையான சமுதாய உண்மையன்று. தொலைநோக்குள்ள சொல் என்று வேண்டுமானால் கூறலாம். ஆனால் 21ஆம் நூற்றாண்டில் அது ஒரு நடைமுறை உண்மையாகிவிடும். ஏறத்தாழ, நூற்றுக்கு 90 விழுக்காடு தற்குறிகளாய் இருந்த சமுதாயத்தில் வாழ்ந்தவர் பாரதி. இந்தியச் சமுதாயம் அன்று முழுமையாக வேளாண்மைச் சமுதாயமாகவே இருந்தது. தொழில் நாகரிகத்தின் சுவடுகள்ஏதோ அங்குமிங்கும் தெரிந்தன. எழுதப் படிக்கத் தெரிந்தோர் பெரும்பாலும் ஆங்கில ஆட்சிக்கு, அதுவும் சிறிய அளவில் தேவைப்பட்டனர். அவ்வளவுதான். அந்தச் சூழ்நிலையில், “பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திடல் வேண்டும்” என்று கல்வியை அன்றே ஒரு வளர்ச்சிக்

கருவியாகக் கண்ட பாரதியின் பார்வை எண்ணி எண்ணி வியக்கத்தக்க ஒன்று. கற்றவர்க்குச் சென்றவிடமெல்லாம் சிறப்பு: பிச்சைபுகினும் கற்கை நன்று; அறிவுடை ஒருவனை அரசனும் விரும்பும் என்ற வகையில் நமது நாட்டில் வாழையடி வாழையென வந்தமரபைப் பாரதியும் காத்தார் என்று யாரும் கூறுவதற்கில்லை. 'பலகல்வித் தத்துவம் நமது புலவர்கள் பாடாத ஒன்று பல கல்வி வாய்ப்பு என்பது இன்று கூட முழுமையாக நமது நாட்டின் கல்வித் துறையினர் படைக்காத ஒன்று இரண்டாவதாக ஒழுக்கம்,நீதி பற்றிப் பேசுவதற்கோ, கதையும், காவியமும் படைப்பதற்கோ, வெறும் பொழுது போக்குச் சாதனமாக இயங்கவோ மட்டும் பாரதி கல்வி பற்றிப் பேசவில்லை. சமுதாயம் உணவும், உடையும். உறையுளும் பெறக் கல்வி வேண்டும் என்று கருதினார் பாரதி தொழிலாளர் என்ற கட்டுரையின் கீழ்க்காணும் பகுதிகள் அவரது அணுகு முறையைத் தெளிவாக்குகின்றன:**"இங்ஙனம் எல்லா வகுப்புக்களையும் சேர்ந்த எல்லா மனிதரிடையேயும் கல்வியும் அதன் விளைவுகளாகிய பலவகைப்பட்ட அறிவுப் பயிற்சிகளும் பரவி விடுமானால், அதனின்றும் கைத்தொழிலாளிகள், கல்விப்பயனைக் காவியங்கள் இயற்றுவதிலும், படிப்பதிலும் மாத்திரமே செலவிடும் வழக்கம் மாறிப் போய் அவரவர் தத்தமக்கு உரிய தொழில்களிலும் கல்வியறிவைப் பயன்படுத்தத் தொடங்குவார்கள்.**

## "அறிவே வலிமை - கல்வியே செல்வத்தின் தாய்"

கற்பனை உலகில் நின்று கொண்டு, காலந்தொட்டுக் கல்வியின் பெருமையைப் பாடியவர்கள்நமது புலவர்கள். கவிஞனின் நெஞ்சில். செயலுக்குத் துணை நிற்கும் சிந்தனைகள் இவ்வளவு தெளிவுடன் ஒளிர்வது எண்ணி வியக்கத்தக்கது.

அடிமைக்கு விடுதலை கல்வியால் வரவேண்டும். ஏழையின் ஏழ்மை கல்வியால் தீர வேண்டும். பெண்கள் தமது பெருமையைக் கல்வியால் அடைய வேண்டும். காண வேண்டிய வளர்ச்சிகள் அனைத்திற்கும் வழிகாணும் கண்ணும் கல்வி; வளர்ச்சியை உருவாக்கும் கருவியும் கல்வி என்று எண்ணிப் பாடியவர் பாரதி. தலைமுறை, தலைமுறையாகக் கோயில் கட்டுவதையும், அதனருகில் குளம் வெட்டுவதையும், தண்ணீர்ப் பந்தல் வைப்பதையும், சத்திரம் கட்டுவதையும் புண்ணியமென்று போற்றி வந்த சமுதாயத்தை நோக்கி **'அன்னயாவினும் புண்ணியம் கோடி, ஆங்கோ ரேழைக் கெழுத்தறிவித்தல்'** என்கிறார் பாரதி.

கற்ற சமுதாயத்தைப் படைக்க ஒருவர், இருவர் போதார் . அனைவரும் கைகொடுக்க வேண்டும். இந்த முயற்சி மக்கள் இயக்கமாக மலர வேண்டும், எனவே:

**“நிதி மிகுந்தவர் பொற்குவை தாரீர்**

**நிதி குறைந்தவர் காசுகள் தாரீர்**

**அதுவுமற்றவர் வாய்ச்சொல் அருளீர்**

**ஆண்மையாளர் உழைப்பினை நல்கீர்**

**…………………..**

**எதுவும் நல்கிஇங் கெவ்வகையானும்**

**இப்பெரும்பணி நாட்டுவம் வாரீர்**

என்று அழைக்கிறார்.இந்த முயற்சிகளின் பயனாக

**“வீடுதோறும் கலையின் விளக்கம்**

**வீதிதோறும் இரண்டொரு பள்ளி**

**நாடுமுற்றிலு முள்ளன ஊர்கள்**

**நகர்களெங்கும் பலப்பல பள்ளி”**

ஏற்படவேண்டும். இதற்குப் பின்னும் கல்வியிலாத ஊர் இருக்குமாயின்,

**தேடு கல்வி யிலாத ஒரூரைத்**

**தீயினுக் கிரையாக மடுத்தல்**

வேண்டுகிறார் பாரதி.

கல்வி வேண்டும் என்று வற்புறுத்தும் பாரதி, அதை ஒரு வளர்ச்சிக் கருவியாகவும் கருதினார் என்பதற்கு அவர் எப்படிப்பட்ட கல்வியை விரும்பினார் என்ற ஆய்வு துணை செய்யும். அன்றைய கல்வியைப் பாரதி கடுமையாக விமர்சிக்கிறார்.

**“நதியுயிர்ச்சிறு சேவகர், தாதர்கள்**

**நாயெனத்திரி ஒற்றர், உணவினைப்**

**பெரிதெனக் கொடு தம்முயிர் விற்றிடும்**

**பேடியர், பிறர்க் கிச்சகம் பேசுவோர்**

**கருது மிவ்வகை மாக்கள் பயின்றிடும்”**

கல்வி என்கிறார். அதன் குறைபாடுகளை மேலும் பேசும் பொழுது, பாரதி இருபதாம் நூற்றாண்டுக் கல்விக்குத் தேவையானதென இன்று நாம் கருதும் ஒரு முக்கியமான கூறுபாட்டை அன்றே குறிப்பிடுகிறார்.

நமது நாட்டில் இன்று படித்தவர்களுக்கு வேலையில்லாப் பாடு பெரியதொன்றாக உருப்பெற்றுள்ளது. மேலெழுந்தவாரியாகப் பார்த்தால் இந்த நாட்டில் ஏதோ எல்லோரும் கல்வி கற்றுப் பெரும்பாலோர் உயர்கல்வியும் பெற்றுக் கல்வியே ஒரு மலிவுப் பொருளாக மாறிவிட்டது போன்ற தோற்றம் தென்படக்கூடு இன்னும் (1981) நூற்றுக்கு 57 விழுக்காடு மக்கள் எழுதப்படிக்கத் தெரியாத தற்குறிகள். பல்கலைக்கழகக் கல்வி பெற்றவர்கள் நூற்றுக்கு இருவருக்கும் (1981) குறைவு இருந்தும், கற்றவர்கள் மலிந்து விட்டது போன்ற காட்சி ஏன் என்று எண்ணிப் பார்ப்பது கடமையாகிறது. கற்றவர்கள் தங்களது பாரம்பரியத் தொழிலைப் பெரும்பாலும் செய்வதில்லை; செய்ய விரும்புவதுமில்லை. அவர்களுக்கேற்ற புதிய தொழில்கள் தேவைக்கேற்ப இல்லை. இருக்கின்ற தொழில்கள் சிலவற்றிற்கு ஏற்ற பயிற்சியை இவர்கள் பெறவில்லை. தங்கள் கல்விக்கும் பயிற்சிக்கும் ஏற்ப, புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்கும் திறனும் இவர்களிடம் இல்லை. எனவே இன்றைய உயர் கல்விக்கும், இன்றைய சமுதாயத்தின் பொருளாதார வளர்ச்சியின் தேவைக்கும், இடையே விரிசல் காணப்படுகிறது. உயர் கல்வியுலகம், ஏதோ ஓர் உயரத்தில் இருப்பது போலவும், மக்களின் அன்றாடப்பாடுகள் அதன் தரத்திற்குத் தாழ்ந்தன போன்றும் ஒரு மயக்கம் நிலவுகிறது. அதை எண்ணியோ, எதிர்பார்த்தோ, பாரதி கல்வியும் வாழ்க்கையும் இணைந்திருக்க வேண்டுமென்ற கருத்துப்படப் பாடிச் சென்றார்.

‘உடல் உழைப்பின் உயர்வு' (Dignity of Labour) பற்றி நாம் மேடைகளில் பேசுகிறோம். பத்திரிகைகளில் எழுதுகிறோம். இந்த நாட்டிலே வெள்ளுடைவினையே (White Collar Jobs) விரும்பப்படுகிறது. உடல் உழைப்பை நம்மவர் மதிப்ப தில்லை என்று குறைப்படுகிறோம். இதைப் பேசுபவர்கள் கூட உண்மையில் உள்ளூர வெள்ளுடைவினை விரும்பிகளே. இந்தச் சமுதாயத்தின் பாரம்பரியம் அப்படி. அதை மறைப்பது பயனற்றது. மறுப்பது வேடம். உடல் உழைப்பிற்கு மதிப்பும், மரியாதையும் இந்த மண்ணில் இனிமேல்தான் ஏற்படவேண்டும். அப்படிப்பட்ட அணுகுமுறையை நாம் உருவாக்க வேண்டும். சந்தி தெருப்பெருக்குவதைச் சாத்திரமாக உயர்த்தும் பாரதி நமக்கு மிகுதியும் தேவையான ஒரு பண்பாட்டை உருவாக்குகிறார்.

தொழிலில் உயர்வு தாழ்வு பார்க்கக் கூடாது. செய்யும் தொழிலைத் திறனுடன் செய்பவர் யாராயினும் அவரை மதிக்க வேண்டும். ஒரு சமுதாயம், தரம் இல்லாத தத்துவவாதியைத் தத்துவத்துறை உயர்ந்தது என்பதற்காக மதிக்கவும், தரம் நிறைந்த ஒரு சாக்கடைத் துப்புரவுத் தொழிலாளியை அத்தொழில் தாழ்ந்தது என்பதால் மதிக்கத் தவறவும் செய்யுமானால், அந்த நாட்டின் சாக்கடையும் நாறும்; தத்துவமும் நாறும். இரண்டுமே சிறப்புறாது. எனவேதான் **"மந்திரம் கற்போம், வினைத் தந்திரம் கற்போம்.வானையளப்போம், கடல் மீனையளப்போம்;சந்திர மண்டலத்தியல் கண்டு தெளிவோம்"**என்று உயர்ந்த அறிவுத்துறை நிபுணர்களால் மட்டுமே செய்யக்கூடிய தொழில் உலகில் உலவிய பாரதி, அவற்றிற்குச் **சமமாக வைத்துச் சந்தி தெருப் பெருக்குவதைப் பேசுகிறார்**. அதைச் சாத்திரமாகவும் உயர்த்துகிறார்.

இருபதாம் நூற்றாண்டின் பிற்பகுதியில் கல்வி, ஒரு நாட்டின் வளங்கள் அனைத்தினும் உயர்ந்த வளமாக உருப்பெற்றிருக்கிறது. கருவி அனைத்தினும் தலையாய கருவியாக வளர்ந்திருக்கிறது. கல்வி வளம் பெற்றோர், மற்ற இயற்கை வளங்கள் எது இல்லாவிட்டாலும் தமது கல்வியின் துணையால் இன்று ஈடு செய்ய இயலும். வேளாண்மை யுகத்தில் தொடங்கி, தொழில் யுகத்தில் அடியெடுத்து வைத்து, தொடர்ந்து முன்னேறிவரும் மனித இனம், இன்று கல்வி யுகத்தில் கால் வைத்திருக்கிறது. இந்த வளர்ச்சியின் முழுப் பரிமாணத்தையும் பாரதி அன்று கண்டிருக்க முடியும் என்று நாம் கூறவில்லை. ஆனால் வாழ்வில் பயனுள்ளதும், தேவைகளோடு தொடர்புள்ளதுமான கல்வியின் திறனை, அதன் தேவையை, அதிசயிக்கத்தக்க அளவிற்கு அவர் உணர்ந்திருக்கிறார். பயிற்றிப் பல கல்வி தந்து இந்தப் பாரை உயர்த்திட வேண்டும் என்ற அவரது வேண்டுகோள் அன்றினும் இன்று பொருளுடையது; பொருத்தமானது.

## மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை

புதுநெறி காட்டிய புலவன் என்ற தலைப்பில் பாரதி பற்றிய உயிரோவியமாய் அமைந்த கவிதையைப் படைத்தளித்த கவிஞர் பாரதிதாசன்:

**'தமிழ் பாரதியால் தகுதி பெற்றது'**

பற்றிக் குறிப்பிடுகிறார். தமிழுக்குப் பாரதி செய்தத் தொண்டு அதன் நிறை பற்றிப் பேசிய பெருமை மட்டுமன்று; அதன் குறை பற்றி எண்ணிக் குமுறியதும், அந்தக் குமுறலைக்

கவிதையாக்கி இன்றும் நமக்கு அறிவுறுத்துவதும் ஆகும். தமிழைத் தமது தாய்மொழி என்று கருதியும் நேசித்தார். அதன் உண்மையான தகுதி கருதியும் நேசித்தார்.

**‘சொல்லில் உயர்வு தமிழ்ச்சொல்லே-அதைத்**

**தொழுது படித்திடடி பாப்பா’**

என்று குழந்தைக்குப் பாடம் சொன்ன போதும்,

**‘யாமறிந்த மொழிகளிலே தமிழ்மொழி போல்**

**இனிதாவ தெங்கும் காணோம்’**

என்று பெரியவர்கட்குக் கூறியபோதும்.

**“வானமளந்த தனைத்தும் அளந்திடும்**

**வண்மொழி வாழியவே”**

என்று மனமாரப் போற்றி வாழ்த்திய பொழுதும், பாரதி, தம் நெஞ்சம் கண்டதை, நம்பியதைத்தான் சொன்னார். ‘யாமறிந்த புலவரிலே கம்பனைப்போல், வள்ளுவர் போல், இளங்கோவைப் போல். பூமிதனில் யாங்கணுமே பிறந்ததிலை’ என்று கூறியவர். ஒருக்கால் இதைக் கவிஞர்கட்கே உரித்தான ‘உயர்வு நவிற்சி’ என்று கருதிவிடுவார்களோ என்று எண்ணியோ என்னவோ. அவராகவே ‘உண்மை, வெறும் புகழ்ச்சியில்லை’ என்றுஉறுதிப்படுத்துகிறார்.

**“கள்ளையும் தீயையும் சேர்த்து–நல்ல**

**காற்றையும் வான வெளியையும் சேர்த்து”**

நமது தெள்ளு தமிழ்ப் புலவோர்கள் செய்து கொடுத்த தீஞ்சுவைக் காவியங்களைப் பாரதி அறிந்தவர்; அவற்றில் ஆழ்ந்தவர், சிலப்பதிகாரச் செய்யுளும், கம்பநாடனின் கவிதையும், திருக்குறள் உறுதியும், தெளிவும், அதன் பொருளின் ஆழமும், விரிவும், அழகும் தெரிந்தவர். எனவேதான்,

**“சேமமுற வேண்டுமெனில் தெருவெல்லாம்**

**தமிழ்முழக்கம் செழிக்கச் செய்வீர்”**

என்று வேண்டுகோள் விடுத்தார். அதனினும் ஒருபடி மேலே சென்று,

**தேமதுரத் தமிழோசை உலகமெலாம்**

**பரவும் வகை செய்தல் வேண்டும்**

என்று ஆசைப்பட்டார். இஃதன்றி இன்னும் பலவகையில் தனது தாய்மொழியாம் தமிழின் பெருமையையும், சிறப்பையும் பேசும் பாரதி, அதன் இன்றைய குறைபாடுகள் பற்றி எண்ணுகிறார்.

வரலாறு தெரிந்த நாள் முதல், கல்வி உயர்மட்டத்தினர் ஒரு சிலருக்கு உரிய பொருளாகவே இருந்து வந்திருக்கிறது. அது எல்லோருக்கும் எட்டும் பொருளாக இருந்ததில்லை. மக்கள் கல்வி (Universal Education) என்ற மரபே தொழிற் புரட்சிக்குப் பின்னர் ஏற்பட்ட ஒன்றாகும். கல்வியின் நிலையே அதுவெனில் கவிதையைப் பற்றிக் கேட்க வேண்டாம். அது என்றுமே சற்று உயரத்தில் இருந்து வந்த ஒன்று. தமிழ்க் கவிதை உலகம் சாதாரண மக்களைப் பற்றி எண்ணியதுமில்லை; அதில் ஈடுபடும் தகுதி சாதாரண மக்கட்கு இருந்ததுமில்லை.

அரசர், அமைச்சர், அவை என்று முன்பும், அறிஞர், செல்வர் சூழல் என்று பின்பும், பொதுவாக ஒரு சிலர் கூடிய அவை என்ற அளவில் இருந்த கவிதைத் தமிழை அம்பலத்தில் அரங்கேற்றியவர் பாரதி, வாழையடி வாழையென வந்த ஒரு மரபை மாற்றிக் கவிதைக்குப் பரவலான உலகைப் படைத்தவர் பாரதி. அவர்

**“செந்தமிழின் வாழ்விலொரு திருப்பம் கண்டார்;**

**தீங்கவிதை இலக்கியங்கள் புலவர்கட்கே**

**சொந்தமென நின்றதொரு தோற்றம் வென்றார்;**

தந்த தமிழ்ப் பெருங்கவிஞர், எங்கோ இருந்த தமிழ்க் கவிதையை, எல்லோருக்கும் எட்டும் பொருளாக்கிய பாரதி, அதற்காக இலக்கணத்தைப் புறக்கணிக்கவில்லை. இலக்கிய மரபுகளை உதறித் தள்ளவில்லை. வினை செய்வதாயினும், விளையாடுவதாயினும், சில விதிகள் வேண்டும். கட்டுப் பாடுகள் காட்டுமிராண்டிச் சமுதாயத்தின் படைப்புகளல்ல. அவை பண்பாட்டின் விளைவுகள். சட்டங்கள் வளர்ச்சியின் சின்னங்கள். அவை வளர்ச்சிக்கேற்ப மாற வேண்டும். பழையன கழியும்போதுஅந்த இடத்தில் புகவேண்டும் என்கிறார்.

பாரதியின் கவிதை யுகம், புதிய கவிதை அமைப்பை மட்டுமின்றிப் புதிய புதிய கவிதைப் பொருள்களையும் பெற்றது. பாரதி காலத்திற்கு முன்பு பெரும்பாலும் காதல், வீரம், பக்தி, அரசர், குறுநில மன்னர், செல்வர் என்ற உலகில் தமிழ்க் கவிதை உலவி

வந்தது. பாரதி மனிதனின் அன்றாடப்பாடுகளைக் கவிதைப் பொருளாக்கினார். அதனால் தமிழ்க் கவிதைக்குக் கணக்கற்ற பாடல் தலைப்புகள் உருவாயின.அதன் உலகம் கடலென விரிந்தது.

தமிழினம் வளர வேண்டும். தமிழ்நாடு வளர வேண்டும். நாட்டின் வளங்கள் பெருக வேண்டும். அப்படியானால் அதற்குத் துணை செய்யும் கலைகளையும், ஒரு மொழி தன்னுள் கொண்டிருக்க வேண்டும்.

**''வியாபாரம் வளர்க; யந்திரங்கள் பெருகுக; முயற்சிகள் ஓங்குக. சங்கீதம், சிற்பம், யந்திர நூல், பூதநூல், வான நூல், இயற்கை நூலின் ஆயிரம் கிளைகள் இவை தமிழ்நாட்டிலே மலர்ந்திடுக…………..”**

என்று முழங்குகிறார் பாரதி. தமிழில் இருப்பன ஏற்ற முடையன என்றாலும், இல்லாதவை பல மிக மிகத் தேவையானவை என்பதைப் பாரதி தெளிவாகக் காண்கிறார். அறிவியல் உலகில் தமிழ் அடியெடுத்து வைக்கவில்லை என்பதை உணர்கிறார்.

**“புத்தம் புதிய கலைகள்; பஞ்ச**
**பூதச் செயல்களின் நுட்பங்கள் கூறும்**
**மெத்த வளருது மேற்கே; அந்த**
**மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை”**

என்ற உண்மையை, யாரோ ஒருவன் கூற்றாக எடுத்துச் சொல்கிறார். இதைக் கூறியவன் இத்துடன் நின்றிருந்தால் திறந்த மனத்துடன் சிந்திக்கும் தெளிவுடையவரான பாரதி இக்கூற்றை அமைதியாக ஏற்றிருப்பார்; ஏற்று ஆய்ந்திருப்பார்.

பாரதி அவர் பெற்ற பயிற்சி என்ற அளவில் இலக்கிய உலகைச் சார்ந்தவர். இந்திய மண்ணின் எல்லையைக் கடந்து எங்கும் செல்லாதவர். அவர் வாழ்ந்த சூழ்நிலையில் அறிவியல், தொழில் நுட்பம் பற்றிய சிந்தனைகள் பரவலாக இடம் பெற்றிருக்கவில்லை. அன்றைய கவிஞர்கள் யாரும் இந்திய மொழிகளில் புதிய பரிமாணங்களை உருவாக்க வேண்டிய தேவையை இவ்வளவு தெளிவாக, தீவிரமாக உரைத்ததாகத் தெரியவில்லை. அவர் வாழ்ந்த பின்னணி, அன்று தலைவர்கள் எனப்படுவோர் நெஞ்சில் முக்கியமானவை என்று இடம் பெற்றிருந்த பிரச்சினைகள் ஆகியன பற்றி எண்ணும்பொழுது, அறிவியல் கல்வியும், அத்துறையில் நூல்களைப் படைக்க வேண்டிய தேவையும் பாரதியின்

சிந்தனையில் பெற்றிருந்த இடம் எண்ணி வியக்கத் தக்க ஒன்றாகும். அவரது பார்வையின் தெளிவுக்கும் அவரது தீர்க்க தரிசனத்துக்கும் சான்று கூறுவதாகும்.

இறவாத புகழுடைய புதுநூல்கள் தமிழ்மொழியில் இயற்ற வேண்டும் என்ற அவரது அறிவுரையைப் பின்பற்றி, ஆண்டிற்குச் சராசரி 100 நூல்கள் வெளியிட்டிருந்தால் கூட இன்று (1983) சுமார் 7000 நூல்கள் பல்வகையான அறிவுத் துறைகளில்உருவாகியிருக்கும்.

அறிவியல் துறைகள் மேலைநாடுகளில் நாளொரு மேனியும் பொழுதொரு வண்ணமுமாக வளருகின்றன. ஆமை வேகத்தில் உலகம் முன்னேறிய காலகட்டத்தில் நாம் சோர்ந்து விட்டோம். இன்று அசுர வேகத்தில் கல்வி உலகு வளருகிறது. அந்த வளர்ச்சியின் அளவு, விரைவு பற்றி அறிய ஒரு சில தகவல்கள் துணைபுரியும். கிட்டத்தட்ட ஒவ்வொரு பத்தாண்டும் அறிவியல் துறைகளில் ஒட்டுமொத்தமான 'கல்வி அறிவு'த் தொகுப்பு இரட்டிக்கிறது. புதியன காணும் புனிதப் பணியில் ஈடுபட்டிருப்போர் படைக்கும் ஆய்வுக் கட்டுரைகளைத் தாங்கி, உலகில் பல மொழிகளில் சுமார் 100,000 பத்திரிகைகள் வெளிவருகின்றன. 1850-ல் இது சுமார் 5000 ஆக இருந்தது. 1900 – ல் இது கிட்டத்தட்ட 10,000 ஆயிற்று. இன்று இலட்சத்தைத் தாண்டி விட்டது. இன்றைய அளவில் ஆண்டுதோறும் சுமார் 12,00,000 ஆய்வுக் கட்டுரைகள் வெளிவருகின்றன. மற்றும் நூல்கள் என்று எடுத்துக் கொண்டால். அமெரிக்கா, ஆண்டு தோறும் எல்லாவகையான துறைகளையும் சேர்ந்து சுமார் 80,000 தலைப்புகளை வெளியிடுகிறது. சோவியத் ஒன்றியம் (U.S.S.R) சுமார் 85000 தலைப்புகளை வெளியிடுகிறது. ஆறு கோடிக்கு உட்பட்ட மக்கள் தொகையைக் கொண்ட மேற்கு ஜெர்மனி ஆண்டுதோறும் 45000க்கு அதிகமான தலைப்புகளை வெளியிடுகிறது. ஆசிய நாடான ஜப்பான் 40,000க்கு மேற்பட்ட தலைப்புகளை வெளியிடுகிறது. தமிழில் நமது வெளியீடுகள் சராசரி ஆண்டுக்கு சுமார் 1000 என்ற அளவில் நிற்கிறது (1983). சங்க காலம் தொட்டு நாம் இன்று வரை வெளியிட்ட நூல்களின் தொகை எண்ணிக்கையின் அடிப்படையில், அமெரிக்கா போன்ற நாடு ஓராண்டில் வெளியிடும் தொகையை எட்டாது. இருபதாம் நூற்றாண்டின் இறுதிப் பகுதியில், நவீன கல்வி உலகம் எங்கோ இருக்கிறது. நமது தாய்மொழி எங்கோ நிற்கிறது. நாம் எங்கு நிற்கிறோம் என்பதைக் கூட முழுமையாகப் புரிந்து கொள்ளாது பலர் தங்கள் விருப்பு வெறுப்பிற்கேற்ப எதையோ உரக்கக்கூறிக்கொண்டிருக்கின்றனர்.

தமிழ் மக்களில் பலர் அறிவியல், தொழில் நுட்பம் போன்ற துறைகளில் உலகு போற்றும் நிபுணர்களாக விளங்குகின்றனர். அவர்கள் ஆங்கிலத்தில் எழுதிய கட்டுரைகளும்நூல்களும்முன்னேறியநாடுகளிலும்தக்கோரால்மதிக்கப்படுகின்றன: வரவேற்கப்படுகின்றன. தமிழ்நாட்டில் பல உயர் கல்வி. ஆய்வு நிறுவனங்கள் உருவாகியிருக்கின்றன. பல்வகை அறிவுத் தொழிற்கூடங்கள் செயற்படுகின்றன. துறைகளில் எண்ணற்ற மாநாடுகள், கருத்தரங்குகள் நடக்கின்றன. ஆனால் தமிழர்கள் கண்ட அறிவியல் கலைகளை, அவர்கள் தம் மொழியான தமிழ் இன்னும் காணவில்லை. தமிழ் மண் கண்ட அறிவியல் வளர்ச்சியைத் தமிழ்மொழி காணவில்லை; காணுவதற்கான அடிப்படைகளும் கண்ணுக்குத் தெரியவில்லை.

இருபதாம் நூற்றாண்டின் முதற் பகுதியில் வாழ்ந்த பாரதி அன்றே 'மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை' என்று குரல் கொடுத்தார். தம் காலத்திலேயே அந்தக் குறை நீங்க வேண்டும் என்று விழைந்தார்; நீங்கும் என்று கனவு கண்டார். இங்குச்'சார்ந்த புலவர் தவவலியால் இந்தப் பெரும்பழி நீங்கும்' என்று நம்பினார். அவர் வாழ்ந்த சகாப்தம் முடியும் தருவாயிலும் அது குறையாகவே இருக்கும் என்று அவர் எண்ணியிருக்கமாட்டார்.

தமிழ்மொழி பற்றி எண்ணும்பொழுது, அதன் வளர்ச்சிக்கு நாம் பாரதியின் பாடலைப் படித்த அளவிற்குப் பின்பற்றவில்லை. பாடிய அளவிற்குப் பயன்படுத்தவில்லை. தேமதுரத் தமிழோசை உலகமெலாம் பரவும் வகை செய்தல் வேண்டும் என்று விழைந்த, வேண்டிய பாரதியின் ஆசையும், கனவும் அளவிறந்தன. அவர் கனவுகள் நனவாகவில்லை; அவர் நம்பிக்கைகள் நிறைவேற்றப்படவில்லை. அவர் காட்டிய செயல்முறையை நாம் தீவிரமாக மேற்கொள்ளவில்லை. 'மேன்மைக் கலைகள் தமிழினில் இல்லை என்ற அவரது ஏக்கம், இன்று தமிழினத்தின் ஏக்கமாகநிற்கிறது.

## ஒப்பிலாதச் சமுதாயம்

பாரதியின் கவிதைகள் பலவற்றில், நீக்கமற ஊடுருவி காணலாம். 'ஒரு புதிய சமுதாயம் உருவாக வேண்டும்: 'ஒரு நிற்கும் ஆசை ஒன்றை, மேலெழுந்தவாரியாகப் படிப்பவர்களும் புதிய உலகு காண வேண்டும்' என்பதுவே அந்த ஆசை.

மனித உலகின் அரசியலமைப்பை, பொருளாதார நிலைகளை, சமுதாய நீதிகளை ஆழ்ந்து எண்ணிய பாரதிக்கு அவரது அடி மனத்தில், எங்கோ ஒரு மூலையில், எதுவுமே

திருப்தி தருவதாக இல்லையே என்ற இனங்காணாத அதிருப்தி இருந்து கொண்டே இருக்கிறது. தெய்வீகமான ஒரு ‘நிறைவின்மை’, அவரை ஆட் கொள்கிறது.

**‘நாட்டு ராஜநீதி மனிதர் நன்கு செய்யவில்லை’**

என்ற எண்ணம் அவருக்கு மேலோங்கி நிற்கிறது. முடியுடை மூவேந்தர், தமிழகம் ஆண்ட காலத்தை எண்ணிப் பாரில்நல்லிசைச் சோழர்கள், பாண்டியர் பாரளித்ததும்,தர்மம் வளர்த்ததும் பற்றி மகிழ்ச்சியும்,பெருமையும் கொள்கிறார் எனினும், பேரருட்சுடர் வாள் கொண்டு அசோகனார் பிழைபடாதுபுவித்தலங் காத்த பெருமையைப் பாடுகிறார் என்றாலும். அன்று முதல் இன்று வரை, உருவாகிவந்துள்ள நிர்வாக அமைப்புகள், பொருளாதார ஏற்பாடுகள், சமுதாய நடைமுறைகள் பற்றிய தமது தீர்ப்பைச் சற்றுத் தெளிவாகவே வழங்குகிறார்.

**ஓரஞ் செய்திடாமே, தருமத்துறுதி கொன்றிடாமே**
**சோரம் செய்திடாமே, பிறரைத் துயரில் வீழ்த்திடாமே**
**ஊரையாளு முறைமை, உலகில் ஒருபுறத்து மில்லை.**

இது பாரதியின் தீர்ப்பு.

மனித வாழ்க்கையில், மானிடத்தின் நீண்ட வரலாற்றில்எத்தனையோ மாற்றங்கள் நிகழ்ந்திருக்கின்றன. தொடர்ந்து நிகழ்கின்றன . பாரதி அவற்றின் அடிப்படையை, ஆத்மாவை உணரும் பார்வையினர்; எனவே மாற்றங்களில், மானிட வளர்ச்சியின் முன்னேற்றப்படியாக அமையும் முக்கியத்துவம் கொண்டவை எவை, ஆடை மாற்றம் போல ஆழமில்லாதவை எவை என்ற பாகுபாட்டை, ஊடுருவிக்காணும் உள்ளம் கொண்டவர். கதிரையும், பதரையும் காட்சியளவிலேயே எடை போட இயன்றவர். பாரதி பராசக்தியை வேண்டினாலும், விநாயகரைத் துதித்தாலும், அல்லது பொதுவாகத் தனது ஆசைகளைக் கூறினாலும், சுருங்கச் சொல்வதானால் அவர் பேசும் பொருள் எதுவாயினும், புதுமை. புதிய உலகு, புதிய சமுதாயம் பற்றிய எண்ணங்கள், கனவுகள்ஒளிவிடுகின்றன. இந்தியத் துணைக் கண்டத்தில் தாம் காண விரும்பும் வாழ்க்கை முறை பற்றிய அவர் கனவை,

**‘ஒப்பிலாத சமுதாயம் உலகத்துக்கொரு புதுமை’**

என்று அறிவிக்கிறார். அவரது சமுதாயத்தின் அடிப்படைக் கூறுபாடுகள் என்ன என்று எண்ணுவது பொருத்தமுடையதாகும்.

பாரதி தீமை கண்டு பொறுக்காதவர். நல்லவர்கள் என்றால், யாருக்கும் தீமை செய்யாதவர்கள்; இயன்றவரை எல்லோருக்கும் உதவுபவர்கள் என்பதல்ல பொருள். அவரைப் பொறுத்தவரை, நல்லவர்கள் தீமையை எதிர்க்க வேண்டும்; எதிர்த்துப் போராட வேண்டும். பாப்பாவுக்கு அறிவுரை சொல்ல வந்த பாரதி:

**“பாதகம் செய்பவரைக் கண்டால், நாம்**

**பயங்கொள்ளலாகாது பாப்பா”**

என்கிறார். அத்தோடு நின்றாரில்லை. மேலே சென்று,

**“மோதி மிதித்துவிடு பாப்பா அவர்**

**முகத்தில் உமிழ்ந்துவிடு பாப்பா’’**

என்று பயிற்றுவிக்கிறார். அவரது இந்தக் கருத்தை, பாஞ்சாலி சபதத்தில் இன்னும் தெளிவாக வலியுறுத்துகிறார். பாஞ்சாலியைத் துகில் உரிவதற்காக, துச்சாதனன், பாஞ்சாலியின் முடியைப் பிடித்துத் தெரு வழியாக இழுத்து வருகிறான். அதைப் பார்க்க வீதியின் இருமருங்கிலும் மக்கள் கூடியிருக்கிறார்கள். அவர்கள் ஈக்களைப் போல மொய்த்து நிற்கிறார்கள்.

பல சமுதாயங்களில் ஏற்றத்தாழ்வு பிறப்பாலும் அமைகிறது. இந்தியாவில் அது சாதியால் வருகிறது. மற்றும் சில நாடுகளில் அது நிறத்தால் வருகிறது. ‘சாதிகள் இல்லையடி பாப்பா’ என்று பிரகடனம் செய்து, ‘குலத்தாழ்ச்சி உயர்ச்சி சொல்லல் பாவம் என்று அறிவுரை கூறிய பாரதி, தமது சமுதாயத்தில்,

**“எல்லாரும் ஓர்குலம் எல்லாரும் ஓரினம்**

**எல்லாரும் இந்திய மக்கள்”**

**எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை:**

என்று தமது சமத்துவத் தத்துவத்தை விளக்குகிறார். இதுவும் போதாது என்று ஐயப்பட்டோ என்னவோ. தமது சமத்துவத் தத்துவத்தை மேலும் வலியுறுத்த எண்ணி.

**“எல்லாரும் இந்நாட்டு மன்னர்-நாம்**

**எல்லாரும் இந்நாட்டு மன்னர் -ஆம்**

**எல்லாரும் இந்நாட்டு மன்னர்”**

என்கிறார்.

மேலே கூறிய ஏற்றத்தாழ்வுகளிலும், இன்னும் சற்றுப் பரவலான தன்மை வாய்ந்தது பொருளாதார ஏற்றத்தாழ்வு.

**“உலகத்தில் செல்வத்தின் சம்பந்தமான ஏற்றத் தாழ்ச்சிகள் மற்ற எல்லாக் காரணங்களில் ஏற்படும் ஏற்றத்தாழ்வுகளைக் காட்டிலும் மிகக் கொடியவையாக மூண்டிருக்கின்றன”**

என்கிறார் பாரதி. இந்த ஏற்றத்தாழ்வுகள் மறைந்தாலன்றிச் சமத்துவம் என்பது சாத்தியமான ஒன்று அன்று. இதைப் பற்றிப் பல்வகையிலும் சிந்தித்த பாரதி ஒரு முடிவுக்கு வருகிறார்.

**“முதலாவது சிலருக்குச் சோறு மிதமிஞ்சி இருக்க, பலர் தின்னச் சோறில்லாமல் மடியும் கொடுமையைத் தீர்த்து விட வேண்டும். இது இலக்கம் ஒன்று”**

எனச் செய்யவேண்டிய சீர்திருத்தத்தை வரிசைப்படுத்துகிறார். வானவர், அமரர் என்ற உயர் நிலையைத் தொடும் வழிப் பயணத்தில் ஈடுபட்டிருப்பதாகப் பாரதி கருதும் மனிதன், கேவலம் புழு, பூச்சிகள் போலப் பறவைகள், விலங்குகள் போல அல்லது அவற்றினும் கீழாக, வயிற்றுப் பசியைப் பெரிதாகக் கருதி உழல்வதை அவருள்ளம் சகித்துக் கொள்ளவில்லை. அன்ன விசாரம், அதுவே விசாரமாய்க் காலா காலத்திற்கும் இருந்து வந்திருக்கின்றது. அது இன்னும் இருக்கிறது. “இருக்குமிடம் தேடி, என் பசிக்கே அன்னம் உருக்கமுடன் கொண்டு வந்தால் உண்பேன்” என்று விரதம் பூண்ட பட்டினத்தடிகளும்,

**“அத்திமுதல் எறும்பீரானவுயிர் அத்தனைக்கும் சித்தம் மகிழ்ந் தளிக்கும் தேசிகா-மெத்தப் பசிக்குதையா, பாவியேன் பாழ்வயிற்றைப் பற்றி இசிக்குதையா காரோண ரே”**

என்று புலம்புகிறார். ‘வயிறு மட்டும் இல்லாதிருந்தால் ஒவ்வொரு மனிதனும் கடவுளாகி இருப்பான்’ என்றார் ஒரு மேலை நாட்டுத் தத்துவ அறிஞர், உயர்ந்த உணர்வுகள் எதையுமே புரிந்து கொள்ளாத ஒரு பகுதி வயிறு சுதந்திர உணர்விலும், மான வாழ்விலும் உலகுக்கே உதாரணமாக விளங்கும் ஒளவை பெருமாட்டியும்.

**“ஒருநாளுணவை ஒழியென்றால் ஒழியாய்**
**இருநாளைக் கேலென்றால் ஏலாய் – ஒருநாளும்**
**என்நோ வறியாய் இடும்பைகூர் என்வயிறே**
**உன்னோடு வாழ்தல் அரிது”**

என்று வருந்துகிறார். இந்த நிலை இன்னும் தொடர்வதைத் தாங்கிக் கொள்ள முடியாத பாரதி

**“சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம் – வெறுஞ்**

**சோற்றுக்கே வந்ததிந்தப் பஞ்சம்”**

என்று வெம்புகிறார்.

பாரதி எந்த நாளும் காப்போம் என்ற உறுதியுடன் விதி செய்கிறார். அதைத் தெளிவாகவும் கூறுகிறார்.

**"தனியொருவனுக் குணவிலையெனில் ஜகத்தினை அழித்திடுவோம்"**

என்பதுதான் அவர் செய்யும் விதி. ஒருவன் பசிக்க, தாங்கும் உலகு இருக்கத் தகுதியற்றது. தனி ஒருவனுக்கு உணவில்லாது இருப்பதற்குக் காரணம்...

**"மனிதருணவை மனிதர் பறிக்கும் வழக்கம்"**

தான். இதை மாற்றி, மனிதன் தன் மாண்புக்கும், உயர்வுக்கும் ஏற்ற ஒரு சமுதாயத்தை அமைக்க வேண்டும், அது முடியவில்லையானால், இந்தக் கொடுமையின் ஊற்றாக அமைந்த வையம் அழிந்தால், அதனால் எதுவும் கெட்டு விடாது என்பது அவர் வாதம். தனி ஒருவனுக்குணவிலை யென்ற நிலை ஏற்பட்டால், இந்த வையமே அழியத்தக்கது எனத் தமது உள்ள உணர்வுகளை வெளியிட்டார் என்றாலும் அமைதியான சூழ்நிலைகளில் இன்றைய நிலையை மாற்றுவதற்கான வழிகளையும் எண்ணுகிறார்.

வாழையடி வாழையென வந்த மரபுகளை மதித்தவர் பாரதி. இந்திய மண்ணில் மகுடம் பூண்டு வல்லரசாக விளங்கிய மன்னர் பரம்பரைகளை மனம் விட்டுப் பாராட்டுகிறார்.

தவத்தாலும், தகுதியாலும் உண்மைகளாயிரம்கண்ட உத்தமர்தம் தத்துவக் கருத்துகளையும், கள்ளையும், தீயையும். கனியையும், மதுவையும் சேர்த்துக் காவியம் படைத்த மகா கவிகளையும், அவர்கள் காவியங்களில் உருவாக்கப்பட்ட வீரர்களையும், காவியத் தலைவிகளையும் மனமாரப் போற்றுகிறார்பாரதி.

**“கம்பன் என்றொரு மானிடன வாழ்ந்ததும்**

**காளிதாசன் கவிதை புனைந்ததும்**

**உம்பர் வானத்துக் கோளையும் மீனையும்**

**உவந்தளந்ததோர் பாஸ்கரன் மாட்சியும்**

**நம்பருந்திறலோடொரு பாணினி**

**ஞாலமீதில் இலக்கணங் கண்டதும்**

**……………………………….**

பற்றிப் பூரிப்படைகிறார்.

எனவே, பாரதி மாற்றத்தை விழைகிறார்; புதுமையை வரவேற்கிறார். இருக்கும் வையத்தை மாற்ற வேண்டும். அதைப் புதுமையுறச் செய்ய வேண்டும் இந்த உலகு இதுவரை காணாத, ஒரு புதிய சமுதாயத்தைப் படைக்க வேண்டும். அங்கு,

**எல்லாரும் ஓர்நிறை எல்லாரும் ஓர்விலை.**

அதைவிட முக்கியமாக, அந்தச் சமுதாயத்தில்,"மனிதர் உணவை மனிதர் பறிக்கும் வழக்க" இல்லை. அதையும் தாண்டி, பண்பாட்டின் எல்லைக்கே இலக்கணம் வகுத்தது போல, அந்தச் சமுதாயத்தில்.

**'மனிதர் நோக, மனிதர் பார்க்கும் வாழ்க்கை'**

இல்லை. சமத்துவத்தையும், ஒருவரை ஒருவர் சுரண்டாத நிலைமையையும் ஓரளவு சட்டத்தின் துணை கொண்டு. ஆட்சிமுறைகளின் அமைப்பின் மூலம் உருவாக்கிவிடக் கூடும். ஆனால் ஒருவர் நோக, மற்றொருவர் பார்க்காத நிலையை உருவாக்கச் சட்டமும், அரசியலமைப்பும் மட்டும் போதா; மன வளம் மிக்க மானிட சமுதாயம் உருவாக வேண்டும். அந்தச் சமுதாயம் இன்று இல்லை. அது அமைந்தால் அது உண்மையிலேயே 'ஒப்பிலாத சமுதாயம்" தான். அதை உருவாக்கிய பெருமை பாரதத்திற்கு வேண்டுமென ஆசைப்படுகிறது பாரதியின் பற்றுள்ளம்

## மனிதர் தம்மை அமரர்களாக்குவோம்

'செத்த பிறகு சிவலோகம், வைகுந்தம் சேர்ந்திடலாமென்றே எண்ணியிருப்பார். பித்த மனிதர் அவர் சொலும் சாத்திரம் பேயுரையாம் என்று இங்கு ஊதேடா சங்கம், என்று கூறிய பாரதி, 'இத்தரை மீதினிலே யிந்த நாளினில் இப்பொழுதே முக்தி சேர்ந்திட நாடிச் சுத்த அறிவு நிலையிற் களிப்பவர் தூயவராக மனிதனைக் காண்கிறார்.

தான் சார்ந்த மதமாகிய இந்து மதக் கடவுள்கள் பலரையும் வணங்கிப் பாடுவதும், அவர்கள் பால், பண்டை மரபிற்கேற்பப் பல்வகை வரங்கள் கேட்பதும்,வாழையடி வாழையாக வந்திருக்கும் நம்பிக்கைகளின் அடிப்படையில் விண்ணவர். மற்றும் சுவர்க்கம் பற்றிப் பேசுவதும் பாரதியின் பாடல்களில் பரவலாகக் காணப்படுகின்றன என்றாலும், இவையனைத்தையும் கடந்து நிற்கும் இரு கூறுபாடுகள்

குறிப்பிடத்தக்கன:

1. மனிதனின் ஆற்றலில் பாரதிக்கு இருந்த அளவு கடந்த நம்பிக்கை
2. மனிதன் வளர்ந்து, உயர்ந்து, தானே அமர நிலை அடையக் கூடியவன் என்ற அவரது எண்ணம்

அறிவியல் வளர்ச்சி, மனிதனின் ஆற்றலில் அளவிறந்த நம்பிக்கையை உருவாக்கியிருக்கிறது. நிலமும் நீரும் தான் வளங்கள் என்றிருந்த நிலையிலிருந்து வளர்ந்து, கனி வளங்களும், தொழிலும், தொழில்நுட்பமும் எண்ணெய் வளமும் கண்டு, அறிவியலும், தொழிலும் தனது வளர்ச்சிக்குப் பயன்படும் தலைசிறந்த கருவி என்று உணர்ந்த மனிதன் இன்று, கல்வி எல்லா வளங்களும் தரும் தகுதி வாய்ந்தது என்ற நிலையை எட்டிக் கொண்டிருக்கிறான். கனவுகள் கனவுகளாகவே இருந்த காலகட்டம் மாறிக் கனவெனக் காண்பவையும் கைப்படல் இயலும் என்ற சூழ்நிலை உருவாகி வருகிறது. "அறிவுடையார் எல்லாமுடையார்" என்று 2000 ஆண்டுகட்கு முன்பு வள்ளுவர் கூறினார். 'அறிவே ஆற்றல்" (Knowledge is Power) என்று 17 -வது நூற்றாண்டில் பேகன் கூறினார். அன்றைய நிலையில் தீர்க்கதரிசனம் (Prophetic Statement) என்று வேண்டுமானால் கூறலாமே தவிர, முழுமையான நடைமுறை உண்மைகள் அல்ல. ஆனால் இன்று அது உண்மை என்னும் நிலை உருவாகி வருகிறது.

மனிதனுக்கு ஆசைகள் வேண்டும். அவை உயர்ந்தவை யாகவும், பெரியவையாகவும் இருக்க வேண்டும். அவை வலியவையாகவும், உடலோடும் உயிரோடும் ஒன்றி மனிதனைச் செயலுக்குச் செலுத்துவனவாகவும் இருக்க வேண்டும். இயற்கை வளங்களில் வறியவர்களாக இருக்கின்ற மக்கள் வாழ்வில் உயர வழி உண்டு, ஆனால் ஆசைகளிலும் வறியவர்களாக இருக்கும் மக்கட்கு எதிர்காலமில்லை.

**"கண்ணில் தெரியும் பொருளினைக் கைகள்**

**கவர்ந்திட மாட்டா வோ-அட**

**மண்ணில் தெரியுது வானம் அது நம்**

**வசப்படலாகாதோ"**

என்று ஏங்கியது பாரதி உள்ளம். பாரதியின் கற்பனையில் மனிதனுக்கு அறிவுரை கூற வந்த, சிட்டுக்குருவி கூட, அவனைப் பார்த்து ;

**"விடுதலையைப் பெறடா; நீ விண்ணவர் நிலை பெறடா"**

என்று கூறுகிறது. விண்ணவர் நிலையினின்றும் குறைந்த தாழ்ந்த எந்த ஒரு நிலையும் பாரதிக்குச் சம்மதமில்லை. தமது வேண்டுதலிலும் பாரதி.

**"மண்பயனுற வேண்டும், வானக மிங்கு தென்பட வேண்டும்"**

எனக் கேட்கிறார்.

பிறந்தோம். வளர்ந்தோம்,பெற்றோம், வளர்த்தோம். தளர்ந்தோம்,மறைந்தோம் என்ற சங்கிலித் தொடரில் தமது வாழ்க்கையைக் கட்டுப்படுத்திக் கொண்டவர்களை, வேடிக்கை மனிதர் என்கிறார் பாரதி.

**"தேடிச் சோறுநிதம் தின்று, பல**

**சின்னஞ் சிறுகதைகள் பேசி, மனம்**

**வாடித் துன்பம்மிக உழன்று, பிறர்**

**வாடப்பல செயல்கள் புரிந்து, நரை**

**கூடிக் கிழப்பருவம் எய்திக் கொடும்**

**கூற்றுக் கிரையெனப் பின் மாயும்**

**வேடிக்கை மனிதயை போலே நானும்**

**வீழ்வே னென்று நினைத் தாயோ"**

என்கிறார். அவர் விழையும் வெற்றிகள் சாதாரண வெற்றிகள் அல்ல. அவர் எண்ணும் வளர்ச்சி, நாள்தோறும் காணும் ஒன்றன்று. மனிதர் உயர்ந்து, வளர்ந்து, அமரராக வேண்டுகிறார். ஏதோ ஒரு அடிகளார், ஒரு மகாத்மா மட்டும் அந்நிலையை அடையும் மார்க்கத்தை அவர் தேடவில்லை.

**"எல்லாரும் அமரநிலை எய்தும் நல்வழியை**

**இந்தியா உலகிற் களிக்கும்-நம்**

**இந்தியா உலகிற் களிக்கும்"**

அது என்கிறார் பாரதியின் உலகம் மக்களுலகம். மன்னருலுகன்று. மதகுருக்கள் உலகன்று. உயர்வுப் பாதை என்றால் அது அனைவரும் செல்லும் பாதையாக இருக்க வேண்டும்.

அமரநிலை என்றால் என்ன? அமரர்கள் யார்? அவர்கள் இருக்கிறார்களா? எங்கு இருக்கிறார்கள் என்று ஆய்வதன்று இங்கு நம் பணி. அமர நிலை என்பதை, மனித வளர்ச்சியின் எல்லையாக, அவனுக்கு எட்டியும் எட்டாத தொலைவிலுள்ள பெருமை வாய்ந்த உயர் நிலையாக நாம் எண்ணலாம். அந்த உயர் நிலையைப் பாரம்பரியமாக அமரர்கள் அனுபவித்து வருவதாக நமது புராணங்கள் பேசுகின்றன. அவர்கள் நமக்குச் சமமானவர்கள்; நம்மில் உயர்ந்தவர்கள் அல்லர் என்ற நிலையை நாம் அடைய வேண்டுமென விரும்புகிறார் பாரதி; அடைந்து விட்டதாகவே நினைக்கிறார்.

**"தூண்டுமின்ப வாடைவீசு துய்ய தேன்கடல்**

வேண்டும். அதனால் 'நீண்ட மகிழ்ச்சி மூண்டு விளைய நிலைத்திடும் இன்பம் அனைத்தும் பெற வேண்டும் எனவிரும்புகிறார்.

மனிதச் சமுதாயம் உருப்பெற்ற காலந்தொட்டு, மனிதன் சிந்திக்கத் தொடங்கிய நாளிலிருந்து. அவனது கனவுகள், ஆசைகள், இனம் கண்டு கொள்ள முடியாத ஏதோ ஒரு உன்னத நிலையைக் கற்பனை செய்திருக்கின்றன. அது எட்டாத தூரத்திலிருப்பதாகவும், அதைப் பிடிப்பதே நம் இறுதி முயற்சி என்பது போலவும் எண்ணி எழுதி வந்திருக்கிறோம். இந்த ஆசையும், கனவும் கிட்டத்தட்ட எல்லாச் சமுதாயத்திற்கும் பொது. மனித உள்ளத்தில் கொழுந்து விட்டெரியும் இந்தக் கூறுபாடு நமது முயற்சிக்குத் தூண்டுகோல்; நம் வளர்ச்சிக்கு வித்து, மனிதன் இன்பங்களை விழைபவன். உண்டு, குலவி, உறங்கி மகிழ்பவன். என்றாலும் அவனது யாத்திரையின் குறிக்கோள் அதுவன்று. அவன் ஏற்றத்தை நாடுபவன்.

**இன்பத்தை நாடி யலையவில்லை; மனம்**

**ஏற்றத்தை எண்ணியே ஏங்கு தடா**

என்பது மானிடர் குறிக்கோளின் படப்பிடிப்பு. இந்த ஏற்றம் என்பது என்ன என்ற கேள்வி எழுகிறது. தனது ஆசைகட்கு உருவம் கொடுக்க அவன் ஒரு கற்பனை உலகைப் படைத்தான். அது எட்டாத தூரத்தில் எங்கோ இருப்பதாகவும் உருவாக்கினான். அது இந்த வாழ்வில் இயலாத அளவிற்கு ஏற்றம் பெற்றது. எனவே அது இறந்தபின் அடைவதாக இயற்றப் பெற்றது. பாரம்பரிய அடிப்படை மேல் பாரதி நின்றாலும், பண்டைய நம்பிக்கைகள் பலவற்றிற்கு இயைந்த மொழியை அவர் பயன்படுத்தினார் என்றாலும், அந்த வரம்புக்குள் அவர் நின்று விடவில்லை. அவர் பார்வை, மரபு வழி வந்த வரம்புகள்,மத சம்பிரதாயங்கள் விதித்த தடைகள் அனைத்தையும் தாண்டி நின்றது. அதுதான் அவரது மகத்தான பரிமாணம். அவரை கவியாக்கிய கூறுபாடு. சீர்திருத்தக்காரரும், பகுத்தறிவுவாதியும், பொது உடைமையாளரும், புதுமை வாதிகளும் ஒருங்கே அவரைப் போற்றுவதற்குக் காரணமாயிருப்பது அந்த அணுகுமுறைதான்; அவரது அறிவியல் பார்வைதான். அவரது உள்ள ஒளி அறிவியலையும் கடந்த சூழ்நிலையில் நின்றிருக்கலாம். நாம் இங்குக் குறிப்பிடுவது அவரது அணுகுமுறையை மட்டுமே. பாரதி, அமர நிலை எங்கோ இருப்பது; எப்பொழுதோ பெறுவது; யாரோ சிலருக்கு இயல்வது என்ற மரபை ஏற்கவில்லை. எல்லோருக்கும் வாய்க்க வேண்டும், இந்த மண்ணில் வாய்க்க வேண்டும் என்றார். அவர் பார்வையின் உயர்வை அங்குக் காண்கிறோம்.

## வானியல் அறிவு

சூரியக் குடும்பத்தையும், பால்வெளிவீதியையும் (Milkyway) ஆராயும் அறிவை வானியல் அறிவு என்பர். இந்தியர்கள் பழங்காலம் தொட்டே வானியல் அறிவுடையவர்களாக விளங்கியதை வேதங்களும், உபநிடதங்களும் எடுத்துரைக்கின்றன. தமிழர்களும் வானியலில் மிகச் சிறந்த அறிவு பெற்றிருந்தனர் என்பதைச் சங்க இலக்கியங்கள் நிலை நாட்டுகின்றன. காலந்தோறும் எழுந்த தமிழ் இலக்கியங்கள் தமிழர்தம் வானியல் அறிவை, வானவெளியை ஆராய்ந்த விதத்தை எடுத்துரைக்கின்றன. பாரதியும் கவியில் வல்லவராக இருப்பதோடு வானியல் அறிவு பெற்றவராகவும் விளங்கியுள்ளார் என்பதை அவர்தம் படைப்புகள் எடுத்துரைக்கின்றன.

## அண்டவெளியின் தன்மை

இந்த உலகம் பஞ்ச பூதங்களால் ஆனது. ஆனால் பால்வெளிவீதியாகிய அண்ட பகிரண்டம் ஒளி, ஆகாயம் என்ற இரண்டை மட்டுமே கொண்டிருக்கிறது. இதனை பாரதி தமது வசனகவிதைகள் வழி எடுத்துரைக்கிறார். கல்பனா சாவ்லா, சுனிதா வில்லியம்ஸ் என்ற இரண்டு இந்திய வம்சாவளி விஞ்ஞானிகள் விண்ணில் நிலைநிறுத்தப்பட்ட ஆய்வுக் கூடத்திலிருந்து மீண்டும் பூமிக்கு வர ஏற்பட்ட பிரச்சினைகள் நாடறிந்ததே. திரும்பி வந்த விண்வெளி ஓடம் பூமியின் மேற்பகுதியில் உள்ள காற்றுப் பகுதிக்குள் நுழைந்தவுடன் ஏற்பட்ட உராய்வினால் தீப்பிடித்ததால் கல்பனா சாவ்லா என்ற இந்திய விஞ்ஞானி மரணமடைந்தார். சுனிதா வில்லியம்ஸ் திரும்பி வரவேண்டிய விண்வெளி ஓடத்திலும் இத்தகு பிரச்சினைகள் ஏற்படுமோ என்றஐயமும் பயமும் அமெரிக்கர்களையும் இந்தியர்களையும் மட்டுமல்ல, உலகமக்கள் அனைவரிடமும் காணப்பட்டதை நாம் அறிவோம். கடவுள் புண்ணியத்தால் எந்தவித அசம்பாவிதமும் இல்லாமல் சுனிதா வில்லியம்ஸ் தரை இறங்கியதை உலகமே கொண்டாடியது. இதன் வழி ஒளி ஆகாயம் என்ற இரண்டு பூதங்களைக் கொண்ட பரவெளியிலிருந்து ஐம்பூதங்களைக் கொண்ட பூமிக்குத் திரும்ப வேண்டுமென்றால் காற்று மண்டலத்தைக் கடந்துதான் வரவேண்டும் என்பதை இன்று யாவரும் அறிந்துள்ளனர். அதற்கு இன்றைய கால தொழில்நுட்பங்களாகிய தொலைக்காட்சி, செயற்கைக்கோள், இணையதளம் போன்றவையே காரணங்களாகும். ஆனால், இத்தகைய எந்த தொழில்நுட்பமும் கண்டுபிடிக்கப்படாத காலத்தில் வாழ்ந்த பாரதி இதனை அறிந்துள்ளார். மிகச் சிறந்த வசன கவிதை வழி எல்லோருக்கும் புரியும் வகையில் அக்கருத்தை எடுத்துரைத்துள்ளார்.

வானவெளி என்னும் பெண்ணை ஒளியெனும் தேவன் மணந்திருக்கிறான் அவர்களுடைய கூட்டம் இனிது இதனை காற்றுத் தேவன் கண்டான்காற்று வலிமையுடையவன் இவன் கலக்க வானவெளியைக் விரும்பினான் ஒளியை விரும்புவது போல வானவெளி இவனை விரும்பவில்லை இவன் தனது பெருமையை ஊதிப் பறையடிக்கின்றான் வெளியும் ஒளியும் இரண்டு உயிர்கள் கலப்பதுப்பொல் கலந்தனகாற்றுத் தேவன் பொறாமை கொண்டான் அவன் அமைதியின்றி உழலுகின்றான் அவன் சீறுகின்றான். புடைக்கின்றான். வலிமையுடையவன் குமுறுகின்றான். ஓலமிடுகின்றான் எழுகின்றான். நிலையின்றிக் கலங்குகின்றான், வெளியும் ஒளியும் மோனத்தில் கலந்து நகை செய்கின்றன. காற்றுத் தேவன் அவன் புகழ் பெரிது. அப்புகழ் நன்று. ஆனால் வானவெளியும் ஒளியும் அவனிலும் சிறந்தன. அவை மோனத்திலே

கலந்து சித்தம் இன்புறுவன அவை வெற்றி யுடையன ஞாயிறே, நீதான் ஒளித் தெய்வம் நின்னையே வெளிப்பெண் நன்கு காதல் செய்கின்றாள். உங்கள் கூட்டம் மிக இனிது. நீவிர் வாழ்க' என்ற பாரதியின் வசன கவிதை வரிகள் பூமியின் மேற்பரப்பில் காற்றும், அது புகமுடியாத உயரத்தில் வானமும், ஒளியும் இருப்பதைக் கவிதை நயத்துடன் எடுத்தியம்புகின்றன. அண்டபகிரண்டத்தில் காற்று இல்லை என்ற வானவியல் தன்மையை பாரதி உணர்ந்திருந்தான் என்பதை இதன் வழி அறிந்து கொள்ள முடிகிறது.

## சூரிய குடும்பம்

சங்கப் புலவர்களும் அவர்களுக்குப் பின் வந்த தமிழ் இலக்கியவாதிகளும் சூரிய குடும்பம் என்றால் சூரியன், சந்திரன். புதன், சுக்கிரன், செவ்வாய், வியாழன், சனி, ராகு, கேது என்ற ஒன்பதைக் குறிக்கின்றனர் தொலைநோக்கியைக் கண்டுபிடித்த பின்புதான் யுரேனஸ், நெப்டியூன் என்ற இரண்டு கோள்களையும் சூரிய குடும்பத்தின் கோள்களாக ஐரோப்பியர் கொண்டனர். பாரதியும் ஐரோப்பியர்களின் கருத்துகளை ஏற்றுக் கொண்டார் என்பதை**“ஞாயிறே நின்முகத்தைப் பார்த்த பொருளெல்லாம் ஒளி பெறுகின்றன. பூமி, சந்திரன், செவ்வாய், புதன், சனி, வெள்ளி, வியாழன், யுரேனஸ், வீடுகள் நெப்டியூன் முதலியன பல நூறு இவையெல்லாம் நின்கதிர்பட்ட மாத்திரத்திலே ஒளியுற நகைசெய்கின்றன தீப்பந்திலிருந்து பொறிகள் வீசுவது போல, இவையெல்லாம் ஞாயிற்றிலிருந்து வெடித்து வெளிப்பட்டனவென்பர்”** என்ற வசன கவிதையின் பாடல் வரிகள் உணர்த்துகின்றன. சூரிய குடும்பத்தில் உள்ள கோள்கள் சூரியன் ஒளிபட்டுத்தான் வெளியே தெரிகின்றன என்பதும், சூரியனிலிருந்து வெடித்து வெளிப்பட்டவை என மேனாட்டார் கூறிய செய்திகளையும் இவ்வரிகள் வழி எடுத்துரைக்கிறார். மேலும் சூரிய குடும்பத்தைச் சார்ந்த கோள்கள் ஒவ்வொன்றும் சூரியனின் ஈர்ப்பு விசை காரணமாக தங்களது வரைகடவாது சுழல்கின்றன என்ற அறிவியல் செய்தியைச் செவ்வாய் புதன் முதலிய பெண்கள் ஞாயிற்றை வட்டமிடுகின்றன. இவை தமது தந்தை மீது காதல் செலுத்துகின்றன. அவன் மந்திரத்திலே கட்டுண்டு வரை கடவாது சுழல்கின்றன அவனுடைய சக்தியெல்லையை என்றும் கடந்து செல்ல மாட்டா அவன் எப்போதும் இவற்றை நோக்கியே இருக்கிறான்' என்ற அடிகள் வழி எடுத்துரைக்கிறார்.

## தூமகேது

வானத்தில் அதிகாலைப் பொழுதில் தோன்றும் வால்நட்சத்திரத்தைத் தூமகேது என்று அழைப்பர். வால் நட்சத்திரம் வானத்தில் தோன்றினால் நாட்டில் மிகப் பெரிய கேடு நிகழும் எனக் கூறுவர். இந்த வால் நட்சத்திரம் எவ்வாறு தோன்றுகிறது? அதன் தன்மைகள் என்ன? அதனால் விளையும் செயல்கள் என்னென்ன என்பதை ‘சாதாரண வருஷத்து தூமகேது’ என்ற பாடல் வழி பாரதி எடுத்துரைக்கிறார்.

தினை என்பது மிகவும் சிறிய தானியம். பனை என்பது மிக உயர்ந்த மரம். ஒரு தினையின் மீது பனை நிற்பது போன்று ஒரு சிறிய விண்மீன் மிகப் பெரிய ஒளி மிகுந்த வாலினைக் கொண்டிருக்கும் என்பதோடு அது கீழ்த்திசையில் இருக்கின்ற வெள்ளி மீனோடுதோன்றும் என்றும் கூறுகிறார் மேலும் இந்த ஒளி மிகுந்த வால் வாயு நிறைந்தது என்பதை ‘எண்ணில் பல கோடி யோசனை யெல்லை எண்ணிலா மென்மை யின்றதோர் வாயுவால் புனைந்த நன்னெடு வால் போவதென்கிறார்’ (சாதாரண வருஷத்து தூமகேது) என்ற வரிகள் வழி எடுத்துரைக்கிறார். இந்தச் செய்தியைப் பாரத நாட்டு பழைய நூல்கள் பல ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்பே கூறியுள்ளன. ஆனால், இன்றைய காலத்தில் மேனாட்டார்தான் இதன் தன்மையை அறிந்துரைத்ததாக பாரத நாட்டினர் நம்புகின்றனர் எனக் கூறும் பாரதி இவ்வால் நட்சத்திரம் 75 ஆண்டுகளுக்கு ஒரு முறை வரும் என அதன் வரவை எடுத்துரைக்கிறார். சாதாரண வருஷத்தில் வந்த தூமகேதுவால் கேடுகள் விளையாது பல நன்மைகள் விளையும் என வானியல் அறிஞர்கள் கூறியதை அடிப்படையாகக் கொண்டு. பாரதி தூமகேதுவிடம் தொல்புவியதனைத் துயர்கடல் ஆழ்த்துவாயா? புவியினைப் புனிதமாகப் புனைவதற்கா? எண்ணிலா புதுமைகள் விளையும் என்கிறார்களே அது உண்மையா? நின் வரவால் பலவும் விளையுமா? என்றெல்லாம் கேட்டு தூமகேது வருவதால் நாட்டில் ஏற்படும் மாற்றங்கள் எவையெவை என்பதை எடுத்துரைக்கிறார்.

### சக்தி அழிவில்லாதது

சக்தியை அழிக்க முடியாது. ஒரு சக்தி மற்றொரு சக்தியாக மாறும் என்பது அறிவியல் கண்டுபிடிப்புக்களுள் ஒன்றாகும். இந்த அறிவியல் செய்தியைப் பாரதியார் அவருக்கே உரிய பாணியில் வசன கவிதையாக வெளியிட்டுள்ளார். ‘உடலைக் கட்டு உயிரைக் கட்டலாம். உள்ளத்தைக் கட்டு சக்தியைக் கட்டலாம். அறிந்த சக்திக்குக் கட்டுப்படுவதிலே வருத்தமில்லை’ எனக்கூறிய பின் அதனை விளக்க தலையணையைச்

சான்றாகக் கூறுகிறார். ஒரு பஞ்சுத் தலையணைக்கு வடிவம், நியமம் இருக்கிறது. ஏதோ ஒரு சக்தி அதன் பின்னே நின்று காத்துக் கொண்டிருக்கிறது. காலங்கள் மாற அந்தத் தலையணையின் வடிவத்தைப் புதுப்பித்துக் கொண்டே இருந்தால்அந்த வடிவத்தில் சக்தி நீடித்து நிற்கும். புதுப்பிக்கவில்லை என்றால் அது அழுக்குத் தலையணை ஓட்டைத் தலையணையாக மாறுகிறது. அப்பொழுது அந்தத் தலையணையில் உள்ள பஞ்சை எடுத்துக்கொண்டு மேலுறையைத் தூக்கி எறிந்துவிட்டு புதிய துணியில் அப்பஞ்சை அடைக்கும்போது புதிய வடிவம் வந்துவிடுகிறது. இந்தச் சான்றை எடுத்துரைத்த பாரதி 'வடிவத்தைக் காத்தலால் சக்தியைக் காக்கலாம். அதாவது சக்தியை அவ்வடிவத்திலே காக்கலாம். வடிவம் மாறினும் சக்தி மாறுவதில்லை. எங்கும் எதனிலும், எப்போதும் எல்லாவிதத் தொழில்களும் காட்டுவது சக்தி' என்று கூறுகிறார். இதன் வழி சக்தியை அழிக்க முடியாது. ஆனால், அச்சக்தி வடிவத்தை மாற்றிக் கொண்டிருக்கும் என்ற அறிவியல் கருத்தை மிகச் சிறந்த சான்று வாயிலாக எடுத்துரைத்துள்ளதை முடிகிறது அறிந்து கொள்ளமுடிகிறது.

சக்தி எது என்பதை 'அனந்தசக்தி' என்ற கட்டுரையில் பாரதியார் விளக்குகிறார். "எறும்பு இறந்துபோன புழுவை இழுத்துச் செல்கிறது. எதனால்? சக்தியினால் தூமகேது எழுபத்தைந்து வருஷத்தில் ஒரு மண்டலமாகத் தன்னை சுற்றிவரும்படி சூரிய கோளம் நியமித்திருக்கிறது எதனால்? சக்தியால்" எனக்கூறி சக்திக்கு விளக்கம் தருகிறார்

## பூமியின் சுழற்சி

சக்திதான் உலக நிகழ்வுகள் அனைத்திற்கும் காரணம். சக்திக்கடலிலே ஞாயிறு ஓர் நுரை சக்தி வெள்ளத்திலே ஞாயிறு ஒரு குமிழி சக்திப் பொய்கையிலே ஞாயிறு ஒரு மலர். சக்திக் கூத்திலே ஒளி ஒரு தாளம் மகாசக்தி காற்றைக் கொண்டுதான் உயிர் விளையாட்டு விளையாடுகிறாள்' என்றெல்லாம் ஞாயிறையும், காற்றையும் சக்தியின் படைப்புகள் என்று கூறும் பாரதியார் உலகச் சுழற்சிக்கும் இச்சக்தியே காரணம் என்கிறார். பூமி தன்னைத்தானே சுற்றிக்கொண்டு சூரியனைச் சுற்றி வருகிறது இச்சுழற்சிக்குப் பூமியின் ஈர்ப்பு சக்திதான் காரணம் என்ற அறிவியல் செய்தியை மிக அழகாக தமது வசன கவிதையில் பாரதி எடுத்துரைத்துள்ளார். பூமியின் மேற்பகுதியில் காணப்படும் பள்ளங்களில் கடல் நீர் இருக்கிறது. பூமி வேகமாகச் சுழலும் போது இந்தத் தண்ணீர் கீழே

கவிழுவதில்லை. வீடுகள், மலைகள் புரளவில்லை. இதற்குக் காரணம் ஆகர்ஷண சக்திதான் என்கிறார் பாரதி. இதனை. 'பராசக்தியின் ஆணை அவள் மண்ணிலே ஆகர்ஷணத் திறமையை நிறுத்தினாள் அது பொருள்களை நிலைப்படுத்துகிறது மலை நமது தலைமேலே கவிழவில்லை.கடல் புரளவில்லை. ஊர்கள் கலைந்து போகவில்லை. உலகம் எல்லா வகையிலும் இயல் பெறுகின்றது இஃதெல்லாம் அவளுடைய திருவருள்' (வசன கவிதை)என்ற பாடல் வரிகள் உணர்த்துகின்றன. ஆகர்ஷண சக்தியைப் போற்றிய பாரதி உயிர்வாழ்வதற்கு இன்றியமையாத காற்றின் தன்மையையும் மிக அழகாக எடுத்துரைத்துள்ளார்.

## காற்றின் இன்றியமையாமை

உயிர்கள் வாழ காற்று அவசியம். இக்காற்றை வாயு என்றும் அழைப்பர். அறிவியல் யுகத்தில் சந்திரனுக்கும், செவ்வாய்க்கும். வியாழனுக்கும் செயற்கைக் கோள்களை அனுப்பி அங்கு நம்மைப் போன்ற உயிர்ப்பிராணிகள் எவையேனும் தென்படுகிறதா விஞ்ஞானிகள் அறிந்துகொள்ள முயற்சிக்கின்றனர். சந்திரனிலும் வியாழனிலும் காற்று இல்லை. எனவே, உயிர்ப்பிராணிகள் இல்லை என்பதைக் கண்டறிந்த விஞ்ஞானிகள் தற்பொழுது செவ்வாய் கிரகத்தை ஆராய செயற்கைக் கோள்களை அனுப்பியுள்ளனர். இதன் வழி பூமியில் மட்டுமே உயிர்கள் வாழ்வதற்குத் தேவையான பிராணவாயு இருக்கிறது என்பதை அறியமுடிகிறது. பாரதியும் காற்று என்பது எது? அதன் இயல்பு என்ன? அதன் வகைகள் யாவை போன்ற பல கேள்விகளைக் கேட்டு அதற்கு அறிவியல் பூர்வமான பதிலையும் தந்துள்ளார். உயிருடையன எல்லாம் காற்றின் மக்கள் என்று வேதங்கள் கூறிய செய்தியை அடிப்படையாகக் கொண்டு, 'உயிர் அதன் செய்கை பொருள், காற்று பூமித்தாய் உயிரோடிருக்கிறாள் அவளுடைய மூச்சே பூமியிலுள்ள காற்று காற்றே உயிர் எனக் காற்றை விளக்கிய பாரதி, இக்காற்றை உலக மக்கள் வாயுதெய்வம் ஏறிவரும் தேர் என அழைக்கிறார் என்றும் கூறுகிறார். இக்காற்றின் இயல்புகளை பனிக்கட்டியிலே சூடேற்றினால், நீராக மாறிவிடுகிறது நீரிலே சூடேற்றினால் 'வாயு' வாகிவிடுகிறது தங்கத்திலே சூடேற்றினால் திரவமாக உருகிவிடுகிறது அத் திரவத்திலே சூடேற்றினால் வாயுவாகின்றது இங்ஙனமே உலகத்துப் பொருள்களனைத்தையும் வாயு நிலைக்குக் கொண்டு வந்துவிடலாம் இந்த வாயு பௌதீகத்தூள் இதனை ஊர்ந்து வரும் சக்தியையே

நாம் காற்றுத் தேவனென்று வணங்குகிறோம்' என விளக்குகிறார். இக்காற்றுதான் மனிதனை இன்பமுடன் வாழவைக்கிறது. நம்மை நோயினின்றும் காக்கிறது. நல்ல மருந்தாக நமக்கு உயிராக, அமுதமாக இருக்கிறது. இது சக்தியின் குமரன் என்றும், காற்றை அதன் சிறப்பை எடுத்துரைக்கும் பாரதியார் நம் உடலில் இருக்கும் காற்றின் வகைகளையும் எடுத்துரைக்கிறார்.

நம் உடலில் இருக்கும் காற்றினைப் பத்தாகக் கூறுவர். உயிர்வளி, மலக்காற்று, தொழிற்காற்று, ஒலிக்காற்று, நிரவுக்காற்று, தும்மற் காற்று, விழிக்காற்று, கொட்டாவிக் காற்று, இமைக்காற்று, விங்கற் காற்று என அவற்றை அழைப்பர். இவற்றுள் உயிர்வளியைப் பிராணன் என்றும் மலக்காற்றை அபானன் என்றும், தொழிற் காற்றை வியானன் என்றும், ஒலிக்காற்றை உதானன் என்றும், நிரவுக்காற்றைச் சமானன் என்றும் அழைப்பர். பாரதி இக்காற்றின் பெயர்களை அறிந்திருக்கிறார். இதனை 'ப்ராண வாயுவைத் தொழுகின்றோம்; அவன் நம்மைக் காத்திடுக; அபாநனைத் தொழுகின்றோம். அவன் நம்மைக் காக்க; வ்யானனைத் தொழுகின்றோம். அவன் நம்மைக் காக்க, உதாநனைத் தொழுகின்றோம். அவன் நம்மைக் காக்க, ஸமாநனைத் தொழுகின்றோம். அவன் நம்மைக் காக்க, காற்றின் செயல்களை யெல்லாம் பரவுகின்றோம் உயிரை வணங்குகின்றோம். உயிர் வாழ்க! என்ற வரிகள்வழி அறியமுடிகின்றது. இக்காற்றே இவ்வையகத்தின் உயிர் என்பதை,'சந்திரன் சுழல்கின்றது. ஞாயிறு சுழல்கின்றது கோடி கோடி அதற்கப்பாலும் யோசனை கோடி கோடி அதற்கப்பாலும் தூரத்துக்கப்பாலும் சிதறிக் கிடக்கும் வானத்து மீன்களெல்லாம் ஓயாது சுழன்று கொண்டேதானிருக்கிறது' எனவே, இவ்வையகம் உயிருடையது, வையகத்தின் உயிரையே காற்றென்கிறோம் என்றவரிகளில் எடுத்துரைக்கிறார்.

சூரியன் கடலை வற்ற வைத்து இனிய மழையைத் தருகிறான். இம்மழையைப் பொழியும் மேகங்களைக் காற்றுதான் நம்மிடம் கொண்டு வந்து சேர்க்கிறது. எனவே, மழை பொழிவதற்கு ஞாயிறும் காற்றும் காரணங்களாகின்றன. காற்று வெம்மை மிகுந்த பிரதேசங்களில் உருவாகும் மேகங்களை வெம்மை குன்றிய பிரதேசங்களுக்குக் கொண்டு வந்து மழையைப் பொழிவிக்கிறது என்பது அறிவியல் செய்தியாகும். கடல் மட்டத்திற்கு மேல் உள்ள காற்றின் அழுத்தம் குறைந்தால் அதனைக் காற்றழுத்தம் என வானியலாளர்கள் கூறுவர். குறைந்த காற்றழுத்தம் மழையைக் கொண்டு வரும் இதனை

அவர்கள் காற்றுப்பள்ளம் என்று அழைக்கின்றனர். இதனையே இன்று குறைந்த காற்றழுத்த தாழ்வுநிலை என்று வானியலாளர்கள் கூறுகின்றனர். காற்றழுத்தம் மெதுவான சுழற்சி என்றால் புயல் என்பது அதிவேக சுழற்சியாகும். இத்தகைய பாரதி வெம்மை மிகுந்த பிரதேசங்களிலிருந்து வெம்மை குன்றிய அறிவியல் கருத்துக்களைப் பிரதேசங்களுக்குக் காற்று ஓடி வருகிறது அங்ஙனம் ஓடி வரும்போது காற்று மேகங்களையும் ஓட்டிக் கொண்டு வருகிறது; இவ்வண்ணம் நமக்கு வரும் மழை கடற் பாரிசங்களிலிருந்தேவருகின்றது. காற்றே உயிர்க்கடலிலிருந்து எங்களுக்கு நிறைய உயிர் மழை கொண்டு வா! உனக்குத் தூப தீபங்கள் ஏற்றி வைக்கிறோம்: எனக் காற்றை வணங்குகிறார். இங்குக் கடற்பாரிசம் என்று பாரதி குறிப்பிடுவது காற்றழுத்த தாழ்வுநிலையைத்தான். இன்று செயற்கைக் கோள்கள் வந்த பின்புதான் காற்றழுத்த தாழ்வு நிலையே மழைக்குக் காரணம் என்பதை நாம் அறிந்து கொள்கிறோம். எந்தவித தொழில்நுட்பமும் இல்லா அக்காலத்தில் வாழ்ந்த பாரதியார் பல நுட்பமான அறிவியல் கருத்துகளை அறிந்து வைத்துள்ளார் என்பதை அவரது வசன கவிதைகள் மிக அழகாக எடுத்துரைக்கின்றன.

**தொகுப்புரை**

மேனாடுகளில் ஏற்பட்ட தொழிற்புரட்சி, தொழில்நுட்பம், தமிழ்நாட்டிற்குள் வரவேண்டுமென்ற எண்ணமுடையவர் பாரதி.அவர் காலத்தில் காசியில் கூடிய காங்கிரஸ் மாநாட்டின் கருத்துகள் உடனே தமிழகத்திற்குத் தெரிய வானொலி என்ற மேனாட்டார் கண்டுபிடிப்பு தமிழகத்திற்கு வரவேண்டும் என்று கூறுகிறார். வசனகவிதைகள் அறிவியல் செய்திகளின்களஞ்சியமாகத்திகழ்கிறது எனில்மிகையன்று.வானியல் அறிவு மிக்கவராகப் பாரதி திகழ்ந்தார் என்பதை ஞாயிறு. சக்தி, கடல், காற்று எனும் தலைப்பில் உள்ள வசன கவிதைகள் நிரூபிக்கின்றன.வானியல் அறிவுடன் சோதிட அறிவு மிக்கவராகவும் பாரதி திகழ்ந்துள்ளார். சூரியன் இயங்கும் வானவெளியில் ஒளியும், வெளியும் மட்டுமே உண்டு காற்று கிடையாது என்பதை பாரதியார் அறிந்துள்ளார்.பூமியின் சுழற்சியில் கடல், மலை, வீடுகள் நிலை தடுமாறாது சக்தியே காரணம் என்கிறார். இருப்பதற்குக் காரணம் என்கிறார் சூரியனின் வெம்மையால் கடல்நீர் மேகமாகி காற்றின் உதவியால் மழையாகப் பொழிகிறது என்ற அறிவியல் கருத்தை அழகாக எடுத்துரைத்துள்ளார். சக்தியை அழிக்க முடியாது. ஒரு சக்தி மற்றொரு சக்தியாக மாறும் என்ற அறிவியல் உண்மையை எளிய உவமை வழி எடுத்துரைக்கும்ஆற்றல் பெற்றவர். தூமகேது 75 ஆண்டுகளுக்கு ஒரு முறை

தோன்றும் என்பதையும். அதன் வால்பகுதி வாயுக்கள் நிறைந்தது என்பதையும் பாரதி தமது கவிதைகள் கட்டுரைகள் வழி எடுத்துரைக்கிறார்.

**வினாக்கள்**

| வ.எண் | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | "பாரதியின் அறிவியல் பார்வை" நூலின் முக்கியத்துவம்என்ன? | K4 | CO5 | PO4 |
| 2 | மூடநம்பிக்கைகளை எதிர்த்தபாரதியின் அறிவியல் அணுகுமுறையை எடுத்துரைக்கவும். | K3 | CO2 | PO2 |
| 3 | பாரதியின் கல்விசார் கருத்துகளில் அறிவியல்மனப்பாங்கு எவ்வாறுபிரதிபலிக்கிறது? | K1 | CO2 | PO1 |
| 4 | பாரதி இயற்கை குறித்து கொண்டிருந்த அறிவியல் | | | |

| | | | | |
|---|---|---|---|---|
| | பார்வையை விளக்குக. | K4 | CO3 | PO2 |
| 5 | ‘பாரதியின்அறிவியல் பார்வை’ என்ற நூலில் பாரதியின் தேசபக்தி பாடல்களில் | K1 | CO3 | PO3 |

| வ.எண | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | பாரதியின் அறிவியல் பார்வை குறித்து விவரிக்க. | K4 | CO1 | PO4 |
| 2 | பாரதி இயற்கையின் மீது கொண்ட பற்றினை தொகுத்துரைக்க. | K3 | CO4 | PO5 |
| 3 | பாரதியின் அறிவியல் பார்வை என்ற நூலை திறனாய்வு செய்க. | k5 | CO5 | PO2 |
| 4 | பாரதியின் தேசப்பத்தி பாடல் கருத்துகளை கட்டுரைக்க | K3 | CO4 | PO1 |
| 5 | பாரதியின் பன்முகப் பார்வையை தொகுத்துரைக்க | K4 | CO3 | PO3 |

# அலகு 3

## சூழல் அறம் - சுப்ரபாரதிமணியன்

சுப்ரபாரதிமணியன் (ஆர்.பி.சுப்ரமணியன், 25 அக்டோபர் 1955, திருப்பூர்) தமிழக தமிழ் எழுத்தாளர் ஆவார். இவர் சிறுகதைகள், நாவல்கள், கட்டுரைகள், கவிதைகள் எனப் பலதளங்களிலும் முப்பது வருடங்களாக எழுதி வருபவர். அனைவராலும் அறியப்பட்டவர். இந்திய முன்னாள் குடியரசு தலைவர் வழங்கிய கதாவிருது, தமிழக அரசின் சிறந்த நாவல் ஆசிரியர் விருது உட்பட பல்வேறு விருதுகளையும், பரிசுகளையும் பெற்றவர். திருப்பூர்

பகுதியில் குழந்தைத் தொழிலாளர் ஒழிப்பு, பெண்களைச் சுரண்டும் சுமங்கலி திட்ட ஒழிப்பு, நொய்யலைப் பாதுகாத்தல் போன்ற பல்வேறு சமூகப் பிரச்சினைகளிலும் அக்கறை கொண்டவர். இவர் கனவு என்ற இலக்கிய இதழை 27 ஆண்டுகளாக நடத்திவருபவர். திருப்பூர் தாய்தமிழ் பள்ளியோடு இணைந்து பணியாற்றுபவர். தொலை பேசித்துறையில் உதவிக் கோட்ட பொறியாளராய் பணியாற்றியவர். இவரது 25 சிறுகதைகள் பல இந்திய மொழிகளிலும், ஆங்கிலம், ஹங்கேரி மொழிகளிலும் மொழிபெயர்க்கப் பட்டுள்ளன. இவரது முதல் சிறுகதை: சுதந்திர வீதிகள், விழிப்பு என்னும் இலக்கிய இதழில் 1978 இல் வெளிவந்தது.

## படைப்புகள்

இவர் நூற்றுக்கும் மேற்பட்ட படைப்பிலக்கியங்களைப் படைத்துள்ளார்.இவரதுமுதல் சிறுகதைத்தொகுப்பு அப்பா (1987) ஆகும்.இருள் இசை -1995, ஆழம்(1997), வழித்துணைகள் (1999), தொலைந்து போன கோப்புகள் -2004, ஓலைக்கீற்று – 2007, கூண்டும் வெளியும் (2009), சுப்ரபாரதிமணியனின் கதைகள் (2011), வேட்டை (2011), மாறுதடம் ஆகிய சிறுகதை தொகுப்புகளும் மாயாறு என்னும் கவிதைத் தெகுப்பும் வெளிவந்துள்ளன. இவர் ஏழு கட்டுரைத் தொகுப்புகளை வெளியிட்டுள்ளார். அவற்றுள் ஒன்றே சூழல் அறம் ஆகும்.நகரம் (1988, குமரி), காற்றில் அலையும் சிறகு (2005), வேறிடம் (2012, என்சிபிஎச்) ஆகியமூன்றுகுறுநாவல்களையும் 14 நாவல்களையும்படைத்துள்ளார். சாயத்திர, தறிநாடா, பிணங்களின்முகங்கள்ஆகியஇவரதுநாவல்கள்குறிப்பிடத்தக்கவை.

இவர்ஏழுதொகுப்புநூல்களையும்மூன்றுமொழிபெயர்ப்புநூல்களையும்ஒருநாடகநூலையும் வெளியிட்டுள்ளார். மூன்றுகுறும்படங்களைத்தயாரித்துதிரையிட்டுள்ளார்.

## விருதுகள்

இவர்பதினைந்துக்கும்மேற்பட்டவிருதுகளைப்பெற்றுள்ளார்.

சிறந்தசிறுகதையாளருக்கானகதாவிருதுஇந்தியக்குடியரசுதலைவரால் 1994

இல்வழங்கப்பெற்றது. தமிழகஅரசுஇவரதுசாயத்திரை நாவலுக்குச் சிறந்த நாவல் விருது வழங்கிச் சிறப்பு செய்தது. கு. சின்னப்பபாரதி அறக்கட்டளை(2011),திருப்பூர் தமிழ்ச்சங்கம், தமிழ்நாடு கலை, இலக்கியப் பெருமன்றம்,கோவை கஸ்தூரி சீனிவாசன் அறக்கட்டளை ஆகிய அறக்கட்டளைகளும் இவருக்கு விருதுகள் வழங்கியுள்ளன.கோவை லில்லி தேவசிகாமணி விருது (சிறந்த சிறுகதையாளருக்காக),தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க விருது (சிறந்த சிறுகதையாளருக்காக),திருப்பூர் முத்தமிழ்ச்சங்கம் கலைமாமணி விருது,கி.ரா.வின் கரிசில் விருது (கனவு சிற்றிதழுக்காக),ஜெயந்தன் படைப்பிலக்கிய விருது (நீர்த்துளி நாவலுக்காக), சேலம் எழுத்துக்களம் விருது (கனவு சிற்றிதழுக்காக -25 ஆண்டுகள் நிறைவிற்காக) போன்ற ஏராளமன விருதுகள் இவருக்குக் கிடைத்துள்ளன.

**சூழல் அறம் என்றால் என்ன?**

இது உலகளவில் அண்மைக்காலமாய் பேசப்படும் பேசு பொருளில் ஒன்று. இயற்கையைப் பயன்படுத்தும் போது காலநிலை மாற்றம், சுற்றுச்சூழல் பாதிப்புகள், பல்லுயிரின உறவுகள் பாதிப்படையாதிருத்தல் போன்றவற்றைக் கருத்தில் கொண்டு இயற்கையைப் பாதுகாப்பதற்கான ஒரு நெறிமுறையே சூழல்அறம் ஆகும். இது இயற்கையை நேசிப்பதையும் அதன் அழிவைத் தடுப்பதற்கான தனிநபர் மற்றும் சமூகத்தின் பொறுப்புகளையும் வலியுறுத்துகின்றது. இது இயற்கையை வெறும் ஒரு நுகர்வுப் பொருளாகப் பார்க்காமல் அது ஓர் உயிருள்ள அமைப்பு என்று கருதுகின்றது. காலநிலை மாற்றம், மாசுபாடு, பல்லுயிரின அழிப்பு போன்ற சிக்கல்களிலிருந்து விடுபடுவதற்கு இயற்கையைப் பாதுகாப்பதற்கான அறநெறிக் கோட்பாடுகளை இது முன்வைக்கின்றது. மனிதர்களின் செயல்களால் இயற்கை எவ்வாறு அழிக்கப்படுகின்றது என்பதையும் அதனை எவ்வாறு சரி செய்வது என்பதையும் புரிந்துகொள்ள உதவுகின்றது. மனிதனின் பேராற்றலும், பிறவற்றைக் கட்டுப்படுத்தும் ஆசையும் காடு, மலை, கடல்,

மணல் என்று எல்லாவற்றையும் சீரழிக்கிறது. உலகில் எல்லாவகை உயிரினங்களும் வாழ உரிமை உள்ளது. ஒவ்வொரு உயிரினமும் தனக்கானப் பணியைச் செய்து கொண்டிருக்கிறது என்ற புரிதலை உருவாக்குவது தவிர்க்க இயலாதது.

**சூழல் அறத்தின் இன்றியமையாமை**

1. காலநிலை மாற்றத்தை எதிர்ப்பது: புவிவெப்பமடைதல் மற்றும் காலநிலை மாற்றத்தின் ஆபத்துக்களை உணர்ந்து அவற்றைத் தடுக்க வேண்டியதன் தேவையை வலியுறுத்துகின்றது.

2. இயற்கையைப் பாதுகாத்தல்: காடுகள், ஆறுகள், கடல்கள்மற்றும் பல்லுயிர் பெருக்கத்தைப் பாதுகாப்பதற்கான பொறுப்பை மனிதர்களுக்கு உணர்த்துகிறது.

3. எதிர்காலத் தலைமுறையினரைக் கருத்தில் கொள்ளுதல்: நமது செயல்களின் விளைவுகள் எவ்வாறு எதிர்காலத் தலைமுறையினரை எவ்வாறு பாதிக்கும் என்பதைச் சிந்திக்கத் தூண்டுதல்

4. அறநெறிப் பார்வை: சுற்றுச் சூழலைப் பற்றி ஒரு நல்ல மற்றும் நேர்மையான பார்வையை வளர்ப்பது. நமது செயல்களை நெறிப்படுத்த உதவுகிறது.

**சூழல் அறம்**

சுப்ரபாரதிமணியனின் சூழல்அறம்என்றநூல் குப்பைகள், தொழிற்சாலைகளால் ஏற்படும் சுற்றுச்சூழல் சீர்கேடுகள் மற்றும் நீடித்த வளர்ச்சிக்குத் தேவையான சூழலியல் அறத்தைப் பற்றிப் பேசுகிறது.

சூழலியல் பற்றிய யோசிப்பில் இப்போது முன்நிற்பது தண்ணீர் வணிகப் பொருளாகிப் போனதும், தண்ணீரால் மூன்றாம் உலக யுத்தம் என்பதும்தான். “எல்லோருக்குமான தண்ணீர்” என்பது சுத்தமான குடிநீர் பயன்பாட்டை முன் நிறுத்துகிறது.தண்ணீரைக் கார்ப்பரேட் நிறுவனங்களின் கட்டுப்பாட்டில் கொண்டுவரும் உலகளவிலான ஏற்பாடுகள் பயமுறுத்தவே செய்கின்றன. “தண்ணீர் விற்பனைக்கல்ல” என்று தண்ணீரை ஒரு அடிப்படை உரிமையாகவும் கோரி பெரும் போராட்டங்கள் உலகம் முழுவதும் நடந்து வருகின்றன.

கார்ப்பரேட் நிறுவனங்கள் தாங்கள் முதலீடு செய்கிற பணத்திற்குப் பெரும் லாபம் சம்பாதிக்கலாம் என்பதோடு ஒதுங்கிக் கொள்ள வாய்ப்புகள் வந்திருக்கின்றன. கழிவுநீரைச் சுத்திகரிக்கும் தொழில் என்பது வளர்ந்து வருகிறது. கழிவுநீரைச் சுத்திகரித்துக் குடிப்பது பலநாடுகளில் அமலுக்கு வந்தாகிவிட்டது.இருபது ஆண்டுகளுக்கு முன் தகவல் தொழில்நுட்பத்துறை இருந்தது போல தண்ணீர் சார்ந்த விசயங்களில் கடுமையான ஒழுங்குமுறைகள் கோரப்பட்டுக் கொண்டிருக்கின்றன. எந்த வியாபாரத்திலும் அடிப்படை நேர்மை, அறம் எதிர்பார்க்கப்பட்ட காலங்கள் உண்டு. நுகர்வும், பேராசையும் விசுவரூபம் எடுத்திருக்கும் நவீன உலகில் சூழலைச் சிதைக்கிற "அறப்போராளிகள்" வியாபாரத்தில் பெருகிவிட்டார்கள்.

அழகான காடு. வியாபாரத்திற்குச் சென்ற தலைவன் தலைவியைக் காண அழகிய மணிகள் உள்ள தேரில் விரைந்து வருகிறான். வரும் வழியில் தேனை உறிஞ்சி உணவு உண்ண தேன் சிட்டுகள் அலைபாய்ந்து கொண்டிருக்கின்றன. தலைவனின் தேரின் மணிகள் எழுப்பும் சப்தம் இரைச்சலாகிவிடுகிறது. அதைக் கேட்டு பறவைகள் சிதறுகின்றன. தேனீக்கள் சிதறுகின்றன. தலைவன் தன் தேரோட்டியிடம் மணிகளின் நாக்குகளை எடுத்துவிடும்படி செய்கிறான். அவனின் விரைந்த பயணம் தொடர்கிறது.

அகநானூற்றில் இக்காட்சி, பாடல் ஒன்றில் இடம் பெற்றிருக்கிறது. தேன் சிட்டுகளுக்குக்கூட துன்பம் தரக்கூடாது என்கிறது இப்பாடல். இயற்கையை நேசிப்பதும், அதனுடன் இயல்பாக உறவாடுவதும் நல்ல வாழ்க்கைக்கு வழி வகுக்கும் என்று நமது இலக்கியங்கள் வலியுறுத்துகின்றன.மனிதனின் பேராற்றலும், பிறவற்றைக் கட்டுப்படுத்தும் ஆசையும் காடு, மலை, கடல், மணல் என்று எல்லாவற்றையும் சீரழிக்கிறது. உலகில் எல்லாவகை உயிரினங்களும் வாழ உரிமை உள்ளது. ஒவ்வொரு உயிரினமும் தனக்கானப் பணியைச் செய்து கொண்டிருக்கிறது. ஒரு சிறு பாக்டீரியாகூட தான் சார்ந்த வேறொரு நுண்ணுயிர்க்கு உணவையும் பாதுகாப்பையும் தரக்கூடியது. அனைத்து உயிர்களும் வாழ எதிர்நோக்கும் அறத்தைக் கொல்லுவதை, காடுகளை அழிப்பது, ஆறுகளை மாசுபடுத்துவது, சுற்றுச்சூழலைக் கெடுப்பதன் மூலம் மனிதன் செய்கிறான்.

உலகம் அழிவதென்னவோ சுற்றுச்சூழல் கேட்டினால்தான் என்று தோன்றுகிறது. பாரதி சொன்னதை இயற்கை மீதானக் காதலாகவும் வழிபாடாகவும் கடைபிடிக்கக்கூடியதாக மனதில் கொள்ளவேண்டியிருக்கிறது. எல்லா உயிர்களுக்குமான சமநிலை மிக முக்கியமாகும்.

**“மண் மீதுள்ள மக்கள் பறவைகள்**

**விலங்குகள் பூச்சிகள் புல் பூண்டு மரங்கள்**

**யாவும் என் வினையால் இடும்பே தீர்ந்தே**

**இன்பமுற்று அன்புடன் இணங்கி வாழ்ந்திட”**

தாவரங்களின் வழி அன்பைத் தனது தொழிலாக, மதமாக வரித்துக்கொண்ட இன்றைய சுற்றுச்சூழல் கேடுகள் அபாயச்சங்காக ஒலிக்கும் காலத்தில் சமூக மனிதனான எழுத்தாளர்கள் கைக்கொள்ள வேண்டியது அவசியமானது என்பதைத் கூர்ந்து கவனிக்கின்றபோது அவதானிக்க முடிகிறது. பட்டுப்பூச்சிகளைக் கொன்று பட்டாடை உடுத்துவதில் அவருக்கு எதிர்ப்பு இருந்திருக்கிறது. பட்டுப்பூச்சியோடு நில்லாது அவரது உயிரன்பு ஆட்டுக்குட்டியின் மீது விழுந்து அதை விற்க இழுத்துச் செல்லுபவனிடம் அதை விலை கொடுத்து வாங்கி அது கொலையாவதை தவிர்க்கிறார். அதை தன் வீட்டு வேலைக்கார அம்மாக்கண்ணுவுக்கு வளர்க்கச் சொல்லி பரிசாக அளித்தவர். கழுதைக்குட்டியை தோளில் வைத்து கொண்டாடியக் காட்சி பல இடங்களில் காட்டப்பட்டிருக்கிறது. திருவனந்தபுரம் மிருகக் காட்சிசாலையில் சிங்கத்துடன் உரையாடியவர். திருவல்லிக்கேணி கோவில் யானைக்குத் தேங்காய் பழம் கொடுத்து உபசரித்தவர். காக்கை குருவிகளுக்கு உணவு அளித்து புரந்தவர். புதுவைப் புயலின் போது மாண்ட 790 காக்கைகளை நல்லடக்கம் செய்தவர். எல்லா உயிர்களிடத்தும் அன்புகொள்ள வலியுறுத்தியவர். சக உயிர்களின் இருப்பு எப்படி பூமியின் சமநிலைக்கு உதவுகின்றன என்பது பற்றி பாரதி விளக்கி விரிவாகச் சொல்லியிருக்கிறார்.

தமிழ் இலக்கிய மரபில் நம் பழந்தமிழர்களுக்குச் சுற்றுச் சூழல் குறித்த விழிப்புணர்வு இருந்தது என்றும் அறிவியலின் பிடியில் சிக்கிக் கொண்ட தற்காலச் சமூகம் சுற்றுச் சூழலைக் குறித்துக் கவலைப்படவில்லை என்பதை சுப்ரபாரதிமணியன் வலியுறுத்துகின்றார்.

## நீரின்றி அமையாது உலகு

"அவர்கள் நம் நதிகளை விற்றார்கள்
நமது கிணறுகள், ஏரிகள்
ஏன் நம் தலைமேல் விழும் மழையைக்
கூட விற்றார்கள்.
லண்டனிலும், கலிபோர்னியாவிலும் வசிப்பவர்களுடைய
கம்பனி நம் தண்ணீரை வாங்கியிருக்கிறது இனிமேல் எதைத் திருடப் போகிறார்கள்
நமது மூச்சுக் காற்றிலிருக்கும்
நீர்த்துளிகளையா?
அல்லது நமது நெற்றியில் முகிழ்க்கும் வியர்வைத் துளிகளையா?'
தண்ணீர் தனியார்மயமாக்கலை எதிர்த்துப் போராடும் மக்கள் மத்தியில் 'ஈவன் த ரெயின்'
என்ற ஸ்பானியத் திரைப் படத்தில் கதாநாயகன் பேசும் வசனம் இது

அய்.நா.சபை 'வாழ்விற்கான தண்ணீர்' என்ற முழக்கத்தை முன் வைத்து 2005-ஆம் ஆண்டு முதல் 2015-ஆம் ஆண்டு வரை பல்வேறு திட்டங்களைத் தீட்டி உலக நாடுகளில் பல்வேறு பணிகளை நடத்தி வருகிறது. 'உலகில் இன்னும் 50 ஆண்டுகளில் சுத்தமான குடிநீரைப் பெறுவது மிகுந்த சவால் நிறைந்த விசயமாக இருக்கும்

இந்தியாவில் இது இன்னும் தீவிரமாக இருக்கும். கடல் நீரைக் குடிநீராக்குவது. மழை நீரைக் குடிநீராகப் பயன்படுத்துவது. தேவை ஏற்பட்டால் கழிவு நீரையும் குடி நீராக்குவது, நிலத்தடி நீர் மட்டத்தை அதிகரிக்கச் செய்வது போன்றவை மனதில் கொள்ள வேண்டியதாகிறது.தமிழகத்தின் சராசரி மழையளவு 1000 மி.மீ. இது நமக்குக் கிடைப்பது சமீப ஆண்டுகளில் அரிதாகிக் கொண்டே யிருக்கிறது.ஆண்டுதோறும் சுத்தமான குடிநீர் கிடைக்காத காரணத்தால் 2 மில்லியன் மக்கள் இறக்கின்றனர். அதில் குழந்தைகள் அதிகமாயும், பெண்கள் கணிசமாயும் உள்ளனர்.

'நீருக்குப் பொருளாதார மதிப்பு உள்ளது. இதை ஒரு வணிகப் பண்டமாக்க வேண்டும்' என்று தொடர்ந்து வலியுறுத்தப்படுகிறது. "நீர் ஒரு வணிகப் பொருள்.தண்ணீரைத் தனியார் மயமாக்கும் முயற்சிகள் இந்தியாவிலும் தொடர்ந்து

நடைபெற்று வருகின்றன. இம் முயற்சியால் தண்ணீர் ஏழைகளுக்குக் கிடைப்பதைவிட பண பலம் கொண்டவர்கள் செலவிடும் தொகைக்குச் சாதாரணமாகக் கிடைத்துவிடுகிற நிலை வந்துவிட்டது.

தென் அமெரிக்காவிலுள்ள பொலிவியா நிகாரகுவா, ஆப்ரிக்காவில் மொசாம்பிக், கென்யா, கானா, பர்கினப்ரசோ,ஈக்வடார், தான்சானியா போன்ற நாடுகளில் தண்ணீர் தனியார் மயம் சுலபமாகிவிட்டது. தனியார் துறை, இந்த வணிகத்தில் நுழைவதற்குப் பலவகைகளில் வரி விலக்கு அளித்து ஆந்திரா, கர்நாடகா மராட்டியம் போன்ற பல மாநில அரசுகள் முறையற்று செயல்பட்டன.

நீர் என்பது அடிப்படை உரிமை என்பதற்குப் பதிலாக அடிப்படை தேவை என்று சொல்லப்படும் சூழல் வந்துவிட்டது. உரிமை என்றால் ஒவ்வொருவருக்கும் அளிப்பது என்றாகும். தேவை என்பது விலைகொடுத்து வாங்க வலியுறுத்துவது.இவற்றை வியாபார நோக்கம்கொண்டு பெரும் முதலாளிகளும் பன்னாட்டு நிறுவனங்களும்கையில்எடுத்துக் கொண்டு லாபம் சம்பாதிக்கின்றன. இது சாதாரண மக்களைச் சுரண்டவும் ஊழல் பெருகவும் வழி வகுத்துவிட்டது.குடிநீருக்கே இப்பிரச்சினைகள் என்கிறபோது விவசாயம் இன்னும் சிக்கலுக்குள்ளாகியிருக்கிறது. மானாவாரி விவசாயம், பாசன விவசாயம் என்று விவசாயம் நடைபெறுகிறது. இவை இன்று வறண்ட நிலையிலேயே காணப்படுகிறது.

“நீர் சிக்கல் என்பது ஒரு சூழலியல் நெருக்கடி. இதற்கு வியாபார ரீதியாக தீர்வு என்பது பூமியை நாசப்படுத்தும். சூழலியல் சிக்கலுக்குச் சூழலியல் ரீதியில்தான் தீர்வு காண முடியும்” என்கிறார் சூழலியல் போராளி வந்தனா சிவா.

## இ- குப்பை (மின் குப்பை)

வீட்டினைச் சுத்தம் செய்யும் எந்தப் பெண்மணியும் வீட்டில் இருக்கும் மின் குப்பைகளை உடனே அடையாளம் கண்டு சொல்லிவிடுவார். வெள்ளையடிப்பு, வர்ணமடிப்பு, சுத்தமாக்கும் போது இவையெல்லாம் குவிந்துகொண்டிருப்பது தொடர்ந்து

உறுத்தும். தொலைக்காட்சிப் பெட்டி, குளிர்சாதனப் பெட்டி, துவைக்கும் எந்திரம், கணிணி, கைபேசி, மிக்ஸி, மைக்ரோ ஓவன், டி. வி. டி, மியூசிக் பிளேயர், குளிர்சாதனப் பெட்டி, கேமிரா, ரீபில் பேனாக்கள், நாற்காலிகள், பென்டிரைவர்கள், கைக்கடிகாரங்கள் என்று இவையெல்லாம் பழசாகிறபோது குவிந்து கிடக்கும்.

வழக்கமாய் பாலிதீன் கழிவுகள், மருத்துவமனைக் கழிவுகள், உணவுப் பொருட்களின் கழிவுகள், வீட்டுக் கழிவுகள் போன்று இப்போது மின் பொருட்களின் கழிவுகளும் சேர்ந்துவிட்டன. இவ்வகைக் கழிவுகள் இந்தியாவின் பெரிய நகரங்களில் மட்டும் 5 கோடி டன் எடையளவு சேருகின்றன.சீனா, தாய்லாந்து நாட்டிலிருந்து மலிவான மின்னணுப் பொருட்கள் இங்கு இறக்குமதி செய்யப்படுகின்றன. குறைந்த காலத்தில் அவை மின் கழிவுகளாகிவிடுகின்றன.

இவை மறுசுழற்சிக்குக் கொண்டு செல்லப்படுவது வெகு அபூர்வம். 5% மறுசுழற்சிக்குப் போவதாகச் சொல்லலாம். மற்றவை மற்ற குப்பைகளுடன் சேர்ந்து எங்காவது மண்ணுள் புதையுண்டு போகின்றன.

பாதரசம் நிலத்தடி நீரில் கலந்து குடிநீராக சுலபமாக வீட்டுக்குள் வந்து சேர்ந்துவிடுகிறது. இரத்தத்தில் சிறுகச் சிறுக சேர்கிறது. மூளை, சிறுநீரகம், கல்லீரல் போன்றவற்றை மெல்ல மெல்ல பாதிக்கும். பாதரசம் மனிதனின் நினைவுகளைப் பாதிப்படையச் செய்கிறது. கருவுருதல், இனப் பெருக்கத்தில் பாதிப்பை ஏற்படுத்துகிறது.காரீயம், குரோமியம் போன்ற வேதியப் பொருட்கள் கணிணியின் பல பாகங்களின் தயாரிப்பில் பயன்படுத்தப்படுகிறது. ஒரு கணிணி தயாரிப்பில் 10 கிலோ பிளாஸ்டிக் பயன்படுகிறது.

சிறு வியாபாரிகள் உதிரி பாகங்களை வாங்கிகுழந்தைகளுக்கு விளையாட்டுப் பொருட்கள் தயாரிக்கின்றனர். இவற்றின் தயாரிப்பிலும், பயன்பாட்டிலும் வெளிப்படும் கதிர் வீச்சு குழந்தைகளின் உடல் நலத்திற்கு ஊறு விளைவிக்கும் தன்மை கொண்டது.நம்மிடம் உள்ள மின் சாதனங்களைத் திரும்பத் திரும்ப வாங்கிக் குவிப்பதில்

கவனம் வேண்டும். அழகுக்காகவும், புதிய வடிவ கவர்ச்சிக்காகவும் அவற்றைத் திரும்பத் திரும்ப வாங்குவதைத் தவிர்க்கலாம்

**தண்ணீர் தனியார் மயத்திற்கு எதிரான ஒரு திரைப்படக் குரல்**

தென் அமெரிக்காவின் ஏழை நாடான பொலிவியாவின் ஒரு நகரத்தில் அந்த நகர மக்கள் மலைமீது ஒரு ஏரியை விலைக்கு வாங்குகிறார்கள். ஏழுகிலோமீட்டருக்கு கால்வாயை அவர்களாகவே தோண்டுகிறார்கள். தங்கள் குடியிருப்புப் பகுதிகளுக்குத் தண்ணீரைக் கொண்டு வருகிறார்கள். நாங்கள் குடிப்பதற்கான தண்ணீரை ஆண்டுக்கு ரூ.300 கொடுத்து வாங்க இயலாது என்ற இயலாமையைச் சொல்கிறார்கள். அந்த ஊரின் சராசரி தினசரிக் கூலியே இரண்டு ரூபாய்தான். போராட்டம் வலுப்பெறுகிறது. மக்கள் கையில் கம்புகளோடு துப்பாக்கி கொண்ட படை வீரர்களை எதிர்கொள்கிறார்கள் என்பதை வித்யாசமானப் பின்னணியில் இதன் இயக்குநர் இகியார் பொனவன் விவரித்திருக்கிறார். படத்தின் தலைப்பு ‘ஈவன் த ரெயின்” (மழையைக்கூட்) ஸ்பானிய திரைப்படம்.

கொலம்பசின் கடற்பயணம், மேற்கிந்தியத் தீவுகளின் பூர்வகுடி மக்களின் அடிமை வாழ்க்கையும், அதற்கு எதிரான தைனோ இன மக்கள் போராடியதையும் படமாக்க விரும்பி பொலிவியா செல்கிறார்கள். நூற்றுக்கணக்கானவர்கள் படிப்பிடிப்பில் அக்கறைகொண்டு ஒத்துழைக்க முன் வருகிறார்கள். தைனோ இனத் தலைவர் அத்வே பாத்திரத்திற்கு டானியலையும், அவனின் மகள் பெலனையும் தேர்ந்தெடுக்கிறார்கள். குறைந்த செலவும், மிகக் குறைந்த ஊதியமும் அவர்களை உற்சாகப் படுத்துகிறது.

கொலம்பஸ் தலைமையின் கீழ் காலனிய ஆதிக்கவாதிகள் மக்களை அடிமைப்படுத்தியது, திரைப்படமாக எடுக்கப்படுகிறது. இன்னொரு புறம் தண்ணீர் தனியார் மயத்திற்கெதிரான போராட்டம் நடந்து கொண்டிருக்கிறது. இதில் டானியல் ஈடுபடுவது திரைப்பட இயக்குனருக்கும் தயாரிப்பாளருக்கும் அறவே பிடிப்பதில்லை.எப்படியோ பாதிப் படம் எடுக்கப்பட்டுவிடுகிறது. டானியல் போராட்டம் காரணமாக கைது செய்யப்படுகிறான். படத் தயாரிப்பாளர் லஞ்சம் கொடுத்து டானியலை மீட்டு படம் தொடர வைக்கிறார்கள். போராட்டம் இன்னும் தீவிரமடைந்து விவசாயிகள்,

நகரவாசிகள் நகரத்தில் கிளர்ச்சியை உருவாக்குகிறார்கள்.டானியலின் மகள் கலவரத்தில் அகப்பட்டுக்கொள்கிறாள். அவளை மீட்க டானியலின் மனைவி சிரமப்படுகிறாள். மக்கள் கொல்லப்படுகிறார்கள். முற்றுப் போராட்டம் தொடர்ந்துகொண்டே இருக்கிறது. பெலன் மீட்கப்பட்டு மருத்துவமனையில் சேர்க்கப்படுகிறாள். படக் குழுவினர் அந்நாட்டை விட்டு வெளியேறுகிறார்கள். டானியல் தன் மகளைக் காப்பாற்றியதற்காக ஒரு பரிசுப் பொட்டலத்தைக் கோஸ்டாவிடம் கொண்டுவந்து தருகிறார். அதில் ஒரு பாட்டிலில் தண்ணீர் இருக்கிறது. கோஸ்டாவின் முகத்தில் போராட்டத்தின்நியாயத்திற்கான உணர்வு மேலிடுகிறது. கொலம்பஸ் கடல்வழிப் பயணம் மூலம் அமெரிக்காவைக் கண்டுபிடித்து காலனியாக்கியது ஒரு வகையிலும், பொலிவியாவின் தண்ணீர் மயத்திற்கு எதிரான போராட்டத்தினை இன்னொரு வகையிலும் பின்னிப் பிணைந்ததால் சமகாலத்தின் முக்கியக் குரலாக இப்படம் இடம் பெற்றிருக்கிறது.

**காற்றுக் கொட்டகை**

சமீபத்தில் எங்கள் தாய்த்தமிழ்ப் பள்ளி ஆண்டு விழாவில் மாணவர்கள் ‘காற்றுக் கொட்டகை’ என்ற ஓரங்க நாடகம் நடத்தினர். அதில் நகரங்களில் காற்று மாசுபட்டு மக்கள் பிராண வாயு சிலிண்டர்களைத் தேடிப் போவது பற்றியது. அரசியல்வாதிகள் தேர்தலில் காற்று சிலிண்டர்கள் கொண்ட கொட்டகைகளை அமைத்து மக்களை மூச்சுத் திணறலிலிருந்து காப்பாற்றுவோம் என்று உறுதியளித்து கொட்டகைகளைத் திறக்கிறார்கள். அதைப் பெறுவது, உபயோகிப்பது என்று ஊழல் மலிகிறது. சாதாரண மக்களுக்கும் கிடைக்காததாக இருக்கிறது.

உலகின் மிக முக்கியமான சுற்றுச்சூழல் சிக்கலில் ஒன்றாக இந்தக் காற்று மாசுபாடு இன்று கணிக்கப்படுகிறது. காற்று மாசுபாடு போக்குவரத்தும், மின்னுற்பத்தியுமே முதன்மைக் காரணங்களாக இருக்கின்றன. போக்குவரத்து வாகனங்கள், விமானங்களில் பறப்பது, புகைவண்டிகளின் இயக்கம் எல்லாம் சேர்ந்து இரைச்சலையும், ஒலி மாசையும் உருவாக்குகின்றன. ஆலை இயந்திரங்கள், பொழுதுபோக்குச் சாதன இரைச்சல், ஒலி பெருக்கி இரைச்சல் என்று தொடர்ந்துகொண்டே இருக்கிறது. இவை தொடரும்போது உடல் சோர்வடையும். அதிகமான மன அழுத்தம், மிகையான உளைச்சல், கேட்கும்

திறனில் குறைபாடு, உறக்கம் குறைந்து போதல் ஆகியவை நிகழ்கின்றன.இந்த இரைச்சலால் சிட்டுக்குருவிகள் போன்றவை தமது இணைகளிடம் இருந்து பிரிந்து தத்தளிக்கின்றன. இந்த ஒலி மாசுபாட்டைப் பற்றி அக்கறைகொண்ட ஒரு நிறுவனம் “சத்தத்தில் இருந்து விடுபட்ட அமெரிக்கா” என்ற முழக்கத்துடன் அமெரிக்காவில் பல்வேறு நடவடிக்கைகளில் ஈடுபட்டுள்ளது.இந்தக் காற்று மாசுபாடு காரணமாக சென்றாண்டில் மட்டும் உலக அளவில் 32 லட்சம் பேர் தங்களின் இயல்பான முதுமையை அடைவதற்கு முன்பாகவே மரணத்தைச் சந்தித்துள்ளனர். இந்த மாசுபாட்டால் அதிகம் பாதிக்கப்படும். நாடுகளில் இந்தியா, பாகிஸ்தான், இலங்கை, வங்கதேசம் போன்றவை முன்னணியில் உள்ளன. “வளரும் நகரங்கள், ஆரோக்கியமான நகரங்கள்” என்ற முழக்கத்துடன் காற்று மாசுபாடிற்கெதிரான பல்வேறு திட்டங்கள் இன்று அமைக்கப்படுகின்றன.இந்த நுண்தூசு, மாசு உடல் ரீதியாக பல நோய்களைக் கொண்டுவருகிறது. நுரையீரல் மற்றும் இதயம் சார்ந்த நோய்களை அதிகப்படுத்துகின்றன. வாகனங்கள் வெளியேற்றும் புகை, வாகனங்களை இயக்குவதால் உருவாகும் தூசு சிரமங்களைத் தருகின்றன.

தனிப்பட்ட முறையிலான வாகனங்களைக் குறைத்து பொது வாகனங்களைப் பயன்படுத்துதல், மிதிவண்டிகளுக்குமுன்னுரிமை அளிப்பது நடையாகச் செல்வதை ஊக்குவிப்பது போன்றவை பெருமளவில் மாசுபாட்டினைக் குறைக்கும். வறண்ட பகுதிகளில் தாவரங்கள், மரங்கள் வளர்ப்பது, சாலைப் பராமரிப்பு பணிகள் செய்யும்போது குழிகளை உடனே மூடுவதாலும் குறைக்கலாம்.

**குப்பை வயிறு**

முன்பெல்லாம் சாதாரணக் கடைகளில்கூட சரசரமாய் தொங்கும் ஷாம்பு, தேங்காய் எண்ணெய், குட்கா போன்றவற்றைக் காண முடியும். இப்போது இதில் உணவுப் பொருட்களும் அடக்கம், இரண்டு ரூபாய். ஐந்து ரூபாயிலிருந்து தின்பண்டங்கள் சிறு பொட்டலங்களாய் பெட்டிக்கடைகளில்கூட தொங்குகின்றன. அவசர உணவுத் தேவைக்கு இதுபோல் எதையாவது வாங்கி வயிற்றை நிரப்பிக்கொள்கிறார்கள். அவற்றில்

பிஸ்ஸா, பர்கர், ஹாட்டாக், ஸ்பீக் மற்றும் சீன, இத்தாலியன், மெக்சிகன் வகை உணவுகளும் அடங்கியிருக்கின்றன.வெளிநாடு சுற்றுலா போகிற பலர் அந்தந்த நாட்டு உணவை ருசிக்கவும் அதிக பணத்தையும், நேரத்தையும் செலவழிக்கிறார்கள். உணவுத் திருவிழாக்கள் என்ற பெயரில் நட்சத்திர விடுதிகளில் அவை நடைபெற்று வந்தன. இப்போது தெருக்களிலும், சாதாரணத் திருமண மண்டபங்களிலும் அவை நடைபெறுகின்றன. இவ்வகை துரித, ஜங்க் உணவுகள் உடல்ரீதியான பாதிப்புகளையும், உளவியல் பாதிப்புகளையும் தொடர்ந்து தருகின்றன. மூளையும், நாக்கும் அதே வகை சுவை உணவை தொடர்ந்து வேண்டுகின்றன. நல்ல சுவைக்காக சேர்க்கப்படும் அதிக அளவிலான ரசாயன உப்பு, செயற்கை இனிப்பு, செயற்கை நார்ச்சத்து, ரசாயன கலவைகள், கொழுப்பு வகைகள் என்று அவை உணவில் கலந்துவிட்டன. இவ்வகை அதீத சுவைப் பொருட்கள் ரத்தத்தில் குளுகோசின் அளவைக் கூட்டியும் குறைத்தும் விளையாட்டு காட்டுவதுண்டு. இவ்வகை உணவுகளைத் தொடர்ந்து உண்ணும் ஒருவர் மிக எளிதாக சக்கரை நோய், கல்லீரல் பாதிப்பு போன்ற நோய்களுக்கு ஆளாகிறார்.

பெரும் சந்தையும், வணிக நோக்கங்களும் கொண்ட இவ்வகை உணவுப் பரிமாறலில் பல நூற்றாண்டின் தமிழர்களின் வாழ்வியல் முற்றிலும் மாற்றப்பட்டு வருவதைக் காண இயலும். தமிழகத்தின் பண்டைய ஐவகை நிலப் பிரிவில் குறிஞ்சி (கனி, கிழங்கு, தேன், தினை, விலங்குகளின் ஊன்), முல்லை (பால், தயிர், நெய், ஆட்டிறைச்சி, சோளம்), மருதம் (நெல்லரிசி, வாழைப்பழம், ஆடு, கோழி இறைச்சி, பதநீர்கள்), நெய்தல் (மீன், ஆமை, நண்டு, இறால்), குறிஞ்சி (தேன்), முல்லை (பால் நெய்), பாலை ஆகியவற்றில் கிடைத்த வெவ்வேறு பொருட்கள் மக்களுக்குத் தினசரி உணவாகவும், இவற்றைவிற்கும் சந்தையானதுஇவற்றைப் பண்டமாற்றாக்கி வேறு உணவுகள் பெறவும் ஏதுவாகின.

தொழிலுக்குத் தகுந்தபடியும் வருமானம், பருவகாலத்திற்கு ஏற்பவும் உணவு முறைகளைத் தமிழர்கள் மாற்றிக் கொண்டிருக்கின்றனர். வெக்கை காலத்தில் தண்ணீர்

கஞ்சி, குளிர் காலத்தில் சுடுசோறு, கம்பு, களி உணவுகள் என்றும் வழக்கத்திலிருந்தது. தங்களுக்குக் கிடைக்கும் இளநீர், நுங்கு, மாம்பழம், கொய்யா ஆகியவற்றைச் சுலபமாக எடுத்துக்கொண்டனர். சமைக்காத சத்துள்ள உணவுகள் தொடர்ந்து கிடைக்க வழி இருந்தது. உணவைச் சமைக்க ஆரம்பித்த பின் அவை வெகு சுவையாகவும், எளிதில் செரிக்கும் தன்மையும் கொண்டிருந்ததால் சமையல் கலை என்பது வளர்ந்தது. சமையல் கலை சார்ந்த படிப்புகளும், கல்வி நிறுவனங்களும் வளர்ந்து அத்துறையிலும் வேலையில்லாத பட்டதாரிகளை உருவாக்கிவிட்டது. பரோட்டா, பிரியாணி, குஸ்கா, பிரைடு ரைஸ், சிக்கன் ரைஸ் என்று தமிழ்ப் பெயர்களற்று உணவுப் பண்டங்கள் பெருமளவில் தயாரிக்கப்படுகின்றன. நம்மிடம் நோய் தீர்க்கும் உணவுப் பொருட்கள் இருந்தன. இன்று நோய் கொண்டுவரும் உணவுப் பொருளைத் தேடுவதில் சுகம் கண்டுகொண்டான். நோய்களுக்கும் வகை வகையான மருந்துகளைத் தேடிப் போக வேண்டியிருக்கிறது. சுக்கு, மிளகு,திப்பிலி, கடுக்காய், சித்தரத்தை, அதிமதுரம், கிராம்பு, வெட்டிவேர், வசம்பு, இஞ்சி, வேம்பு, பூண்டு, மஞ்சள் என்றும் மணத்தக்காளிக் கீரை, அகத்திக் கீரை, முருங்கைக் கீரை, வல்லாரைக் கீரை, பொன்னாங்கண்ணிக் கீரை, கரிசலாங்கண்ணிக் கீரை, புதினா, மல்லி, கீழாநெல்லி என்று வெவ்வேறு கீரை வகைகளும்சாதாரண உணவில் சேர்க்கப்படும்பொழுது நோய்க்கு மருந்தாகும். இன்று மருந்தைத் தனியாக தேடி நிறைய செலவு செய்து உடம்பை மோசமான இயந்திரமாக்க வேண்டியிருக்கிறது.

***நீலகிரி விஷ நிலமாய்...***

2010-இல் ஒரு மழைக்காலத்தில் ஊட்டி சென்றபோது பயணம் பாதியில் தடைபட்டு திரும்ப நேரிட்டது. அன்றுதான் மழை ஆரம்பித்திருந்தது. ஆனால் சாலைகளில் மண் சரிவுகள் ஏற்பட்டு போக்குவரத்திற்குப் பெரும் இடைஞ்சலாய்ப் போய் விட்டது. நீலகிரியில் தென்மேற்குப் பருவ மழை காலங்களில் இவ்வகை மண் சரிவுகள் இருக்கும். அப்போதுதான் மழைப் பொழிவு அதிகமாக இருக்கும். இக்காலங்களில் மக்கள் ஒருவித பய உணர்ச்சியுடன்தான் இருந்துகொண்டிருப்பர்.

நீண்டகால மரங்கள், புதர்கள் நெருங்கியிருப்பது மண்ணை இறுகப் பிடித்து மலையின் உறுதிக்குக் காரணமாக இருக்கும். சாலை விஸ்தாரணம், அழகுபடுத்தல், கடத்தல் என்று மரங்கள் வெட்டப்பட்டுக் கொண்டிருக்கின்றன. தாதுப்பொருட்களை வெட்டி எடுக்கிற நோக்கத்தில் நிலங்கள் குத்தகைக்கு விடப்படுவது பெரும் சுரண்டலுக்கு வழி வகுத்துவிட்டது.

இமயமலை பல விதங்களில் உயரம் மற்றும் அதன் தொன்மை காரணமாக எப்போதும் பேசப்படுவதாகும். அதேபோல் தொன்மையும், நீண்டகால பாரம்பரியமும் கொண்டது மேற்குத்தொடர்ச்சி மலை. குஜராத் தொடங்கி தமிழகத்தில் நீலகிரி மலை ஊடாக பாலக்காட்டுக் கணவாய், ஏழுமலை, கம்பம் பள்ளத்தாக்கு கன்னியாகுமரி வரை 1600 கி.மீ. நீளமும், 1,74,700 சதுர கி.மீ. பரப்பளவும் கொண்டது.

நீலகிரி மலைப் பகுதியில் வாழும் பழங்குடி மக்களைக் கையில் வைத்துக்கொண்டு சுரண்டும் வேலைகளும் நடைபெற்று வருகின்றன. அவர்கள் காலங்காலமாக மலையின் பாதுகாவலர்களாக, மலையைத் தெய்வமாக வழிபடுகிறவர்களாக இருக்கிறார்கள். பெரும் மரங்கள் வெட்டப்படும் சமயங்களில் தேவையற்ற மரங்கள் நடப்பட்டு வளர்க்கப்படுவதும் மண் சரிவு சிரமங்களுக்குக் காரணமாக இருக்கிறது. ஊட்டி மலைப்பாதையில் வைக்கப்பட்ட வாகை மரங்கள் எடை அதிகமானவையாக, பிடிப்புத் தன்மையற்ற மண் அமைப்பில் இருப்பதால் பெரும் சேதங்களுக்கு மழை காலங்களில் உள்ளாகின்றன.நீலகிரி மலைப்பகுதிகளிலும், மேற்குதொடர்ச்சி மலைகளின் பல பகுதிகளிலும் நீரில் வாழும் உயிரினங்கள் தொடர்ந்து அழிக்கப்பட்டு வருகின்றன. நன்னீரில் வாழும் பல மீன் வகைகள் மூன்றில் ஒரு பங்கு அழியும் தருவாயில் உள்ளன. இதில் டெக்கான் மஷிர் என்ற உணவு மீன் உண்டு. அலங்கார வியாபாரத்திற்காக கேரளா அழகி என்ற மீன் பிடிக்கப்பட்டு, அதன் நீர் நிலைகள் அழிக்கப்பட்டு தோட்டங்கள், தோப்புகளால் மாசுபட்டிருப்பதால்அது மிகவும் குறைந்து வருகிறது. நன்னீர் மீன்களும், நத்தைகள், நீர்வாழ் தாவரங்களும் பலதரப்பட்ட மருந்தாக உபயோகப் படுத்தப்படுவதால் அழிவு அதிகமாகியிருக்கிறது. நீலகிரி மலையையும் சுற்றுலா

ஸ்தலமாக முன்னிலைப் படுத்தப்படுவதை விட பல்லுயிரிகளின் மையமாக மனதில் கொண்டு செயல்பட வேண்டிய சூழலுக்கான தேவைகள் இன்று அதிகமாகிக்கொண்டிருக்கின்றன.

**அணுத்திமிர்**

அணு உலை – விபத்து சார்ந்த "தி சைனா சிண்ட்ரோம்" என்ற ஆங்கிலத் திரைப்படம் மார்ச் 16, 1979-ஆம் ஆண்டு வெளியானது. அது வெளிவந்து 12 தினங்கள் கழித்து அப்படத்தில் இடம்பெற்ற விசயங்கள் பெனிசில்வேனியா பகுதி அணு உலை விபத்தில் நிகழ்ந்தது. அணு உலை குளிர்விப்பான் செயலிழந்து வருவது பதற்றத்தை உருவாக்குகிறது. 'சைனா சிண்ட்ரோம்' என்ற குளிர்விப்பான் செயலிழப்பு ஏற்படுத்தும் போது விபத்து ஏற்பட வாய்ப்பு இருக்கிறது. உயர் வெப்பம் வெளிப்படவும் கட்டடம் வெப்பத்தால் சிதைவதும், கதிர் வீச்சும் ஏற்படக்கூடிய அபாயம் இருக்கிறது. அது பூமியை ஊடுருவி அமெரிக்காவின் நேர் எதிர்ப்புறம் இருக்கும் சைனாவை அடைந்துவிடும். இதை அணு உலையின் முக்கிய நிர்வாகியின் பார்வைக்குத் தொலைக்காட்சி நிருபர் கொண்டு செல்கிறார். கதிர் வீச்சுப் பதிவுகளைத் தேடுகிறார்கள். அதைச் சேகரிக்கிறவர்களிட மிருந்து ஆவணங்கள் பறிக்கப்படுகின்றன. அணு உலையில் சேதமும், கதிர் வீச்சும் உணரப்படுகிறது.தொலைக்காட்சி நிருபர் நேரடி ஒளிபரப்பில் கண்ணீருடன் விரிவாகச் சொல்லிக்கொண்டிருக்கும் போதே நேரடி ஒளிபரப்பு திடீரெனத் துண்டிக்கப்படுவதோடு திரைப்படம் முடிகிறது. இதில் காணப்பட்ட இந்த அணு உலைவிபத்து இப்படம் வெளியான 12 தினங்களில் நிகழ்ந்தது. இதை "மூன்று மைல் தீவு "விபத்து என்று குறிப்பிடுகிறார்கள். இதே காரணங்கள் கூடங்குளத்திலும் ஏற்பட வாய்ப்புகள் உள்ளன. கூடங்குளம் அணு உலை பாதுகாப்பானது என்பது பொய் ஆகும் நிரூபணத்தைக் காட்டுகிறது இது.

கடந்த 50 ஆண்டுகளுக்கு மேலாக உலகின் பல்வேறு அணு மின் திட்டங்கள் வேகமாக மூடப்பட்டு வரும் வேளையில் இந்தியாவில் கூடங்குளம் போன்றவற்றில் அரசு அக்கறை காட்டி வருகிறது. (இந்தியாவில் 2% மட்டுமே(நிலக்கரி அனல் மின் நிலையங்கள்), 23% (நீர் மின் சக்தி).அப்படியொன்றும் அணுமின் சக்தி மலிவானதல்ல.

அனல், நீர், காற்று ஆகியவை அணுமின் திட்டங்களில் முதலீடு செய்யப்படுவதை விட அதிக லாபம் ஈட்ட வாய்ப்புகள் உள்ளன. அணுமின் திட்டங்களில் முதலீடு செய்யும் பணத்தை அவ்வளவாகத் திரும்பப் பெற முடியாது என்ற நிலை இப்போது இருக்கிறது. வழக்கமாய் 50% கரியமிலவாயு குறைப்பு நல்லது. அணு மின் உலையால் 2% தான் சாத்தியம். பாதுகாப்பான அணு உலை எதுவும் இல்லை என்றுதான் பல விஞ்ஞானிகள் கூறுகிறார்கள். ஜப்பான் புகுஷிமா அணுமின் நிலையத்தில் எல்லா பாதுகாப்புகளையும் மீறி மின் இணைப்பு துண்டிப்படைந்த பின்பு, சுனாமி தாக்கிய பின் குளிரூட்டும் வசதிகள் தகர்ந்ததால் வெப்பம் அதிகமாகிவெடி விபத்து நடந்தது. தொழில்நுட்ப காரணங்கள் மட்டுமில்லாமல், விதிகளைக்கடைபிடிக்காததால் தொழில்நுட்பக் கோளாறு நடைபெறுகின்றன.

**நியூட்ரினோ நியதி**

காளிதாஸ் அவர்களின் தலைமையிலான கோவை “ஓசை” அமைப்பு நடத்திய சுற்றுச்சூழல் சுற்றுலாவின் போது நியூட்ரினோ திட்டம் பற்றி முதலில் அறிந்துகொண்டேன். 120 ஆண்டுகள் இந்தத் திட்டம் நடைமுறையில் இருக்கும். நியூட்ரினோ என்றால் அணுவின் அடிப்படை துகள்கள் என்று சொல்லலாம். நுண் நொதுமி என்று தமிழில் அதற்குப் பெயரிட்டிருக்கிறது. நியூட்ரினோ அணு, ஒளியை விட விரைவாக பயணம் செய்யக் கூடியது. நில நடுக்கம், ஆழிப்பேரலை, புயல், வெள்ளம், பேரிடர் விபத்துகள், உலகத்தின் தொன்மை, உயிர்களின் தோற்றம் குறித்து நிறைய ஆய்வுகளை நியூட்ரினோ மையம் நிகழ்த்தும்.

பத்து ஆண்டுகளுக்கு முன்னால் இத்தாலியில் நியூட்ரினோ ஆய்வகத்தில் ஏற்பட்ட வேதிக்கசிவு, நிலத்தடி நீர் மற்றும் காட்டுயிர்கள் மீது ஏற்படுத்திய விளைவுகளால் அங்குச் சுற்றுச்சூழல் அமைப்புகள் நடத்திய போராட்டத்தால் தற்காலிகமாக மூடப்பட்டது. இதைத்தவிர அமெரிக்கா, கனடா ஜப்பான் நாடுகளிலும் இந்த வகை ஆய்வு மையங்கள் உள்ளன.தற்போது தேர்வு செய்து அடிப்படைப் பணிகள் ஆரம்பிக்கப் பட்டுள்ள தேனி மாவட்டம் தேவாரம் மலைப்பகுதி மேற்குதொடர்ச்சி மலையின் எழில் நிறைந்த

பகுதியாகும். இங்குப் பொழியும் கணிசமான மழை காரணமாக தென் மாவட்டத்திற்குத் தண்ணீர் கிடைக்கிறது. அப்பகுதியைச் சார்ந்த முல்லைப் பெரியாறு வைகையாறு போன்ற ஆறுகளுக்கு மூலாதாரமான சிறு ஆறுகள் மேற்குதொடர்ச்சி மலைகளிலிருந்துதான் உற்பத்தியாகின்றன. தேவாரத்திற்கு அருகிலான மேக மலை, காட்டு எருதுகள், யானைகளின் வாழ்விடமாக அறிவிக்கப்பட்ட இடமாகும். மலை அணில் வாழ்விடத்திற்கான சிறப்பிடமாக சுருளி மலை காட்டுப்பகுதி அமைந்துள்ளது. இதைத் தொடர்ந்து அமெரிக்கா, சுவிட்சர்லாந்து, ஜப்பான் போன்ற நாடுகளில் உள்ள நியூட்ரினோ ஆய்வு கூடங்களில் உற்பத்தி செய்யப்படும் துகள்களைப் பூமிக்குள் ஊடுருவச் செய்து தேவாரம் ஆய்வகத்தின் வழியே பெறும் வகையில் ஆய்வுகள் மேற்கொள்ளும் பிற்காலத்திட்டமும் உள்ளது.

இயற்கையுடன் ஒன்றி வாழும் தேவாரம் பகுதி மக்களின் இயல்பு வாழ்க்கை இதனால் கட்டுமான அளவிலேயே அதிகம் பாதிக்கப்படும். சுரங்கம் வெட்டுவதால் வெளியில் கொட்டப்படும் கழிவுகளும், அதை எடுத்துச் செல்லும் போக்குவரத்துநடவடிக்கைகளும், அதனால் உண்டாகும் ஒலி மாசும், காட்டுயிர்களுக்கும், காட்டுப் பகுதியில் வசிக்கும் மக்களுக்கும் இயல்பு வாழ்க்கையைப் பாதிப்பதாகவே அமையும். புதிதாய் சுரங்கம் வெட்டப்படும் போது பல நுண்ணுயிர்கள், காட்டு விலங்குகள், மனிதர்களுக்குக் கல்லறை எழுப்பப்படுவதும் நடக்கிறது

**சூடா... சூடாகவே...**

பூமியின் வெப்பம் அதிகரிப்பது என்பது சமீப ஆண்டுகளில் அதிகரித்து பயமுறுத்திக்கொண்டிருக்கிறது. பூமியைச் சுற்றிலும் ஏற்படுகிற ஒரு வகை பசை வளையம் காரணமாக ஒளி உள்ளே வருகிறது. பூமிக்கு வரும் வெளிச்சம் வானத்திற்குத் திரும்புவது தடைபடுகிறது. “பசுமை இல்ல விளைவு” எனும் இதில் சூழும் காற்றில் கரி அமிலக் காற்று அதிகமாக இருக்கிறது. இது வெப்பக் கூட்டலுக்குக் காரணமாக இருக்கிறது. வளர்ச்சியடைந்த பணக்கார நாடுகள் இந்தக் கேடுகளுக்குக் காரணங்களாக இருக்கின்றன. சாதாரண நாடுகள் இதன் பாதிப்புகளைப் பெரும்பாலும் ஏற்றுக்கொண்டு வாழ்கின்றன. இதில் இந்தியாவும் ஒன்று.

உலக வெப்பமுறுதல் காரணமாக கடல் மட்டம் மெல்ல மெல்ல உயர்ந்துகொண்டிருக்கிறது. கடலோரப் பகுதிகள் கடலுக்குள் சென்றுவிடும். கடல் சூழலைப் பெரிதும் காப்பாற்றி வரும் பவளப் பாறைகள் பெருமளவில் அழிவுக்குள்ளாகும். மீனவர்கள் பிடிக்கும் பலவகை மீன்கள் பவளப் பாறையைச் சார்ந்தே உள்ளன. மண் அரிப்பும், சுனாமிப் பேரலைகளால் ஆபத்து ஏற்படுவதை ஓரளவு இந்தப் பவளப் பாறைகள் தடுக்கின்றன. உலக வெப்பமுறுதலால் இமயமலையின் பவளப்பாறைகள் உருகி ஜீவநதியாக இன்று ஓடும் கங்கை பிரம்மபுத்திரா போன்ற நதிகள் இனி குறிப்பிட்ட பருவங்களில் மட்டும் நீர் ஓடுகின்ற ஆறுகளாக மாறும் அபாயம் உள்ளது.

உலக வெப்பமுறுதலுக்குப் பெரிதும் காரணமான நாடுகளில் ஒன்று அமெரிக்கா. பசுமை இல்லா வாயுக்களை அதிகமாக வெளியிட்டு பசுமைச் சூழலைக் கெடுக்கிறது அது. நிலக்கரியை இந்தியா சிறந்த வியாபாரப் பொருளாக்கிவிட்டது. நிலக்கரியை எரி பொருளாகப் பயன்படுத்துவதால் நிறைய சுரங்கங்கள் தோண்டப்படுவதும் அதன் காரணமாக அப்பகுதி மக்கள் நகரங்களுக்குக் கூலிகளாக இடம்பெயர்வதும் தொடர்ந்துகொண்டிருக்கிறது. எரிபொருட்கள் சம்பந்தமாக சூரிய ஒளி, காற்று விசை, காட்டாமணக்கு, கரும்புச் சக்கை போன்றவற்றைக் கொண்டு மாற்று எரிபொருளை உருவாக்கவேண்டும்.

தற்போதைய மின் பற்றாக்குறையும் நீர்ப் பாசனமேலாண்மையும் தமிழகம் எதிர் கொள்ளும் மிகப் பெரிய சவால்களாகும். இவற்றை முறைப்படுத்துதல் வேளாண்மை நீடிக்க உதவும். 1947-இல் அன்றைய பிரதமர் “வேறு எதுவும் காத்திருக்கலாம். ஆனால் உழவுத்தொழில் காத்திருக்க முடியாது” என்றார். இன்றைய பிரதமர் “விவசாயிகளே விவசாயத்தைக் கைவிடுங்கள்” என்று உபதேசிக்கிறார்.மரம் வளர்த்தலும், விவசாயமும் சரியாக நடைபெறும் போது கரியமில வாயுவை உறிஞ்சி ஆக்சிஜன் வெளியிடும் செயல்கள் புவி வெப்பத்தை நிச்சயம் குறைக்கும்.

**நஞ்சான நதிகள்**

“ஆறில்லா ஊருக்கு அழகு பாழ்” என்பார்கள். ஆனால் இன்று எல்லா ஆறுகளும் பாழாகித்தான் காணப்படுகின்றன.தொழில் மயமாக்கம், நகர மயமாக்கம், நகர

விரிவாக்கம், மக்கள்தொகைப் பெருக்கம் ஆகியவற்றின் முதல் பலி நமது ஆறுகள்தான். அதுவும் ஆற்றங்கரைகளின் ஓரத்தில் ஏற்படும் பெரும் தொழிற்சாலைகள் அவற்றின் கழிவுகளை ஆற்றில்விட தயக்கம் காட்டுவதே இல்லை. ஆற்றை மாசுபடுத்தத் தயங்குவதே இல்லை. கோவையிலேயே பல சாயப்பட்டறைகள் உள்ளன. இவை தவிர வீட்டு நீர்க்கழிவுகளும் மின் முலாம் பூசும் தொழிற்சாலைகளும், வார்ப்பட ஆலைகளின் உலோகக் கழிவுகளும் நொய்யலில் கலக்கின்றன. ஈரோட்டில் உள்ள சாயப்பட்டறை கழிவுகளைக் காவிரியிலும் நொய்யலிலும் கலக்கிறார்கள். மீன்கள் செத்து விழுவதும், பயிர்கள் விவசாயத்திற்கு நிலங்கள் பயனற்றுப்போவதும் நிலத்தடி நீர் மாசுபட்டு குடிநீருக்கும் சிரமமாகிப் போவதும் மக்களை வெகுவாக பாதித்திருக்கிறது. ஈமச்சடங்கு செய்து முடிக்கும் கழிப்பிடங்களாக மாறிவிட்டன ஆறுகள்.

மேற்குத்தொடர்ச்சி மலையில் உற்பத்தியாகும் ஆறு பவானி. மூங்கில், யூகலிப்டஸ் மரங்களைக் கூழாக்கி செயற்கை நூலிழை தயாரித்தது. இதன் சுத்திகரிப்பு சரியாக இல்லாததால் இதன் கழிவுகள் பவானியைக் கெடுத்தது. தேக்கப்பட்டி, மேட்டுப்பாளையம் பகுதியின் சாயப்பட்டறைகள், பிற ஆலைகள் பவானியைக் கழிவாக்கிவிட்டது. “கேட்டார் வினை தீர்க்கும் திருநாணாவே” என்று திருஞான சம்பந்தர் பாடியிருக்கிறார். ஆனால் பவானி இன்று பிணி தரும் நதியாகிவிட்டது. அசுரர்களும், தேவர்களும் சேர்ந்து பாற்கடலைக் கடைந்தபோது வெளிப்பட்ட அமுதம் அசுரர்களுக்குக் கிடைத்து விடக்கூடாது என்று தேவர்கள் அமுதத்தைப் பவானியில் மறைத்து வைத்தார்களாம். ஆனால் இன்று பவானி நஞ்சை மறைத்து வைத்த நதியாகிவிட்டது.வீரபாண்டியன் காலத்தில் கட்டப்பட்டகாளிங்கராயன் அணை சாயக்கழிவுகளின் மாசுபாட்டால் கெட்டு 15,000 ஏக்கர் பாசன நிலத்தை வேளாண்மைக்குச் சிரமமாக்கியுள்ளது.

அமராவதி ஆற்றில் கால்வாய்கள் வெட்டி நீர்ப்பாசன வசதிகள் செய்யப்பட்டுள்ளன. அமராவதி ஆற்றை ஆதாரமாகக் கொண்டு 50-க்கும் மேற்பட்ட கூட்டு குடிநீர்த் திட்டங்கள் உருவாக்கப்பட்டு, நதிக்கரையில் வாழும் மக்களுக்குக் குடி நீரை வழங்கின. அமராவதி ஆற்றின் உப நதிகளில் ஒன்றான கேரளாவில்

உற்பத்தியாகும் பாம்பாறு நதியிலிருந்து தண்ணீரைக் கேரளத்திற்குத் திருப்பி விடும் காவிரி நடுவர் மன்ற உத்தரவும் அமராவதி பகுதி வேளாண்மைப் பகுதிக்கு வரும் நீரின் அளவைக் குறைத்துவிடும் வாய்ப்புகள் உள்ளன.

தமிழகத்தில் ஓடும் காவிரியை தோலாலைகள், சாயப்பட்டறைகள், தொழிற்பேட்டைக் கழிவுகள் சர்க்கரை ஆலைகள் என்று கழிவுகளைச் சேர்த்து விவசாய நீரையும் குடிநீரையும் பாழாக்கி விடுகிறது. திருப்பூர் அருகிலான அவிநாசியை காசியில் பாதி அவிநாசி என்பார்கள். அதுபோல இந்தக் கிருதுமால் நதி ராமேசுவரத்திற்கு இணையானது. காசி ராமேசுவரம் புனிதப் பயணம் ராமேசுவரம் சென்று முடியும். அங்குச் செல்ல இயலாதவர்கள் கிருதுமால் நதியில் குளித்தால் புண்ணியம் கிடைக்குமாம். இன்று அது வீட்டு கழிவு நீரின் சாக்கடையாக மாறிவிட்டது.

உலகத்தின் மிகத் தூய்மையான நீராடுதுறை குற்றாலம் என்று பலர் பாராட்டுவதுண்டு. தாமிரபரணியில் சாக்கடை கலப்பது வெகு சாதாரணம். தாமிரபரணி கரையோரம் மணல் கொள்ளை தொடர்ந்து நடக்கிறது. மனம்போல் நடக்கும் மணல் கொள்ளை தாமிரபரணியின் மணத்தை நாற்றமுற்றதாக்கி விட்டது.

பொதிகை மலையில் உற்பத்தியாகி 120 கி.மீ ஓடி புன்னைக்காயலில் கடலில் கலக்கும் நதி வைகை. இது கடலில் போய் சேராத நதி. குலோத்துங்கன் அவையில் இருந்த ஒட்டக்கூத்தர் சோழ நாட்டினர். புகழேந்தி களந்தைக்காரர். ஒட்டக்கூத்தர் "எங்க சோழ நாட்டு காவிரி மாதிரி உங்க பாண்டிய நாட்டு வைகை கடலில் கலப்பதில்லையே" என்றார். புகழேந்தி சொன்னார் "பாற்கடல் சிவபெருமானுக்கு நஞ்சளித்தது, ஆலகாலம் அங்கே இருந்து வந்தது. எம்பெருமானுக்கு நஞ்சை அளித்த பாவியாகிய இந்தக் கடலோடு போய் சேராது வைகை." வைகையும் மாசுபாட்டால் நஞ்சாகிவிட்டது. திருப்புவனம் வைகை ஆற்றில் பிளாஸ்டிக் குப்பைகள் மலிந்து கிடக்கின்றன. திதி, தர்ப்பணத்திற்கு வருவோர் பிளாஸ்டிக் பைகளைக் கொண்டுவந்து குப்பையாக்குகின்றனர்.

தேசிய நதிநீர் பாதுகாப்புத் திட்டங்கள் பல வகுக்கப்பட்டன. தமிழக நதிகளின் மாசுபாட்டை மாற்றவும், கழிவு நீர் அமைப்புகளை உருவாக்கவும் இவ்வகைத் திட்டங்கள்

தீட்டப்பட்டன. ஆனால்விதிகளும், சட்டங்களும் இருந்தாலும் நடைமுறைப்படுத்த அதிகாரிகளுக்கு அக்கறை தேவை. அது உத்யோகம் சார்ந்த அக்கறை மட்டுமல்லாது சமூக அக்கறையும் கூட தேவை.

**உச்சி மாநாடுகள்**

சுற்றுச்சூழல் பிரச்சினைகள் பற்றி விவாதிக்கவும், சுற்றுச் சூழலைப் பாதுகாக்கவும் உச்சி மாநாடுகள் நடைபெறுகின்றன. இரண்டாண்டுகளுக்கு முன் வளரும் நாடுகளுக்கு வளம் சேர்க்கும் என்று கோபன் ஹெகன் மாநாடு பற்றிச் சொல்லப்பட்டது. பூமியில் கரியமில வாயு அதிகமாகி பருவ நிலைகள் மாறுபட்டு வருகின்றன. வளர்ந்த நாடுகளில் கரியமில வாயு அளவைக் குறைக்கிற நடவடிக்கைகள் தொடர்ந்து எடுக்கப்பட்டுள்ளது. கரியமில வாயு வெளியாகும் அளவினைக் குறைக்க நிலக்கரி, பெட்ரோல், டீசல், எரிவாயு பயன்பாட்டைக் குறைப்பது வளர்ந்த நாடுகளுக்குச் சிரமமாக உள்ளது. “இலாபம் அல்ல – தேவை பூமி”, “கட்டமைப்பை மாற்று கால நிலையைக் காப்பாற்று” என்ற முழக்கங்கள் முன் வைக்கப்பட்டன. உற்பத்தி, நுகர்வில் ஏற்பட்டிருக்கும் மாற்றங்கள் பெரும் பாதிப்பை உண்டுபண்ணுகின்றன. மறுசுழற்சியும், தேவையற்றப் பொருட்களைக் குறைப்பதும் அவசியம். நல்ல குடிநீர், ஆரோக்கியமான கழிவு வெளியேற்றம், சத்தான உணவு ஆகியவற்றைக்கொண்ட சுகாதாரமான சுற்றுச்சூழல் அவசியமாக உள்ளன. உலக அளவில் சுற்றுச்சூழல் பற்றிய விரிவான கவனம் உருவாக்கப்பட்டிருந்தாலும் வளர்ந்த நாடுகளின் ஆதிக்கத்தால் ஏழை நாடுகளில் அவை பிரச்சினைகளாகவே இருந்து கொண்டிருக்கின்றன.

**இரும்புக் காக்கைகள்**

டாக்காவில் தங்கியிருந்த ஒரு நாள் செய்தித்தாளில் கப்பல் உடைப்புப்பணியில் ஈடுபட்டிருந்த ஒருவர் இறந்தது பற்றி படித்தேன். வாரம் ஒருவர் அல்லது வருடம் 50 பேர் இச்சாவில் பலியாகிறார்கள். அது பற்றிய ஒரு ஆவணப்படம் “இரும்புக் காக்கைகள்” சமீபத்தில் அது பல பரிசுகளைப் பெற்றிருப்பதால் கவனம் பெற்றிருக்கிறது. இப்படத்தில் இடம் பெறும் முகமது ரபீக் 32 வருடங்களாய் கப்பல் உடைப்புத் தொழிலில்

ஈடுபட்டிருக்கும் தொழிலாளி. அவனுக்கு வயது 47. தினசரி இரண்டு அமெரிக்க டாலர் சம்பாதிப்பவன். வேலையிடத்தில் விபத்து நடப்பதுதான். என்றாவது ஒரு நாள் சாவதுதான் என்கிறான். 12 வயது பெலால் 10 வருடமாய் அங்கிருக்கிறான். அவனைப் போலவே 20,000 பேர் அப்பணியில் ஈடுபட்டிருக்கிறார்கள்.

கப்பல் பாகங்கள் உடைபட்டு உயரத்திலிருந்து விழும்போது ஏதோ பறவையின் இறகு பிய்ந்து பிரிவது போலிருக்கிறது. அது எழுப்பும் சப்தம் குரூரமாக தரையில் இறங்குகிறது. ரசாயனப் பொருட்களும், திரவங்களும் எங்குமாய் பரவி மூச்சை அடைக்க வைக்கிறது. குடும்பங்களை நினைத்து ஆறுதல் அடைகிறார்கள். பழைய நினைவுகள் அவர்களுக்கு ரம்மியமானதாக இருக்கின்றன. 47 வயதுக்காரனின் முகம் 60 தாண்டியதாக இருக்கிறது. சவக்களையுடன்.....இந்த ஆவணப் படத்தின் இயக்குனர் கொரியாவைச் சார்ந்த போங் நாம் பார்க்.டாக்கா செய்தித்தாள்களில் கப்பல் உடைப்புப் பணிகளில் ஈடுபடுவோரின் சாவும், விபத்துகளும் அது குறித்த அரசின் எச்சரிக்கைகளும், சட்டரீதியான நடவடிக்கைகளும் செய்திகளாய் தொடர்ந்து வந்துகொண்டிருந்ததைப் பார்க்க நேரிட்டது.1970-க்குப் பின் கப்பல் உடைத்து அதன் இரும்பு பாகங்களைப் பிரித்தெடுப்பது முக்கிய வேலைகளில் ஒன்றானது. உலகம் முழுவதும் 700 கப்பல்கள் பழையதாகியும், செயலிழந்தும், விபத்துக்கள் ஏற்பட்டும் உடைப்புப் பணிக்காகத் தயாராகின்றன. இதுவரை 45,000 கப்பல்கள் உடைக்கப்பட்டிருக்கின்றன. இங்கிலாந்து, தைவான், மெக்ஸிகோ, ஸ்பெயின் போன்ற நாடுகளில் முக்கியத் தொழிலாக இது நடந்து வருகிறது.இந்தியாவில் அலாங் என்ற குஜராத்தைச் சார்ந்த கடற்பிரதேசத்தில் இப்பணி நடைபெற்றுக் கொண்டிருக்கிறது. சென்றாண்டு சென்னையில் செயலிழந்து போன ஒரு கப்பலை உடைக்கும் பணி தொடங்கியபோது சர்ச்சைக்குள்ளானது.

ஒரு கப்பல் தளபிரதேசத்தில் ஒரு நாளைக்கு ஒருவராவதுமிகுந்த அளவில் காயப்படுவது என்பது சாதாரணமாக நிகழ்கிறது. இரும்புக் கம்பிகள் துண்டிக்கப்படுவதில் சிரமங்கள் ஏற்படுகின்றன. பெரிய விபத்துக்கள் என்றால் 10 ஆயிரம் முதல் 15 ஆயிரம் டாக்கா வரை நஷ்டஈடு தருகிறார்கள்.

1965-இல் வங்கதேசத்தில் கொண்டுவரப்பட்ட சட்டமொன்று ஒரு லட்சம் டாக்கா வரை நஷ்டஈடு தர வாய்ப்பு தந்துள்ளது. ஆனந்தா குழுமம் சிட்டகாங்கில் கப்பல் உடைப்பு தொழிலும், புதுக்கப்பல்களை உருவாக்கும் பணியிலும் தீவிரமாக வங்கதேசத்திலும், இந்தியாவிலும் ஈடுபட்டு வருகிறது. குறைந்தது ஆண்டுக்கு 25 கப்பல்களையாவது ஆனந்தா குழுமம் உடைத்தெடுத்து இருக்கிறது.இந்த ஆவணப் படம் கரையேற முடியாத முகமது ரபீக், பெலால் போன்றவர்களைப் பற்றியது. தங்களின் உடல்களும் யாருக்கோ இரையாகப் போகின்றன. அந்தக் கவலை அவர்களின் முகங்களில் இல்லை. ஆனால் சவக்களை கொண்ட முகங்களுடன்தான் அவர்கள் உலவுகிறார்கள்.

**நீரின்றி அமையும் உலகு**

மக்களுக்குத் தேவைப்படும் குடிநீர் கிடைக்காமல் போவதும், அரிதாகிக் கொண்டிருப்பதும் தண்ணீர் என்ற இயற்கை வளத்தின் மீதான பல விவாதங்களை எழுப்புகிறது. தண்ணீரை அடிப்படை உரிமை என்ற நிலையில் இருந்து அடிப்படைத் தேவை என்பதாக நிர்ணயிக்கின்ற கட்டாயத்தால் இந்த விவாதம். இது குறித்த அவதானிப்புகளைப் பால்பாஸ்கர் இப்புத்தகத்தின் மூலம் முன் வைக்கிறார். கடந்த இருபத்தைந்து ஆண்டுகளாக மனித உரிமை குழந்தைத் தொழிலாளர், சுற்றுச்சூழல், சர்வதேச வர்த்தகம், விவசாயம், கொத்தடிமைத் தொழிலாளர்கள், கடல் கடந்த தொழிலாளிகள் போன்றவற்றில் தன்னை ஈடுபடுத்திக் கொண்டிருக்கும் போராளி. வெறும் சர்ச்சைகளை உருவாக்கி வரும் தன்மையில் அல்லாமல் அது குறித்த செயல் திட்டங்களில் அக்கறை கொண்டு செயலாற்றுபவர் என்ற நிலையில் இந்தப் புத்தகத்துக்கான நியாயங்களையும் கொண்டிருப்பவர்.இந்த விவாதங்களுக்கு அடிப்படையாக 2000 ஆண்டில் திஹேக்கில் நடைபெற்ற இரண்டாவது உலக நீர் மன்றம் எழுப்பிய நீர் ஒரு வணிகப் பொருளா என்ற கேள்வி பின்னர் விடைகளைக் தேடி விசுவரூபித்தது. நீர் உலகத் தேவை என்ற வரையறையும் அங்குதான் தொடங்கியது.

இதன் விளைவாய் நீர் தனியார்மயமாக்கப்பட்டல் உலகின் பல பாகங்களில் நடைபெற்று வருவதை இதில் விளக்குகிறார்.தனியார் துறை திறமையானது. தேவையான பெருமளவு முதலீட்டைப் பெற அவற்றால் முடியும். சரியான போட்டிகளை உருவாக்கும்

என்ற பொது வாதங்கள் தகர்ந்து போயிருப்பதான உலக நிகழ்வுகளை பால்பாஸ்கர் விரிவாகக் கூறுகிறார்.இதன் தொடர்ச்சியாய் ஆறுகள் கூட தனியார்மயமாக்கப் பட்டிருப்பதன் சாட்சிகளை முன் வைத்து அதிர்ச்சிக்குள்ளாக்குகிறார். பத்து ஆண்டுகளுக்கு முன்பே சட்டீஸ்கர் பிரதேசத்தின் சியோகத் ஆற்றின் ஒரு பகுதி கைலாஷ் சோளி என்ற 'ரியல் எஸ்டேட்' அதிபர் ஒருவருக்குச் செய்து தந்த ஒப்பந்தத்தின்படி தனியார்மயமாகியிருக்கிறது.

தெற்காசியாவிலேயே முதலாவதாக ஒரு வகை தண்ணீர் தனியார்மயமாக்கல் திட்டம் திருப்பூரில் நிறைவேற்றப்பட்டுக் கொண்டிருக்கிறது. இத்திட்ட செயல்முறை செலவுகளைத்தனியார் அரசுடன் பகிர்ந்துகொள்வதும், பின்னர் தனக்கு உரிமையாக்கி இயக்குவதும் இதன் அடிப்படையாகும். இதில் பவானியில் தண்ணீர் இருக்கும்வரை தொழில்துறையினர் பயன்பெறலாம். மக்களின் குடிநீருக்கு முன் உரிமையில்லை. பவானி நீர் இயற்கையாகவோ அல்லது சட்ட ரீதியானத் தடையால் சிக்கலாகும்போது லாபம் கருதி இதை இப்போது நிறைவேற்றிவரும் பன்னாட்டு நிறுவனங்கள் கைவிடுவதோ, மிக அதிகக் கட்டணங்களை வசூலிப்பதோ நிகழலாம். அப்போது மூன்றாம் உலக நாடுகளின் குப்பைக்கூடையாக இருக்கும் திருப்பூர் நகரம் கடும் நெருக்கடிகளுக்கு உள்ளாகும்.'இனி இந்தியாவில் ஏழைக்கு நீர் கிடைக்காது; பஞ்சச் சாவுகள் போல் தாகச் சாவுகளும் ஏற்படலாம்' என்ற அபாயத்தைப் பால்பாஸ்கர் சுட்டிக்காட்டுவதோடு, மகசேச விருது பெற்ற ராஜேந்திரசிங் போன்றோரின் நீராதாரத்தைக் காக்கும் செயல்பாடுகளை முன் வைக்கிறார்.

**வேடியப்பன்**

வேடியப்பன் மலை சிறு தெய்வ வழிபாட்டு இடம். வேட்டுவர் தொழில் சார்ந்த வேடியப்பன் சிறு தெய்வம். சிறு விவசாயம் மற்றும் வேலைக்காக பெங்களூர் செல்லும் மக்களை அப்பகுதியில் கண்டிருக்கிறேன். ஓரளவு வசதியான விவசாயப் பகுதிதான் அது. அதை மீறி அவர்கள் சென்னைக்கும் பெங்களூருக்கும் செல்வது ஆச்சர்யமாகவே எனக்கு இருந்திருக்கிறது. கவுத்தி வேடியப்பன் மலையின் நீர் இந்தப் பகுதி விவசாயத்திற்குப் பெரிதும் உதவுகிறது. இம்மலை சார்ந்த மற்றும் திருவண்ணாமலை மக்களின் குடிநீர்

ஆதாரம் பாதிக்கப்படும். திருவண்ணாமலை சுற்றியுள்ள பகுதிகளின் விவசாய ஆதாரத்திற்கு இங்குப் பெருகும் சிற்றோடைகள் காரணம். இரும்புத் தாதுக்காக மலை உடைக்கப்படும்போது அது ஏற்படுத்தும் ஒலி மாசும், காற்று மாசும் பல நோய்களை பரப்பும் சுலபமாய்.

**பசுமைக்கட்சிகள்**

இயற்கை மனிதனோடு சமன்பாட்டில் எப்போதும் இருந்து வருகிறது. எல்லா உயிர்களும் ஒன்றோடு ஒன்று இணைந்து பின்னி பல்வகை உயிர்களின் தொடர்ந்த இயக்கத்தைத் தக்க வைத்திருக்கிறது. மனிதன் இயற்கையோடு சேர்ந்து சம உறவு நீடிப்பதற்கான காரியங்களில் ஈடுபட சூழலியல் விரும்புகிறது. மக்களின் வாழ்வாதாரமும் வாழ்வியலும் சூழலியல் பிரச்சினைகளைக் கொண்டு வருகின்றன. காடுகள் அழிப்பு பெரும் அணைகள் கட்டப்படல், விவசாயக் கூலிகளின் இடப்பெயர்வு போன்றவை சூழலியல் போராட்டங்களாக வடிவெடுத்திருக்கிறது. அரசியல் அதிகாரம், முடிவெடுக்கும் அதிகாரம் நகர மக்களிடம் குவிந்து, வளர்ச்சியின் பெயரால் சூழல் சார்ந்த மக்களை அவர்களின் இருப்பிடங்களிலிருந்து விரட்டிவிட்டது.

இந்தச் சூழலில் சூழலியல் நடவடிக்கைகளை அமுல்படுத்துவதும் உலகமயத்திற்கு எதிரான இயக்கங்களும் மிகவும் அவசியமாகிறது. அடிப்படைக் கல்வி, இலவசக் கல்வி, எளிய மருத்துவ வசதி சேவைகள் தருவதன் மூலம் சுமூகமாக்கப்பட்ட வேண்டிய பிரச்சினைகள் இன்றைய அதிகாரத்துவத்தின் சமூகக் கொள்கைகளால் புறக்கணிக்கப்படுகின்றன. எனவேதான் மிகவும் எளிமையாக தீர்க்கப்படவேண்டிய அம்சங்கள் பெரும் சூழலியல் பிரச்சினைகளாக விரிவடைந்துள்ளன.சூழலியலை முன் வைக்கும் பிற கட்சிகளோ, விவசாயிகளின் கட்சிகளோ பசுமைக் கட்சிக்கு மாற்றாக இல்லை என்பதையும் கவனத்தில் கொள்ள வேண்டும்.

**வயிற்றின் குரல்**

திருப்பூரில் வந்திறங்கும் அதிநவீன பின்னலாடை இயந்திரங்களை அவ்வப்போது நடக்கும் உலக பின்னலாடைப் பொருட்கள் கண்காட்சியில் காணமுடியும். அவ்வகை

இயந்திரங்கள் மனித உழைப்பைத் தொழிற்சாலைகளுக்கு வெளியில் மனிதர்களைத் தள்ளுபவை. பின்னலாடைத் தொழில் இன்று அதிகம் புழக்கத்திலிருக்கும் பங்களாதேஷ், பாகிஸ்தான், கொரியா, சீன நாடுகளிலும் இது சம்பந்தமான நிலைமைகள் மாறவில்லை. பின்னலாடை தரும் அந்நியச் செலவாணியை மனதில்கொண்டு மட்டும் மக்களின் வாழ்க்கை மூலாதாரங்களை நிலைக்கச் செய்ய முடியாது என்பதை உணரும் சில சந்தர்ப்பங்களும் ஏற்படுகின்றன.மனிதனின் சூழலியலுடன் தொடர்புகொண்ட பொருளாதாரம் மனிதனைப் பற்றியும் சுற்றுச்சூழல் பற்றியும் இரு கண்களால் இயங்க வேண்டியவை.

சுற்றுச்சூழல் பிரச்சினைகளால் வளர்ந்துள்ள கேட்டைக் கட்டுப்படுத்த உயர் வளர்ச்சி தேவை என்பதை புதிய இயந்திரங்களின் உற்பத்தியாளர்கள் கட்டிக்காத்துக் கொண்டிருக்கிறார்கள். ஆனால் இந்தச் சுற்றுச்சூழல் பிரச்சினைகளே இப்போதடைந் திருக்கும் வளர்ச்சியால் வந்ததுதான் என்பதை நினைவில் கொள்ளவேண்டும்.தொழில்நுட்பமும், இயந்திரங்களும் வேலைப் பளுவைக் குறைக்கின்றது. உடல் உழைப்பு இல்லாத மனிதனின் நரம்பு நிறைய வேதனைகளைத்தான் அனுபவிக்க வேண்டியிருக்கிறது. இயற்கை சூறையாடப்பட்டு, உற்பத்தியும், பொருளாதாரமும் புள்ளி விபரங்களால் பெரிதுபடுத்தப்பட்ட சூழல் உழைப்பு மனிதனை ஊனமாக்கி புதிய நவீன மனிதனைச் சோம்பலானஇயந்திரமாக, அரசின் இலவசத் திட்ட கொப்பரைகளைக் கையில் ஏந்திக்கொண்டு நிற்பவனாக இருக்கச் செய்கிறது.

**நெகிழி குப்பை**

‘உற்பத்தியாளரே பொறுப்பேற்கும் கொள்கை’ என்பது இன்றைக்கு முக்கியத்துவம் கொண்ட விசயமாக கவனத்தில் எடுத்துக்கொள்ளப்பட்டிருக்கிறது. எந்தவகைக் குப்பை எதிலிருந்து வருகிறதோ அதை கழித்துக்கட்டும் பொறுப்பினையும் உற்பத்தியாளரே ஏற்க வேண்டும் என்கிறதாகிறது. ஒரு முறை மட்டும் பயன்படுத்தி தூக்கியெறியும் பிளாஸ்டிக் இயற்கைக்கும் உயிரினங்களுக்கும் மாபெரும் ஆபத்தாக விளங்கி வருகின்றன. இது

மண்ணில் மட்கி அழியாத தன்மைகொண்டது என்பதால் சுற்றுச்சூழலுக்குப் பெரும் சவாலாய் அமைந்துள்ளது.

மக்காத பிளாஸ்டிக் பொருட்களைத் தூக்கி எறியும்போது கழிவு நீர்க்குழாய்களை அடைத்து நோய் பரப்பும் பூச்சிகளைப் பெருக்குகின்றன. இக்குப்பையை எரிப்பதால் வெளியாகும் நச்சு வாயு, புற்றுநோய், ஆண்மைக் குறைவு, நரம்பு மண்டல பாதிப்பு உள்ளிட்ட பிரச்சினைகளை ஏற்படுத்துகிறது. உலக அளவில் பிளாஸ்டிக் பொருட்களை அதிகம் பயன்படுத்தும் நாடுகளில் முதல் பத்து இடங்களில் இந்தியாவும் உள்ளது. பிளாஸ்டிக்கின் பயன்பாட்டைக் குறைத்தலும் பிளாஸ்டிக்கிற்கு மாற்றான பொருட்களைப் பயன்படுத்துவதும் அவசியமாகிறது. மறுசுழற்சி முறைகளுக்கு உபயோகப்படுத்தப்படும் பிளாஸ்டிக் பொருட்களின் மூலம் நிரந்தரக் குப்பைகளும் அதிகரிக்கின்றன. அது பொருளாதார ரீதியில் லாபகரமானதாக இல்லை.பிளாஸ்டிக் பல்வகைகளில் விஸ்வரூபம் எடுக்கக் கூடியதாகும். பாலிதீன் எனப்படும் வகை பிளாஸ்டிக் பொட்டலத் தேவைக்காக அதிகமாய் பயன்படுத்தப்படுகிறது. பாலிதீனுக்கு எதிராக துணிப்பைகள், கண்ணாடி பாட்டில், தகரம், பீங்கான் போன்றவை மாற்றாகப் பயன்படும். பாலியுரிதேன் மறு சுழற்சிக்குப் பயன்படுத்த முடியாது. ஒரே ஒரு முறை மட்டுமே பயன்படுத்த முடியும். இலவம் பஞ்சு, சணல், பருத்திப் பஞ்சை இதற்கு மாற்றாக்கலாம்.புற்றுநோய், மலட்டுத் தன்மை, ஹார்மோன் கோளாறு, நரம்பு மண்டலக் கோளாறுகள் நோய்களுக்குப் பிளாஸ்டிக் கழிவு காரணமாக இருக்கிறது.பிளாஸ்டிக்கை நெகிழி என்ற சொல்லின் பயன்பாட்டிற்குக் கொண்டு வந்திருக்கிறோம். எங்காவது செல்லும்போது ஒரு துணிப்பையைக் கொண்டு செல்லலாம். ஆயிரம் நெகிழிப் பைகளைத் தவிர்த்ததாக அது அமையும்.

**மரபணு மாற்றம் என்ற மாய்மாலம்**

மூல விதைகளைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவர ஆடும் ஆட்டமே மரபணு மாற்று விதைத் தொழில்நுட்பம் என்பதை அமெரிக்கா நன்கு உணர்ந்து செயல்படுகிறது. இவ்வகை பயிர் பொருட்கள் சிறுநீரகக் கோளாறு, தோல் வியாதிகள், ஒவ்வாமை, இதயநோய், புற்றுநோய் என்று 55 வகையானபாதிப்புகளை

ஏற்படுத்துகின்றன.பி.டி.கத்திரிக்காயைத் தொடர்ந்து நெல், பருப்பு, கோதுமை, மூலிகைகள், காய்கனிகள், சிறு தானியங்கள் என்று பல பயிர்களின் மரபணு மாற்றப்பட்ட ரகங்களும் தயாராகிக் கொண்டிருக்கின்றன என்பது ஓர் அபாயம். இந்தியாவில் சுமார் 2000 கத்திரிக்காய் ரகங்கள் உள்ளன. கத்திரிக்காய் சுலபமாகக் கிடைக்கிறது.

தமிழ் மாற்று மருத்துவத்தில் முக்கிய பங்கு வகிக்கும் சித்த ஆயுர்வேத மருத்துவ முறைகளில் பயன்படும் கத்திரிக்காயில் இந்த வகை சேருமானால் மருத்துவ குணங்கள் காணாமல் போய்விடும். மரபணு மாற்றத்தால் மகரந்த சேர்க்கை மூலம் எல்லா வகைப் பயிர்களும் மாசுபடும் என்பது தலையாயது.

அதிகப்படியான பூச்சிக்கொல்லிகளின் நுகர்வால் பாதிப்புக்கு உள்ளாகி நிலத்தை இழந்துகொண்டிருக்கும் விவசாயிகள் மரபணு மாற்ற பி. டி. பருத்தி வகையால் இன்னும் பாதிப்பிற்கு உள்ளாகியிருக்கிறார்கள். மரபணு மாற்றப்பட்ட பயிர்களால் விவசாயிகளுக்குப் பொருளாதார ரீதியாக பலன் பெரிதாக இல்லை. தனது நிலத்தில் என்ன பயிரிட வேண்டும் என்பது விவசாயின் உரிமையாக இருப்பது பறிபோகிறது. நமது உள்ளூர்வகை மரபணு பயிர்கள் காணாமல்போய்விடும்.

**சூடு**

இயந்திரமயமான வாழ்க்கையில் இயந்திரங்கள் மனிதனை முடக்கிக்கொண்டே இருக்கின்றன.இயற்கையை மீறுகிற வெற்றிகொள்கிற எண்ணத்தில் மனிதனின் தொடர்ந்த செயல்பாடு இருந்துகொண்டேயிருக்கிறது. இயற்கையின் சமன்பாடும் குலைந்து பூமி சூடாகிக்கொண்டிருக்கிறது. ஒரு பக்கம் வெள்ளம் மறுபக்கம் வறட்சி. விவசாயம் வெகுவாகக் குறைந்து போதல், குடிநீர் தட்டுப்பாடு, காடுகள் அழிந்து போதல் என்று பெரும் விளைவுகளை வரும் காலத்தில் சந்திக்கப் போகிறோம்.இவையே பசுமைக்குடில் வாயுக்கள் எனப்படுபவை சூரியனிலிருந்து பூமிக்கு வரும் சூடு பூவுலகில் மண், தண்ணீர் உயிரிகள் ஆகியவற்றால் உறிஞ்சிக்கொள்வதைத் தவிர மீதமுள்ளவை பசுமைக்குடில் வாயுக்களால் வான் வெளிக்கே திருப்பிவிடப்படுகிறது. ஓசோன் படலத்தைக் கிழித்து புற ஊதாக் கதிர்களைப் பூமியின் மீது படரச் செய்து பூமியில் வாழும் உயிரினங்களுக்குப் பாதிப்பை உண்டுபண்ணும். பூமியின் சராசரி வெப்பம் அதிகமாகக்

கூடினாலும், குறைந்தாலும் பூமிக்குச் சிரமம்தான். தொழிற்சாலை எரிபொருளுக்காகமரங்களைஎரிப்பதுபலகாலமாகநடைபெறுகிறது. இதுபூமியின் வெப்பத்தைக்கூட்டுகிறது.

**மணற்கொள்ளை**

மணல் தொடர்ந்து எடுக்கப்படுவதால் நிலத்தடி நீர் மட்டம் குறைந்து கண்ணில் தென்படும் மரங்கள் பச்சைத் தன்மையை இழந்து நிற்கின்றன. ரொம்பவும் ஆழமாய் மணலைத் தோண்டுவதால் தண்ணீரை உறிஞ்சிப் பாதுகாக்கும் திறன் ஆற்றுக்கு இல்லாமல் போகிறது. மணலில் உள்ள ஒரு வகை பாக்டீரியா நீரைத் தூய்மையாக்கும் குணம்கொண்டது. தொடரும் மணற்கொள்ளை பாக்டீரியாவின் அளவை வெகுவாகக் குறைத்துவிடுகிறது.

மணலை வெறும் கட்டடம் கட்டுவதற்காக உதவும் பொருளாகப் பார்க்காமல், இயற்கை நீரைச் சேமித்து வைக்க உருவாக்கிய கொடையாகத்தான் பார்க்கவேண்டும். மணல் கொள்ளையால் நீரில் இருக்கும் கழிவுகள் வடிகட்டப்படாமல் நிலத்தில் இறங்கி மாசு விளைவிக்கிறது. மலேரியா போன்ற பெரிய நோய்கள் பாதித்து இறந்தவர்களை விட நல்ல சுத்தமான நீர் கிடைக்காமல் இறந்தவர்கள் எண்ணிக்கை அதிகம்தான்.

**பார்த்தீனியம்**

சிறுசிறு பூக்களைக்கொண்ட பார்த்தீனியம் செடிப் பரப்பைப் பார்க்கிற எவருக்கும் அதன் ஒருவித அழகு மனதைக் கவர்ந்துவிடும். ஆனால் அது ஒரு வித விஷ செடி என்ற உணர்வு வந்ததும் மனம் திடுக்கிட்டுப் போகும். ஒரு செடியே 5000 விதைகள் வரை உற்பத்தி செய்து பரவ வைப்பது. எனவே எங்கும் சுலபமாகப் பரவிவிடுகிறது. அதன் கீழ் வேறு வகைச் செடிகளை அது விளர விடாது.

நிலத்தை நன்கு உழுது களையில்லாமல் விவசாயத்திற்குப் பயன்படுத்தும்போது பார்த்தீனியம் செடி வளர வாய்ப்பில்லாமல் செய்யலாம்.பூக்கும் பருவத்திற்கு முன் வேருடன் பிடுங்கி அழிப்பது நல்லது. கேசியா இன செடி வளர்ப்பில் இது கட்டுப்படுகிறது. பிடுங்கி உரக்குழியில் போட்டு மூடலாம். 1 கிலோ உப்பு, ஒரு லிட்டர்

சோப்பு எண்ணெய்யை 10 லிட்டர் தண்ணீரில் கலந்து தெளித்தால் வாடிவிடும். நிரந்தரமாய் இதை சுருக்கிவிடுதல் வேண்டும்.

**ஆஸ்பெஸ்டாஸ்**

ஓலைகள் மரப்பொருட்கள் தீப்பிடிக்கிற வகையில் இருப்பதால் தீயைத் தவிர்க்க ஆஸ்பெஸ்டாஸ் பயன்படுத்த ஆரம்பித்தனர்.ஆஸ்பெஸ்டாஸ் வந்து ஐம்பது ஆண்டுகள் கழித்து மேசோதாலியமா என்ற நோய் கண்டுபிடிக்கப்பட்டது. அதிகளவு ஆஸ்பெஸ்டாஸ் உபயோகிப்பு இந்த நோய்க்குக் காரணமாக அறியப்பட்டது. இந்தியா ஆஸ்பெஸ்டாஸ் பயன்பாட்டில் உலகில் இரண்டாம் இடத்தில் உள்ளது.

ஆஸ்பெஸ்டாஸ் ஏற்படுத்தும் கொடிய நோய்களை முன் வைத்து ஐம்பதிற்கும் மேற்பட்ட நாடுகள் இதன் பயன்பாட்டைத் தடை செய்துள்ளன. ஐக்கிய நாடுகள் அமைப்பு சுற்றுச்சூழல் பாதுகாப்பு சட்டமொன்றை 1989-இல்உருவாக்கி அதன் பயன்பாட்டைத் தடை செய்துள்ளது. ஆஸ்பெஸ்டாஸ் தகடுகளுக்குப் பதிலாக பிரமிட் பைபர், இரும்புத் தகடுகள் மற்றும் சில குறிப்பிட்ட பைபர் வகைகளைப் பயன்படுத்தலாம்.

**சுவை, மணம், நிறம்**

தமிழர்கள் அறுசுவை உணவில் அக்கறை கொண்டவர்கள். அறுசுவை உணவு தயாரிக்க இயந்திரகதியில் பெரும்பான்மையோருக்குப் பொறுமையும், நேரமும் இல்லாமல் போக பாஸ்ட் புட்டிற்கு மாறிக்கொண்டு வருகிறார்கள். அஜினோமோட்டோவைக் கலந்துவிட்டால் போதும். சாதாரண உணவோ, கலப்பட உணவோ, சத்துக் குறைவான உணவோ, சுவையான உணவாகிவிடுகிறது. இது உடல் எடையைக் கூட்டுகிறது. தலைவலி, உடல் சோர்வு என்று சோர்வை ஏற்படுத்தி மேலும் உணவு சாப்பிட வைக்கிறது. ஞாபக சக்தி குறைவு, கவனக் குறைவு, திட்டமிட்டு செயல்படும் திறன் குறைவு என்று மனித உடலின் செயல்பாட்டை முடக்குகிறது. அதுவும் குழந்தைகளை இது சீக்கிரம் பாதிக்கிறது.குழந்தைகளும், சிறார்களும் விரும்பிச் சாப்பிடும் பிட்சா, பர்கர், பிரைடு ரைஸ், நூடுல்ஸ் போன்றவற்றில் இது சாதாரணமாக

சேர்க்கப்படுகிறது. வாசனை, ருசிக்காக மட்டும் சேர்க்கப்படும் இது பல அபாய நோய்களின் அடிப்படையாக இருக்கிறது. அஜினோமோட்டோ தரும் போதையைப் போல புகையிலை தரும் போதையும், மிதப்பும் பல கோடிக்கணக்கானவர்களை அடிமையாக்கியுள்ளது. புகையிலைப் பொருட்களில் 4000 வகை நச்சுப் பொருட்கள் அடங்கி இருக்கிறதாம்.புகையிலை உபயோகிப்பது உடல் நலத்திற்குக் கேடு என்று சம்பிரதாய ரீதியான வாசகங்கள் எங்கும் பொறிக்கப்பட்டாலும், அதன் உபயோகத்தால் பாதிக்கப்பட்டவர்களின் உடல்கள் மண்ணரிப்பு அடைந்த நிலமாகத்தான் காட்சியளிக்கின்றன.

அறிவியலின்துணைகொண்டுவளர்ச்சிஎன்றபோர்வையில்நாம்வாழும்சுற்றுச்சூழலைஎவ்வாறுஅழித்துக்கொண்டிருக்கின்றோம்என்பதைசுப்ரபாரதிமணியன்சூழல்அறம்என்றநூலில்பலகட்டுரைகளின்வழிபேசியுள்ளார். அறிவியல்தவிர்க்கஇயலாதது. ஆனால்அதனால்ஏற்படும்அழிவுகளும்எதிர்வினைகளும்கணக்கில்கொள்ளப்படவேண்டும் என்பதையேசுப்ரபாரதிமணியன்வலியுறுத்துகின்றார்.

சூழல்குறித்தஅறம்அறிவியலுக்கும்வேண்டும்நமக்கும்வேண்டும்.

அதுஇல்லையெனில்இந்தஉலகின்அழிவிற்குநாமேகாரணமாகிவிடுவோம்.

காரப்பரேட்நிறுவனங்களும்தனிமனிதர்களும்அரசின்கொள்கைகளும்சுற்றுச்சூழல்அழிவிற்கும்பல்லுயிர்சமனின்மைக்கும்வெப்பமயமாதலுக்கும்எவ்வாறுகாரணமாகின்றனஎன்பதைவிரிவாகவிளக்கியுள்ளஇந்தநூல்எதிர்காலஉலகத்தைப்பற்றிக்கவலைகொள்கிறதுஎன்பதைஉணரலாம்.

**வினாக்கள்**

| வ.எண | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | சூழல் அறம் என்றால் என்ன? அதன் இன்றியமையாமையை விளக்குக | K4 | CO3 | PO4 |
| 2 | மின் குப்பையைச் சுத்தம் செய்வது குறித்து சுப்ரபாரதிமணியன் குறிப்பிடுவனவற்றைப் தொகுத்துரைக்க. | K2 | CO2 | PO2 |
| 3 | சூழல் அறம்குறிப்பிடும் சுற்றுச் சூழல் பாதுகாப்பில் தனிநபரின் பொறுப்புகள் யாவை? | K4 | CO2 | PO1 |
| 4 | நவீன வளர்ச்சிக்கும் மற்றும் சூழலியல் பாதிப்பிற்க்கும்உள்ள தொடர்பைச் சுருக்கமாக விளக்குக. | K3 | CO3 | PO2 |
| 5 | சூழல்அறம் நூலின் சமூக முக்கியத்துவத்தை எடுத்துரைக்கவும். | K2 | CO1 | PO3 |

| வ.எண | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | சூழல்அறம்நுாலை ஒரு சூழலியல் அறநூலாக ஆய்வு ரீதியில் மதிப்பீடு செய்க. | K2 | CO3 | PO4 |
| 2 | சுற்றுச்சூழல் சீர்கேடு மற்றும் அதன் சமூக விளைவுகளை நூலின்அடிப்படையில் விளக்குக. | K5 | CO2 | PO6 |
| 3 | சூழல்அறம் – ஒரு வாழ்வியல் தத்துவமாக எவ்வாறு வடிவமைக்கப்பட்டுள்ளது? | k3 | CO1 | PO2 |
| 4 | சூழலியல் நெறிகள் மற்றும் நவீன உலக சவால்கள் குறித்து நூலில் கூறப்பட்ட கருத்துகளை ஆய்வு செய்க. | K2 | CO2 | PO4 |
| 5 | ஒரு சமூகச்சீர்திருத்தக் குரலாகசூழல்அறம் எவ்வாறு விளங்குகிறது? மதிப்பிடுக. | K4 | CO3 | PO2 |

# அலகு 4

## சமூகம்

## நாவல் - சு.தமிழ்ச்செல்வி

கீதாரி நாவலின் ஆசிரியர் சு.தமிழ்ச்செல்வி ஆவார். தமிழ்ப் படைப்புலகில் ஒரு கவிஞராக அறிமுகமாகி, சிறுகதைகள் படைத்தளித்துப் பின்னர் புதினப் படைப்பாளியாக மலர்ந்தவர். தமிழில் பேசப்படும் பெண்ணியப் புதினப் படைப்பாளிகளுள் இவரும் ஒருவர். பலவிருதுகளைப் பெற்றவர். இவரின் படைப்புகள் பல கல்வி நிறுவனங்களில் பாடமாக வைக்கப்பட்டுள்ள. இவர் படைத்துள்ள கீதாரி புதினத்தின் வழி ஒரு குறிப்பிட்ட சமூகம் படைப்பாளியால் எவ்வாறு பார்க்கப்பெற்றுள்ளது என்பதை இப்பகுதியில் காணலாம். முதலில் படைப்பாளி குறித்த முழுமையான அறிமுகத்தைக் காண்போம்.

### படைப்பாளியின் குடும்பம்

திருவாரூர் மாவட்டம் கற்பகநாதர் குளத்தில் 04.05.1971 ஆண்டு பிறந்தவர் சு.தமிழ்ச்செல்வி. தந்தை சுப்பிரமணி. இவர் ஒரு ஹோமியோபதி மருத்துவராகப் பணியாற்றியவர். தாய் முத்துலட்சுமி. படைப்பாளியின் உடன்பிறப்புகள் இரண்டு சகோதரிகளும் ஒரு சகோதரனும் ஆவர்.கடைசியாகப் பிறந்தவர் சு.தமிழ்ச்செல்வி.

### கல்வியும் பணியும்

கற்பகநாதர் குளத்தில் அரசு உதவி பெறும் தனியார் பள்ளியில் தொடக்கக் கல்வியைப் பெற்றார். இடும்பாவனம் என்னும் ஊரில் ஆறாம் வகுப்பையும் ஏழாம் வகுப்பபையும் நிறைவு செய்தார்.எட்டாம் வகுப்புமுதல் பத்தாம் வகுப்புவரை வேதாரண்யத்தில் கஸ்தூரிபாய் கன்யர்குருகுலத்தில் படித்தார். தொடர்ந்து திருத்துறைப்பூண்டியில் ஆசிரியர் பயிற்சியை முடித்தார்.

சொந்த ஊரான கற்பகநாதர் குளத்தில் அரசு உதவி பெறும் தனியார் பள்ளியில் ஆறு வருடம் தற்காலிக ஆசிரியராகப் பணியாற்றினார். இப்பள்ளியில் பணியாற்றும் போதே அஞ்சல் வழியில் பி.லிட்., எம்.ஏ., பட்டங்களை முடித்தார். திருமணமாகிக் குழந்தை பிறந்தவுடன் தற்காலிக ஆசிரியப் பணியை விட்டுவிட்டு விருத்தாச்சலத்திற்குச் சென்றுவிட்டார். அங்கு அவர் இருந்த போது அரசு ஆசிரியப்பணி கிடைத்தது.

சு.தமிழ்ச்செல்வி விருத்தாச்சலம், கார்குடல் என்னும் சிற்றூரில் ஊராட்சி ஒன்றிய நடுநிலைப் பள்ளியில் ஆசிரியராகப் பணியாற்றி வருகிறார்.

## திருமணம்

நாவலாசிரியர் சு.தமிழ்ச்செல்வி கவிஞர் கரிகாலனைத் திருமணம் செய்து கொண்டார். கவிஞர் கரிகாலன் தன்னுடைய கவிதைகளால் மட்டுமின்றி ‘நிலாவை வரைபவன்’ என்கின்ற நாவலின் வாயிலாகவும் ‘களம் புதிது’ என்கின்ற இதழின் மூலமாகவும் தமிழ் இலக்கிய உலகில் நன்கு அறியப்பட்டவர். கணவனும் மனைவியும் படைப்பாளிகள் என்பதும் தமிழ் உலகம் நன்கு அறிந்தவர்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது. கவிஞர் கரிகாலனும் அரசுப்பள்ளி ஆசிரியர். இவர்களுக்கு மூன்று பிள்ளைகள் இருக்கிறார்கள்.

## விருதுகள்

சு.தமிழ்ச்செல்விக்கு அவரது படைப்புகளுக்காகப் பல விருதுகள் வழங்கப்பெற்றுள்ளன.தமிழ் வளர்ச்சித் துறையின் சிறந்த நாவல் விருது(மாணிக்கம் - 2002),தமிழ்நாடு முற்போக்கு எழுத்தாளர் சங்க விருது(கற்றாழை),கலைஞர் பொற்கிழி விருது,ஸ்பாரோ விருது ஆகிய விருதுகளைப் பெற்றுள்ளார்.

## படைப்புகள்

மாணிக்கம்(2002),அளம்(2002),கீதாரி(2003),கற்றாழை (2005), ஆறுகாட்டுத்துறை(2006), கண்ணகி (2008), பொன்னாச்சரம் (2010) ஆகியபுதினங்களையும்சாமுண்டி (2006), சு.தமிழ்ச்செல்வி சிறுகதைகள் (2010) ஆகியஇருசிறுகதைதொகுப்புகளையும்படைத்தளித்துள்ளார்.

## கீதாரிநாவல்கதைச்சுருக்கம்

இராமநாதபுரம் மாவட்டத்திலிருந்து மேய்ச்சலுக்காக விழுப்புரம், ஆற்காடு, கடலூர், சிதம்பரம் ஆகிய பகுதிகளுக்குக் குடிபெயர்ந்த இடையர்களின் வாழ்வியலை மையமாகக் கொண்டு இப்புதினம் அமைந்துள்ளது. படைப்பாளி இடையராக இல்லாத

போதும்இடையர்களோடு பழகி, பார்த்த, கேட்ட அனுபவங்களைக் கொண்டு இப்புதினத்தைப் படைத்துள்ளார்.

இராமு கீதாரி தனது மனைவி இருளாயி, மகள் முத்தம்மாள், வெள்ளைச்சாமி எனும் வளர்ப்பு மகனோடு வளசையில் (குடிசை) இருக்கிறார். ஒரு நாள் இரவில் மழை பெய்கின்றது. அந்நேரத்தில் மனநலம் குன்றிய கர்ப்பிணிப் பெண் ஒருத்தி வருகின்றாள். இரட்டைப் பெண் பிள்ளைகளைப் பெற்றெடுக்கிறாள். அப்பெண்ணிற்குப் பிரசவம் பார்ப்பது இராமு கீதாரிதான். ஆட்டிற்குப் பிரசவம் பார்த்த அனுபவம் இங்கு உதவுகிறது. அந்தக் குழந்தைகளின் பெயர் மூத்தவள் சிவப்பி, இளையவள் கரிச்சா. மறுநாள் காலையில் ஊர் மக்களைக் கூப்பிட்டு தகவலைக் கூறுகிறார். ஒரு குழந்தையைத் தான் வளர்த்துக் கொள்கிறேன் என்று இராமு கீதாரி உறுதியளிக்கிறார். கரையாங்காட்டுப் பண்ணைக்காரர் சாம்பசிவம் இன்னொரு குழந்தையை நான் எடுத்து வளர்க்கிறேன் என்கிறார். ஆனால், இப்போது என்னால் குழந்தையை எடுத்துச் செல்ல இயலாது. காரணம் எனக்கு இரண்டு மனைவிகள், வளர்ப்பதில் பிரச்சனை வரும். அதனால் அக்குழந்தை பள்ளிக்குச் செல்லும் பருவத்தில் வந்து வாங்கி கொள்வதாக உறுதியளிக்கிறார். கூறியது போன்று ஆறு வருடங்கள் கழித்து சிவப்பியை வாங்கிக் கொண்டு செல்கிறார் கரையாங்காட்டுப் பண்ணையார் சாம்பசிவம். சாம்பசிவத்திற்கு இரண்டு மனைவிகள் அதனால், அந்தப் பெண்ணை வீட்டு வேலை செய்யச் சொல்லி துன்புறுத்தி வளர்க்கிறார்.இராமு கீதாரி – இருளாயி பெற்றெடுத்த மகள் முத்தம்மாளும் அவளுடைய கணவரும் பொறாமை கொண்டு தங்களுடன் வந்து தங்குமாறு அழைக்கின்றனர். அதனால், ராமு கீதாரி இருளாயி இருவரும் தனியாகக் கரிச்சா, வெள்ளைச்சாமியைக் குடிசையில் விட்டுவிட்டுச் செல்கின்றனர்.கரிச்சா, வெள்ளைச்சாமியோடு உதவியாக வளசையில் இருக்கிறாள். வளர்ந்து பெரியவள்ஆகின்றாள். தான் பெரிய மனுசி ஆனதைத் தன்னுடைய அக்கா சிவப்பியிடம் போய்க் கூறுகின்றாள். சிவப்பி தான் பெரிய மனுசி ஆனதையும், தான் படுகின்ற துன்பத்தையும் கரிச்சாவிடம் பகிர்ந்து கொள்கிறாள். அதனை, ராமு கீதாரியிடம் சொல்லுமாறு அறிவுறுத்துகிறாள் சிவப்பி. அவ்வாறு சொல்லாமல் மீண்டும் கரிச்சா வெள்ளச்சாமி குடிசைக்குச் செல்கிறாள். சிவப்பி ஒரு நாள் ராமு கீதாரி இருக்கும் இடத்திற்குச் சென்று கரிச்சா இங்கு வந்தாளா என்று கேட்கிறாள். கரிச்சாவிற்கு நடந்த செய்தியைச் சிவப்பி மூலமாக அறிந்த ராமு கீதாரியும் இருளாயியும் தன் மகள் முத்தம்மாள்

வீட்டிற்கு அழைத்துச் சென்று கரிச்சாவிற்குச் சடங்குகளைச் செய்து முடிக்கின்றனர். சில நாள் கழித்து கரிச்சாவைப் பெண் பார்க்க வருகின்றனர். பெண் பார்க்க வந்த கூட்டத்தினர் வெள்ளையனையும், கரிச்சாவையும் இணைத்துத் தவறாகப் பேசுகின்றனர்.ராமு கீதாரி வெள்ளைச்சாமிக்கும் கரிச்சாவிற்கும்திருமணம் செய்து வைத்து இருவரையும் தனிக்குடிசை போட்டுக் கொண்டு இருக்குமாறு பணித்துவிட்டு தன்னோட மகள்மருமகனோடு சேர்ந்துவாழ்கிறார்.

அந்தப் பக்கம் உன்னோட அண்ணனே உன் தங்கச்சி கரிச்சாவைக் கல்யாணம் பண்ணிக்கும் போது என்னோட இருப்பதில் என்ன தவறு இருக்கிறது என்று சிவப்பியைத் தத்தெடுத்து வளர்த்த கரையன்காட்டுபண்ணைக்காரன் சாம்பசிவம் சிவப்பிக்குப் பாலியல் துன்புறுத்தல் செய்ததால் தற்கொலை செய்து இறந்துவிடுகிறாள். இச்செய்தி தெரியாமல் கரிச்சா ஒருநாள் தன் அக்கா சிவப்பியைப் பார்க்கச் செல்கிறாள். அப்போதுதான் சிவப்பி இறந்துவிட்ட துக்கச் செய்தியை அறிந்து மனம் நொந்துபோகின்றாள். தொடக்கத்தில் தயக்கம் இருந்தாலும் கரிச்சாவும், வெள்ளைச்சாமியும் குழந்தை இல்லை என்கிற கவலையைத் தவிர . எவ்விதச் சிக்கலும் இல்லாமல் வாழ்க்கையை நடத்தினர். ஆனால், சரியான மேய்ச்சல் நிலம் இல்லாததால் சிதம்பரம் என்ற ஊருக்கு நகர்ந்து செல்லும் சூழ்நிலை ஏற்படுகிறது. தன் மனம் மாறுவதற்கு இது ஒரு நல்ல நேரம் என்று கரிச்சாவும் நினைத்துச் செல்கிறாள். ஆனால், நடப்பதோ வேறு கீதாரியின்நிகழ்வு. அங்குதான் ராமு கீதாரியின்மைத்துனன் வீட்டில், வெள்ளைச்சாமியின் அண்ணன் பெரியசாமி இருக்கிறான். பெரியசாமியும் திருமணம் செய்து கொண்டு நல்லபடியாக மனைவி, குழந்தைகள், மைத்துனன், கொளுந்தியாள் என்னும் உறவுகளோடு வாழ்ந்து வருகிறான்.

குறிப்பிட்ட ஆடுகளை மட்டும் வைத்துக்கொண்டு மற்ற ஆடுகளை விற்று வெள்ளைச்சாமிக்குச் சொந்த ஊர் இராமநாதபுரத்தில் நிலம் வாங்குவதற்குத் தன்னுடைய மகள் முத்தமாளின் கணவனையும் வெள்ளைச்சாமியையும் அனுப்புகிறார் ராமு கீதாரி. அதன்பின்பு சிதம்பரம் வந்த வெள்ளைச்சாமி அங்குச் சிறுவயதில் பிரிந்த தனது அண்ணன் பெரியசாமியைச் சந்திக்கிறான். அப்போதுதான் குழந்தையின்மையைக் காரணம் காட்டி கரிச்சாவை விரட்டிவிட்டு தனது தங்கச்சியைத் திருமணம் செய்து வைக்க அண்ணனின் மனைவியும், அண்ணனின் மைத்துனன் ஓடையப்பனும் முடிவு செய்கின்றனர். வெள்ளைச்சாமியும் மற்றொரு திருமணத்திற்கு ஒத்துக்கொள்கிறான். இந்தச் செய்தி

கரிச்சாவின் காதில் படுகிறது. தன் மேல் உயிரையே வைத்திருந்த வெள்ளைச்சாமி இவ்வாறு மனசு மாறிவிட்டான் என்று வருத்தப்பட்டு, கரிச்சா வெள்ளைச்சாமியைப் பிரிந்து ராமு கீதாரியிடம் வந்து சேர்கின்றாள். ராமு கீதாரியோ பயங்கர பண நெருக்கடியில் இருக்கிறார். வெள்ளைச்சாமியிடம் ராமு கீதாரி கரிச்சாவோடு சேர்ந்து வாழ்ச்சொல்லியும் அவள் கேட்கவில்லை.அதனால், ராமு கீதாரி மனம் வருந்தி வெள்ளைச்சாமிக்குச் சாபம் கொடுத்துவிட்டு வந்துவிடுகிறார். வெள்ளைச்சாமியின் திருமணம் ஏதோ ஒரு காரணத்தினால் நின்று விடுகின்றது. ஆனாலும், கரிச்சாவை மீண்டும் அழைக்க வெள்ளைச்சாமி வரவில்லை.

வெள்ளைச்சாமியைப் பிரிந்து வந்த சில நாட்களிலே அவள் கருவுற்றிருப்பதை இருளாயிக்கு உடல்நிலை பாதிக்கப்பட்டதைச் சரிசெய்ய வந்த மருத்துவர் மூலம் அறிகின்றாள். ஆனால், வெள்ளைச்சாமியிடம் போகாமல் தானே சுயமாக நிற்கவேண்டும் என்ற வைராக்கியத்தில் ராமு கீதாரியிடம் ஆடுகளைப் பிடித்துக் கொடுக்க சொல்லி வளர்க்கிறாள். ஆண் குழந்தை பிறக்கிறது. ஆண்குழந்தையை நன்றாகப்படிக்க வைக்கவேண்டும் என்று நினைக்கின்றாள். ஆட்டைப் பிடிக்கவும், கட்டிவைக்கவும் தங்களுடைய ஆடு மேய்க்கும் தொழில் அனைத்தையும் தன் மகனுக்குக் கற்றுக்கொடுக்கிறாள். ஒருநாள் இரவில் சரிச்சா பாம்பு கடித்து இறந்துவிடுகிறாள். இறுதியில் ராமு கீதாரி கரிச்சாவின் மகனை வளர்க்கிறார்.

## கதைமாந்தர்கள்

இராமு, இருளாயி, வெள்ளைச்சாமி, கரிச்சா, சிவப்பி, சேது, ராமாயி, முத்தம்மாள், சாம்பசிவம் ஆகியோரின் பண்பு நலன்கள் சித்தரிக்கப்பட்டுள்ளன. முதன்மைக்கதாப்பாத்திரங்களாக ராமுகீதாரி, கரிச்சா,வெள்ளைச்சாமி மூவரும் பூவிடைப்பட்ட நார்ப்போல் கதை முழுக்க விரவி நிற்கின்றனர். இவர்களை உருவி எடுத்துவிட்டால் புதினம் பொலபொலவென வெறும் சொற்களாய்க் கொட்டிவிடும்.

## ராமு கீதாரி

கீதாரி என்ற வார்த்தை இடையர்களின் தலைவரைக் குறிக்கும். இப்புதினத்தில் ராமு கீதாரி என்பவர் இடையர்களிலேயே பண்பட்டவராகவும், இடையர்களுக்குண்டான அறிவியல் அனுபவ முதிர்ந்தவராகவும் காணப்படுகிறான்.

“சக உயிர்களை நேசிப்பதும், அவற்றின் வலியை உணர்ந்து வேதனைப்படுவதும் நம்மில் பலருக்கு இயல்பானது தான். எவ்விதமான பலனும். சுயநலமுமின்றி பிற உயிர்களின் இன்னல் தீர்க்கத் தன்னுயிரையும் இழக்கக்கூடியது சாதாரணமான காரியமல்ல. அத்தகையதொரு கதை மாந்தரை வெகுசிலரே இலக்கியத்தில் படைத்துள்ளார்.”ராமு கீதாரியின் வாழ்க்கை முழுவதுமே தன் பயன் கருதாமல் பிறருக்கு உதவுகின்றான். சொத்து, சுகம் இருக்கம் பணக்கார வர்க்கங்கள் கூட செய்யத்தயங்கும் செயலை ராமுகீதாரிசெய்கிறான்.

யாரென்று தெரியாத பைத்தியக்கார பெண்ணின் பிரசவத்தின் போது சிக்கல் ஏற்படுகையில் மனைவியைத் தூரத்தள்ளிவிட்டு ஆடுகளுக்குப் பிரசவம் பார்த்த அனுபவத்தைத் துணையாகக் கொண்டு தன் கையைவிட்டு தலையைத்திருப்பி குழந்தையைத் தாயின் துணிச்சலுடன் இழுத்துப் போடுவதும் இரு குழந்தைகளையும் தாங்களே வளர்க்கப் பொறுப்பேற்பதும் மனிதநேயப் பண்பின் உச்சமாகும். புதினம் முழுவதும் ராமு நியாயத்துக்காகச் செயலாற்றுவதைப் பார்க்கின்றோம். பிரச்சனைகளின் போது அவர் மேற்கொள்ளும் செயல்கள் அறம் அல்லது சமூக அக்கைறை என்ற எந்தக்கோட்பாட்டையும் சார்ந்து இருக்கவில்லை. செயல்பட வேண்டியது தான் “மனித இயல்பு” என்ற வகையில் அவர் செயலாற்றுவதை உணரமுடிகின்றது. ராமு கதாபாத்திரம் முழுவதும் நம்பிக்கை உண்மையின் வழி நடப்பவாராகஆசிரியர் புனைந்துள்ளார்

**கரிச்சா**

ராமுவிற்குப் பிறகு தலைமைப்பாத்திரமாக இருப்பவள் கரிச்சா. இடையர்களின் வாழ்க்கையில் பெண்களுக்கானதுன்பங்களைச்சுட்டிக்காட்டுகின்றனர். மனிதர்களான தங்களுடைய வயிறு காய்ந்தாலும்கூடஆடுகளின் வயிறு நிறைந்திருக்க வேண்டுமென நினைக்கும் கரிச்சாவின் மனநிலையை, உணர்வுப்பூர்வமாக வெளிப்படுத்தியுள்ளார்ஆசிரியர். வெட்ட வெளிதனை, உலகமென நினைத்து வாழும் கரிச்சா, ஆடுகளையும் குடும்பத்தின் முக்கிய அங்கமாக நினைத்து தன் வலிகளையும், வேதனைகளையும் சொல்லிப்புலம்பும் அவலப் பெண்ணாக காட்சியளிக்கிறாள்.

**வெள்ளைச்சாமி**

அடிமையாகவாழ்ந்ததமக்குமறுவாழ்வளித்தராமுகீதாரியின்மேல்நன்றிகலந்தஅன்பும்விசுவாசமாகஇருக்கிறாள்கரிச்சா. வெள்ளைச்சாமியும் அதற்குவிதிவிலக்கல்ல. ராமு கீதாரியின் கிடைபோடும் செயலினைக் கற்று தனியாகத் தொழில் செய்யும் அளவிலான வளர்ச்சி நிலை குறிப்பிடப்பட்டுள்ளது. சிறுவயதிலிருந்து வளர்க்கப்பட்ட கரிச்சாவைத் தானே திருமணம் செய்து கொள்ளும் நிலையில் அவன் மகிழ்வடைகிறான். வளர்த்த பெண்ணையே கட்டி கொள்வதும், கணவன் இறந்துவிட்டால் அவனுடைய தம்பியை மணம் முடிப்பதும், ஆடு மேய்க்க பயன்படுத்தும் கைக்கம்பையே மணமகனாக நிறுவித்திருமணம் செய்து கொள்வதும் இடையர்களின் மரபாக இருப்பதை ஆசிரியர் புதினத்தில் பதிவு செய்துள்ளார். வீடுகளில்லாத காடு வாழ்க்கையில் கூட கணவன் மனைவி உறவு நிலையினை கதைப்பின்னலாக ஆசிரியர் விளக்கியுள்ளார்.

## சிவப்பி

நிலவுடைமைச் சமூகத்தின் ஆதிக்கத்திற்குப் பலி கொடுக்கப்பட்டவர்களாக உருவாக்கப்பட்ட பாத்திரம் சம்பாசிவம் பண்ணையார். சிவப்பியின் வளர்ப்பு தந்தையவர். இரண்டு பெண்டாட்டி கட்டியவனும் காமக் கொடூரனுமாகிய சம்பாசிவம் தன் மகளையே பாலியல் தொந்தரவு செய்து அவளின் இறப்பிற்கும் காரணமாகின்றான். சிவப்பியின் தற்கொலைக்குத் தண்டனையோ அபராதமோ வழங்கப்படவில்லை. ஏனெனில்நிலவுடைமைச் சமூகத்தின் ஆதிக்கம் திரையிட்டு காட்டப்பட்டுள்ளது.

## இருளாயி

ராமு கீதாரியின் மனைவியான இருளாயி இழையோட்டமாக கதையில் பயணிக்கும் கதாமாந்தராக ‘சாடிக்கேற்ற மூடி என்ற பழமொழிக்கேற்ப ராமுகீதாரியின் செயல் எண்ணங்களுக்கேற்றவளாக இருக்கின்றனார். இருளாயியின் ஒத்துழைப்பு இல்லாவிட்டால் ராமுவினால், வெள்ளைச்சாமி, கரிச்சா, சிவப்பியை வளர்த்து ஆளாக்கி இருக்க முடியாது. இருவரின் மனநிலையும் ஒருமித்ததாகவே இருக்கிறது. இருளாயின் பங்கு கதைக்கு வலுசேர்ப்பதாகவும் கதைபோக்கிற்கு வடிகாலாகவும் இருக்கின்றது.

## கீதாரி நாவலின் கதைக்கரு

கீதாரி நாவலின் கதைக்கரு மேய்ச்சல் வாழ்க்கை வாழும் இடையர்களின் வாழ்வியலையும், அவர்களின் வாழ்க்கைச் சிக்கல்களையும் மையமாகக் கொண்டது. இதன் முக்கிய கதாப்பாத்திரங்களான இராமு கீதாரி, அவருடைய வளர்ப்பு மகன் வெள்ளைச்சாமி, வெள்ளைச்சாமியின் காதலி மற்றும் ராமு கீதாரியின் பேத்தியான கரிச்சா ஆகியோரின் வாழ்வைச் சுற்றியே கதை நகர்கிறது. இந்த நாவல், அவர்களின் திருமண உறவுகள், குழந்தைப்பேறு, சடங்குகள் மற்றும் மறுமணம் போன்ற வாழ்வியல் நிகழ்வுகளை விவரிக்கிறது.ஆடுமேய்க்கும் இடையர்களின் வாழ்வியலை விவரிக்கும் நாவல்.ராமு கீதாரியின் குடும்பத்தில் நடக்கும்.நிகழ்வுகள், குறிப்பாக அவரது வளர்ப்பு மகன் வெள்ளைச்சாமிக்கும் அவரது பேத்தி கரிச்சாவுக்கும் இடையே ஏற்படும் காதல் மற்றும் திருமணம் பற்றிய உறவுமுறைகள் ஆகியவற்றை மையமாகக் கொண்டுள்ளது.

இடையர்களின் வாழ்க்கை குறிந்த பல நுட்பமான செய்திகளை நாவல் வெளிப்படுத்துகிறது. அத்துடன் திருமண உறவுகள், குழந்தை பேறு, சடங்குகள், மறுமணம், இறப்பு போன்ற வாழ்வியல் நிகழ்வுகளையும் சுட்டிக்காட்டுகிறது.

## கீதாரிகள்

கீதாரிகளின் மரபும் தொழில்முறையும் சு.தமிழ்ச் செல்வியின் கீதாரி புதினத்தைப் புரிந்துகொள்ள பயன்படும். இது தொடர்பாக பெ. கபிலன்(ஏப்.2022) இணையதளத்தில் பதிவிட்டுள்ள கட்டுரையின் செய்திகள் இங்குத் தொகுத்துத் தரப்படுகின்றன. ‘எம்பிரான் சதகம்’ என்ற நூலில் ‘கீதாரம்’ என்னும் சொல் ‘தொழுவம்’ என்னும் பொருளில் (பாடல் எண் 66) ஆளப் பெற்றுள்ளது, அதிக எண்ணிக்கையில் இருக்கும் ஆடு மாடுகளைக் காப்பவன், மிகப்பெரிய கீதாரத்திற்கு(தொழுவத்திற்கு)உரியவன், கீதாரி என்று அழைக்கப்பட்டிருக்கிறார். தமிழ்ப் பேரகராதி, (தொகுதி II, ப.948) ‘கீதாரி’ என்ற சொல்லை ‘இடையர் தலைவன்’ என்று குறிப்பிடுகிறது. கிடைகளுக்கு அதிகாரியாக, தலைவராக இருப்பவரை ‘கீதாரி’ என்று அழைக்கிறார்கள். இச்சொல் ‘கீத்து’ என்னும்

சொல்லின் அடிப்படையில் பிறந்ததாகும். ‘கீத்து’ என்னும் சொல்லுக்கு ‘ஈனுதல்’ என்பது பொருளாகும் (தமிழ்ப் பேரகராதி, (தொகுதி II, ப.769)

கீதாரி என்பவர் நான்கிலிருந்து ஆறு வரையிலான ஆடு மேய்க்கும் குடும்பத்திற்குத் தலைவர் ஆவார். ஆடுகளை ஓட்டவேண்டிய திசை, ஊர் முதலியவற்றை முடிவு செய்வதும், ஆட்டிடையர்களை ஒருங்கிணைப்பதும், கிடைக்குரிய கூலியைப் பெற்றுத்தருவதும் இவரது பணியாகும். ஆடு மேய்ப்பதில் எழும் சிக்கல்களை இவரே எதிர்கொள்கிறார். இராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் இத்தகைய பட்டத்தையுடைய ஆட்டிடையர்கள் அதிகளவில் உள்ளனர்.

ஒரு மேய்ச்சல்காரர் 150 முதல் 200 ஆடுகளை மேய்ச்சலில் ஈடுபடுத்துகிறார். மூன்று முதல் ஐந்து மேய்ச்சல்காரர்களை நிர்வகிக்கும் நிர்வாகி ‘கீதாரி’என்று அழைக்கப்படுகிறார். திருநெல்வேலி, தூத்துக்குடி, தென்காசி ஆகிய பகுதிகளில் இவர்கள் ‘அம்பலக்காரர்’என்று அழைக்கப்படுகின்றனர். கீதாரி(அம்பலக்காரர்) தலைமையில் மட்டுமே மேய்ச்சலுக்காக கிடைகள் இடம்விட்டு இடம்பெயர்வதைஅறியமுடிகிறது. வரத்தாட்டுக் கீதாரிகள் மற்றும் மேய்ச்சல்காரர்கள் உலக நடைமுறைகளை அறியாமல் காடுகளிலும், விளைநிலங்களிலும் செம்மறி ஆடுகளைப் போல காலத்தைக் கழிக்கிறார்கள்.

அரசின் அனுமதி கிடைக்கும் காடுகள், மற்றும் எஞ்சியுள்ள கிராமப்புற மேய்ச்சல் நிலங்களில் இவ்வகையைச் சேர்ந்த ஆயிரக்கணக்கான ஆடுகள் மேய்ப்பாளர்களின் மேற்பார்வையின் கீழ் மேய்கின்றன. மேய்ச்சல் முடிந்து மாலை நேரம் அவற்றிற்கென பிரத்யேகமாக அமைக்கப்பட்ட தொழுவிற்குச் சென்று சேர்கின்றனஅல்லது விளைநிலங்கள் ஏதோ ஒன்றில் கிடை அமர்த்தப்படுகின்றன. பண்ணை ஆடுகள், வெள்ளாடுகள் போன்ற பிற வளர்ப்பாடுகளைப்போல ஓரிட மேய்ச்சல், ஒரே இடத்தில் அமர்த்தி தீவனமிட்டு வளர்த்தல் அல்லது கட்டுத்தறியில் கட்டி வைத்து வளர்த்தல் போன்று செம்மறி ஆடுகளை வளர்க்கும் வழக்கம் இல்லை. செம்மறி ஆடு வளர்ப்பில் ஓரிட மேய்ச்சலோ, கட்டிவைத்து வளர்த்தலோ அறவே கிடையாது.

மண்ணின் வளத்தைச் சீராக மேம்படுத்த, கிடை அமர்த்தும் பாரம்பரிய தொழில்நுட்ப முறை இன்றுவரை பின்பற்றப்பட்டு வருவதை விவசாய நிலங்களில்

பார்க்கமுடிகிறது. கிடை அமர்த்துதல் பெரும்பாலும் ஜூன், ஜூலை மாதங்களில் பயிர் அறுவடைக்குப் பிறகு நஞ்சை நிலங்களில் பின்பற்றப்படுகிறது. தோட்டக்கால் மானாவாரி நிலங்களில் நிலம் பயிர் செய்வதற்கு ஒரு மாதத்திற்கு முன்பு கிடை அமர்த்தப்படுகின்றது. இப்பாரம்பரியத் தொழிலில் கீதாரிகள் மற்றும் மேய்ச்சல்காரர்கள் ஈடுபடுகிறார்கள்.

## செம்மறியாட்டு இனங்கள்

தமிழ்நாட்டில் வளர்க்கப்படும் செம்மறியாட்டு இனங்களான 'மேச்சேரி, இராமநாதபுரம் வெள்ளை, கீழக்கரிசல், சென்னை சிவப்பு, வெம்பூர், குரும்பை ஆடு, நீலகிரி ஆடு, திருச்சி கருப்பு ஆகியவை நடுத்தர உடல்வாகுடைய, இறைச்சிக்குரிய செம்மறியாட்டு இனங்களாகும்.தமிழகத்தின் தட்பவெப்ப நிலைக்கு ஏற்ற இவ்வகை ஆடுகள் நாட்டு ஆடுகள் என்றும் அழைக்கப்படுகின்றன.

இராமநாதபுரம், சிவகங்கை, மதுரை, விருதுநகர் ஆகிய மாவட்டங்களில் ‘இராமநாதபுரம் வெள்ளை’ என்னும் ஆட்டினங்கள் காணப்படுகின்றன. ‘கீழக்கரிசல்’ இன ஆடுகள் இராமநாதபுரம் சிவகங்கை, திருநெல்வேலி ஆகிய மாவட்டங்களில் காணப்படுகின்றன. ‘வெம்பூர்’ இன ஆடுகள்தூத்துக்குடி மாவட்டத்தின் வெம்பூர், மேலக்கரந்தை, கீழக்கரந்தை, நாகலாபுரம் பகுதிகளிலும், விருதுநகர் மாவட்டத்திலும் காணப்படுகின்றன.

‘மேச்சேரி’ இன ஆடுகள் சேலம், கரூர், ஈரோடு, நாமக்கல் மாவட்டங்களிலும், தருமபுரி மாவட்டத்தின் சில பகுதிகளிலும் காணப்படுகின்றன. ‘சென்னை சிவப்பு’ இன ஆடுகள் சென்னை, காஞ்சிபுரம், விழுப்புரம், திருவண்ணாமலை மாவட்டங்களில் காணப்படுகின்றன. ‘நீலகிரி’ இன ஆடுகள் நீலகிரி மாவட்டத்தில் மட்டுமே காணப்படுகின்றன. ‘திருச்சி கருப்பு’ இன ஆடுகள் திருச்சி, பெரம்பலூர், தருமபுரி, சேலம் மாவட்டங்களில் காணப்படுகின்றன.

## தகர் சண்டை அல்லது கிடாச் சண்டை

மனம் தளர்வுற்ற காலங்களிலெல்லாம் முல்லை நில மக்களுக்கு மகிழ்ச்சியை அளித்து வந்தவை போர் விளையாட்டுகளே ஆகும். மக்கள் தங்களின் விரச்சிறப்பை மேம்படுத்துவதற்குத் தூண்டுகோலாக போர் விளையாட்டுகள் அமைந்துள்ளன. ஆட்டுக் கிடாச் சண்டை, கிடா முட்டு, தகர்ச் சண்டை அல்லது கிடாக்கட்டு என்பது செம்மறியாடுகளை மோதவிட்டு நடத்தும் ஒரு தமிழர் விளையாட்டாகும். கிடாச்சண்டை உலகின் பல பகுதிகளில் நடத்தப்பட்டு வருகிறது. இதில் விலங்குகள் துன்புறுத்தப்படுவதாக புகார் உள்ளதால் இந்தியாவில் நடத்த இயலாத சூழல் நிலவுகிறது. சில இடங்களில் மறைமுகமாக இவ்விளையாட்டு நடத்தப்படுகிறது. இந்த ஆடுகளின் வெற்றியை மையமாகக் கொண்ட சூதாட்டமும் சில இடங்களில் நடக்கிறது.வெள்ளாட்டு வகையறாக்கள் இந்த சண்டை இனத்தில் சேராது செம்மறி, குரும்பை ஆட்டினத்தின் சில வகைகள் மட்டும் இதற்கென்றே சிறப்பு கவனத்தில் வளர்க்கப்படுகின்றன. குறிப்பாக தென் தமிழகத்தில் நாட்டுச் செம்மறி ஆடுகளான பொட்டுக் கிடா, கச்சைக்கட்டி கருப்புக் கிடா, இராமநாதபுரம் கண் கருப்புக் கிடா முதலிய வகைகள் இதில் ஈடுபடுத்தப் படுகின்றன. இந்த விளையாட்டுக்குத் தடை உள்ளதால் இந்த இன ஆடுகள் அருகிவருகின்றன.

சண்டைக்குத் தயார்படுத்தும் விதமாக இந்தச் செம்மறி ஆடுகள் குட்டியாக இருக்கும்போதே வாங்கி வளர்க்கப்படுகின்றன. அப்படி வளர்க்கும்போது ஆட்டுக் கொம்பின் மூலக்குருத்தை விட்டுவிட்டுமேலோட்டை மட்டும் உடைத்து விடுவார்கள். பின் மறுகொம்பு சற்று பெரியதாக வளர்ந்ததும் மீண்டும் உடைத்து எடுப்பார்கள். அதன் கொம்புகளை இவ்வாறு மூன்று முதல் ஐந்து முறை பிடுங்கிவிடுவர். இதன்பிறகு முளைக்கும் கொம்பு பெரியதாகவும் உறுதியாகவும் முரட்டுத்தனமாகவும் இருக்கும். இந்த ஆட்டை ஜல்லிக்கட்டு மாட்டைத் தயார் செய்வதுபோல உயர் தரமுள்ள உணவு வகைகளான துவரம் பொட்டு, உளுந்து குருணை, இரும்புச் சோளம், நிலக்கடலை, கொண்டக் கடலை, பச்சரிசி, பாசிப்பயறு, கொள்ளு, கம்பு, பேரீச்சம்பழம், மக்காச்சோளம், கோதுமைத் தவிடு, அகத்திக் கீரை, கடலைப் புண்ணாக்கு, உள்ளிட்ட பிரத்தியேக உணவுகளைக் கொடுத்து நல்ல வலிமை உள்ளதாக வளர்ப்பர்.

சிலர் நாட்டுக்கோழி முட்டை, பசும்பால் போன்றவற்றையும் அளித்து வளர்ப்பர். இவற்றிற்கு நீச்சல் பயிற்சி, நடைப்பயிற்சி முதலிய பயிற்சிகள் அளித்து உடல் உறுதியாக ஆக்கப்படுகிறது. போட்டியில் கலந்து கொள்ளும் ஆடுகளை மோதவிடுவர். அதிகபட்சம்

50 முட்டல்கள் நடக்கும். மோதலில் ஈடுபடும் ஆடு பின்வாங்கி ஓடிவிட்டாலோ அல்லது இறந்துவிட்டாலோ தோற்றுவிட்டதாக அறிவிக்கப்படும். இரண்டும் சமபலத்துடன் 50 முட்டலையும் தாண்டி களத்தில் நின்றிருந்தால் அவைகளை நடுவர்கள் பிரித்துச் சற்றுத் தொலைவாக, மைதானத்தின்இரு எதிர்முனைகளுக்குக் கொண்டுசென்று விடுவித்து மோத விடுவார்கள். அந்த இறுதி ஒற்றை மோதலில் தடுமாறிய கிடா தோற்றதாக அறிவிக்கப்படும். இந்நிகழ்வைக் கைக்கிடா விடுறதுனு சொல்லுவாங்க.

விலங்குகளில் ஆணைக் குறிக்க வழங்கப்படும் மரபுச் சொற்களில் ஒன்று தகர். பழந்தமிழகத்தில் ஆட்டுச் சண்டையானது தகர்ச் சண்டை என்றே அழைக்கப்பட்டுள்ளது. தகர் என்பது ஆண் செம்மறி ஆட்டைக் குறிக்கும் சொற்களில் ஒன்று. செம்மறி ஆட்டுக் கிடாக்கள் இரண்டினை மோதவிட்டு வேடிக்கைப் பார்க்கும் விளையாட்டாக இது இருந்தது. போரிடும் போது தகர் பின்வாங்கிப் பின்வாங்கித் தாக்கும்.

## தொடரும்- பாரம்பரிய மேய்ச்சல் முறை

பெரும்பாலான வரத்தாட்டுக்காரர்கள் பாரம்பரியமான மேய்ச்சல் முறையைப் பின்பற்றியே செம்மறி ஆடுகளை வளர்த்து வருகின்றனர். வரத்தாட்டுக்காரர்கள் சொந்தமாக ஒவ்வொரு ஆட்டுத் தொழுவிலும் 150 - 200 எண்ணிக்கையுள்ள செம்மறி ஆடுகளும், நான்கு அல்லது ஐந்து கிடாக்களும் வளர்க்கின்றனர். கிடைகளைச் சொந்தமாகவும், கூட்டுத் தொகுதியாகவும் வரத்தாட்டுக்காரர்கள் பராமரிக்கின்றனர்.

சில இடங்களில் வரத்தாட்டுக்காரர்கள் குறைந்தளவிலான ஆடுகளைக் கொண்டவர்களிடமிருந்து அதனைக் கேட்டுப்பெற்று, பெரியளவிலான ஆட்டுத் தொகுதியாக உருவாக்கி அவற்றை வளர்ப்பதையும் பார்க்கமுடிகிறது, இவர்கள் ஆட்டுக்கு உரியவர்களிடமிருந்து மாதக்கூலி பெற்றுக்கொள்கிறார்கள். சிலர் ஆண்டு முழுவதும் பிறருடைய ஆடுகளை மேய்த்துக்கொண்டு, அதனைக் கிடையில் அமர்த்துவதால் வரும் ஊதியம் மற்றும் எருவினால் கிடைக்கும் வருமானத்தை மட்டும் பெற்றுக்கொண்டு மேய்ப்பவர்களையும் காணமுடிகிறது, ஆடு விற்பதால் கிடைக்கும் பணத்தை ஆட்டுக்குரியவர் வந்து பெற்றுக்கொள்கிறார்கள்

சில மேய்ப்பர்கள் கூலியாளாக ஆட்டுக்குரியவர்களின் இருப்பிடத்திலேயே தங்கி, ஓராண்டுக்கு ஆடு மேய்க்கிறார்கள்.ஓராண்டுவரை மட்டும் என்று முன்பே பேசி,

ஆண்டுக்கு இவ்வளவு கூலி எனப் பேசிக்கொள்கின்றனர். அவருக்கான உணவு மற்றும் தேவையானவற்றை ஆட்டுக்குரியோர் தந்து விடுகிறார்கள். ஆடுகளை மேய்ப்பதும், கிடை அமர்த்துவதும் பராமரிப்பதும் அவரது வேலையாகும். காலையில் ஆடுகளை ஒட்டிச் சென்று மேய்த்துவிட்டு, மாலையில் தொழுவிற்குக் கொண்டுவந்து விட்டுவிடும் மேய்ப்பர்களையும் காணமுடிகிறது. இவர்களுக்கு மாத ஊதியமும், நண்பகல் உணவும் வழங்கப்படுகிறது. மேய்ச்சலுக்குச் செல்லும் போது கையில் நீண்ட கோலும், தண்ணீர் பாட்டிலும் கொண்டுச்செல்கின்றனர். சிலர் தூக்குவாளியில் உணவையும் கொண்டுச்செல்கின்றனர்.

காலையில் தொழுவிலுள்ள ஆடுகளைக் குட்டிகளிடமிருந்து பிரித்து, பின்பு இளம் குட்டிகளைக் 'குடாப்பு' என்று சொல்லப்படும் மிகப்பெரிய கூடைகளில் அடைப்பர். சற்றுப் பெரிய குட்டியாடுகளைத் தொழு வலைக்குள் அடைத்துவிட்டு, பெரிய ஆடுகளை மேய்ச்சலுக்கு அழைத்துச் செல்வர். குடாப்புகளுக்கு அருகில் 'மொளக்குச்சி' கம்புகளைக் காணமுடிகிறது.

வரத்தாட்டுக்காரர்கள் தம் இருப்பிடத்திலிருந்து சுமார் 10-12 கி.மீ. தூரம் வரை ஆடுகளை மேய்க்கிறார்கள். நண்பகல் வேளைகளில் நீர்நிலை நோக்கி ஆடுகளைச் செலுத்தி, அவற்றிற்குத் தண்ணீர் புகட்டி, மீண்டும் மாலைவரை மேய்க்கிறார்கள். மாலையில் தொழுவிலடைத்துக் குட்டி ஆடுகளைத் திறந்துவிடுவர். மேய்ச்சல் உள்ளவரை அந்தப் பகுதியிலேயே மேய்க்கின்றனர். மேய்ச்சல் இல்லாத சூழலில் கீதாரிகள் துணையோடு வேற்றூர்களுக்குச் செல்கின்றனர்.

மேய்ச்சல் நிலப்பகுதிகளுக்குச் செல்லும்போது வேண்டிய பாத்திரங்கள், கோரைத்தடுக்குகள், கோல், தொரட்டி, கொங்காணி, ஆடுகளுக்கான மணிகள், பால் கறக்கும் கலன்கள், ஆடுகளை அடைப்பதற்கு வலைகள், வலைகளைப் வளைப்பதற்குக் குத்துக்கம்பிகள், சுத்தியல்கள் ஆகியவற்றை உடன் வைத்திருக்கின்றனர். கைகளில் சிறு கத்தியும், தங்குவதற்குத் தேவையான பொருட்களையும் எடுத்துக்கொண்டுசெல்கின்றனர். முன்பு நடந்தே சென்றவர்கள் தற்போது சுமையுந்துகளில் நடக்க முடியாத ஆட்டுக்குட்டிகளுடன், தேவையான பொருட்களையும் ஏற்றிக்கொண்டு கூட்டாகச் சேர்ந்து செல்கிறார்கள்.

மலைப்பகுதிகளில் ஆடுகளை மேய்க்கப் போகும்போது கோரைப்பாய், உணவுப்பொருட்கள், சமைப்பதற்கான பொருட்கள், கொங்காணி, கம்பளி, கைவிளக்கு ஆகியவற்றை மட்டும் கொண்டு செல்கின்றனர். மலையில் ஆடுகள் அடையும் இடத்தில் அங்குள்ள மரங்களிலிருந்து கிளைகளை உடைத்து சிறு கூடாரம் போன்று அமைத்துக் கொள்கின்றனர் இதற்கு ‘குச்சியல்’ என்று பெயர்.

காலம்காலமாகச் செல்லும் ஊர்களுக்கே வரத்தாட்டுக்காரர்கள் செல்கிறார்கள். பெரிய பெரிய குடாப்புகளைத் தலையில் சுமந்தபடியே வேறொரு இடத்திற்கு இடம்பெயர்கின்றனர். தற்போது அருகில் உள்ள ஊர்களுக்கு மட்டுமே இப்படிச் சுமந்து செல்கின்றனர். வெளியூருக்கு மேய்ச்சல் பொருட்டுச் செல்லும்போது ஊருக்கு அருகில் நீராதாரம் உள்ள வசதியான இடத்தில் குடியிருப்புகளை அமைக்கின்றனர். பெரிய பெரிய குடாப்புகளைக் கொண்டு குடியிருப்புகள் அமைக்கப்படுகின்றன. கூடையின் அளவுக்கேற்ப கால்களை நட்டு, ஒரு ஆள் உள்ளே நிற்கும்படி உயரம் வைத்துக்கொண்டு அக்கூடைகளைக் கவிழ்த்து மேலே பொருத்தி அதனைச் சுற்றிலும் தகரத்தினைக் கொண்டு அடைகின்றனர். தரைப்பகுதியை மண்ணாலும் சாணத்தாலும் மொழுகிக்கொள்கின்றனர்.

மேய்ப்பர்கள் கயிற்றுக் கட்டிலில் தொழுவிற்கு அருகில் காவலிருந்தபடியே உறங்குவதைக் காணமுடிகிறது. அக்குடியிருப்பைச் சுற்றி வேலி அமைத்திருப்பதையும் காணமுடிகிறது. குடாப்புக்கு அருகிலேயே தொழுவை அமைத்துக் கொள்கின்றனர். தொழுவிற்குப் பக்கத்திலும் குடாப்புகளைக் கவிழ்த்துத் தங்குமிடங்களை ஏற்படுத்திக் கொள்கின்றனர். இரவு நேரங்களில் அதில் இருந்தபடியே ஆடுகளைக் காவல் காக்கின்றனர். தொழு மற்றும் குடியிருப்பைச் சுற்றிலும் முட்செடிகள் அல்லது மூங்கில்களைக் கொண்டு வேலிஅமைக்கின்றனர்.இத்தகையகுடியிருப்புகள் வளசை என்றழைக்கப்படுகின்றன.

குறைந்தது 2-3 மாதங்கள் வரை ஒரூரில் இருப்பதைக் காணமுடிகிறது. காலையில் ஒன்பதிலிருந்து 10 மணிக்குள் ஆடுகளை ஓட்டிச்சென்று பொது இடங்களிலும், அறுவடை செய்த வயல்களிலும் மேய்த்து ஆறுகளிலோ, குளங்களிலோ, கண்மாய்களிலோ ஆடுகளுக்கு நீர் புகட்டி, மாலையில் மீண்டும் தொழுவிற்கு ஓட்டி வந்து அடைக்கின்றனர்.

ஆடுகளுக்கு நிறைவான மேய்ச்சல் இருப்பதைக் கண்டப் பிறகே அவர்கள் உண்பதையும் கள ஆய்வில் காணமுடிந்தது.

இராமநாதபுரம் மாவட்டத்தைச் சார்ந்த நூற்றுக்கும் மேற்பட்ட கிராமங்களில் இருந்து செம்மறி ஆடுகளை மேய்த்தவாறே, தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களுக்கு மேய்ச்சல் நிலம் தேடி, இடம் பெயர்ந்து, ஆண்டுக்கணக்கில் ஆடு மேய்க்கும் பல வரத்தாட்டுக் கீதாரிகளை கள ஆய்வில் பார்க்க முடிந்தது. சிலர் குடும்பத்தோடு இடம் பெயர்கின்றனர். ஊருக்கு ஒதுக்குப்புறத்தில் குடியேறி அங்கேயே தொழு அமைத்தும் வயல்களில் கிடை அமர்த்தியும் வாழ்கிறார்கள். மழை இல்லாமல் அவ்வூரை விட்டுப் போகவேண்டிய நிலை ஏற்பட்டால் தெரிந்தவர்களிடம் சொல்லிவிட்டு அவ்விடத்தை விட்டு வேறு ஊரில் சென்று ஆடு மேய்க்கிறார்கள். சொந்த ஊரில் நடக்கும் நிகழ்வுகளில் பங்கு கொள்ளவும், குலதெய்வக் கோவிலுக்குச் செல்வதற்கும் சொந்தவூர்களுக்குச் சென்று வருகிறார்கள்.

ஆடுகள் பொது நிலங்களிலும், காடுகளிலும் மேய்க்கப்படுகின்றன. இராமநாதபுரம், மதுரை – திருமங்கலம் சமவெளி, திண்டுக்கல் சமவெளி போன்ற பகுதிகளைக் காட்டிலும், விருதுநகர் மலையடிவாரங்களில் ஆடுகளுக்கு நன்கு உகந்த மேய்ச்சல்வெளிகள் கிடக்கின்றன. மதுரைக்கு வடக்கே உள்ள மேலூர் போன்ற பகுதிகளிலும் ஆடுகளுக்குத் தேவையான மேய்ச்சல்வெளிகள் உள்ளன. காடுகளில் ஆடுகளை மேய்ப்பதற்கு வனத்துறையினர் தடை விதித்துள்ளனர்.

## வறட்சிப் பகுதியில் வாழ்வாதாரம் தரும்-வரத்தாடுகள்

வயல்களில் கிடை அமர்த்தாத காலங்களில் ஆடுகளைத் தொழுவில் அடைக்கின்றனர். பகல் முழுவதும் ஆடுகள் மேய்ச்சலுக்குப் பொது இடங்களிலும் காட்டுப் பகுதிகளிலும் அழைத்துச் செல்லப்பட்டு மாலையில் தொழுவில் அடைக்கப்படுகின்றன. இரவு முழுவதும் ஆடுகள் இடும் புழுக்கைகளைக் (எரு) காலையில் குவித்துச் சேமிக்கின்றனர். நாள்தோறும் அதனை உலர வைத்து 50 கிலோ 30 ரூபாய்க்கு விற்கின்றனர். இவற்றை உள்ளூர் விவசாயிகளும், வெளியூர் விவசாயிகளும் வாங்கிச் செல்கின்றனர். செம்மறி ஆடுகளைத் தொழுவில் அமர்த்துவதாலும், கிடை போடுவதாலும், குட்டிகளை விற்பதாலும் வரத்தாட்டுக்காரர்களின் பொருளாதாரத் தேவைகள் நிறைவேற்றிக் கொள்ளப்படுகின்றன. 18 மாத ஆட்டுக்குட்டிகளை 3500 -4000

ரூபாய்க்கு விற்கின்றனர். அதிகளவில் கிடாக் குட்டிகளையே விற்கின்றனர். தேவைப்பட்டால் பெரிய ஆடுகளையும் விற்கின்றனர்.

## கிடை போடுதல்

'வரத்தாட்டுக்காரர்கள்' வயல்களிலும் தோட்டங்களிலும் கிடை வைக்கின்றனர். இரவு முழுவதும் அவையிடும் புழுக்கைகளும் நீருமே வயலுக்கு உரமாகின்றன.

**"ஆட்டெரு அவ்வாண்டு, மாட்டெரு மறு ஆண்டு"– பழமொழி**

வயலில் கிடை அமர்த்தும்போது குறைந்தது இரண்டு பேர் காவலிருக்கின்றனர். ஒரு கட்டில், கம்பளி, கோல், உணவுப் பாத்திரங்கள், கைவிளக்கு போன்றவற்றை கிடைவைக்கும் இடத்தில் வைத்திருக்கின்றனர். வீட்டிலிருந்தோ, பொதுவாக குடியிருப்பிலிருந்தோ உணவு கொண்டு வரப்படுகிறது. கிடை கட்டுதலில் ஆண்கள் மட்டுமே ஈடுபடுகின்றனர். பெண்கள் 'வளசை எனப்படும் குடியிருப்புகளில் உள்ள குடாப்புகளில் தங்கியிருக்கின்றனர். கிடை கட்டும் வயலிலும் பெரிய குடாப்புகளை வைத்திருக்கின்றனர். அதனுள் பகல் பொழுதில் குட்டி ஆடுகளை அடைத்து வைக்கின்றனர்.கிடை போடுவதற்கு ஊதியமாகப் பணத்தையே பெறுகின்றனர். சில இடங்களில் விளைச்சலின் ஒரு பகுதி நிலத்திற்குரியவர்களால் தரப்படுகிறது. அது நெல் அல்லது பிற தானியங்களாக இருக்கின்றன.

## மண் வளத்திற்கான பாரம்பரியத் தொழில்நுட்பம் கிடை

கிடை என்பது பகலில் மேய்ச்சலுக்குச் சென்ற ஆடுகளை இரவில் வயலில் வேலியிடப்பட்ட குறிப்பிட்ட இடத்தில் தங்க வைப்பதாகும். இரவில் தங்கும் ஆடுகளின் கழிவுகளான சாணம், சிறுநீர் ஆகியவற்றை வயலில் சேகரிப்பதே முக்கிய நோக்கமாகும். ஆட்டுச் சாணத்திலும், சிறுநீரிலும் அதிக அளவில் பயிர் வளர்ச்சிக்குத் தேவையான சத்துக்கள் உள்ளன. குறிப்பாக ஆட்டுச் சிறுநீரில் அதிக அளவு தழை, சாம்பல் சத்துக்கள் உள்ளன. நமது பாரம்பரியத் தொழில்நுட்பமான ஆட்டுக்கிடை போடுதல் தென் தமிழகத்தில் மிகவும் பிரசித்தி பெற்றதாகும். நெல், வாழை, கரும்பு பயிரிடப்படும் நஞ்சை நிலத்திலும், காய்கறி பயிரிடும் தோட்டக்கால் நிலம், மானாவாரிக் கரிசல் நிலத்திலும் ஆட்டுக்கிடை போடப்படுகிறது.

தென்மாவட்டங்களான திருநெல்வேலி, தூத்துக்குடி, இராமநாதபுரம். விருதுநகர், சிவகங்கை, திண்டுக்கல், மதுரை போன்ற பகுதிகளில் உள்ள 50 சதத்திற்கும் மேலான ஆட்டுக்கிடை போடுதல் பெரும்பாலும் ஜூன், ஜூலை மாதங்களில் நஞ்சை நிலங்களில் பயிர் அறுவடைக்குப் பிறகு பின்பற்றப்படுகின்றது. தோட்டக்கால் மானாவாரி நிலங்களில் நிலம் பயிர் செய்வதற்கு ஒரு மாத்திற்கு முன்பு ஆட்டுக்கிடை போடப்படுகின்றது.

இத்தொழிலில் ஆடுகளின் உரிமையாளர்களும் ஆடு மேய்ப்பவர்களும் ஈடுபடுகிறார்கள். பகலில் மேய்ச்சலுக்குச் சென்ற ஆடுகள் இரவில் வயலில் தற்காலிகமாக வேலியிடப்பட்ட கொட்டிலில் தங்க வைக்கப்படுகின்றன. வேலிகள் மரப்பட்டிகள் அல்லது நைலான் வலைகள் கொண்டு அமைக்கப்படுகின்றன.ஆடுகளின் எண்ணிக்கைக்கு ஏற்றவாறு 5 மீட்டர் × 10 மீட்டர் அல்லது 10 மீட்டர் × 20 மீட்டர் நீளம் மற்றும் அகலத்தில் வேலிகள் அமைக்கப்படுகின்றன. ஒவ்வொரு நாளும் இடம் மாற்றி கிடை போடப்படுகின்றது. ஒரு எக்டர் நிலத்திற்கு சுமார் 4000 முதல் 5000 ஆடுகள் தேவைப்படும். நடைமுறையில், ஒரு ஆடு ஒன்றுக்கு ரூ 0.50 வீதம் கிடை போடுவதற்குக் கூலியாக ஆடு மேய்ப்பவர்கள் வசூலிக்கின்றார்கள். செம்மறி ஆடு வளர்ப்பில் வேலையாட்களுக்கான கூலி மற்றும் மருத்துவ செலவுகளுக்காக மிகக் குறைந்த அளவு மட்டுமே செலவிடப்படுகிறது.

## வரத்தாட்டு கீதாரிகள் நாள்தோறும் சந்திக்கும் பிரச்சனைகள்

மேய்ச்சல் நிலப் பற்றாக்குறையும் வறண்ட காலங்களில் நீர்ப் பற்றாக்குறையும் தலையாய சிக்கல்களாக உள்ளன. ஆடுகள் திருட்டுப் போகாமல் பாதுகாக்க இரவு முழுவதும் விழித்திருக்கவும், இரவு காவல் காப்பதற்கு ஆட்களை நியமிக்கவும், அவர்களுக்குக் கூலி கொடுக்கவும் வேண்டியிருக்கிறது. எனினும், ஆட்டுத் திருடர்கள் ஒருமுறை வந்தால் குறைந்தது 5-10 ஆடுகளைத் திருடிவிடுகின்றனர். இதனால் இரவில் விழித்திருந்து காவல் காக்க வேண்டியதாக இருக்கிறது. முன்பு பிற விலங்குகளால், குறிப்பாக நரிகளால் ஆடுகள் தாக்கப்படும் சிக்கல்கள் இருந்தன.மலையடிவாரங்களில் ஆடு மேய்க்கும்போது தற்போதும் கூட ஆடுகள் சேதத்திற்கு உள்ளாகின்றன. ஆடு மேய்ப்பவர்கள் நாய் வளர்ப்பதுண்டு. அந்நாய்கள் மேய்ச்சலின்போது துணைக்கு வருவதைக் காணமுடிகிறது. இந்நாய்களால் பிரச்சனைகள் இருப்பதில்லை.

வெளியேயிருந்து வரும் நாய்கள் குட்டி ஆடுகளின் காலைக் கடித்தும், இழுத்துச் சென்று குதறியும் விடுகின்றன.

ஆடுகள் நோய்வாய்பட்டால் மொத்தமாக 20-30 ஆடுகள் ஒருசேர இறந்து விடுகின்றன. மொத்த ஆட்டுக்கிடையே பாதியாகக் குறைந்து பெரும் நட்டம் ஏற்படுகிறது. வேகமாகச் செல்லும் பெரிய வாகனங்களில் அதிக எண்ணிக்கையில் ஆடுகள் அடிபட்டு இறப்பது தொடர்கதையாகி வருகிறது. இப்படி மொத்தமாக ஆடுகள் இறக்கும்போது அதனைவிற்கமுடியாமல் பெரிய பள்ளம் தோண்டி மொத்தமாகப்புதைத்துவிடுகின்றனர்.

ஆடுகள் வேளாண்மை நிலங்களில் இறங்கிப் பயிர்களை மேய்ந்து விட்டால் தண்டம் கட்டிட நேரிடும். வெள்ளாமைக்குரியவர்களுள் சிலர் பொறுமையாகப் பேசி தண்டத்தைப் பெற்றுக்கொள்வர். சிலர் அடிக்கவும் செய்வர். ஆடுகளையும் பிடித்து வைத்துக்கொள்வர். ஆட்டிடையர்கள் அமைதியாக இருந்து, அடித்தாலும் வாங்கிக் கொண்டு சேதத்திற்குத்தக்க இழப்பீட்டைப் பணமாகத் தந்து விடுகின்றனர். இதற்காகவேனும், இரவிலும் பகலிலும் மிகவும் விழிப்புடன் இருக்கின்றனர்.

செம்மறியாட்டு இனங்களைப் பல தலைமுறைகளாக தமிழகத்தில் வாழும் இடையர் சமூக மக்களே பெரும்பான்மையாக வளர்த்து வருவதைப் பார்க்க முடிகிறது. இவர்களே வரத்தாட்டுக் கீதாரிகள் எனும் தனித்துவமான அடையாளத்தைப் பெற்றிருக்கிறார்கள். இவர்களில் ஒரு சிலரிடம் விவசாயம் இரண்டாம் நிலைத் தொழிலாக உள்ளது. எனினும் பெரும்பான்மையான வரத்தாட்டுக் கீதாரிகளிடம் பிற தொழில்கள், கல்வி, வேலைவாய்ப்புகள் குறித்துப் போதுமான விழிப்புணர்வு இல்லை. இத்தொழிலில் ஈடுபட்டுள்ளதால் இவர்களின் குழந்தைகளின் கல்வி தொடர்ந்து பாதிக்கப்படுகிறது, குடும்பமும் மிகப்பெரிய பின்னடைவைச் சந்தித்து வருகிறது. மேலும், சமூகத்தில் முறையான அங்கீகாரம் கிடைப்பதில்லை. அதனால் குடும்ப, திருமண மற்றும் பொது நிகழ்வுகளின் போது பல்வேறு சிக்கல்களைச் சமூகத்தில் எதிர்கொள்ள வேண்டியிருக்கிறது. அதுமட்டுமல்லாமல் காடுகள் மற்றும் மலைகளில் ஆடுகளை மேய்ப்பதற்கு அரசின் அனுமதியும் முறையாகக் கிடைப்பதில்லை.

மழை, வெயில், பனி என அனைத்தையும் வெட்ட வெளியில் எதிர்கொள்ளும் வரத்தாட்டுக் கீதாரிகளின் வாழ்க்கையானது போராட்டமும் அவலமும் நிறைந்ததாகவே

உள்ளது. இதன் விளைவாக மேய்ச்சல் மூலம் செம்மறியாடு வளர்ப்போரின் எண்ணிக்கை குறைந்து வருகிறது.

**இடையர்களின்சமூகவாழ்வு**

இடையர்களின் வாழ்க்கை என்பது ஓரிடத்தில் நிரத்தரமாகத் தங்கி வாழும் வாழ்கையன்று. நாடோடிகளாக தொடர்ந்து இடம் பெயர்பவர்களாக மழை, வெயில், பனி அனைத்தையும் கொட்ட வெளியில் எதிர்கொள்பவர்களாக அவர்களுடைய வாழ்வு அமைந்துள்ளது."பகலில்ஆடு மேய்க்கும் இடையர்கள் அவற்றை இரவில் ஓரிடத்தில் அடைப்பர். அவ்விடத்திற்குக் கிடை என்று பெயர் அது பெரும்பாலும் அறுவடை முடித்த வயல் பகுதியாக இருக்கும். கிடை கட்டிய இடத்திற்கு அருகிலேயே கூண்டு போன்ற தற்காலிகக் குடியிருப்பை ஏற்படுத்தி அதில் இடையர்கள் குடும்பத்தோடு தங்குவது வழக்கம். கட்டில் போலநீட்டிப் படுப்பதற்குஏதுவாகநான்குகால்கள்வைந்து கோக்காலியடித்து அதன்மீது பலகையடுக்கி கட்டிலாக்கிஅதன்மேல் கூண்டு வண்டிபோல ஒரு பக்க வாசல் வைத்து வளைபு பிடித்து மேலே மட்டை போட்டிருந்தான். ஒரு கூண்டுக்குள் இரண்டுபேர் படுத்துக் கொள்ளலாம்"(கீதாரிப.13) ஒன்றுக்கு மேற்பட்ட இடையர்கள் சேர்ந்து அருகருகே கிடை கட்டுவது வழக்கம். இதற்கு வளசை என்று பெயர் ஒரு கிடையில் அதிகபட்சமாக இருநூறு ஆடுகள் வரை இருக்கும். பகலில் ஆடுகளை மேய்ப்பதும் இரவில் அவற்றைக் கிடையில் அடைத்து விட்டு தூங்காமல் காவல் காப்பதும் ஆண்களின் பணியாகும். ஆட்டின் மூத்திரம் மற்றும் புழுக்கை வயல்களுக்கு நல்ல உரமாகும் என்ற அடிப்படையின் நிலவுடைமையாளார்கள் தங்களுடைய நிலங்களில் இடையர்களைக் கிடை போடச் செய்வர் வயலில் மேய்ச்சல் இருக்கும் வரையில் அல்லது நிலவுடைமையாளர் விரும்பும் வரையில் கிடை நீடிக்கும் பெரும்பாலும் மேய்ச்சல் தீர்ந்த பிறகு வேறு நிலத்திலோ ஊரிலோ கிடை போடுவது இடையர்களின் வழக்கமாகும்.

இடையர்கள் தங்களுடைய அடிப்படைத் தேவைகளுக்கு அன்றாட வாழ்க்கைக்குப் பெரும்பாலும் கிடைக் கூலியையே நம்பியிருப்பர். கிடைக் கூலியானது பணமாகவோ தானியமாகவோ புழுக்கையாகவோ கிடைக்கும். தானியத்தை உணவிற்கு வைத்துக்

கொள்வர். புழுக்கையை விற்றுப் பணமாக்கிக் கொள்வர். திருமணம், மருத்துவச் செலவு இறப்பு முதலான அவசரத் தேவைகளுக்கு ஒன்றிரண்டு ஆடுகளை அல்லது குட்டிகளை விற்றுப் பூர்த்தி செய்து கொள்வது அவர்தம் வழக்கம். ஆடுகள் பெருகும் நிலையில் ஒரு சிலர் அவற்றை விற்று நகை வாங்குவது, சொந்த ஊரில் நிலம் வாங்குவது, ஏற்கனவே இருக்கும் வாங்கிய நிலத்தில் வீடுகட்டுவது என்பதான காரியங்களை மேற்கொள்வதும் உண்டு (கீதாரி. பக்.35,153) தமக்கென்று சொந்தமாக . ஆடுகள் இல்லாதவர்கள் பிறருடைய ஆடுகளை மேய்த்துத் தருவதுண்டு. அவ்வாறு மேய்ப்பவருக்கு உணவு மற்றும் ஆடைகள் வழங்குவதோடு வருடத்திற்கு இரண்டு ஆடுகளைக் கூலியாகத் தருவர் (கீதாரி. பக்.41). இவ்வாறு இல்லாமல் அதிகமான ஆடுகளை வைத்திருப்பவர்களிடமிருந்து இரண்டிரண்டு ஆடுகளைப் பெற்று அவற்றை மேய்த்து குறிப்பிட்ட கால இடைவெளியில் உரிமையாளர்களிடம் ஒப்படைத்து அதற்குரிய கூலியைப் பெறுவதும் உண்டு. இதற்கு ஓட்டாடு கட்டுதல்' என்று பெயர் (கீதாரி.ப.164)கரிச்சா வெள்ளைச்சாமியை விட்டுப்பிரிந்த பிறகு கீதாரியுடன் இணைந்து ஓட்டாடு மேய்ந்துதான் தனது வாழ்க்கையை நடத்துவது இங்குக் குறிப்பிடத்தக்கது. “ஓட்டாடு ஓட்டி கெட கட்டலாம் கெடக்கூலி கெடக்கும் அத வச்சிக்கிட்டு கொஞ்ச நாளு ஓட்டுனமுன்னா பெறவு பணங்காசு கெடச்சா குட்டி வாங்கி வுட்டுக்கிடலாம் (கீதாரி.ப.165)

இடையர்கள் ஒரு நாளைக்கு ஒரு முறை (இரவு) மட்டுமே உணவு சமைப்பர். இரவில் சுடுசோறு, காலையில் பழையசோறு என்று இருவேளை மட்டுமே உண்பர். மழை, வெயில், பனி எதுவானாலும் இடையர்களின் இப்பழக்கம் மாறாது (கீதாரி. ப.13) பெரும்பான்மை அரிசி சோறும் உப்புக்கண்டம் போட்டு வைத்த குழம்புமே அவர்தம் உணவாகும். இறந்துபோன ஆட்டில் கறியை உப்பில் பிறட்டி வெயிலில் காய வைத்து உப்புக்கண்டமாக்கி வைத்துக் கொள்வர். குழம்பிற்கான மிளகாய்ச்சாந்தை மொத்தமாக (ஒரு வாரத்திற்குத் தேவையானது) அரைத்து வைத்துக் கொள்வது இடையர்குலப் பெண்களின் வழக்கமாகும்.

### கீதாரி நாவலில்பெண்களின் வாழ்வியல்

கீதாரி நாவலில் பெண்கள் உழைப்பு மற்றும் குடும்பப் பொறுப்புகளின் அடிப்படையில் சித்தரிக்கப்பட்டுள்ளது. பெண்கள் நாடோடி வாழ்க்கை முறையின் சவால்களை எதிர்கொள்வதோடு மட்டுமல்லாமல், வீட்டைச் சுத்தமாக வைத்திருத்தல்,சமைத்தல், ஆடு மேய்த்தல், விறகு சேகரித்தல் மற்றும் குழந்தைகளின் எதிர்காலத்திற்காக பாடுபடுதல், போன்ற பல்வேறு பணிகளைச் செய்கிறார்கள். ஆண்களின் கடினமான வேலைகளுக்கு இடையிலும், பெண்கள் வீட்டுப் பொறுப்புகளையும் தாண்டி கடுமையான உழைப்பை நல்குகிறார்கள்.ஆண்கள் மேய்க்கும் ஆடுகளைப் பகலில் மேய்ப்பது, விறகு சேகரிப்பது, உணவு சமைப்பது போன்ற அன்றாட உழைப்புகளில் பெண்கள் ஈடுபடுகிறார்கள். பெண்கள் மிளகாய், கத்தரி போன்ற விதைகளை நாற்றுவிட்டு பராமரிப்பதிலும் கவனம் செலுத்துகிறார்கள்.பெண்களின் முக்கிய நோக்கங்களில் ஒன்று தங்கள் குழந்தைகள் எதிர்காலத்தில் சிரமமில்லாமல் இருக்க வேண்டும் என்ற ஆசையாகும் . அதற்காக அவர்கள் தங்கள் பிள்ளைகளை விடுதியில் தங்க வைத்து படிக்க வைப்பதிலும் ஆர்வம் காட்டுகிறார்கள்.நாடோடி வாழ்க்கை முறையின் சீரமங்கள், இயற்கை சீற்றங்கள் போன்றவற்றைப் பெண்கள் எதிர்கொள்கிறார்கள். புதிய ஊர்களில் எதிர்கொள்ளும் சவால்களையும் சமாளிக்கும் திறனைப் பெற்றிருக்கிறார்கள்.வீட்டில் உள்ள இடத்தை, குறிப்பாக அடுப்பு மற்றும் படுக்கும் இடங்களைச் சுத்தமாக வைத்திருப்பதன் மூலம் குடும்பத்தின் நலனில் அக்கறை காட்டுகிறார்கள்.ஆண்களைப் போலவே பெண்களும் நாடோடி வாழ்க்கை முறையின் கடினமான சவால்காளுக்கு மத்தியிலும், தங்கள் குடும்பத்திற்காக உழைத்து, எதிர்கால சந்ததியினருக்கு ஒரு நல்ல வாழ்க்கையை அமைத்துக்கொடுக்க போராடுகிறார்கள்.

ஆடுகளை மேய்ப்பதும். இரவில் அவற்றைக் காவல் காப்பதும் இடையர்குல ஆண்களின் பணியாக அமைகிறது. இடையர்குலப் பெண்களின் பணி என்பது ஓய்வறியாப் பணியாகும். காலையில் நேரமே எழுந்து ஆட்டுக்கிடையைச் சுத்தம் செய்வதில் தொடங்கும் அவர்களது நாள், குட்டிகளைப் பாலூட்ட வைத்தல், அவற்றை அடைத்தல், தண்ணீர் கொண்டு வருதல், பாத்திரங்களைக் கழுவுதல், துணி துவைத்தல், சமையலுக்கான விறகுகளைச் சேகரித்தல், உப்புக்கண்டம் காய வைத்தல், மேய்ச்சலில்

கணவனுக்கு உதவுதல், மாலையில் ஆடுகளை அடைத்தல் சமைத்தல் இவற்றுக்கிடையில் குழந்தைகளைப் பராமரித்தல் என்பதாக ஓய்வில்லாது நீண்டு கொண்டே செல்வதாக அமைகின்றது. இறப்பைத் தவிர்த்து அவர்களுக்கு ஓய்வு கொடுப்பது வேறு எதுவுமில்லை என்பதே எதார்த்தம். "ஆண்கள் தங்கள் ஆட்டை வயலில் கிடைபோட பெண்கள் தங்கள் வாழ்க்கையை வலசைக்குள் கிடை போட்டுக் கிடப்பவர்கள்"(நம் தந்தையரைக் கொல்வதெப்படி ப.71) என்ற கவிஞர் மாலதிமைத்ரியின் கருத்து இங்குச் சுட்டத்தக்கது. இடையர்கள் நிலையாக ஓரிடத்தில் தங்கி வாழும் வாய்ப்பற்றவர்கள். தொடர்ச்சியான இடப்பெயர்வைக் கொண்ட அவல வாழ்வு அவர்களுடையது. இத்தகைய வாழ்வில் பெரிதும் அவதிக்குள்ளாவது பெண்களே. இடப்பெயர்வின் போது ஓரிடத்திலிருந்து மற்றோர் இடத்திற்குப் பாத்திரங்களை - பண்டங்களை - குழந்தைகளைச் சுமப்பது. புதிதாகக் தங்குமிடத்தைச் சுத்தம் செய்வது, நீர் சுமப்பது. விறகு சேகரிப்பது. சமைப்பது என்று பெண்கள் படும்பாடு பெரும்பாடாகும். நிலையாக ஓரிடத்தில் ஒரு மாதம் தங்கும் வாய்ப்பு அமைவது அரிது. அப்படி ஒரு நிலை வாய்க்கும் போது அந்தப் பெண்கள் அடையும் மகிழ்ச்சி அளவில்லாதது. இது குறித்து ஆசிரியரின் கூற்றாக நாவலில் இடம்பெறும் பின்வரும் பகுதி குறிப்பிடத்தக்கது.

நிலையாக ஒரேயிடத்தில் ஒருமாத காலம் தங்கிப் போகிறோமென்பதை அறிந்த பெண்களுக்குக் கொஞ்சம் நிம்மதியாயிருந்து தினம் தினம் சாமான்களையும் பாத்திர பண்டங்களையும் பொறுக்கிப் போட்டுக் கொண்டு ஓடுவதும் ஒரு வேளை ஆக்குவதோடு மறுநாளே வேறொரு ஊருக்கு ஓடுவதுமாக இருந்த பெண்களுக்கு இந்த ஒரு மாதமும் கொஞ்சம் ஓய்வாலிருக்கலாமென்று நினைத்த போது சந்தோசமாக இருந்தது. அடுப்புப்போட்டு சோறாக்கும் இடத்தையும் பண்டம்பாடி வைத்துக்கொள்ளும் – படுத்துத் தூங்கும் இடத்தையும் கொஞ்சம் அக்கரையோடு சுத்தப்படுத்தினர் (கீதாரி.ப. 138)

காட்டிலும் மேட்டிலும், மழையிலும், வெயிலிலும், பனியிலும் தாங்கள் படும்பாடே போதுமானது தங்கள் குழந்தைகளுக்கு இந்த நிலை வாய்க்க வேண்டாம் என்ற எண்ணம் கொண்டவர்களாக நாவலில் வரும் இடையர்குலப் பெண்கள் இருக்கின்றனர். தங்கள் குழந்தைகளை விடுதியில் தங்க வைத்து படிக்க வைக்கும் நிலையும் (கீதாரி, ப.154) நாவலில் எடுத்துக்காட்டப்பட்டுள்ளது.

## திருமணம்- மறுமணம் இறப்பு

இடையர்களின் திருமண நிகழ்வு. குழந்தைப்பேறு. சடங்குகள் மறுமணம், இறப்புகுறித்தானசெய்திகள் நாவலின் கதைப் போக்கில் ஆங்காங்கே இயல்பாக வெளிப்படுத்தப்பட்டுள்ளன. பெரும்பான்மையும் மாமன்-மைத்துனன் உறவுமுறைகளில் திருமணம் செய்து கொள்வது இடையர்களின் வழக்கமாகும். அத்தகைய உறவுகளில் பெண்டு இல்லாத போது அண்ணன் மகளைத் தம்பி திருமணம் செய்து கொள்வதுமுண்டு. வெள்ளைச்சாமியை 'சித்தப்பா' என்று அழைக்கும் கரிச்சா, அவனுக்கே மனைவியாவது (கீதாரி 1981)இங்குக் குறிப்பிடத்தக்கது. திருமணத்தில் மணமகன் பங்கேற்க முடியாத நிலையில் (மணமகனின் ஆடுகளைப் பார்த்துக்கொள்ள ஆட்கள் இல்லாத நிலையில்) அவன் ஆடு மேய்ப்பதற்குப் பயன்படுத்தும் தடிக் கம்பினை மணமகனாகக் கருதி அதனை அலங்கரித்து மணப் பெண்ணின் அருகில் நிற்க வைப்பர். பிறகு மணமகனின் குடும்பத்தைச் சேர்ந்த பெண்களில் ஒருவர் மணப்பெண்ணிற்குத் தாலி கட்டுவர். கரிச்சாவின் திருமணம் இவ்வாறுதான் நடக்கிறது (கீதாரி.ப.101), திருமணத்தின் போது மணப்பெண்ணிற்கு அவரது வீட்டார் தேவம் (வரதட்சணை) வழங்கும் வழக்கம் இடையர்களிடத்தும் உண்டு. மணமகள் வைத்திருக்கும் ஆடுகளில் எண்ணிக்கைக்கு ஏற்பவும் மணப்பெண்ணின் குடும்பச் சூழலுக்கேற்பவும் சீதனத்தின்தன்மையும் அளவும் வேறுபடும். ஆடுகள். பாத்திரங்கள், நகைகள், மளிகைச் சாமான்களைச் சீதனமாக வழங்குவர் (கீதாரி, பக்.52,96)

இடையர்களின் குடும்பத்தில் அண்ணன் இறந்துவிட்டால், தம்பி அண்ணனின் மனைவியைத் திருமணம் செய்து கொள்வது வழக்கமாக உள்ளது. அண்ணன் மனைவியை மட்டுமல்லாது அவனுடைய குழந்தைகளையும் தன்னுடைய குழந்தைகளாக ஏற்றுக் கொள்வதும் உண்டு. இவ்வாறு திருமணம் செய்து கொள்ள மறுப்பவரை இடையர்சாதியை விட்டு ஒதுக்கி வைத்துவிடுவர். அவருக்கு வேறு எவரும் பெண் தரமாட்டார்கள். அத்தோடு எவரையும் திருமணம் செய்து கொள்ளமாட்டேன் என்ற உறுதிமொழியினையும் அவர் அளிக்க வேண்டும். கணவனின் தம்பி திருமணம் செய்து கொள்ள மறுக்கும் நிலையில் கணவனை இழந்த பெண் விரும்பினால் (மாமியர் இல்லாத நிலையில்) மாமனாரைத் திருமணம் செய்து கொள்ளலாம். அவ்வாறு இல்லாமல் தாய் தந்தையருடன் செல்ல விரும்பினால் அப்பெண்ணிற்குரிய தீர்வையைத் (ஜீவனாம்சம்) தந்து அனுப்பும் வழக்கம் இருந்தமையும் நாவலில் எடுத்துக் காட்டப்பட்டுள்ளது (கீதாரி. பக். 131.132). குழந்தைப் பேறு, பெண் பூப்படைதல், திருமணம், இறப்பிற்குப் பிறகான

சடங்குகள் முதலானவற்றை இடையர்கள். தாங்கள் வாழும் இடங்களிலேயே நிறைவேற்றிக் கொள்வார். தங்களில் ஒருவர் இறக்கும் தருவாயில் இருந்தாலோ, இறந்துவிட்டாலோ அவரைச் சொந்த ஊருக்குக் கொண்டு செல்வதும், அங்கேயே அடக்கம் செய்வதும் இடையர்தம் வழக்கமாகும். "நாடோடியா அலயிரம் சொந்த மண்ணுல ஒக்காந்து ஒருவேளை சோறு திங்கறதில்ல. சாவுக்குள்ளயாவது ஒடம்ப ஊருகொண்டு சேத்துடணும்" (கீதாரி, ப.129). பிறப்பு எங்கும் அமையலாம். வாழ்க்கை எங்கும் தொடரலாம். ஆனால் தங்களுடைய இறப்பும், உடல் புதைப்பும் சொந்த மண்ணில் தான் நிகழ வேண்டும் என்பது இடையர்களின் தணியாத விருப்பமெனலாம். நாவலில் வரும் ராமு கீதாரியின் மனைவி இருளாயி, ஆதியப்பன் ஆகியோர் இறந்த பிறகு சொந்த ஊருக்கு எடுத்துச் செல்லப்படுவதாகக் கூறப்பட்டுள்ளமை இதற்குச் சான்றாகும்.

## நம்பிக்கைகளும் வழக்காறுகளும்

பிற சமூகத்தினரைப் போன்றே இடையர்களிடமும் பலவிதமான நம்பிக்கைகள், சடங்குகள் மற்றும் பாடல்கள், பழமொழிகள், விடுகதைகள் உள்ளிட்ட வழக்காறுகள் காணப்படுவதை ஆசிரியர் நாவலின் கதைப்போக்கில் ஆங்காங்கே இயல்பாக வெளிப்படுத்தியுள்ளார். தம்மிடம் காராத்தாளி ஆடு (உடம்பு வெள்ளையாகவும் வயிற்றுப்பகுதி கருப்பாகவும் காதோரம் இரண்டு பக்கத்திலும் தாளி தொங்கும்படியான ஆடு) இருந்தாலும் ஆடுகள் பொன்னளந்தான் கழியுள்ள (கீதாரி. ப.171) குட்டியை ஈன்றாலும் மிகுந்த மகிழ்ச்சியடைவர் (கீதாரி, ப.145). அவற்றால் கிடை பெருகும் வறட்சி நீங்கும் என்பது அவர்தம் நம்பிக்கையாகும். ஆடுகளை மேய்க்குமிடத்தில் முயல்களின் நடமாட்டம் இருப்பதும். அவை சிதறி ஓடுவதைப் பார்ப்பதும் தங்களுக்கும் ஆடுகளுக்கும் தீங்கு தருவதாக அமையும் என்பது அவர்தம் நம்பிக்கை "எலேய் மொச செதறி ஓடுதுடோய்.. மொசச் சவுனம் பொல்லாச் சவுனமுடோய், ஆடுகள பத்திரம பாத்துக்கிடுங்கடோய்" (கீதாரி, ப.127). ஆடுகளுக்குத் திருஷ்டி படுவதாக நம்புவதும், அதனைக் கழிக்க நெட்டி மாலைகளை ஆடுகளின் கழுத்தில் அணிவிப்பதும் அவர்தம் வழக்கமாகும் (கீதாரி.ப.113) ஆடுகளைத் தங்களுடைய நிலத்தில் கிடை போடச் சொல்லும் உரிமையாளர்களில் சிலர் அதற்குரிய கூலியைக் கொடுக்காமல் ஏமாற்றி விடுவதுமுண்டு. அத்தகைய சமயங்களில் இடையர்கள் கிடைக்கூலியைத் தராதவர்களின்

நிலத்தில் பச்சை மண்பானையில் ஆட்டின் பாலை நிறைத்து இரவோடு இரவாகப் புதைப்பதுடன், சூடமேற்றி கும்பிட்டு பின்வருமாறு சாபமும் விடுவார். “எங்களத் தேடிக் கண்டுபிடிச்சி கெடக் கூலியக் குடுத்து வாக்குத் தீத்துக்கிர்ற வரைக்கும் வெள்ளாம, புல்லு பூண்டு எதுவும் மொளக்காம பொட்டலாப் பெயிறணும். இந்த கொல்லயில அருவும் அத்தமிச்சிப்” பெயிறணும் (கீதாரி, ப.137) தங்கள் சாபம் பலிக்கும் என்ற நம்பிக்கை இடையர்களிடம் உண்டு.

பாமர மக்களின் வாழ்க்கையில் அவர்களுக்குரிய பழமொழிகள், பாடல்கள் உள்ளிட்ட வழக்காறுகள் முக்கியப் பங்கு வகிக்கும் வேலை செய்யும் போது ஏற்படும் களைப்பிலும் களிப்பிலும் பாடல்கள் வெளிப்படும். மூத்தோரின் பேச்சில் இடையிடையே அனுபவத்தின் வெளிப்பாடான பழமொழிகள் அறிவுரையாகவோ எச்சரிக்கையாகவோ இடம்பெறும். இடையர்களிடமும் இத்தகைய வழக்காறுகள் காணப்படுகின்றன. ஆடுகளை மேய்க்கும் மற்றும்இரவில் அவற்றைக் காவல் காக்கும் சமயங்களில் கால் வலியை மறக்கவும். தூக்கத்தைத் தவிர்க்கவும், இடையர்கள் தெம்மாங்குப் பாடல்களைப் பாடுவதான குறிப்பு நாவலில் இடம்பெற்றுள்ளது. மேய்ச்சலின் போது நாவலில் வரும் சாத்தப்பன் என்பவன்.”

**“சந்திரரே சூரியரே / சாதிப் பகவானே**

**இந்திரா நோக்கியல்லோ எடுத்தனதே சிறுதெம்மாங்கே”**

என்று பாட அதற்கு எதிர்பாட்டாக,

**“பாட்டுக்குப் பாட்டெடுப்பேன் -ஓம்**

**பாட்டனயும் தோக்கடிப்பேன்**

**எதிர்பாட்டு படிக்கலேன்ன**

**ஏணிவச்சி பல்லொடொடொப்பேன்”(கீதாரி, ப.118)**

என்று ராமுகீதாரி பாட ஆரம்பிக்கிறார்.

நாட்டுப்புறப் பாடல்கள் தவிர்த்து திரைப்படப் பாடல்களும் இவர்கள் பாடுவதுண்டு. நாவலின் முக்கியப் பாத்திரமான ராமுகீதாரியின் பேச்சிலும், பிறரின் பேச்சிலும் இருபதிற்கும் மேற்பட்ட பழமொழிகள் இடம்பெற்றுள்ளன. அவற்றை இடையர்களின் குணம் மற்றும் தொழில் சார்ந்த பழமொழிகள் பொதுவான பழமொழிகள் என்று இரண்டு வகையாகப் பாகுபடுத்தலாம். ஆடுகளை மேய்க்கும் சமயத்தில் கவனமாக இருக்க வேண்டும் என்பதை வலியுறுத்துமிடத்தில் “எடயனுக்குப் புத்தி பொடரிலதேங் இருக்குமாம்”(கீதாரி. ப.168) எனும் பழமொழியும். இடையர்கள் சுவையாக உண்ணவும் வசதியான இடத்தில் தங்கவும். தூங்கவும் எண்ணுதல் கூடாது என்பதை வலியுறுத்துமிடத்தில், “ருசி பாத்து திங்க நெனக்கிறவனும் கூர பாத்து குந்த நெனக்கிறவனும் எடயான இருக்க மாட்டான்ல்லே” (கீதாரி, ப. 155), “ஆட்டுக்கார எடயனுக்குத் தூக்கம் வரக்கொடா, அவுசாரி போறவளுக்குத் தும்ம வரக்கொடா”(கீதாரி. ப.127) என வரும் பழமொழிகளும் பயன்படுத்தப்பட்டுள்ளன. ஆடுகள் நோய்வாய்ப்பட்டு மொத்தமாக இறக்கும் சமயங்களில் அந்த இழப்பைத் தாங்கிக் கொள்ள முடியாமல் இடையர்குலப் பெண்கள் ஒப்பாரி வைத்து அழுவர் உணவு உண்ணாமல் வருந்துவர். அந்த சமயத்தில் அருகிலுள்ள கிடையைச் சேர்ந்தவர்கள். “வித்தாடு அருகும் செத்தாடு பலுக்கும்”(கீதாரி. ப.144) என்று ஆறுதல் சொல்லுவதுண்டு, சுழி பார்த்து ஆடு வளக்குறவரு, குழி பாத்து வெத போடுறவரு “(கீதாரி, ப. 148) என்று ராமுகிதாரியின் குணயியல்பை வெளிப்படுத்தும் விதமாகவும் சில சொலவடைகள்இடம்பெற்றுள்ளமையும் இங்கு குறிப்பிடத்தக்கது. இவைதவிர்த்து,

”பொழுதோட தூங்குறவனுக்குப் பொண்டாட்டி இல்ல. விடிஞ்சி தூங்குறவனுக்கு வெள்ளாம இல்ல”(கீதாரி. ப.37).

“கருப்புக்கு நவப்போட்டு கண்ணால பாரு. செவப்பக்கு நவப்போட்டு செருப்பால அடி(மேலது, ப. 33).

“கடையரிசி ஒலைக்காவாது. கள்ளப் புருசன் கதைக்காவ மாட்டான்”(மேலது, ப.22).

"மேட்டுக் கொல்லய கட்டுனவனும் கெட்டான், மேனா மினுக்கிய தொட்டவனும்கெட்டான்"(ப.160).

என்பது போன்ற பத்திற்கும் மேற்பட்ட பொதுவான பழமொழிகள் நாவலில் தகுந்த இடங்களில் சொல்ல வந்த கருத்தைச் சுருக்கமாகவும் எளிமையாகவும், அழுத்தமாகவும் சொல்வதற்குப் பயன்படுத்தப்பட்டுள்ளன.

இருளாயின் பேச்சில் வெளிப்படும். "அத்திக் கொளத்துல தண்ணி / ஆலங்காட்டுல வெறவு / நெல்லு வயத்துல அரிசி / ரெண்டு பொண்டாட்டிக்காரன் வூட்டுலருக்கு நெருப்பு. எல்லாத்தையும் கொண்டாந்து தந்தா சோறாக்கி இப்பவே போட்டர்றன் நீங்க கையக் கால களுவிப்புட்டு வந்து ஒக்காருங்கண்ணாளாம்" (கீதாரி, ப.27) என்ற கதையாடலானது விடுகதைத் தன்மை கொண்டது. அடித்தட்டு மக்களின் பிறப்பு மற்றும் வாழ்வியல் சார்ந்து பலவிதமான தொன்மக் கதைகள் வழக்கில் உள்ளதை ஆய்வாளர்கள் எடுத்துக்காட்டி உள்ளனர். அந்த வகையில் இடையர்களின் வாழ்வியல் சார்ந்த அதாவது வெயிலிலும் மழையிலும் இடையர்கள் கிடந்து தவிப்பதற்கானகாரணம் குறித்தான தொன்மக் கதையொன்றும் நாவலில் வெளிப்படுத்தப்பட்டுள்ளது (கீதாரி. ப. 104). இது இந்து சமயத்தோடு குறிப்பாக பார்வதி சிவனோடு தொடார்புடையதாக அமைந்துள்ளது. (ந.மணிகண்டன், 2023).

## பூப்புச் சடங்குகள்

பெண் தாய்மை அடைவதற்குரிய பக்குவத்தை அடைவதே பூப்பெய்தல் எனலாம். பூப்படைதல் என்பது குழந்தைப்பருவத்தின் இறுதியாகவும் பெண்மையின் தொடக்கமாகவும் கருதப்படுகிறது. சமுதாயத்தில்பெண்கள் உரிய வயதில்பூப்படைவதே நலமானதாகக் கருதப்படுகிறது.

'கீதாரி' புதினத்தில் சிவப்பி பூப்பு அடைந்தவுடன் அவளைத் தனியே கொட்டகையில் ஓர் ஓரத்தில் இருக்கச் செய்து உளுந்தங் களியைச் சாப்பிடச் செய்யும் சடங்குமுறை கூறப்பட்டுள்ளது. இவற்றின் வழி உகந்த வகையில் ஏழைகள் தங்களுக்கு மேற்கொண்ட நிலையை அறிய முடிகிறது.

## மதிப்புரை

விளிம்பு நிலையிலுள்ள இடையர் சமூகத்தினருள் ஒரு குழுவை மட்டும் அடையாளப்படுத்தும் இப்புதினம் அவர்களின் சமூகஉணர்வுகள். மதிப்பீடுகள், பண்பாட்டு அசைவியக்கங்களை நுட்பமாகப் பதிவுசெய்துள்ளது. வயதான சூழலிலும் தனது குழந்தைகளையும் தனது பேரப்பிள்ளைகளையும் வளர்த்து ஆளாக்கும் வைராக்கியத்தை வைத்திருக்கும் ராமுகீதாரி கதையின் வழியே மிகப் பரந்துபட்ட கீதாரிகளின் அவல நிலையையும் அலங்கோலங்களையும் சிக்கல்களையும் வெளிப்படுத்திக் காட்டுகின்றது.

மனித மனம் அன்பால் நிறைந்திருக்கையில் பணம் அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல வீடு அவர்களுக்கு ஒரு பொருட்டல்ல வெட்ட வெளியிலும் ஆனந்தமாகவும் மன நிம்மதியுடனும் வாழ்வை ஆடுகளுக்கு இடையே நடத்தி விட முடியும் என்பதை இந்த நாவலின் கதாநாயகி நிரூபித்துக் காட்டுகிறார். ஆனால் பணம் சேரச் சேர மனித மனங்களுக்குள் நுழையும் கொடூரமும் பழிவாங்கும் எண்ணமும் சதித் திட்டங்களும் துரோகச் சிந்தனைகளும் மனித மனங்களில் பிளவை ஏற்படுத்தி குடும்பத்தையே சிதைக்கத் தொடங்குகின்றன என்பதையும் நாவல் ஆணித்தரமாக எடுத்துரைக்கிறது.

மூன்று தலைமுறை பந்தத்தைத் தொடரும் ஆடுகளின் வழியேயும் நகரும் வறுமையின் வழியேயும் அடுத்தடுத்த காலச் சூழ்நிலைகள் மாறும் போதும் கீதாரிகள் மாறாமல் ஆடுகளின் பின்னே அலைந்து கொண்டிருப்பதை தெளிவுறுத்தும் நாவல் ஒருவன் முன்னேறவும் தனது நிலை என்ன என்பதை உணர்ந்து கொள்ளவும் கல்வி மிகச் சிறந்த பயனை விளைவிக்கும் என்பதையும் கோடிட்டுக் காட்டிச் செல்கிறது.

**வினாக்கள்**

| வ.எண | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | கீதாரிநாவலில் கதைமாந்தர்கள் எவ்வாறு சித்தரிக்கப்பட்டுள்ளனர்என்பதைஆராய்க | K2 | CO4 | PO4 |
| 2 | மரபுமற்றும் மாற்றம் ஆகியகருத்துக்கள் கீதாரிநாவலில் எவ்வாறு மோதுகின்றன? | K3 | CO3 | PO2 |
| 3 | கீதாரிநாவலின்சமூகப்பின்னணியைச்சுருக்கமாக கூறுக. | K3 | CO4 | PO1 |
| 4 | கீதாரிநாவலில் பயன்படுத்தப்பட்டுள்ளமொழிநடை சிறப்புகளைச்சுட்டிக்காட்டுக. | K5 | CO2 | PO2 |
| 5 | வெள்ளைச்சாமி – கரிச்சாஉறவுகளைஆராய்க. | K3 | CO4 | PO3 |

| வ.எண | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | கீதாரிநாவலைஒருசமூகநாவலாகமதிப்பீடு செய்க. | K6 | CO2 | PO4 |
| 2 | கீதாரிநாவலில் உள்ள உளவியல் கூறுகளைஆய்வுசெய்க. | K3 | CO3 | PO6 |
| 3 | கீதாரிநாவலின்சமூகமற்றும் இலக்கியமுக்கியத்துவத்தைமதிப்பிடுக. | K2 | CO5 | PO2 |
| 4 | பெண்களின் வாழ்க்கை சிக்கல்களைக் கீதாரிநாவல்எவ்வாறு வெளிப்படுத்துகிறது? | K5 | CO3 | PO4 |
| 5 | கிராமியச்சமூக அமைப்பும்அதில்உள்ளமுரண்பாடுகளும்கீதாரிநாவலில் எவ்வாறு சித்தரிக்கப்படுகின்றன? | K3 | CO3 | PO2 |

# அலகு 5

## சமூகம் - நாடகம்

## சாபம்! விமோசனம்?-மு.இராமசாமி

மு. இராமசாமி (Mu Ramaswamy. 4 திசம்பர் 1951) என்பவர் பேராசிரியர். எழுத்தாளர், நாடகக்கலைஞர், நடிகர், திரைப்படத் திறனாய்வாளர் ஆவார். இவர் சாஃபக்கிளீசின் நாடகமான ஆன்டிகோனின் தமிழ் தழுவலான துர்கிர அவலம் மற்றும் பெரியார்ஈ.வே. இராமசாமியின் வாழ்க்கை வரலாற்றை விவரிக்கும் கலகக்காரர் தோழர் பெரியார் ஆகிய நாடகங்களுக்காக மிகவும் பிரபலமானவர்.

### பிறப்பும் கல்வியும்

இராமசாமியின் தந்தையின் ஊர் பாளையங்கோட்டை, தாயின் ஊர் அம்பாசமுத்திரம். பள்ளிப்படிப்பைப் பாளையங்கோட்டை அந்தோணியார் பள்ளியிலும் கல்லூரிப்படிப்பை முதுகலை வரை பாளையங்கோட்டைக் கல்லூரியிலும் படித்து முடித்தார். மதுரைப் பல்கலைக் கழகத்தில் முனைவர் பட்டம் பெற்றார். முனைவர் பட்டத்திற்காக தோற்பாவை நிழற் கூத்து என்னும் கலையில் ஆய்வு செய்தார். கூத்து கலைஞர்களோடு வாழ்ந்து கூத்து நிகழ்த்தவும் கற்றுக் கொண்டார். மதுரைப் பல்கலைக் கழகம், தஞ்சைத் தமிழ்ப் பல்கலைக் கழகம் ஆகியவற்றில் பேராசிரியராகப் பணி புரிந்தார். தமிழ்ப் பல்கலைக் கழகத்தில் பேராசிரியராக இருந்த பொழுது கூத்துக் களரி என்ற கல்வித் திட்டத்தை உருவாக்கினார். திரைப்படங்களில் நடித்தும் உள்ளார். பல தமிழ்த் திரைப்படங்களுக்கு விமரிசனம் எழுதியுள்ளார்.

## நாடக வாழ்கை

இவர் ‘நிஜ நாடக இயக்கம்’ என்ற நாடகக் குழுவை உருவாக்கிப் பல நாடகங்களை நடத்தியுள்ளார். நடிப்பில் இவருக்கு இருந்த ஆர்வத்தினால், துர்கிர அவலம், கலகக்காரர் தோழர் பெரியார் உள்ளிட்ட பல நாடகங்களைத் தமிழில் அரங்கேற்றினார். தமிழ் மீதான இவரது அன்பின் காரணமாக பல நாடகங்களைத் தமிழில் மொழிபெயர்த்துள்ளார். இவர் மொழிபெயர்த்த சில நாடகங்களில் ஜி.சங்கர பிள்ளை, பெர்தோல்ட் பிரெக்ட் ஆகியோரின் நாடகங்களும் அடங்கும்.

## திரைப்பட வாழ்க்கை

இராமசாமியின்நாடகத்திறமையைக்கவனித்த நாசர் அவரது தேவதை, மாயன் போன்ற படங்களில் துணை வேடங்களில் நடிக்க வாய்ப்பு அளித்தார். பல படங்களில் துணை வேடங்களில் நடித்த நிலையில், இராமசாமி ஜோக்கர், கே.டி ஆகிய படங்களில் தொடங்கி முக்கிய வேடங்களில் நடிக்கத் தொடங்கினார்.

## நடத்திய நாடகங்கள்

- பாதல் சர்க்காரின் ஸ்பார்ட்டகஸ் நாடகம்
- குஜராத்துக் கலவரத்தை விமர்சிக்கும் கட்டுண்ட பிரமோதியஸ்
- பெர்டோல்ட் பாரக்கட்டின் கலிலியோ கலீலீ
- நந்தன் கதை

- தோழர்கள்
- கலகக்காரர் தோழர் பெரியார்
- துர்கிர அவலம்
- கங்கையின் மைந்தன்
- பண்டிதர் மூவரும் மாண்டதொரு சிங்கமும்
- படுகாவலன்
- துர்கிரா அவலம் சாஃபக்கிளீசின் நாடகமான ஆன்டிகோனின் தமிழ் தழுவல்
- பொன்னியின் செல்வன் பெரிய பழுவேட்டரையராக

**படைப்புகள்**

1. ரௌத்திரம் பழகு (நாடகங்கள்)
2. நடிப்பு-கூடுவிட்டுக் கூடு பாயும் ஒரு பண்டுவம்
3. நாடகம் (Drama) – திரை இன்னுமே பேசலாம்!
4. இலக்கணமும் மொழியியலும்
5. 1954 ராதா நாடகத் தடையும் நாடக சட்டமும்
6. பாதல் சர்க்கார் முன்றாம் அரங்கு -நான்
7. நாடகம் (Drama) பேச இன்னுமே இருக்கிறது
8. கலகக் காரர் தோழர் பெரியார்
9. வலி அறுப்பு
10. தோழர்கள்
11. தமிழ்ச் சமுகத்தில் கூத்து நாடகம் (Drama)
12. நாடக அழகியல்
13. சாபம் விமோசனம்?
14. தமிழ் நாடகம் (Drama) – நேற்று இன்று நாளை

## நவீன நாடகங்கள்

தொடக்கம் உச்சம், வீழ்ச்சி, முடிவு என்பதான நேர்கோட்டு வடிவத்தை மீறிய அமைப்புடைய நாடகங்கள் அறுபதுகளின் இறுதியிலும் எழுபதுகளிலும் உருவாயின நாடகங்களின் உள்ளடக்கத்திலும் மாற்றம் ஏற்பட்டது. மேலை நாட்டில் வேர்கொண்ட நகர்சார் நாடகக் கலைக்கும் இம்மண்ணில் வேர்கொண்ட நாட்டுப்புற நாடக மரபுகளுக்கும் இணைப்பு ஏற்பட்டது. சமூக அரசியல் காரணங்களாலும் தத்துவார்த்தத் தேடல்களாலும் படைப்பாளன் மனநிலையில் ஏற்படும் கலகத் தன்மை சோதனை நாடகங்களான நவீன நாடகங்களைத் தோற்றுவித்தது எனலாம்.

## நாடகக் குழுக்களும் நாடகங்களும்

வங்க நாடக ஆசிரியர் பாதல் சர்க்கார் மூலம் இங்கு அறிமுகமான சோதனை நாடக முயற்சிக்கு மூன்றாம் அரங்கு என்று பெயர். உடனடி விளைவுகளை மனத்தில் கொண்ட இச்சிறு நாடகங்கள் வீதிநாடகங்களாக நடத்தப்பட்டன. கூத்துப்பட்டறை. வீதி நாடக இயக்கம் நிஜ நாடக இயக்கம், பரிக்ஷா, அரூபம், தேடல் அரங்கம், ஆடுகளம், சென்னைக் கலைக்குழு, மௌனக்குரல், சென்னைப் பல்கலைஅரங்கம் முதலான பல இயக்கங்கள் உருவாயின.

## நிகழ்த்து முறை

ஒப்பனை மேடையமைப்பு, நடிப்பு முறை, காட்சி அமைப்பு, வசனங்கள் என அனைத்திலும் மாற்றம் ஏற்பட்டது. பார்வையாளர்கள் தாங்கள் நாடகத்தைப் பார்க்கிறோம் என்று உணரும் வகையில் நாடக நிகழ்வு அமைந்தது. பெரும்பாலும் குறியீடுகளாலும் உருவகத் தன்மையாலும் கருத்துகள் புலப்படுத்தப்பட்டன.

## நாடக உள்ளடக்கம்

மனித வாழ்க்கையிலுள்ள அபத்தங்களை வெளிக்கொணர்தல், சமகாலப் பிரச்சினைகளை அலசுதல், அரசியல் சமுதாயச் சீர்கேடுகளை எடுத்துக்காட்டுதல் தனிமனித, சமுதாயப் போராட்டங்களின் உரிமையைப் புலப்படுத்துதல், பழைய புராணங்கள், இதிகாசங்கள். வரலாறு முதலானவற்றில் உள்ள நிகழ்ச்சிகளைச் சமகாலப் பிரச்சினைகளோடு ஒப்பிடுதல், அவற்றை மறுஆய்வு செய்தல், உருவாக்கி வைத்திருக்கும்

கலாச்சார மதிப்புகளையும் வாழ்க்கை மதிப்புகளையும் கேள்விக்குள்ளாக்குதல் என உள்ளடக்கங்கள் அமைந்தன. இன்றைய வாழ்வில் துன்பங்களையும் சிக்கல்களையும் கவனியாமல் விட்டுவிலகிச் செல்லும் கதைப்பொருள் என்பது இந்த நாடகங்களில் இல்லை.

## சாபம்!... விமோசனம்? – நூல்அறிமுகம்

மு. ராமசாமியின் சாபம்! விமோசனம்? என்பது ஒரு நவீன நாடகம் இது மதுரை நிஜ நாடக இயக்கத்தினர் மற்றும் தஞ்சை ஒத்திகைநாடகக் குழுவினரால் நிகழ்த்தப்பட்ட நாடகங்களின் தொகுப்பு ஆகும். இந்நூலில் சாபம்! விமோசனம்?, புரட்சிக் கவி, ஆபுத்திரன் ஆகிய மூன்று நாடகப் பனுவல்கள் இடம்பெற்றுள்ளன."சாபம்! விமோசனம்?" என்பது ஒரு நாடகப் பாங்கு. இதில் ஒரு கதாபாத்திரம் சபிக்கப்பட்ட நிலையிலிருந்து விடுதலையடைவதைக் கொண்டுள்ளது இந்தப் பாங்கின் அமைப்பு மையமாகக் பின்வருமாறு அமையும்.

### சபிக்கப்பட்ட நிலை

பொதுவாக ஒரு கதாபாத்திரம் தவறு செய்வதன் மூலம் சாபத்தைப் பெறுகிறது.

### விடுதலைக்கான தேடல்

கதாபாத்திரங்கள் தங்கள் சாபத்திலிருந்து விடுபட வழிகளைத் தேடுகின்றன. இதற்காக அவர்கள் மனந்திருந்தி மன்னிப்பு கேட்கலாம் அல்லது குறிப்பிட்ட காலத்திற்காக காத்திருக்க வேண்டியிருக்கும்.

### விமோசனம் பெறுதல்

சில சமயங்களில், ஒரு குறிப்பிட்ட நிபந்தனை அல்லது ஒரு சம்பவம் (எ.கா: ஒரு தெய்வத்தின் கால் பட்டால்) மூலம் சாபத்திலிருந்து விடுதலை பெறுகிறார்கள்.

### கதாபாத்திர வளர்ச்சி

இது கதாபாத்திரங்களின் குணநலன்களையும், அவர்களின் மனப் போராட்டங்களையும்சித்தரிக்க உதவுகிறது. இதனால் அவர்களின் வளர்ச்சி நாடகத்தில் சித்தரிக்கப்படுகிறது.

**கதைக்களம்**

இந்த நாடகங்கள் பெரும்பாலும் தொன்மக் கதைகளை அடிப்படையாகக் கொண்டு, அதிலிருந்து மனித வாழ்வின் சிக்கல்களையும் உணர்ச்சிகளையும் எடுத்துரைக்கின்றன.

**நாடகக் கருவும் தொன்மமும்**

“சாபம்! விமோசனம்?” என்பது ஒரு குறிப்பிட்ட நாடக பாங்கு மட்டுமல்ல. அது இலக்கியத்தில் பல கதைகளுக்கும், குறிப்பாக புதுமைப்பித்தனின் சாபவிமோசனம் என்ற சிறுகதை போல, எண்ணற்ற கதைகளுக்கு அடிப்படையாகவும் அமைகிறது. இந்தக் கதைக் கரு ஒரு தொன்மத்தை அடிப்படையாகக் கொண்டது. அகலிகை என்ற புராணியப் பாத்திரம் எவ்வாறு சாபத்தைப் பெற்றாள் என்றும் அச்சாபத்திலிருந்து எவ்வாறு விமோசனம் பெற்றாள் என்பதையும் இத் தொன்மம் விளக்குகின்றது.

அகலிகை சாபம் என்பது இராமாயணக் கதையில் வரும் அகலிகை என்ற பெண்ணுக்கு ஏற்பட்ட சாபத்தைக் குறிக்கிறது. கௌதம முனிவரின் மனைவியான அகலிகை, இந்திரன் அவளது உருவத்தைப் போல மாறி வந்து அவளுடன் உறவு கொண்டதால், கணவரின் சாபத்தைப் பெற்றார் அந்தக் கதையில், ராமரின் காலடி பட்டவுடன் சாபம் நீங்கி கல்லுருவிலிருந்து மீண்டும் அழகிய உருவம் பெற்றாள் அகலிகை. இத் தொன்மம் தமிழ் இலக்கியப் பரப்பில் காலந்தோறும் படிமமாகவும் காலத்திற்கேற்றாற் போல் மாற்றங்கள் செய்தும் பயன்படுத்தப்பெற்று வருகின்றது. படைப்பாளிகளால் தமிழிலக்கியத்தில் சங்க காலப் பாடல்கள் முதல் நவீன இலக்கியம் வடிவங்களில் வரை வெவ்வேறு அகலிகையின் கதை இடம்பெறுகிறது. பரிபாடல் அகலிகை கதையைப் பாடும் முதல் தமிழ் இலக்கியம் நவீன தமிழ் இலக்கியத்தில் புதுமைப்பித்தன் சாபவிமோசனம், அகலிகை என இரண்டு சிறுகதைகள் எழுதியுள்ளார். எனவே அகலிகை தொன்மம் சங்காலத்திலிருந்தே தமிழ் இலக்கியத்தில் பயின்று வருகின்றது என்பதை அறியமுடிகின்றது. மு.இராமசாமியும். இத் தொன்மத்தை நாடகத்திற்குப்பயன்படுத்தியுள்ளார்.

**கதைச் சுருக்கம்**

சங்கமுனிவர் ஒரு மலைப்பகுதியில் தவம் இருக்க வேண்டும் என்று ஆசைப்படுகின்றார். அவருடைய சீடர்கள் அவரை ஒரு பல்லக்கில் வைத்து சீர்த்த மலை என்று சொல்லக்கூடிய அந்த மலைக்குக் கூட்டிவந்தனர். அங்கு வந்த முனிவர் அந்த இடத்தைப் பார்த்தார். அவர் மனதுக்கு அந்த இடம் பிடித்து இருந்தது. உடனே அவர் சீடர்களிடம் பன்னிரண்டு வருடம் நான் இந்தக் காட்டில்தவம்செய்யப்போகிறேன் நீங்கள் பன்னிரண்டு வருடம்கழித்து இந்தக் காட்டிற்கு வாருங்கள் என்று கூறினார். சீடர்களும் அங்கிருந்து கிளம்பினர். இவர் பன்னிரண்டு வருடம் அந்தக் காட்டில் தவம் இருக்கிறார். அந்த மலையில் இன்னொரு பகுதியில் துங்கமுனிவர் என்ற ஒருமுனிவர் தன்னுடைய மனைவியான தேவந்திகையோடு வாழ்ந்து வந்தார். அந்தத் தேவந்திகைக்கு நீண்டகாலமாக குழந்தை இல்லாததால் குழந்தைப் பெறவேண்டும் என்று ஆசை. ஆனால் துங்கமுனிவர் தேவந்திகையைக் கண்ணெடுத்துக் கூட பார்க்காமல் இருக்கின்றார். அதனால் அவள் மலைப்பகுதியில் இருக்கின்ற ஒரு கோவிலுக்குச் செல்கின்றாள்.அங்குச் சென்று அங்கு இருக்கும் பூசாரியிடம் அவளுடைய கவலைகளைக் கூறினாள் . எனக்குக் குழந்தைமேலரொம்பஆசை என்றும் தன்னுடைய கணவர் தன்னைக் கண்ணெடுத்துக் கூட பார்ப்பதில்லை என்றும் அழுது புலம்புகின்றாள்.

உடனே அந்தப் பூசாரிஅவள் கையில் ஒரு கனியைக் கொடுத்து இதை உன் கணவரைச் சாப்பிடசெய். பிறகு உன்மேல் அவர் பிரியமாய் இருப்பார். உனக்குக் குழந்தை பாக்கியம் கிடைக்கும் என்று அவளிடம் கூறி அவளை அனுப்பி வைக்கின்றார். தேவந்திகை அந்தப் பழத்தை எடுத்துக் கொண்டு வந்து ஒரு மரத்தின் அடியில் வைத்து விட்டு ஆற்றில் குளித்துக் கொண்டிருந்தாள். இந்த நேரம் பார்த்து சங்க முனிவர்களின் சீடர்கள் பன்னிரண்டு வருடம்முடிந்து விட்டது, இனி நாம் நம் குருவைப் பார்க்கப்போகலாம் என்று சொல்லிக் கொண்டு வந்தனர். வரும் வழியில் முனிவர் கண்

விளித்ததும் ஏதாவது சாப்பிட கொடுக்க வேண்டும் என்று கிழங்குகள், பழங்கள் போன்றவற்றைத் தேடிக் கொண்டு வந்தனர். அப்பொழுதுஇவர்கள் மரத்தின் அடியில் தேவந்திகை வைத்திருந்த பழத்தைப் பார்த்தனர். பார்த்து பழம் அழகாக இருக்கின்றதே இதை நாம் முனிவருக்குக் கொண்டு கொடுக்கலம் என்று எடுத்து முனிவரின் முன் கொண்டு வைத்தனர். முனிவர் கண்விழித்தார். இந்த உலகத்தின் மேல் பாசம் இருக்க வேண்டியது அல்ல துறவு. வாழ்க்கைதான் சிறந்தது. இப்படி முனிவர் கூறிக்கொண்டிருந்தார். பிறகு முனிவருக்கு இந்தப் பழத்தைச் சாப்பிட கொடுத்தனர். சாப்பிட்ட உடனேமுனிவர் பெண்கள் தான் இந்த உலகத்தில் இன்பத்தைத் தரக்கூடியவர்கள், சிற்றின்பம் தான் பேரின்பம் என்றெல்லாம் பேசிக்கொண்டிருந்தார். இதனைக் கேட்ட சீடர்களுக்கு ஆச்சரியமாக இருந்தது. என்ன நம் முனிவர் இப்படி ஆகிவிட்டார் என்று நினைத்துக் கொண்டிருந்தனர். அந்த வேளையில் தேவந்திகை ஆற்றில் இருந்து குளித்து மேலே மரத்தின் அடியில் பார்க்கின்றாள். பழத்தைக் காணவில்லை. பழம் எங்கே என்று தேடிக் கொண்டிருக்கும் போது சங்க முனிவரும்சீடர்களும் அமர்ந்திருப்பதைப் பார்த்து அங்குச் சென்று அவளுடைய குறைகளைக் கூறுகிறாள். அப்பொழுது சங்கமுனிவர் தேவந்திகையைப் பார்க்கிறார். அவளின் மீது சங்க முனிவருக்கு ஆசைவருகின்றது. அவளை இவர் துரத்த ஆரம்பிக்கின்றார். இவளும் ஓட ஆரம்பித்தாள். நேரே தன்னுடைய கணவன் துங்கமுனிவர் இருக்கும் இடத்திற்குச் செல்கின்றாள். சங்கமுனிவரும் இவளைத் துரத்திக் கொண்டே வந்தார். முனிவரின் பின்னால் சீடர்களும் ஓடி வந்தனர். தேவந்திகை துங்கமுனியிடம் சென்று ஏன் என்று தெரியவில்லை இந்த முனிவர் என்னை பின் தொடர்ந்து வருகின்றார் என்று கூறியவுடன் துங்கமுனிக்குக் கோபம் வந்தது. சங்கமுனிவருக்கு, நீ பன்றியாய் போவாய் என்று சாபம் அளித்தார்.

இந்த முனிவருக்கு 'அப்போதுதான் தோன்றுகிறது நாம் ஏன் இப்படிசெய்தோம்' என்று அப்பொழுதுஅந்தப் பெண் கூறுகின்றாள், குழந்தை பாக்கியம்வேண்டும் என்பதற்காக பூசாரியிடம் ஒரு பழத்தை வாங்கிக் கொண்டு வந்தேன். அந்தப் பழத்தைத் தெரியாமல் இந்த முனிவர் சாப்பிட்டு விட்டார் என்று சொல்லிய உடன், துங்க முனிவர்

அன்பை எல்லாம் பழத்தைக் கொடுத்து வாங்க முடியாது என்று கூறி முனிவரின் மீது வருத்தமடைகின்றார். தெரியாமல் சாபம் கொடுத்துவிட்டேன் என்று வருத்தமடைகின்றார். அப்பொழுது சீடர்களெல்லாம் என்ன முனிவரே எங்களுடைய முனிவருக்குச் சாபம் கொடுத்து விட்டீரே என்றுகூறினர். அப்பொழுது அவர் பௌர்ணமி வரை இப்படிதான் இவர் இருக்க வேண்டும், பௌர்ணமி வரும் நேரத்தில் யாராவது அவரை ஒரே வெட்டாக வெட்டினால் பன்றிவடிவத்தில் இருக்கும் அவருக்கு விமோசனம் கிடைத்து விடும் என்று கூறினார். இதனை சங்க முனிவரால் ஏற்றுக் கொள்ள முடியவில்லை. தன்னுடைய சீடர்களிடம் என்னை இப்பொழுதே வெட்டி கொன்றுவிடுங்கள் நான் எவ்வளவு பெரிய முனிவராக இருந்தவன், நான் பன்றியாய் இருந்துவிட்டு மறுபடியும் முனிவராய் மாறுவதனால் எந்த ஒரு பிரயோஜனமும் இல்லை, இப்பொழுதே வெட்டி கொன்றுவிடுங்கள் என்னை என்றார். இதனை முனிவர்கள் மறுத்தனர். தயாபரன் என்ற சீடரிடம்நீஎன்னை வெட்டு இல்லை என்றால் உனக்குக் கத்துக் கொடுத்த வேதம், கத்துக் கொடுத்த வித்தை எல்லாம் மறந்துப் போகட்டும் என்று கூறினார். சீடர் நீங்கள் என்ன கூறினாலும் நான் உங்களை வெட்ட மாட்டேன், அந்தப் பாவத்தை நான் செய்யமாட்டேன் உங்களை நாங்கள் நல்லபடியாய் வைத்து பார்த்துக்கொள்கிறோம் என்றார். அந்த நேரத்திலேயே சூரியன்வர ஆரம்பித்தது, முனிவர் பன்றியாய் மாறிவிட்டார். அவரைக் கொண்டு வந்து அடைத்து வைத்து தேவையான உணவைக் கொடுக்கலாம் என்று யோசித்தனர். இரவு நேரத்தில் பன்றி வடிவத்தில் இருக்கும் முனிவர் பன்றிகள் இருக்கும் இடத்திற்கு ஓடிப்போய்விட்டார். அங்கேயே பன்றிகளாடு ஐக்கியமாகிவிட்டார். ஒரு மாத காலம் பௌர்ணமி வரும் வரை பன்றியைத் தேடிக்கொண்டிருந்தனர். இவர் பன்றிகளோடு அதன் மொழி கற்றுக் கொண்டு அங்கேயே ஐக்கியமாகிவிட்டார். சீடர்கள் பார்த்த ஒரு பன்றியின் முகத்தில் ஒரு ஒளி தெரிந்தது இதனை நம் முனிவர் என்று சீடர் வெட்டப்போகும் போது, இவர் என்னை வெட்டாதே எனக்கு இந்த வாழ்க்கை ரொம்பபிடித்து விட்டது. இதிலிருந்து வெளியே வருவதற்கு எனக்கு விருப்பம் இல்லை அங்கு இருக்கும் பன்றிகளும் முனிவரை வெட்ட விடவில்லை. இவர் இப்போது எங்களுடன் சேர்ந்து விட்டார் உங்கள் முனிவர் இல்லை என்று கூறியது.

இதனால் சீடரால் எதுவும் பண்ண முடியவில்லை. அப்போது அவருக்குத் துங்கமுனிவர் கொடுத்த சாபம் சங்க முனிவருக்கு ஒரு வரம் கொடுத்தாக மாறிவிட்டது.

## சாபவிமோசனமும் சமூகமும்

மு. ராமசாமியின் சாப விமோசனம் நாடகம் சமூகத்தில் நிலவும் சாபங்களைக் குறிப்பாக சாதி மற்றும் சமூகப் பிரச்சனைகளை, நாடகத்தின் மூலம் விவாதிக்கிறது இது வெறுமனே ஒரு கதை அல்ல மாறாக சமூக விமர்சனத்தையும், விழிப்புணர்வையும் தூண்டும் ஒரு நாடக வடிவமாகும். இராமசாமியின் பிற நாடகங்கள் போலவும் இந்நூல் சமூகத்திற்குப் புரியும் வண்ணம் ஒரு நாடக வடிவமாக எழுதப்பட்டுள்ளது. மு. இராமசாமியின் 'சாபம் விமோசனம்' நாடகம் சாதிய சிக்கல்களைப் பேசுபொருளாகக் கொண்டது. இந்த நாடகமானது சாதிய ஒடுக்குமுறைகள் மற்றும் அதன் விளைவுகளின் பின்னணியில், சாபமும் அதிலிருந்து விமோசனம் பெறுவதும் எப்படி சாத்தியமாகும் என்பதை விவாதிக்கிறது.

## சமூகப் பிரச்சனைகள்

இந்த நாடகம் சமூகத்தின் விளிம்பில் வாழும் மக்களின் பிரச்சனைகளை எடுத்துரைக்கிறது. குறிப்பாக சாதி அமைப்பு மற்றும் சமூக ஏற்றத்தாழ்வுகளை மையமாகக் கொண்டுள்ளது. நாடகத்தின் மையக் கரு. சாதிய அடக்குமுறை எவ்வாறு மக்களைப் பாதிக்கிறது என்பதுதான். இது சமூகத்தில் நிலவும் சாதிய சிக்கல்களை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது.

## மையக்கருத்து

சாபத்திலிருந்து விமோசனம் பெறுவதே நாடகத்தின் முக்கியக் கருவாக அமைகிறது.

## உரையாடல்களின் தன்மை

உணர்ச்சிகள், கனவுகள் அச்சங்கள், எதிர்பார்ப்புகள் ஆகியவற்றை வெளிப்படுத்தும் உரையாடல்கள் கதாபாத்திரங்களின் முக்கியத்துவம் பெறும்

## நாடகத்தின் கட்டமைப்பு

நாடகம் முன்னேறும்போது, கதாபாத்திரங்களுக்கு இடையே மோதல்களும், பின்னர் அது தீர்க்கப்படும் விதமும் உரையாடல்கள் மூலம் வெளிப்படுத்தப்படும்.

## விழிப்புணர்வு

சாபம் என்ற சொல்லின் மூலம், சமூகத்தின் சாபங்களை ஒழித்து, புதிய விமோசனத்தை உருவாக்கும் வகையில் நாடகம் சித்தரிக்கிறது 'சாபம்' என்பதிலிருந்து 'விமோசனம்' பெறுவது என்பது சாதிய அடக்குமுறையிலிருந்து விடுதலை பெறுவதைக் குறிக்கிறது. இது சாதிய அமைப்பின் கொடுமைகளிலிருந்து விடுபடும் வழிகளைப் பற்றிய ஒரு விவாதத்தைத் தொடங்குகிறது. ஒட்டுமொத்தமாக, இது சமூகத்தில் வேரூன்றியிருக்கும் சாதியப் பிரச்சினைகளை விமர்சனப் பார்வையுடன் அணுகும் ஒரு நாடகமாகும்.

## நாடகத்தின் வடிவம்

இக்கதை, மு.ராமசாமியின் பிற நாடகங்களைப்போல, கதை சொல்லி மற்றும் நடிகர்கள் மூலம் மேடையில் நிகழ்த்தப்படும் நாடகங்களாக உருவாக்கப்பட்டுள்ளது.

## படைப்பின் நோக்கம்

இந்த நாடகம், மக்களின் உணர்வுகளைத் தூண்டி அவர்களின் சிந்தனையைத் தூண்டி சமூகப் பிரச்சனைகளை எதிர்கொள்ளும் வகையில் உருவாக்கப்பட்டுள்ளது.

## நிகழ்த்துமுறை

மு. ராமசாமியின் "சாபம் விமோசனம்" நாடகம் கதைசொல்லிகள் மூலம் கதாபாத்திரங்களைத் தத்ரூபமாக நடித்துக் காட்டும் நிகழ்த்து முறையில் அரங்கேற்றப்பட்டது. இது மதுரை நாடக இயக்கத்தினராலும் தஞ்சை ஒத்திகை நாடகக்

குழுவினராலும் நிகழ்த்தப்பட்டு, பொதுமக்களால் பாராட்டப்பட்டது. இதன் எழுத்து வடிவம் நூல் வடிவில் வெளியிடப்பட்டுள்ளது.

### கதைசொல்லி

இந்த அமைப்பு கதையின் போக்கையும், கதாபாத்திரங்களின் உணர்வுகளையும் விளக்குவதற்காக கதைசொல்லியைப் பயன்படுத்துகிறது.

### நேரடி உரையாடல்கள்

கதாபாத்திரங்கள் தங்களுக்குள் பேசிக்கொள்ளும் உரையாடல்களே கதைக்கு அடிப்படையாக அமைகின்றன. இதுநாடகத்தின் கதாபாத்திரங்களை யதார்த்தமாக சித்தரிக்க உதவுகிறது.

### பொதுமக்கள் பங்களிப்பு

அடிப்படையில் நாடகங்கள் பொதுமக்களின் பார்வை மற்றும் பாராட்டுதலில் உருவாக்கப்பட்டதால், எளிமையாகவும், நேரடியாகவும் அமைந்துள்ளன. உரையாடல்கள்

### நாடக வடிவம்

இது எழுத்து வடிவத்தில் இருப்பதால், காட்சி அமைப்புகள் மற்றும் கதாபாத்திரங்களின் உரையாடல்களை வாசகர்கள் தங்கள் மனதில் கற்பனை செய்துகொள்ள முடியும்.

## புரட்சிக்கவி

சாபம்விமோசனம்நாடகத்தொகுப்பில்இடம்பெற்றுள்ளபுரட்சிக்கவிஎன்றநாடகம்பாரதிதா சனின்புரட்சிக்கவிஎன்றகாப்பியத்தைஅடியொற்றியதாகும்.பாரதிதாசன்எழுதிய

'புரட்சிக்கவி' காப்பியம், வடமொழியில்உள்ள 'பில்கணீயம்'

என்றநூலைத்தழுவிஎழுதப்பட்டதாகும்.

**கதைமாந்தர்கள்:**

- **அரசன்:** அமுதவல்லியின்தந்தை.
- **அமுதவல்லி:** அரசனின்மகள்.
- **உதாரன்:** அறிவும், இளமையும்வாய்ந்தகவிஞன்.
- **அமைச்சர்:** உதாரனைஅரசனுக்குஅறிமுகம்செய்பவர்.

**கதைச்சுருக்கம்.**

ஓர்ஊரில் ஒரு அரசன்இருந்தார். அவர்அமைச்சரிடம்கேட்கிறார் எனது ஒரே மகளான அமுதவல்லி தமிழ் இலக்கியங்களும், இலக்கணங்களும் படித்திருக்கிறாள். ஆனால் இன்னும் கவிதைப் பாடத் தெரியவில்லை. அவள் செய்யுள், இலக்கணம் கற்க வேண்டும். அதற்குநல்ல ஆசிரியர் எங்காவது இருக்கிறார்களா? என்று அமைச்சரிடம் கேட்டார். அதற்கு அமைச்சர் கூறுகிறார், சகலகலாவல்லகவிஞன்ஒருவன்இருக்கிறான். அவன் பெயர் உதாரன், ஆனால் அதில் ஒரு சிக்கல் இருக்கிறது. அவன்ஒரு இளைஞன், அழகன். நம்முடைய இளவரசியும் இளம் வயது பெண். அதனால் தான் யோசிக்கின்றேன். ஆனால் அதற்கு ஒரு வழி இருக்கின்றது. உதாரன் பார்வை இல்லாதவன் என அமுதவல்லியிடம் கூறிவிடலாம், அமுதவல்லியைத் தொழுநோயாளி என உதாரனிடம் கூறிவிடலாம், இரண்டு பேர் இடையில் திரையைப் போட்டு வகுப்பு நடத்தலாம்என்று கூறினான். அமைச்சர் கூறிய தந்திரம் மன்னருக்குப் பிடித்திருந்தது. அதைப் போல திரையைப் போட்டு வகுப்பு நடந்தது. ஒரு நாள் பாடம் சொல்லிக் கொடுக்கும்போது உதாரன் பக்கத்தில் இருந்த சோலையில் நின்று நிலாவைப் பார்த்து ஒரு கவிதைப் பாடுகின்றான்.

**நீலவான் ஆடைக்குள் உடல் மறைத்து**

**நிலாவொன்று காட்டுகின்றாய் ஒளிமுகத்தைக்**

**கோல முழுதுங் காட்டிவிட்டால் காதற்**

**கொள்ளையில் இவ்வுலகம்சாமோ?...**

என்று பாடினான். இதனை திரையின் பின்னால் இருந்த அமுதவல்லி கேட்டாள். உதாரனின் குரல்தான். எத்தனையே கவிஞர் நிலாவினைப் பார்த்து பாடியிருக்கின்றனர். அதனைப்பார்த்து இவனும் பாடலாம். இப்படி ஒரு கற்பனையைப் பார்வை இல்லாதவன் எப்படிபாடமுடியும், என சந்தேகத்தில் உடனே திரைச்சீலையை விலக்கிப்பார்க்கின்றாள், இப்படி ஒரு பேரழகனை நான் பார்த்ததில்லை என்று வியந்துப்போகிறாள். உதாரன் உடனே யார் நீ என்று கேட்கின்றான். அதற்கு அமுதவல்லிநான் தான் அமுதவல்லி என்று கூறினாள், அவனும் நான் தான் உதாரன் என்று கூறினான். அந்த அரசனும், அமைச்சனும் சூழ்ச்சி செய்து நம்மை சந்திக்கவிடாமல் செய்து விட்டனர். நாம் தான் இப்போது பார்த்து விட்டோமே, என்று கூறிக்கொண்டனர். பார்த்தபோதே இருவருக்கும் காதல் வந்தது. காலம் இனிமையாய் கழிந்தது, இந்தச் செய்தியானதுமன்னருக்குத் தெரிந்தது. உதாரன் அரசவைக்கு இழுத்து வரப்பட்டான். நீ எப்படி அரசன் மகளைக்காதலிப்பாய் என்று அரசன் கூறினான், பிறகு இந்தச் செய்தியை அறிந்த அமுதவல்லி அரசவைக்கு ஓடி வந்தாள். அரசன் அமுதவல்லியையும் சிறையில் அடைக்க சொன்னார். அப்போது மந்திரி வந்து அரசனிடம் அரசே நாம் இளவரசியை மட்டும்மன்னித்து விட்டு விடுவோம்என்றார். அப்பொழுது அமுதவல்லி “சாதல் எனில் இருவருமே சாக வேண்டும்” என்று கூறினாள். உடனே அரசன் நல்லது அவனுடன் இவளையும் கொலை செய்வீர் என்று கூறினார்

இருவரையும் கொலைகளத்திற்கு அழைத்துச் சென்றனர். அங்கு மக்கள் கூடி இருந்தனர். அப்போது உதாரன் மக்களிடம்கூறுகின்றான். தன் மகளுக்குக் கவிதை கற்றுத்தரும்படி மன்னன்என்னிடம் கேட்டுக்கொண்டதால், நான் அவளுக்குத் தமிழ் கற்பித்தேன். அப்பொழுதே இந்தப் பெண் என்னை காதல் செய்தாள் நானும் ஒப்புக் கொண்டேன், அவளைக் காதலித்தது குற்றமெனில் நான்சாகிறேன்.அவள் மரணத்திற்கு அவள் என் மேல் கொண்ட காதல்தான் காரணம்,அந்தக் காதலுக்குத்தமிழ்தான்காரணம் என்று கூறி தலையைக் கீழேவைத்தான். அமுதவல்லி வீரிட்டு அழதாள். மக்கள்

அனைவரும் ஓடி வந்து கொலைஞர்களை விரட்டி, அவர்கள்இருவரையும் காப்பாற்றினர். புவி ஆட்சியை இனி உனக்குத்தரமாட்டோம் என்று உன்மன்னனிடம் சொல் என்றுகாவலாளளியைத் தூது அனுப்பினர், பிறகு அந்த நாட்டில்மக்கள் மக்களாட்சி மலர்ந்தது.

பாவேந்தரின் புரட்சிக்கவி என்ற நாடகம் மு.இராமசாமியால் நிகழ்த்திக்காட்டப்பெற்றது. தமிழ் கற்க வந்த ஒரு இளவரசியின் காதலை இந்நாடகம் மையமாகக் கொண்டுள்ளது. காதல், வீரம், தமிழ் பற்று, மக்காளட்சி, புரட்சி ஆகிய விழுமியங்களை இந்நாடகம் முன்னிருத்துகின்றது. அறியாமை என்னும் இருளை நீக்கும் ஆற்றல் கல்விக்கு உண்டு என்பதை வலியுறுத்துகின்றது. தலையெழுத்து என்று எல்லாவற்றிற்கும் காரணம் கூறி கடந்துசெல்வதை விமர்சித்து அறிவின் துணைகொண்டு ஆராய்ந்து முடிவெடுக்க வேண்டும் என்பதைச் சுட்டிக்காட்டுகின்றது. அறியாமை இருளை அகற்றிவிட்டால் மக்கள் அரசனையும் கேள்விக்குள்ளாக்குவர். அரசின் பிழைக்கு எதிராக குரல்கொடுக்கவும் தயங்கமாட்டார்கள். அது புரட்சியாகக்கூட வெடிக்கும் என்பதை இந்நாடகம் உணர்த்துகின்றது.

## ஆபுத்திரன்

சாபம் விமோசனத்தில் இடம்பெற்றுள்ள இந்த நாடகமும் ஒரு தொன்மக் கதையிலிருந்து உருவாக்கப்பட்டதாகும். மணிமேகலைக் காப்பியத்திலிருந்து இந்தத் தொன்மம் எடுக்கப்பட்டுள்ளது.

### கதாப்பாத்திரங்கள்

1) சாலி

2) இளம்பூதி

3)வேதா

4) ஆபுத்திரன்

5) இந்திராதேவி

6) இந்திரன்

**கதைச் சுருக்கம்**

வாரனாசி என்று கூறப்படும் காசி நகரத்தில் அபஞ்சிகன்என்னும் அந்தணன்வாழ்ந்து வந்தார். அவரின் மனைவி பெயர் சாலி, அவள் கற்பு நெறி தவறி தன் கணவனுக்குத் தவறு இழைக்கின்றாள். அதனால் அவளுக்குக்குற்ற உணர்ச்சி ஏற்பட்டு தான் செய்த குற்றத்திற்குப் பிராயசித்தமாக என்ன செய்வது என்று தெரியாமல் வருத்தப்பட்டாள். அந்தச்சமயம் தீர்த்த யாத்திரை செல்லும் மக்கள்கூட்டம்குமரிக் கடலுக்குச் செல்ல ஆயத்தமாக இருந்தார்கள் . அவள் செய்த குற்றத்திற்காக தானும் தீர்த்த யாத்திரை செல்லவேண்டும் என்று அவர்களுடன் சேர்ந்து கொண்டாள். அந்தச் சமயம் அவள் கருவுற்றிருந்தாள். அவள் மேற்கொண்ட யாத்திரை நெடுங்கால யாத்திரை என்பதால் மாதங்கள் பல கடந்து அவள் நிறைமாத கர்ப்பினியானாள். ஒருநாள் இரவு யாருக்கும் தெரியாமல் குழந்தையைப் பெற்று அதற்குப் பாலூட்டி அதை அருகில் இருந்த தோட்டத்துப் புல்வெளியில் கிடத்திவிட்டு சென்றுவிட்டாள் சாலி. ஒரு முறை ஊட்டிய தாயின் அமுதால் வாழ்நாள் முழுதும் சிசுவின் பசி அடங்காது, எனவே சிறிது நேரம் கழித்து மீண்டும் அழத்தொடங்கியதுகுழந்தை. ஆனால் குழந்தையின் தாய் வரவே இல்லை, குழந்தையின் குரல் கேட்டு பசு ஒன்று ஓடி வந்து, குழந்தையின் வாயில் வடியுமாறு அதனுடைய பாலை ஊட்டியது, பசுவின்பாலை உண்டு வயிறு நிரம்பிய குழந்தையைப் பசு தன்னுடைய நாவால் நக்கிக் கொடுத்தது. இதைப் போல குழந்தை எப்போதெல்லாம். அழுகின்றதோ அப்போதெல்லாம் பசு ஓடிவற்து குழந்தையின் பசியைப் போக்கும்.

இது இப்படியே ஏழு நாள் தொடர்ந்தது. அப்பொழுது வயனங்கோடு என்ற ஊரைச் சேர்ந்த அந்தணன் அந்த வழியே அவன் மனைவியுடன் வந்தான். இந்தக் குழந்தை அழுகின்றதையும், பசு பால்கொடுப்பதையும்பார்த்து என்ன அதிசயம்,அந்தப்பசுவிற்கு அந்தக் குழந்தையின் மேல் எவ்வளவு பாசம்இருக்கிறது. குழந்தையைஇப்படி

போட்டுவிட்டு பெத்தவ எங்க போனாள் என்றான். அந்தணனின் மனைவி, குழந்தை இல்லாத நாம் இந்தக்குழந்தையை வளர்க்கலாம் என்று அந்தக் குழந்தையை எடுத்து குழந்தைக்கு, ஆபுத்திரன் என்ற பெயரும் வைத்தனர். ஆ என்றால் பசு ஆபுத்திரன் என்றால் பசுவின் மகன்என்று அர்த்தம். இந்த ஆபுத்திரன் கல்வி மற்றும் மறை ஓதுவதில் சிறந்து விளங்கினான், ஒருநாள் ஆபுத்திரன் வழியில் ஓர் அந்தணர் வீட்டைக் கடந்துபோகும் போது வேள்விக்காக பலியிட இருந்த ஒரு பசுவைப் பார்த்தான். ஆபுத்திரனால்ஒருபசு பலியாகிறதை நினைத்துக் கூட பார்க்க முடியவில்லை. அதனால் அந்த பசுவைக் காப்பாற்ற நினைத்து இரவோடு இரவாக அந்தப் பசுவைக் கவர்ந்து சென்றான். இப்படிப் போகும் போது அந்தணர்களிடமும் பிடிப்பட்டான். அப்போது ஒருஅந்தணன் அவனைத்தாக்க ஆராம்பிக்க, அதனைப் பார்த்த பசு அந்த அந்தணனை தன்னுடையக் கொம்பால் வயிற்றில் குத்திக்கிழித்து அங்கிருந்து தப்பி காட்டுக்குள் ஓடியது. இதனால் ஆபுத்திரனைக் கண்டபடி பேசினார்கள். இதனால் கோபமடைந்த அவனின் வளர்ப்புத் தந்தை அவனை வீட்டை விட்டே துரத்தினார். பசியில் அவன் ஒவ்வொரு வீட்டிற்கும்போய் உணவு கேட்கும் போது மக்கள் அவனுக்குக்கல்லையேப்போட்டனர்.

அதன்பிறகுஅவன் உணவிற்காக மதுரை நகருக்குச் சென்றான். அங்குச் சிந்தாதேவிக்கோயில் மண்டபத்தில் தங்கி பிச்சை எடுத்து அதில் வந்த உணவைக் கண்பார்வை அற்றோர், காது கேளாதோர், ஊனமுற்றோர் என எல்லோருக்கும் கொடுத்துவிட்டு அதில் எஞ்சிய உணைவ மட்டும் அவன் உண்டு வாழ்ந்து வந்தான். ஒரு நாள் இரவு நேரத்தில் உணவு இல்லாமல் தவித்த சிலபேர் சிந்தாதேவி கோயிலுக்கு வந்து அங்கிருந்த ஆபுத்திரன் தங்களுக்கு எப்படியாவது உணவளிப்பான் என்ற நம்பிக்கையில் அவனை எழுப்பினர். ஆபுத்திரன் பசியில் வந்த இவர்களுக்கு அந்த நேரத்தில் எப்படி உணவளிப்பேன் எனக் கலங்கினான். ஆபுத்திரன் உடனே சிந்தாதேவி கோவிலில் உள்ள தெய்வமான சிந்தாதேவியிடம் தெய்வமே இது என்ன சோதனை. பசியோடு வந்தவர்களின் பசியை நான் எப்படிப் போக்குவேன். நீ தான் எனக்கு உதவி செய்ய வேண்டும் என்று வேண்டினான். உடனே சிந்தாதேவி ஆபுத்திரன் முன்னே தோன்றி

ஆபுத்திரா இந்த அமுதசுரபியைப் பெற்றுக்கொள் இது ஒரு அட்சயப்பாத்திரம், இந்தப்பாத்திரத்திற்கு வறுமை என்பதே இல்லை. அள்ளஅள்ள குறையாமல் உணவு வந்து கொண்டிருக்கும். போதும், போதும் என்று அலறினால் மட்டும் இது கொடுப்பதை நிறுத்தும். இதை வைத்து ஏழைகளின் பசியைப்போக்கு என்று சொல்லி மறைந்து போனது.

அமுதசுரபியைப் பெற்றுக் கொண்ட ஆபுத்திரன் வெளியில் வந்து அனைவருக்கும் அமுதசுரபியின் மூலமாக உணவு வழங்கி அவர்களின் பசிப்பினியைப் போக்கினான். இதைப் போன்று அந்த நாட்டில் உள்ள அனைவரின் பசியைப் போக்கினான். இது மதுரை நகரம்முழுவதும் பரவத்தொடங்கியது. இதனைப் பார்த்த இந்திரன் ஆபுத்திரன் புகழ் இப்படி பரவிக் கொண்டிருந்தால் நமது பதவி பறிபோய்விடுமே என்று,ஆபுத்திரன் முன் தோன்றி உன்னிடம் இருக்கும் அந்த அட்சய பாத்திரத்தை என்னிடம்கொடுத்தவிடு, அதற்குப்பதில் நான் நீ எதைக் கேட்டாலும் தருகின்றேன் என்று சொன்னார். அதற்கு ஆபுத்தின் ‘இந்ததரும செயலுக்குப் பதில் எனக்கு எதுவும் தேவை இல்லை’ என்று இந்திரனை ஏளனமாகப் பேசினான். திரும்பி சென்ற இந்திரன் ஆபுத்திரனின் நற்செயலைத் தடுக்க பாண்டியநாட்டில்பன்னிரண்டு வருடம் மழைப் பொழியச் செய்தான். பசி என்ற பேச்சுக்கே இடம் இல்லாமல் ஆக்கினான் இந்திரன். தன்னுடையபதவியைத்தக்க வைத்துப்கொள்ளதான் இப்படி செய்திருக்கிறான் என்பதை ஆபுத்திரன் தெரிந்தும் கொண்டான். உணவு தேவை இல்லாத இடத்தில் யாருக்கு உணவளிப்பது என்ன செய்வது என்று தெரியாமல் கொற்கை கடற்கரையில் அலைந்துக்கொண்டிருந்தான் ஆபுத்திரன். அப்பொழுதுபெரிய துறைமுகத்திலிருந்து கப்பலொன்று கிளம்பத் தயாரானது. அதில் இருந்து இறங்கி வந்த ஒருவன் ஆபுத்திரனிடம், ஐயா நீங்கள் தானே ஆபுத்திரன்எனக்கேட்டார். ஆபுத்திரனும் ஆமாம் நான் தான் ஆபுத்திரன் உங்களுக்கு என்ன வேண்டும் என்று கேட்டான். அதற்கு அவன் ஐயா நாங்கள் நெடுந் தொலைவில் இருக்கும் சாவகத்தீவின் கடல் வணிகர்கள் எங்கள் பகுதியில் மழை வளம் குறைந்ததால் மக்கள் பசியால் வாடுகின்றனர். அப்பொழுதுதான்

உங்களைப் பற்றிக் கேள்விப்பட்போம். நீங்கள் அமுத சுரபியின் மூலம்அனைவருக்கும்உணவு அளிப்பதாகக் கேள்விப்பட்டோம். நீங்கள் எங்களுடன் வந்து எங்கள் மக்களின் பசியைப் போக்க வேண்டும் என்று அந்தப் புதியவன் ஆபுத்திரனிடம் கேட்டான். இதைக் கேட்டதும்ஆபுத்திரன் அவர்களுடன் பயணத்தைத் தொடங்கினான்.

இவர்கள் பயணத்தில் மணிபல்லவத்தீவைஅடையும் நேரம் பலமாகக் காற்று வீசியது. அதனால் அன்று அங்கேயேதங்கிவிட்டு காலையில் பயணத்தைத் தொடங்கலாம் என்றும், அதுவரை தீவைச் சுற்றிப் பார்க்கலாம் என்றும் முடிவு செய்கின்றனர். தீவைச் சுற்றிப்பார்க்கும் போது வழிதவறிப் போகிறான் ஆபுத்திரன். மறுநாள் காலையில் கப்பல் புறப்படும் சமயத்தில் ஆபுத்திரன் எங்கே என்று கேட்கும் போது ஒருவன் ஆபுத்திரன் ஏற்கனவேகப்பலில் ஏறிவிட்டான் என்று கூறினான். இந்தத் தவறான தகவலைக் கேட்டு கப்பலும் புறப்பட்டது. ஓர் வழியாக கப்பல் நின்ற இடத்திற்கு வந்த ஆபுத்திரன் கப்பல் புறப்பட்டதைப் பார்த்து நொந்தேபோய்விட்டான். இனி அமுதசுரபியை வைத்து தான் மட்டும் எப்படி உயிர் வாழ்வது என எண்ணி அங்கிருந்த கோமுகிப் பொய்கையில் அமுதசுரபியைப் போட்டு விட்டு,'இந்த அமுத சுரபி மூழ்கிப்போகட்டும் ஆண்டுக்கு ஒரு முறை மட்டும் வெளியே வரட்டும், தருமசிந்தனை உள்ளவர்கள் யாராவது வந்தால் மட்டும் அவர்களின் கையில் இது சேரட்டும்' என்று சொல்லி அங்கேயே உண்ணாநோன்பு இருந்து அவன் உயிரையே விட்டுவிடுகிறான்.

மு.

இராமசாமியின்ஆபுத்திரன்நாடகம்தமிழ்இனவிடுதலையைப்பற்றிப்பேசுவதாகஅமைந்துள்ளது.

ஆபுத்திரன்தமிழ்இனவிடுதலையின்குறியீடாகஅடையாளப்படுத்தப்பெற்றுள்ளது.தமிழ்இனவிடுதலைக்காகஉயிர்துறக்கும்ஒருபாத்திரமாகஆபுத்திரன்காட்சிப்படுத்தப்பட்டுள்ளது.த

மிழ்இனவிடுதலைக்காகப்போராடிஉயிர்நீத்ததிலீபன்,

தமிழ்நாடுஎன்றுபெயர்வைக்கஉண்ணாவிரதமிருந்துஉயிர்துறந்தசங்கரலிங்கம்,

ஆசிரியர்களின்உரிமைகளுக்காக்குரல்கொடுத்துஒருபருக்கைசோறுகூடஉண்ணாமல்உயிர்விட்டசண்முகசுந்தரம்ஆகியவர்களின்போராட்டஉணர்வுகளையும்தியாகங்களையும்இணைத்துஇந்நாடகம்பேசுகின்றது.ஆபுத்திரன்அமுதசுரபிபெறுவதும்,

மக்களைஉணவளித்துக்காப்பாற்றுவதும்பசிப்பிணிஇல்லாததமிழ்ச்சமூகத்தைஉருவாக்கும்முயற்சியாகஅமைகின்றது.

இந்திரன்ஆபுத்திரனிடம்அமுதசுரபியைவேண்டுவதும்ஆபுத்திரன்தரமறுப்பதும்இந்திரன்மழைபொழிந்துஆபுத்திரனைப்பழிவாங்குவதும்வைதீகப்பண்பாடுதமிழ்ப்பண்பாட்டின்மீது செலுத்தியஆதிக்கத்தைச்சுட்டுவதாகஅமைந்துள்ளது.

மணிமேகலையில்பயின்றுவரும்இப்பழங்கதைமு.இராமசாமியன்நாடகமாகமாறும்போது அதுபன்முகப்பொருண்மைகளைக்கொண்டபிரதியாகமாறிவிடுகின்றது.

**வினாக்கள்**

| வ.எண | ஐந்து மதிப்பெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | சாப விமோசனம் நாடகத்தின் மையக்கருத்தைசுருக்கமாக விளக்குக. | K4 | CO1 | PO4 |
| 2 | சாபம் மற்றும் விமோசனம் என்றகருத்துக்கள் சாபவிமோசனம் நாடகத்தில் எவ்வாறு உருவகப்படுத்தப்பட்டுள்ளது? | K5 | CO2 | PO5 |
| 3 | மு.இராமசாமியின்சாபவிமோசனம் நவீன நாடகமாகதிகழ்வதற்கானகாரணங்களை விளக்குக. | K3 | CO4 | PO1 |
| 4 | நிஜநாடகஇயக்கத்தைவிளக்குக? | K5 | CO2 | PO2 |
| 5 | நிஜநாடகங்களின்உள்ளடக்கம் எவ்வாறு அமைந்துள்ளன? | K3 | CO4 | PO3 |

| வ.எண் | எட்டு மதிபெண் வினா | LOCF Mapping | | |
|---|---|---|---|---|
| 1 | சங்க முனிவர் சாபவிமோசனத்தைமறுத்ததன்காரணங்களை ஆராய்க. | K2 | CO5 | PO4 |
| 2 | ஆபுத்திரன் நாடகம் தமிழ் இனவிடுதலையைஎவ்வாறு அடையாளப்படுத்துகின்றது? | K3 | CO3 | PO6 |
| 3 | சாபவிமோசனம்நாடகத்தொகுப்பில் இடம்பெற்றுள்ள புரட்சிக்கவிநாடகத்தில்அமுதவல்லியின்பண்புநலன்களைவிளக்குக. | K2 | CO5 | PO5 |
| 4 | சாபவிமோசனம் நாடகத்தின்மூலம்சாதிமற்றும் சமூகப்பிரச்சனைகளைமு.ராமசாமிஎவ்வாறு சித்தரிக்கிறார்? | K5 | CO3 | PO6 |
| 5 | சாபவிமோசனம் நாடகத்தில் புராணமரபும், நாட்டுப்புறமரபும் இணைந்துள்ளமுறையைஆராய்க. | K3 | CO3 | PO3 |

| Text Books |
|---|
| • டாக்டர் மு. வரதராசனார் - பெண்மை வாழ்க, பாரிநிலையம் சென்னை. |
| • டாக்டர். வா. செ. குழந்தைசாமி – பாரதியின் அறிவியல் பார்வை, பதிப்பகம். |
| • சுப்ரபாதி மணியன் - சூழல் அறம், நியூ செந்சுரி புக் ஹவுஸ் வெளியீடு |
| • நாவல் - கீதாரி – சு. தமிழ்ச் செல்வி, நியூ செஞ்சுரி புக் ஹவுஸ் வெளியீடு |
| • நாடகம் - சாபம்! விமோசனம்? – மு. இராமசுவாமி, பெண்பகம் இராமசுவாமி புக் ஹவுஸ் |
| **Reference Books** |
| • தா. ஏ. ஞான மூர்த்தி - இலக்கியத’திறனாய்வியல், ஐந்திணை பதிப்பகம், சென்னை |
| • கா. சிவத்தம்பி – நாவலும் வாழ்கையும், தமிழ் புததகலாலயம், சென்னை |
| |

| Web Sources |
|---|
| • www.tamilvu.org |
| • www.tamildigitallibrary.in |
| • https://www.tamiluniversity.ac.in/english/library2-/digital-library/ |
| • https://www.tamilelibray.org/ |
| • www.projectmadurai.or |
| • http://www.tamilvu.org/ta/library-libcontnt-273141 |

| | | |
|---|---|---|
| CO1 | வாழ்க்கை சிக்கலை எதிர்கொள்ளும் திறனைப் பெறுதல் | K4 |
| CO2 | சிறந்த படைப்பாளியாக உருவாகுதல் | K5, K6 |
| CO3 | அடித்தளம் மக்களின் வாழ்கை அனுபவத்தை புரிந்துக் கொள்ளுதல் | K3 |
| CO4 | சமூக மாற்றங்களை உணர்ந்து கொள்ளுதல் | K3 |
| CO5 | அரசுப் போட்டித் தேர்வில் கலந்து கொள்ளும் தகுதியைப் பெறுதல். | K2 |

| | PO 1 | PO 2 | PO 3 | PO 4 | PO 5 | PO 6 | PO 7 | PO 8 | PO 9 | PO 10 | PSO 1 | PSO 2 |
|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|---|
| **CLO1** | 3 | 3 | 3 | 2 | 3 | 3 | 2 | 3 | 3 | 3 | 2 | 3 |
| **CLO2** | 2 | 3 | 2 | 3 | **3** | 2 | 3 | 3 | 2 | 3 | 2 | 3 |
| **CLO3** | 3 | 3 | 2 | 3 | 3 | 3 | 2 | 3 | 3 | 2 | 3 | 2 |
| **CLO4** | 3 | 3 | 3 | 2 | 3 | **3** | 2 | 2 | 2 | 3 | 3 | 2 |
| **CLO5** | 2 | 3 | 2 | 2 | 3 | 2 | 3 | **3** | 2 | 2 | 3 | 3 |